உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் வடமொழியில்
அருளிச்செய்ததை
தாம்பிரவர்ணிதீரத்திலெழுந்தருளியிருந்த
பிரமக்ஞானவெங்கிடேசுரசுவாமிகளால்
மொழிபெயர்த்தருளிய

பாஷிய இருதயம்.

இஃது
சமிவனக்ஷேத்திரமென்னும்
கோயிலூர்
அ-இராமசுவாமியவர்களால்,
திருத்தியும் விளக்கியுங் கூட்டியும்
புதுக்கி
நாட்டரசங்கோட்டை கிருஷ்ணய்யா அவர்கள்
வேண்டுகோளின்படி

சென்னை:
மிமோரியல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
சர்வதாரி௵ வைகாசி௴

இதன் விலை ரூபா-கவ.
1888.

Registered Copy Right.

இந்நூல்மான்மியம்.

---:o:---

இந்தநூலொன்றைப்பார்க்கிலிதரநூலிச்சைபோகும்
பந்தமுமகன்றுபோகும்பரம்பதமடையலாகும்
தொந்தமுந்துலைந்துபோகுந்தொய்தமுந்துலைந்துபோகுஞ்
சந்ததஞ்சிவமேயாகச்சந்ததமொளிரலாகும்.

வரலாறு.

"சகலலோகபூட்சியராகிய ஸ்ரீ@ஸ்ரீ சங்கரா
சாரியசுவாமிகள் சகலவேதசாஸ்திர புராணவிதி
காச சம்பன்னுளாயுஞ் சமதமாதிசகிதாளாயு மிரு
க்கிற வுத்தமாதிகாரிகளுக்குச் சூத்திரபாஷ்ய முப
நிடதபாஷ்யங் கீதாபாஷ்யங்க ளென்கிற வேதாந்
தப் பிரஸ்தானத்திரயங்களை நிர்மாணம்பண்ணிப்
பிற்பா டிந்த மூன்றுபாஷ்யங்களையு மவைகளைச்
சேர்ந்த வியாக்கினோபன்னியாச விஸ்தாரங்களை
யும் பார்த்துத் தாற்பரியத்தை நிச்சயஞ் செய்கி
ன்ற சாமார்த்தியமில்லாதபேர்களாயும் மஹாமுமூ
க்ஷுக்களாயு மிருக்கிற மந்தவதிகாரிகளை இரக்ஷிக்
கும் நிமித்தஞ் சர்வ வேதாந்த சித்தாந்த சங்கிரக
ரூபமாயும் பாஷ்யஇருதயமென்கிற பெயரையுடை
த்தானதாயு மிருக்கிற இந்தக்கிரந்தத்தை யருளிச்
செய்தனர்" ஆனபடியால்; மோக்ஷாபேக்ஷையுடை
யபுண்ணியபுருஷா ளிந்நூலி லாதரஞ்செய்வார்க
ளேல்; அடையத்தக்க பிரயோஜனத்தை யடைந்
தானந்தசுகிகளாய் என்று மிருக்கலா மிது சித்தம்!
சித்தம்!! சித்தம்!!!.

பாஷியஇருதய அட்டவணை.

—:o:—

நெம்பர்.	பிரகரண விபரம்.	பக்கம்.	வரி.
1	சிஷியப்பிரகரணம்	௧	௬
2	ஆசாரியருபதேசப்பிரகரணம்	௪௦	௧
3	அத்தியாரோபப்பிரகரணம்	௫௬	௭
4	பிரகிருதிசிருஷ்டிப்பிரகரணம் ...	௬௮	௧௯
5	பூதசிருஷ்டிப்பிரகரணம்	௭௦	௧௫
6	அண்டசிருஷ்டிப்பிரகரணம்	௭௫	௧௨
7	விசுவசிருஷ்டிப்பிரகரணம்	௭௬	௧௪
8	அதிகாரிப்பிரகரணம்	௮௫	௧
9	ஸ்தானப்பிரகரணம்	௯௨	௪
10	விதேகமுக்திப்பிரகரணம்	௯௩	௯
11	ஜீவன்முக்திப்பிரகரணம்	௯௪	௯
12	சாஸ்திரப்பிரகரணம்	௧௦௭	௧௭
13	வேதாந்தப்பிரகரணம்	௧௧௨	௧௨
14	மஹாவாக்கியப்பிரகரணம்	௧௧௪	௧௪
15	தொம்பதார்த்தசோதனைப்பிரகரணம்..	௧௨௦	௧௪
16	மாயா அவித்தையா நிருபணப் பிரகரணம்...	௧௫௦	௧௪
17	ஆவிருத்திமார்க்கப்பிரகரணம் ...	௧௫௪	௧௧
18	சந்நியாசிப்பிரகரணம்	௧௯௪	௧

பக்கம்

குருபரம்பரைவணக்கம் ௨௦௩
வடமொழி தென்மொழி பாடபேதத்தாற் சொற்பேதங்கள் ௨௦௪
உதாரண ஆசிரியர்களின் பெயரகராதி ௨௦௫
உதாரண நூல்களின் பெயரகராதி ௨௦௬
பரிசோதனபத்திரம் ௨௦௭

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குருவே நம:

பாஷிய இருதயம்.

முதலாவது சிஷியப்பிரகரணம்.

ஸ்ரீ-கணபதியையும், சுப்பிரமண்ணியரையும், பார்வதியையும், பரமேசுவரரையும், சரஸ்வதியையும், பிரம்மாதிதேவதைகளையும், ரிஷீசுவரர்களையும், குருவையும் நமஸ்கரித்துப் பாஷிய விருதயஞ்சொல்லுகிறோம்.

பிரமக்கியானியானவன் பிரமமாகத்தானே யிருப்பன். ஆத்மக்கியானியானவன் சகலசோகங்களையுங் கடந்து பிரமானந்தரூபமாகத்தானே யிருப்பன். இப்படிப்பட்ட மோக்ஷத்திலே பிரமக்கியானந்தானே சாதனம்; வேறே சாதனமில்லை. பிரமத்திற்கு லக்ஷணமென்னை? சச்சிதானந்தமே லக்ஷணம். சத்தாவதேது? காலத்திரயத்திலும் வாதிக்கப்படாத நித்தியமென்று நிச்சயம். சித்தாவதேது? போதலக்ஷணம். ஆனந்தமாவதேது? சுகலக்ஷணம். பிரமானந்தமாவதேது? காலத்தினாலேயும், தேசத்தினாலேயும், வஸ்துவினாலேயும், அபரிச்சின்னவஸ்து. அது சர்வமயமென்று நிச்சயம். இப்படிப்பட்ட பிரமமானது மாயாசம்பந்தமாய்த் தன்னுடைய விருதயக்குகையிலே பிரவேசித்திருக்கிற புத்திக்குகையிலே சிவரூபமாகப் பிரவேசித்திருக்கிற பிரமத்தை :—யாதொருத்தனறிகிறானோ; அவனே பிரம

வித்து. அவனே ஜீவன்முக்தன். அவனே கைவல்யத்தையடை வன். கோடியெக்கியங்களினாலேயும், கோடிதானங்களினா லேயும், கோடி தபசுகளினாலேயும், கோடி கங்காஸ்நானங் களினாலேயும், கோடி விரதங்களினாலேயும், முக்திலபியா து. ஞானத்தினாலேதானே முக்திலபிக்கவேண்டும். முக்தி யிலே ஞானந்தானே சாதனம்:—வேறே சாதனமில்லை. இப்படிப்பட்ட அறிவிலே வேதாந்த சிரவணந்தானே சாத னம்:—வேறே சாதனமில்லை. வேதாந்தக்கியானமே முக்தி சாதனம்:—இதரக்கியானம் மோக்ஷசாதனமன்று. வேதா ந்தசிரவணமாவதேது? குருமுகத்திலே நின்றும்வேதாந்த வுபதேசங் கேட்க, வேதாந்த அர்த்தவிஜாரங்கேட்க, சகல வேதாந்தங்களுக்கும்; அத்தொய்தப் பிரமத்தினிடத்திற் றாற்பரியமென்கிற ஞானானுகூல விஜாரம். இதைத்தானே வேதாந்தசிரவணமென்று பெரியவாள் சொல்லுவார்கள். வேதாந்தசிரவணம்:— பிரமக்கியானத்திலே சாதனமாம். பிரமக்கியானம்:—முக்தியிலே சாதனமென்று சித்தாந்தம். முக்திலக்ஷணமாவதேது? சில பெரியவாள்:—பிரமவித்தை யினாலே அவித்தையாநிவிர்த்திமுக்தியென்று சொல்லுவார் கள். சில பெரியவாள்:—வித்தையினாலே யவித்தையா நிவர் த்தியாய்ப் பிரமமாக விருக்குகை மோக்ஷமென்றுசொல்லு வார்கள். அனர்த்தநிவிர்த்தி ஆனந்தப்பிராப்தி இரண்டும் மோக்ஷமென்று அத்தொய்திகள் அங்கீகரித் திருக்கிறார் கள். ஞானத்துக்குத் தேவபாவம்போலே ஆகந்துவமாகிற நூதன முக்திரூபமென்று சொல்லவந்தால்:—அது முக்தி யாகமாட்டாது. அது சென்னியமானபடியினாலே:—அநித் தியமாகையினாலே முக்தியன்று. ஆனாற் சுவர்க்கலோகந்தா னே மோக்ஷமென்றுவர:—தேவலோகம் புண்ணியக்ஷயமா

ய் நட்சேத்திரங்கள் கீழே விழுகிறதுங் கண்டிருக்கிறோம், தேவலோகம் அநித்தியமென்று ஆயிரஞ் சுருதிவசனங் கேட்டிருக்கிறோம், ஆனாற் சுகவிசேஷஞ்சுவர்க்கமென்று மதை நித்தியாத்ம சொரூபமென்று மதுவே முக்தியென்றுஞ் சொல்வோமென்றா லாத்மசொரூபம் முக்தியென்கிறது இஷ்டந்தானே. ஆனாற் பிரமலோகம் மோக்ஷமென்றுவர:—பிரமோபாசகாளாயிருக்கிற பேர்கள் வேத அக்ஷராதி யுபாசனாமார்க்கத்தினாலே பிரமலோகத்திற்குப் போய் அவடத்திலே பிரமக்கியானம் வந்து அந்தப் பிரமக்கியானத்தினாலே பிரமசாயுச்சியமாயிருக்கிற முக்தியை யடைவார்களென்றும், அவர்களுக்கு மறுபிறப்பில்லையென்றும், சாந்தோக்கிய வுபநிடதத்திலே சொல்லியிருக்கிறது. ஆனபடியினாலே பிரமலோகப் பிராப்திதானே மோக்ஷமல்ல:—பிரமசாயுச்சியமே மோக்ஷம். ஆனாற் பிரமரகீட ஞாயம்போலே சித்தானுடைய ரசகுளிகா சம்பந்தத்தினாலே தாம்பிரந் தானே யேமமாகிறாப்போலே ஜீவன்றானே யுபாசனையினாலே பிரமமாகிறான். பிரமம்போலே யாகிறான்:—பிரமசொரூபத்தன்மையை யடைகிறான். இதுதானே முக்தியென்று வைஷ்டுணுவாள் சொல்லுவார்கள். இது:—முக்தியாகமாட்டாது. பிரமம் ரூபியென்கிற பக்ஷத்திலே:—இந்த முக்தி கூடும். அரூபியென்கிற பக்ஷத்திலே:—இந்தமுக்திகூடாது. இந்தமுக்தி பந்தத்தோடே கூடியிருக்கிறபடியினாலே துக்கயேதுவென்று பாஷிய விருதயம். ஞானகருமக் கூட்டுறவினாலே; மோக்ஷமென்று யோகிகள் சம்மதம்; அதுகூடாது. ஞானம், கருமவிரோதமானபடியினாலே கூட்டுறவு கூடாது. கூட்டுறவாவதேதென்றுவர:—ஞான மன்றியிலே கருமத்தினாலே மோக்ஷமில்லை; கருமமன்றியிலே ஞானத்தினா

லே மோக்ஷமில்லை; இரண்டுங் கூடியே மோக்ஷசாதனம். பக்ஷியானது ஒரு சிறகாலே பறக்கமாட்டாது இரண்டு சிறகினாலேயும் பறக்கவேண்டும். மநுஷனானவன் ஒற்றைக் காலினாலே நடக்கமாட்டா னிரண்டுகாலினாலேயும் நடக்க வேண்டும். அப்படிப்போலே இரண்டுவிதமுங்கூடியே மோக்ஷமென்று சொல்லுவார்கள். ஞானத்திற்குங் கருமத்திற்கு மொன்றுக்கொன்று விரோதமானபடியினாலே கூட்டுறவு கூடாது. ஆனாற் கருமம் மோக்ஷசாதனமென்றுவர:— மோக்ஷங் கருமசென்னியமானால் முக்தி அநித்தியமாய்ப் போய்விடும். அநித்தியபதம் மோக்ஷமன்று. ஆனால் ஞானம் மோக்ஷசாதனமென்றுவர:—சம்மதந்தானே. ஆனால்:— அந்தக்கரணத்திலே பிரமமிருக்கிறது; அவித்தையினாலே மறைக்கப்பட்டிருக்கிறபடியால த்தியானத்தினாலேவெளிப்படவேண்டும். எப்படிப்போலேயென்றால்? காஷ்டத்திலேயிருக்கிற வன்னியானது மதனத்தினாலே வெளியிலே வரும், காஷ்டத்தையுந் தகிக்கும். ததியிலேயிருக்கிற ஆச்சியங் கடைந்தால் வெளியிலே வரும். ரத்தினத்திலே யிருக்கிற பிரபை சாணைக்கல்லின் கடைச்சலினாலே தோஷங்கள்போயப் பிரகாசிக்கும்.இதுபோலே தியானத்தினாலே யவித்தை நீங்கி ஞானமுதித்துப்பிரகாசிக்கும். அந்தஞானஞ் சர்வக்ஞத்துவாதி லக்ஷணத்தோடே கூடியிருக்கும். அப்படிப்பட்ட சொரூபம் மோக்ஷமென்றுசொல்லுவார்கள்; அதுகூடாது. வியாசாசாரியாள் யோகமதநிராகரணம் பண்ணுகிறபோது சாங்கியமதம்போலே யோகமதம் அவைதிகமென்று நிராகரித்தார். அதேதென்று வர:—பிரதானமாகிற பிரகிருதிக்கு மிருத்துமய பிண்டம்போலே உபாதான காரணத்துவமும், ஈசுரனுக்குக் குலாலன்போலே நிமித்த காரணத்துவ

மும், யோகிகள் அங்கீகரித்தபடியினாலே இது அவைதிகம்; வேதவிருத்தமென்று நிராகரித்தார். பாஷியக்காரர், விவரணாசாரியர், வித்தியாரண்ணியசுவாமிகள், மனனநிதித்தியாசனங்களோடே கூடியிருக்கிற சிரவணம் பிரதானம்:—ஞானசாதனமென்று அங்கீகரித்தார்கள். வாசஸ்பதிமிசிராள்:—சிரவணமனன நிதித்தியாசனங்களோடே கூடியிருக்கிற மனசுதானே ஞானசாதனமென்று அங்கீகரித்தார்கள். தியானத்துக்கு ஞானசாதனத்துவம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், சுருதியிலேதியானஞ்சொல்லியிருக்கிறதென்றவர:—சிரவணத்தினாலே ஞானம் வந்தபிற குதித்த ஞானத்திற்குச் சமுசய விபரீதாதிதோஷப் பிரதிபந்தம்போகிற நிமித்தியந் தியானஞ் சொல்லியிருக்கிறதென்று அங்கீகரித்தார்கள். இதுமாத்திரமல்ல:—யோகசூத்திரத்திலே வியாசாதி குலத்திலே ஜனனத்தினாலேயும், ஞானசித்தி. திவ்விய அவுஷத கற்பசேவையினாலேயும், ஞானசித்தி. மந்திரசித்தியினாலேயும், ஞானசித்தி. தவசுசித்தியினாலேயும், ஞானசித்தி. சமாதிசித்தியினாலேயும், ஞானசித்தி. சித்தாளுடைய வரப்பிரசாதத்தினாலேயும், ஞானசித்தி. ஆக ஆறுபிரகாரமாக ஞானசித்தி வருமென்றும், அந்தஞானந் திவ்வியஞானலக்ஷணஞ் சர்வக்ஞத்துவாதி லக்ஷணமா யிருக்குமென்றும், யோகசூத்திரக்காரர் சூத்திரஞ்சொன்னார். அவையெல்லாம் யோகசித்தி லக்ஷணமேயல்லாமல் ஞானசித்தி லக்ஷணமல்லவென்று பாஷியசம்மதம். சர்வக்ஞத்துவாதி லக்ஷணமாயிருக்கிற ஞானம்; ஞானபக்ஷத்திலே ஞானிகள் அங்கீகரிக்கவில்லை. தபோசித்தாள், யோகசித்தாள், ஈசுரோபாசகாள், சர்வக்ஞத்துவாதி லக்ஷணம்; ஞானமென்று அங்கீகரித்தார்கள். அதுசித்திதருமந்தானே? ஞானதருமமல்லவெ

ன்று பாஷியக்காரர் முதலானபேர்களுக்கு சம்மதம். சில பேர் பெரியவாள் ஞானத்தினலே யந்தக்கரணநாசம் மோக்ஷமென்று சொல்லுவார்கள். அந்தக்கரணம் பிராரத்த மானபடியினலே பிராரத்தபோக நாசத்தினலே யந்தக்கரணம்; நாசம். ஞானத்தினலே பிராரத்தமாயிருக்கிற அந்தக்கரணம்; நசியாது. அவித்தைமாத்திரம்; நசிக்கும். ஆனபடியினலே யந்தக்கரணநாசம் மோக்ஷமென்கிறது கூடாது. சிலபேர் ஞானத்தினலே லிங்கதேகநாசம் மோக்ஷமென்று சொல்லுவார்கள். இதுவும் பிராரத்தமானபடியினலே ஞானத்தினலே லிங்கதேகம் நசியாது. ஆகையினலே இந்தப்பக்ஷமுங் கூடாது. சிலபேர் ஞானத்தினலே பிராரத்த கருமநாசம் மோக்ஷமென்று சொல்லுவார்கள்; அது கூடாது. ஞானத்தினலே பிராரத்த கருமநாச மொப்பாதபடியினலே இந்தப்பக்ஷமுங் கூடாது. சிலபேர் தார்க்கிகாள் இருபத்தொரு துக்கநாசம் மோக்ஷமென்று சொல்லுவார்கள்; அது கூடாது. அதுவேதென்றுல்? குட்டியம்போலேயும், கடம்போலேயும், மோக்ஷசொரூபமாயிற்று. ஆனந்த வாப்தியில்லை. ஆனபடியினலே யந்தப்பக்ஷமுங் கூடாது. தன் சித்தாந்தமேதென்றுல்? பிரமவித்தையினலே யனர்த்த வேதுவாயிருக்கிற அவித்தையா நிவிர்த்தி வந்த பிறகு பரப்பிரமரூபமா யிருக்குகை மோக்ஷமென்று பெரியவாள் சொல்லுவார்கள். அவித்தையாவதேது? வித்தையாவதேது? இரண்டுக்கும் லக்ஷணமேதுவென்றுவர:— லக்ஷணஞ் சொல்லுகிறேம். அவித்தையென்றும், அக்கியானமென்றும், மோகமென்றும், பிராந்தியென்றும், சொல்லுகிறது:—இதுவெல்லா மொன்றுதானே. அவித்தை மோக்மயமென்று வேதாந்திகள் சொல்லுவார்கள். அவித்தை

ஞாஞபாவரூபமென்றும், மித்தியாஞானமென்றும், தார்க்கீகாள் சொல்லுவார்கள். அவர்களுடைய மதத்திலே யவித்தை பாவரூபமல்லவென்று தார்ப்பரியம். வைஷ்டுணுவாள் மதத்திலேயும், அவித்தைகருமமயமென்று தார்ப்பரியம். மீமாம்ஷாள்மதத்திலேயும், அவித்தைகருமமயமென்று தார்ப்பரியம். யோகிமதத்திலேயும், அவித்தை மோகமயமென்றுங் கருமமயமென்றுமொப்பினுர்கள். வேதாந்திகளிலே சிலபேர் அவித்தை வாசனுசாலமயமென்றும், கருமமயமென்றும், மோகமயமென்றுஞ் சொல்லுவார்கள். அவித்தைக்கிலக்ஷணமேதென்றுல்? அன்னிய வஸ்துவிலே அன்னிய வஸ்து ஞானம் வருகிறது அவித்தை. அன்னியவஸ்துவிலே அன்னியவஸ்து தருமத்தை ஆரோபிக்கிறது அவித்தை. அதுயெப்படியென்று வர:—சுத்தியிலே ரசிதமென்கிற வாரோபம் பிரமை. ரச்சுவிலே சர்ப்பமென்கிறவாரோபம் பிரமை. ஸ்தாணுவிலே புருஷனென்கிறவாரோபமும், புருஷனிடத்திலே ஸ்தாணுவென்கிற வாரோபமும், பிரமைதானே. செம்பரத்தம்பூவிலேயிருக்கிறசிவப்பைப் படிகத்திலேயாரோபணம் பிரமைதானே. ஆத்மாவினிடத்திலே சொல்லுகிறேம். அனுத்மாவா யிருக்கிற தேகத்திலே நானென்கிற ஆத்மபுத்தியும், அனுத்மாவா யிருக்கிற விந்திரியங்களிலே நானென்கிற ஆத்மபுத்தியும், ஆத்மபின்னங்களா யிருக்கிற பிராணன்களினிடத்திலே நானென்கிற ஆத்மபுத்தியும், ஆத்மபின்னமா யிருக்கிற வந்தக்கரணத்திலே நானென்கிற ஆத்மபுத்தியும், பிராந்தி அவித்தையென்று சொல்லுவார்கள். நான் பருத்திருக்கிறேன், நான் இளைத்திருக்கிறேன், நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிரகஸ்தன், நான்

வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஸ்திரீ, நான் புருஷன், நான் தேவதத்தன், நான் யெக்கியதத்தன், நான் வெளுத்தவன், இது முதலான ஸ்தூலதேக தரும மாத்மாவினிடத்தி லாரோபம்; அவித்தை. இதற்குமேல் ஆத்மாவினிடத்திலே:—நான் குருடன், நான் செவிடன், நானூமை, இதுமுதலாகிய இந்திரிய தரும மாரோபம்; அவித்தை. இதற்குமேலாத்மாவினிடத்திலே:—நான் பசித்தேன், தாகித்தேனென்கிற பிராண தரும மாரோபம்; அவித்தை. ஆத்மாவினிடத்திலே; நான் காமி, நான்குரோதி, நான் லோபி, இச்சிக்கிறேன், பண்ணுகிறேன், நான் கர்த்தா, போக்தாவென்கிற விதுமுதலான அந்தக்கரணதருமங்களை ஆத்மாவினிடத்திலே யாரோபிக்கிறது; அவித்தை. இந்த அவித்தை வித்தையினாலே போகவேண்டும். அந்தவித்தையாவதேதென்றால்? ஆத்மப்பிரகாரணத்திலே தேகேந்திரியாதிகள் நாமன்று; பிராணன் அந்தக்கரணம் நாமன்று; ஜீவனும் நாமன்று; தேகேந்திரியாதி தருமமும் நமக்கில்லை; பிராணன் அந்தக்கரண தருமமும் நமக்கில்லை; நான் அகர்த்தா, நான் அபோக்தா, நான் பரமாத்மாவென்கிற பிரமக்கியானம் வித்தையென்று சொல்லப்படும். வித்தையென்றும், எதார்த்தத்தை ஞானமென்றும்,பிரமக்கியானமென்றும், இவ்வகையெல்லாம் பரியாயமாய்ச்சொல்லுவார்கள். வஸ்துவினுடைய யதார்த்தக்கியானம்வித்தை. அந்தவஸ்துவிலேவஸ்துவென்கிற ஞானம் யதார்த்தக்கியானம். அந்த வஸ்துவினிடத்திலே யிருக்கிற தருமத்தை அந்தவஸ்துவினிடத்திலேதானே யறிகிறதுவே யதார்த்தக்கியானம். இதற்கு வாகியத்திலே திருஷ்டாந்தஞ் சொல்லுகிறோம். சுத்தியினிடத்திலே சுத்தி ஞானம் யதார்த்தஞானம். புருஷனிடத்திலே புருஷனென்

கிற ஞானமும், ஸ்தாணுவினிடத்திலே ஸ்தாணுவென்கிற ஞானமும், யதார்த்தஞானம். இப்படி வித்தையாலக்ஷணஞ் சொல்லப்படும். ஞானம், மோக்ஷசாதனமோ? அல்லவோ? ஞானத்தினாலேமோக்ஷமோ? கருமத்தினாலேமோக்ஷமோ? இரண்டுங்கூடி மோக்ஷமோ வென்றுவர:—கருமத்தினாலே தானே மோக்ஷமென்று மீமாம்ஷாள் சொல்லுவார்கள். ஞானகருமக் கூட்டுறவினாலே மோக்ஷமென்று யோகிகள் சொல்லுவார்கள். பிரமாணப்பிரம்ேமய, சமுசய, பிரயோஜன, திருஷ்டாந்த, சித்தாந்த, அவையவ, தர்க்க, நிர்ணய, வாத, செலப்ப, விதண்ட, எத்துவா, பாச, சல, சாதி, நிக்கிரகஸ்தானம், இந்தப்பதினாறி னுடைய அறிவினாலே மோக்ஷமென்று தார்க்கீகாள் சொல்லுவார்கள். ஆத்மானாத்ம ஞானத்தினாலே மோக்ஷ மென்று சாங்கியாள் சொல்லுவார்கள். வேதாந்திகள் பிரமஞானத்தினாலே மோக்ஷம்;ஞானந்தானே சாதனமென்று சொல்லுவார்கள். கருமம் மோக்ஷசாதனமல்ல. கருமத்துக்கும், அவித்தைக்கும், விரோதமில்லையே; கருமம் பிராந்திக்கி மூலமானபடியினாலே அவித்தைக்குங் கருமத்துக்கும் விரோதமில்லை. கருமத்தினாலே அவித்தைவிருத்தி யடைகிறதானால் லக்ஷணத்துடன் கூடியிருக்கிறமோக்ஷமில்லை. அஃதெப்படியென்றால்? நானஞ்ஞானி நானறியேனென்கிற இடத்திலே ஞானமாயிருக்கிறஆத்மாவானவர் அஞ்ஞானத்திற்காசிரையமாகத்தானே தோற்றுகிறாரே; ஆனபடியினாலே சாஸ்திர சென்னியஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்கும், விரோதமுண்டென்கிறதிலே பிரமாணமில்லை. ஞானத்தினாலே யஞ்ஞானநிவிர்த்தியில்லை. ஞானசம்பாதனம் வியர்த்தமென்றுவர:—ஞான அஞ்ஞானங்களுக்கு விரோதமுண்டு. எங்கும் வியாபித்

திருக்கிற சூரியகிரணம்திரணாதிகளைத் தகியாதிருந்தாலுங் காந்தத்தை இரவிசன்னிதானத்திலே பிடித்தாற்காந்தத்திற் குள்ளே பிரவேசித்து அந்தக்கிரணந்தானே திரணாதிகளைத் தகிக்கிறது கண்டிருக்கிறோம். இதுவல்லாமற்காஷ்டத்திலே பொருந்தியிருக்கிற வன்னியானது காஷ்டங்களைத் தகியாது மதனத்தினாலே அக்கினிவெளிப்பட்டு அந்த அக்கினிதானே யந்தக்காஷ்டத்தைத் தகிக்கிறது. அப்படிப்போலே ஆத்மசொரூப ஞானம் அஞ்ஞானத்திற்கு அவிரோதியாயிருந்தாலுஞ் சிரவணாதிகளினாலே சுத்தாந்தக்கரணத்திலே பிரவேசித்து அந்த ஞானந்தானே அஞ்ஞானத்தை யழிக்கும். அதைத்தானே விர்த்திக்கியானமென்று சொல்லுவார்கள். நானே பிரமமென்கிற அகண்டாகார விர்த்திக்கியானத்தினாலே அவித்தையாநாசமென்று பாஷியவிருதயம். இன்னஞ் சொல்லுகிறோம். ஞானத்தினாலே அவித்தைக்கிநாசம். கருமத்தினாலே மோகமயமாயிருக்கிற அவித்தைக்கி நாசமில்லை. அஃதெப்படியென்னில்? கருமம் அவித்தையா மூலமானபடியினாலே:—நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிரகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஸ்திரீ, நான் புருஷனென்கிற மோகமுண்டானால் அதன் பிறகு வர்ணாச்சிரம தருமங்களிலே யிவனுக்கதிகாரமுண் டிந்த மோக மில்லாதேபோனால் கரும அதிகாரமில்லை. ஆனபடியினாலே கருமக்கூட்டம் மோகசென்னிய மிரண்டுந் தாய்பிள்ளைகளானபடியினாலே அவிவேக கருமங்களுக் கொன்றுக்கொன்று விரோதமில்லை. ராத்திரியிலே மேகாவரணத்துக்கும், இருட்டுக்கும், எப்படி விரோதமில்லையோ; அப்படிப்போலே விரோதமில்லை. அதுமாத்

திரமல்ல:—கருமத்தினாலே மோகம் விருத்தியடையும். மேகாவரணத்தினாலே அந்தக்கார மெப்படி விருத்தியடையுமோ; அப்படிப்போலேயாம். பிரகாச மப்பிரகாசங்களுக்கொன்றுக்கொன்று எப்படி விரோதமோ; அப்படி ஞானாஞ்ஞானாதிகளுக் கொன்றுக்கொன்று விரோதம். கருமத்துக்கும், அவித்தைக்கும், விரோதமில்லை. வித்தையினாலே தானே யவித்தை நசிக்கவேண்டும். கோடிகருமங்களினாலேயும்; அவித்தை நசியாது. தேகத்திலே நானென்கிற மோகலக்ஷணம் அவித்தை. தேகநாமல்ல; நாம் பரமாத்மாவென்கிறது வித்தை. ஆனதாலொன்றுக்கொன்று விரோதம். கருமம்:—நான் கர்த்தாவென்று தேகேந்திரியாதி தருமங்களை ஆத்மாவினிடத்திலே ஆரோபிக்கும். ஆனதால் மோகத்துக்குக் கருமம் சகாகாரியாகத்தானே யிருக்கும். எட்டுப்படி வெந்நீரில் ஒருபடி குளிர்ந்தஜலம் விட்டாலு முஷ்ணோதகந் தானேயாம். எட்டுப்படி குளிர்ந்த ஜலத்தில் ஒருபடி வெந்நீரைவிட்டா லெல்லாங் குளிர்ந்தஜலமேயாம். அப்படிப்போலக் கரும மதிகமானால் அஞ்ஞானம் நசிக்கும். மோகந்தானே விருத்தியடையும். ஞானமதிகமானால் அவித்தையும் நசிக்கும். அவித்தையாகருமங்களுஞ் சாம்பராய்ப் போய்விடுமென்று பாஷியவிருதயம். இன்னஞ் சொல்லுகிறோம். ஞானாஞ்ஞானங்களுக்குத் தமப் பிரகாசங்கள் போலே ஒன்றுக்கொன்று விரோதந்தானே. சுத்தியிலே இது ரசிதமென்கிற வஞ்ஞானத்திற்கு இது சுத்தியென்கிற ஞானத்தினால் நிவிர்த்திகண்டோம். ரச்சுவிலே இது சர்ப்பமென்கிற பிராந்திக்கி இது ரச்சுவென்கிற ஞானத்தினாலே நிவிர்த்தி. புருஷனிடத்திலே ஸ்தாணுவென்கிற பிராந்திக்கி இவன் புருஷனென்கிற ஞானத்தினாலே நிவிர்த்தி. தாணுவி

ளிடத்திலே புருஷனென்கிற பிராந்திக்கி தாணுவென்கிற ஞானத்தினாலே நிவிர்த்தி கண்டிருக்கிறோம். அப்படித்தானே:—நான் ஜீவனென்கிற பிராந்திக்கி நான் பரமாத்மாவென்கிற ஞானத்தினாலே நிவிர்த்தி சித்தந்தானே. சாஸ்திரஞானத்தினாலே பிரமம் பரோக்ஷமென்கிற பிராந்திபோய்விடும். அபரோக்ஷஞானத்தினாலே நான் ஜீவனென்கிற பிராந்தி போய்விடுமென்று பாஷிய சித்தாந்தம். இன்னஞ் சொல்லுகுறோம். சிலபேர் சாஸ்திரஞானத்தினாலே விஷய விசுவத்துக்கு நித்தியத்துவப் பிராந்தி போய்விடும். அபரோக்ஷக்கியானத்தினாலே விஷய விசுவத்திலே பிரவிருத்திப் பிராந்தி போய்விடும். பிராரத்த நாசத்தினாலே விசுவந் தோன்றுகிற பிராந்தி போய்விடும். இது மாத்திரமல்ல:—சாஸ்திரத்தினாலே பிரமத்துக்கு அசத்துவம் நசிக்கும். அபரோக்ஷத்தினாலே பிரமத்துக்குப் பரோக்ஷத்துவம் நசிக்கும். பிராரத்தநாசத்தினாலே ஆகந்துவமாகத் தோற்றுகிற விசுவத்தோற்றரவு நசிக்கும். இந்தப்படி மூன்றுவிதமாயிருக்கிற பிராந்திலக்ஷணமான மாயை நசிக்குமென்றுசொல்லுவார்கள். சிலபேர்பெரியவாள் ஞானம்வந்தாலும்; பிராரத்துவநாசபரியந்தம் அஞ்ஞானப்பிராந்தி போகாது யென்பர். அஃதெப்படியென்றால்? ஜலசூரியனிடத்திலே சூரியன்சலிக்கிறானென்கிற பிராந்திக்கிச் சூரியனிடத்திலே சலனமில்லை. ஜலத்தினுடையசாஞ்சலியஞ்ஜலசூரியவிம்பத்திலேதோற்றுகிறதென்கிற ஞானமிருந்தாலும்நிவிர்த்திகாணோம். இதுமாத்திரமன்று:—ஓடத்திலே யேறியிருக்கிறவனுக்குக் கரையிலேயிருக்கிற விருக்ஷஞ் சுழலுதென்கிற பிராந்திக்கி யோடஞ் சுழலுகிறது விருக்ஷங்களிலே தோற்றுகிறது; விருக்ஷங்களுக்கு அசைவில்லை யென்கிற ஞானமிருந்தாலும்

நிவிர்த்திகாணேம். மேகங்கள் சுருக்காயோடுகிறபோது நட்சேத்திரங்களுஞ் சுருக்காவோடுகிறதென்கிற அக்கியானத்துக்கு மேகத்தினுடைய சீக்கிரகதி நட்சேத்திரத்தினிடத்திலே தோற்றுகிறது; நட்சேத்திரம் மந்தகதிதானேயென்கிற ஞானமிருந்தாலும் நிவிர்த்தி காணேம். செம்பரத்தம் பூவினுடைய சன்னிதானத்திலே படிகஞ் சிவப்பென்கிற பிராந்திக்குப் படிகஞ் சுத்தவெளுப்புச் செம்பரத்தம் பூவினுடைய சிவப்பு அதிலே தோற்றுகிறதென்கிற ஞானமிருந்தாலும் நிவிர்த்திகாணேம். இதுமாத்திரமன்று:—சகலவேதசாஸ்திரங்கள் படித்திருக்கிற வித்துவாமிஷாளிடத்திலேயும், தேகேந்திரியாதிகளிலே நானென்கிற பிராந்தியும், நான் கர்த்தா போக்தாவென்கிற பிராந்தியும், கண்டிருக்கிறோம். ஆனபடியினாலே:—ஞானத்தினாலே அஞ்ஞானம் போகாதென்று சங்கைவர:—அவித்தைவாசனை யதிகமாயிருக்கிறது. வித்தைவாசனை போதாது. வித்தைவாசனை யதிகமாயுண்டானால் அவித்தை நிவிர்த்தியாமென்று பரிகாரஞ் சொன்னார்கள். சிலபேர் அத்தொய்த பாவனையாகிற நிதித்தியாசனம் பிரம்பப் பண்ணவேண்டும். பிரம்ப நிதித்தியாசனத்துடனே கூடியிருக்கிற வித்தை அவித்தையை யழிக்கும். நான் கர்த்தா ஜீவனென்கிறபிராந்தி அஞ்ஞானிகளுக்குண்டு. ஞானிகளுக்கு நான் கர்த்தா ஜீவனென்கிற பிராந்தி இல்லவேயில்லையென்று சொல்லுவார்கள்.

சிலபேர் பெரியவாள் ஆயிரந்தியானம் பண்ணினாலும்; பிராந்திபோகாது. பிராந்தி மித்தையென்கிற நிச்சயமிருந்தாற்போதும் தியானம் பண்ணத் தேவையில்லை. அந்தக்கரணவுபாதி யிருக்கிறபரியந்தஞ் ஜீவத்துவப் பிராந்திபோ

காது. அந்தப் பிராந்தி வுபாதி நாசத்தினாலே போம். உபாதியிருக்கிற பரியந்தம் பிராந்தி யிருக்குமென்று வித்தியாரண்ணியர்மதம். ஞானத்துக்கும், கருமத்துக்கும், விரோதமுண்டோ வில்லையோவென்றவர:—ஞானத்துக்குங் கருமத்துக்கும்விரோதந்தானே. கர்த்தருத்துவ கருமங்கள் அந்தக்கரணதருமம். ஆத்மா அகர்த்தா. ஆனபடியினால்ஆத்மாவுக்குக் கருமங்களில்லை யென்கிற ஞானத்தினாலே அந்தக்கரணதருமமாயிருக்கிற கரும கர்த்துருத்துவாதிகள் பிராந்தியினாலே ஆத்மாவினிடத்திலே கற்பிதமாய்த் தோற்றமாட்டாது. ஞானம் அவித்தைக்கி விரோதமான படியினாலே அவித்தையை நிவிர்த்தி பண்ணுகிறதில் மூலமாயிருக்கிற கருமக்கூட்டங்களுக்கும், அறிவுக்கும், வெகுவிரோதந்தானே. இதுமாத்திரமன்று ஞானமாகிற அக்கினியிலே கருமங்களாகிற இலவம்பஞ்சுகள் பஸ்பமாய்ப் போய்விடும். கருமகாஷ்டங்கள் ஞானக்கினியினாலே சாம்பராய்ப் போய்விடும். அசுவமானது பூமியிலே பிரண்டெட்டுழுந்திருந்து தன்னுடைய ரோமங்களை யெல்லா முதறும் அதினாலே சகலதூசிகளும் பறந்துபோய்விடும். அப்படிப்போலே நான் கர்த்தாவில்லை யெனக்குக் கருமங்களுமில்லை யென்கிற அசங்கத்துவ அனுசந்தானத்தினாலே கருமத்தூசிகளெல்லாம் பறந்துபோய்விடும். இதுமாத்திர மல்ல:—தாமரையிலையுஞ் ஜலமு மெப்படி யொட்டாதோ; பிள்ளைப்பூச்சியுஞ் சேறுமெப்படி யொட்டாதோ; புளியம்பழமுந் தோடுமெப்படி யொட்டாதோ; அப்படிக் கருமக்கூட்டங்கள் ஞானியாயிருக்கிற ஆத்மாவை யொட்டாது. இன்னம் ஞானமாகிற கத்தி கருமங்களாகிற பாசங்களை ஆயிரந்துண்டாய்ச்சேதித்துவிடுமென்று சாஸ்திரத்திலே பேரிகைவாத்தியம் போலே சுரு

திசப்தங் கோஷிக்கிறது. ஆனபடியினாலே ஞானத்துக்கும், கருமத்துக்கும், அத்தியந்தம் விரோதந்தானே. கருமவரிசை ஜன்மவரிசையைக் கொடுக்குந் திரும்ப ஜனனந் திரும்ப மரண மென்கிற வரிசையைக் கொடுக்குங் கருமத்தினாலே மோக்ஷமில்லை. அப்படிப்பட்ட அனந்தகோடி ஜனனங்களிலே யார்ச்சித்த கருமராசிகளை ஞானாக்கினி நாசம்பண்ணிச் சாம்பராக்கிவிடும். ஞானத்துக்கும், கருமத்துக்கும், வெகு விரோதமென்று சித்தாந்தம். இதுவல்லாமல்:— ஞானஞ் சர்வசிரேஷ்டமாக விருக்கிற தருமம். அஃதெப்படி யென்றால்? ஞானதருமஞ் சொற்பமாயிருந்தாலும்; ஆத்ம ஞானியாயிருக்கிற புருஷனை மஹாபயத்திலே நின்றும் ரக்ஷிக்குமென்று கீதாவசனம். இதுமாத்திரமல்ல:—யாகம், தானம், சதாசாரம், வாகிய இந்திரியநிக்கிரகம், அகிம்சை, ஸ்நானம், வேதாத்தியான மிவைகளுக்குள்ளே ஆத்மஞான தருமந்தானே சிரேஷ்டமென்று வியாக்கியவர்க்கர்வசனம். இதுமாத்திரமல்ல:—எக்கியந் தானந் தபசுகளுக்குள்ளே ஞானந்தானே சிரேஷ்ட தருமமென்று மனுவசனம். கிரேதாயுகத்திலே தபசு சிரேஷ்ட மென்றும், திரேதாயுகத்திலே ஞானஞ்சிரேஷ்டமென்றும், பராசர்வசனம். இதுமாத்திரமல்ல:—சொற்ப ஜலங்களாயிருக்கிற அனேக ஊத்துக்களிலே யாதொரு ஸ்நானாதி லாபமுண்டோ; அந்தச்சவுக்கியமெல்லாம் பூரண தடாகத்திலே யேகதேசத்திலே யந்தலாபமெல்லாங் கிடைக்கிறதுபோலச் சகலகருமக்கூட்டங்களினாலேயும் யாதொருசவுக்கியமுண்டோ அந்தசவுக்கியமெல்லாம் ஞானயேகதேசத்திலேதானே லபிக்குமென்று கீதாவசனம். இதுமாத்திரமல்ல:—ஞானத்துக்குங் கருமத்துக்குமிகுதியாய்ச் சுவர்ணத்துக்கு மிரும்புக்கும்போல வுக்கிருஷ்

டபாவம் நிக்கிருஷ்டபாவ முண்டென்றும், ஞானத்தைத் தானேசரணமாயடையென்றும், கருமம் அற்பபலமென்றும், கீதாவசனம். அருச்சுனன், ஞானஞ்சர்வோத்தமமாய்கருமம் நிக்கிருஷ்டமானு லப்படிக்கொத்த கோரமாயிருக்கிற கரும த்திலே நம்மையேனேவுகிறீரென்று கேட்க? அதற்குப் பகவான் சொல்லுகிறுர். ஞானிகளுக்குப்பிரமநிஷ்டையும், அஞ்ஞானிகளுக்குக் கருமநிஷ்டையு மென்று பரிகாரஞ் சொன்னுர். ஞானம் மோக்ஷபலம்; கருமம் பாவபலமென்று மனுவசனம். ஞானமன்றியிலே யிருக்கிறவன் சமுசாரத்தை யடைவன். ஞானமுள்ளவன் கருமபந்தத்தினின்றும் விடு பட்டு முக்தியடைவனென்று மனுவசனம். ஞானம்வந்தால்; ஒருகருமமும் பண்ணத்தேவையில்லை. ஞானம் வந்தால்; சகலகருமங்களும் முடிந்தது. யாதொருத்தன் ஆத்மரதியா யிருக்கிறுனே; யாதொருத்தன் ஆத்மதிருப்தனு யிருக்கிறு னே; அவனுக்கொரு கருமக்கூட்டங்களும்பண்ணத்தேவை யில்லையென்றும், அவனுக்குக் கருமம்பண்ணிணு லொருபல முமில்லையென்றும், கருமம்பண்ணுததினுலேபிரத்தியாபாய மில்லையென்றும், ஞானியா யிருக்கிறவனுக்குக் கருமமேபண் ணத்தேவையில்லை. யென்றுங் கீதாவசனங்கள். யாதொருத் தன் பிரமசுகத்தை யடைந்திருக்கிறுனே; யாதொருத்தன் பிரமதிருஷ்டியாகத்தானே யிருக்கிறுனே; அவனுவிதத் திலும் பிரமத்தைத்தானே யடைவனென்று கீதாவசனம். யாதொருத்தனுக்குத் தெகேந்திரியாதிகளிலே நானென்கி றபுத்தியில்லையோ; யாதொருத்தனுக்கு நான் கர்த்தாவென் கிற புத்தியில்லையோ; அப்படிப்பட்டஞானி லோகஇம்சை களெல்லாம் பண்ணிணுலுமவன்பண்ணவுமில்லை. அவனை யந் தக் கருமங்களும் பந்தியா தென்று கீதாவசனம்.

திரவியமயமாயிருக்கிற யெக்கியத்தைக் காட்டிலும்; ஞான யெக்கியம்மிகவுஞ் சிரேஷ்டமென்றும், ஞானிகளாயிருக்கிற பேர்களுக்கு வொருகருமமும்பண்ணத்தேவையில்லை யென்றும், சகலரிஷிகள்சம்மதம். இகலோகபரலோககருமங்களெல்லாம் விட்டு வேதங்களும் விட்டு ஆத்மாவைத்தேடி யறிந்தால் மோக்ஷப் பிராப்தியென்று ஆபஸ்தம்பாசாரியர் சொன்னர். சகலதருமங்களையும் விட்டுத் துவிசனுனவன் ஆத்மஞானத்தையுஞ் சமதமாதிகளையு மெத்தனம்பண்ணிச் சம்பாதி யென்று மனுவசனம். சகலகருமங்களையும் விட்டு யென்னைத்தானே சரணமாயடை; சகலபாவ சகலகருமங்களினின்றும்விடுபடுவாயென்றுபகவான் வசனம். இப்படிஞானிகளா யிருக்கிறபேருக்குச் சகலகருமங்களையும் விட்டு ஆத்மநிஷ்டனுகத்தானே யிருக்கச் சொல்லிச் சகல சுருதி சம்மதமானலும்; லோகோபகாரார்த்தமாய் ஞானிகளுங் கருமம் பண்ணவேண்டும். ஞானியா யிருக்கிறபேர் நல்லாசாரத்தைப் பண்ணினல்; மஹாத்மாக்களைப் பார்த்து இதராளுஞ் சதாசாரத்தைப் பண்ணுவார்கள். மஹாத்மாக்கள் யெதைப் பிரமாணமாகச் சொல்லுகிருர்களோ; அதுதானே பிரமாணமென்று இதராளுங் கொள்ளுவார்கள். ஆனபடியினலே லோகோபகாரார்த்தமாகச் சற்கருமங்களை ஞானிகளும் பண்ணவேண்டும். அதுமாத்திரமல்ல:—வசிஷ்டர், பரத்துவாசர், அத்திரி, பிருகு, குச்சரர், அகஸ்தியர், நாரதர், கௌதமர் முதலாயிருக்கிற ரிஷிகளும், சனகாதிராஜரிஷிகளும், திவ்விய ஞானபரர்களாய் யோகசித்தாளாய் ஞானசித்தாளா யிருக்கிறபேர்கள் சகலரும்; லோகோபகாரார்த்தமாகச் சற்கருமக்கூட்டங்களைப் பண்ணினர்களென்றும், இதராளையும்; பண்ணச்சொல்லி விதித்

திருக்கிறார்களென்றும், லோகபுராணங்களிலே பிரசித்தம் ஞானந்தானே சர்வப்பிராயச்சித்தம். ஞானம்வந்தால்; இலவம்பஞ்சிலே தீப்பற்றினு லெப்படிப் பஸ்மமாமோ; அப்படிச் சகலகருமங்களு ஞானுக்கினியினுலே சாம்பராய்ப்போமென்றும், ஞானியாயிருக்கிறவனைப் புண்ணியபாவம் பந்தியாதென்றும், அசுவமானது கீழே பிரண்டு ரோமங்களையெப்படி யுதறுமோ; அப்படிச் சகலமு முதறிப்போடுவனென்றும், ஒருபாவங்களும் ஞானியை யொட்டாதென்றும், காஷ்டங்களை யெப்படி அக்கினிபகவான் தகிக்கிறாரோ; அப்படி ஞானுக்கினி கருமகாஷ்டங்களையெல்லாந் தகித்துப்போடுமென்றும், ஞானத்துக்குச் சமானமாகப் பிராயச்சித்தமில்லையென்றும், ஓடத்தினுலே யெப்படிச் சமுத்திரத்தைக் கடப்பனே; அப்படி ஞானதெப்பத்தினுலே சகலபாவங்களையுங் கடப்பனென்றும், ஞானவிவேகத்தினுலேசகலமோகங்களையும்; கடப்பனென்றும், பகவான் முதலானபேர்களுஞ் சாந்தோக்கிய வுபநிடத்துஞ் சொல்லுகிறது. அதுமாத்திரமல்ல:—தைத்திரிய வுபநிடத்துந் தாண்டினி சுருதியுமிப்படியே சொல்லுகிறது. அசுவமேதயாகம்போலே ஞானஞ் சர்வப்பிராயச்சித்தமென்று சகலவேதங்களுக்குஞ் சகலரிஷிகளுக்குஞ் சம்மதம். இதுவல்லாமல்:—ஆத்மஞானம் சர்வப்பிராயச்சித்தமென்று ஆபஸ்தம்பாசாரியர் சொல்லியிருக்கிறார். மிருத்துஜலங்களினுலே பாகியசுத்தியென்றும், ஆத்மபாவனையினுலே ஆந்தரசுத்தியென்றும், ஸ்மிருதிவசனம். எக்கியந் தானந் தபசுகளெல்லாம் நிரம்பப் பிரயாசம், ஆயாசம், திரவியச்சிலவு, சரீரக்கிலேசங்களுண்டு. திரும்பவதுகள்; அற்பபலன்கள். ஆத்மத்தியானம்முக்திபலம். அன்றுடகம் பாவக்ஷயம், அந்தத்திலே முக்தியென்றும்

ஆத்மஞானத்திலே பிரயாசமில்லையென்றும், சுலபோபாயமென்றும், இதுவல்லாமல்:—தருமார்த்தகாமங்களை ஆசிரிக்கவேண்டாம்; அற்பபலன்களென்றும், எந்தவித்தை மோக்ஷசாதனமோ; அந்தவித்தையை யப்பியாசிக்கவேண்டுமென்றும், எந்தக்கருமம் பந்தமல்லவோ; அந்தக்கருமத்தைப் பண்ணவேண்டுமென்றும், பந்தமாயிருக்கிற கருமங்களையெல்லாம் விட்டுவிடவேண்டுமென்றும், ஆத்மவித்தையைத் தவிர இதரவித்தைகளெல்லாஞ் சிற்பசாஸ்திரம்போலேயென்றும், இப்படி பிரகலாதர் சொல்லியிருக்கிறார். தன்னை ஈசுரன்; பரமாத்மாவென்றறிந்தால்; அதுதானிவனுக்கு ஆத்மசுத்தியென்றும், வியாக்கியவர்க்கர் வசனம். சகல நதிகளுஞ் சரஸ்வதி கங்கைகளுக்குச் சமானம். சர்வபருவதங்களும் புண்ணியக்ஷேத்திரங்கள்தானே; தன்னாத்மா சகல தீர்த்த சொரூபர். இப்படியிருக்க பாகியத் தீர்த்தயாத்திரைகளா யேன்விருதாவிலே திரிகிறீர்களென்று பாரதத்திலே துலாதாரவசனம். ஆத்மாவாகிற நதி, சமதமாதிகளாகிற தோயம், சீலமாகிற மடு, சத்தியமாகிற கரை, தயையாகிற அலை, இப்படிப்பட்ட ஆத்மதீர்த்தத்திலே; ஸ்நாம்பண்ணினால்ந்தராத்மாச் சுத்தியடைவர்.

பாகியதீர்த்தங்களிற் கோடிதீர்த்தங்களிலே ஸ்நானம் பண்ணினாலும்; ஆத்மசுத்திவாராதென்றுபாரதத்திலே தீர்த்தயாத்திரையிலே தருமருக்கு ரோமரிஷி சொல்லி யிருக்கிறார். நூறு ஜன்மங் கங்காதீரச் சங்கமங்களிலே ஸ்நானம் பண்ணினாலும், நூறு ஜன்மங்களிலே விரதங்களையாசரித்தாலும், மஹாதானங்களைப் பண்ணினாலும், ஞானவிகீனனாக விருக்கிறவனுக்கு முக்தியில்லை யென்றும், இது சர்வமத சம்மதமென்றும், ஆசாரியர் வசனம். ஜலபூரணங்

களாயிருக்கிற தீர்த்தங்களும், சிலாமயமா யிருக்கிறமூர்த்த ங்களும், பாவிகளாயிருக்கிறபேர்களைச் சிலகாலங் கழித்துப் புனிதமாகும்படி பண்ணும். ஞானிகளானால்; உடனே புனித மாகும்படி பண்ணுவார்கள். இது நிச்சயமென்று ஜலபூரண ங்களா யிருக்கிற தீர்த்தங்களையும், சிலாதி தேவதைகளை யும், ஞானிகளா யிருக்கிறபேர்களடையத்தக்கதில்லை. ஆத் மஞானமே சகல தீர்த்தங்களென்றும், ஆத்மாவே சகல தேவதைகளென்றும், நிச்சயமாக யிருப்பார்கள். சகல பிர காசங்களும், சகல தேயசுகளும், எப்படிச் சூரியனிடத்தி லே அந்தர்ப்பூதமோ; சகல தீர்த்தங்களும், சமுத்திரத்தி னிடத்தி லெப்படி யந்தர்ப்பூதமோ; சகல மந்திரங்களும், வேதத்தினிடத்திலே யெப்படி யந்தர்ப்பூதமோ; அப்படிப் போலே சகல தேவதைகளும் பரமாத்மாவி னிடத்திலே யந்தர்ப்பூதம். பிரமஞானிகள்பிரமந்தானே; நிரம்பச்சொன் னதுபோதும். ஆத்மாவுக்கு; ஞான விஷயத்துவ முண் டோ; இல்லையோ; என்றுக்ஷேபம் வர:— சட வஸ்துவைப் போலே சித்துவஸ்துவாயிருக்கிற ஆத்மாவுக்கு; ஞானவிஷ யத்துவ மில்லை. ஆத்மாச்சடமயர் ஞான விஷயத்துவ மு ண்டென்று தார்க்கிகாள் சொல்லுவார்கள். வேதாந்திகள் ஆத்மாப் போதமயரானபடியினாலே ஆத்மப்பிரகாசத்திலே ஞானாபேக்ஷை தேவையில்லை, சூரியப் பிரகாசத்திலே வே றே சூரியாபேக்ஷை தேவையில்லை. தீபப்பிரகாசத்திலே தீபாந்தராபேக்ஷை தேவையில்லை. ஆத்மா சொப்பிரகாச சின்மயரானபடியினாலே ஆத்மப்பிரகாசத்திலே ஞானாந்த ராபேக்ஷை தேவையில்லை. ஆனபடியினாலே; சாஸ்திர விசாரத்திலே யத்தனம் பண்ணத்தேவையில்லை. ஞானசம் பாதனந்தேவையில்லையென்றுசங்கைவர:--வித்தியாரண்ணி

யசுவாமிகள் ஆத்மாச் சொப்பிரகாச சின்மய ஞானபடியினு லே; சொப்பிரகாசத்திலே ஞானந்தராபேக்ஷை தேவை யில்லை. ஞானவிஷயத்துவங் கூடாதென்றார்கள். ஆனல்; சாஸ்திரக்கியான மேதுக்கென்று வர:— ஆத்மாவினிடத்தி லே யிருக்கிற அவித்தைபோகிற நிமித்தியஞ்சாஸ்திர சென் னிய விர்த்திக்கியானம் அபேக்ஷிதம். அகண்டாகாரவிர்த் தியினலே பிரமத்தினிடத்திலே யிருக்கிற அவித்தைக்கு நா சம் வருமென்று சொல்லி விர்த்தி விஷயத்துவம் வேதாந் திக ளங்கீகரித்தார்கள். நிரம்பச் சொன்னது போதும். இனி ஞானத்தினுலே மோக்ஷம் அது தானே; புருஷார்த்த மென்கிற தெப்படிக் கூடும்; தருமார்த்த காமமோக்ஷங் கள்நாலும்புருஷார்த்தமென்று பிரசித்தியாயிருக்கிறதென் று சங்கைவர:— புருஷனுக்கு அர்த்தம்சுகலக்ஷணம். அஃத ன்றோ; புருடார்த்த பதத்துக்குப்பொருள். அந்தச்சுகந்தரு மார்த்தகாமங்களிலே யில்லையே; தருமார்த்த காமங்களுக் கு ஆதியுமந்தமு மநித்தியத்துவமுங் கண்டிருக்கிறோமே. தருமார்த்தகாமங்கள் துக்காத்மக மன்றோ; விசாரித்துப் பார்த்தாலவைகளிலேசுகமில்லையே; அவைகள் சுகாபாசந்தா னே. அவைகளிலேசுகபுத்திப்பிராந்திகற்பிதந்தானே. நித்தி யப்பிரமமல்லோ சுகம். அஃதன்றோ; மோக்ஷம். அஃதேபுரு டார்த்தமென்கிறது நிச்சயந்தானே. இனி யெக்ஞாதிகளுக்கு ஞான சாதனத்துவ முண்டோ வில்லையோ வென்றுவர:— சிலபேர் யெக்ஞாதிகளுக்கு ஞானசாதனத்துவமில்லை. சிரவ ணாதிகளுக்குத்தானே ஞான சாதனத்துவமென்று சொல் லுவார்கள்.

சிலபேர் பெரியவாள் யெக்கியந் தானந் தபசுகள் நித்தி யநைமித்திய கருமங்கள் ஈசுரப்பிரீதியார்த்தமாகப் பண்ணி

ுல் ஞானமுதிக்கு மென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் நித்தியநைமித்திய கருமங்கள்யெக்கியந்தானந் தபசுகள் ஈசுரப்பிரீதியார்த்தமாகப் பண்ணினுல் ஞானவிச்சை யுதிக்குமென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் இந்தப்பக்ஷங்கூடாது. எக்கியந்தானந்தபசுகள் நித்தியநைமித்திய கருமங்கள் பாவக்ஷயசாதனம். சித்தசுத்திசாதனம். பகிரங்கசாதனம். சமதமாதிகள் அந்தரங்கசாதனம். சிரவணமனனுதிகள் முக்கியசாதனம். சிரவணத்தினுலே தானே; பிரமஞானம் வரவேண்டுமென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் சிரவணத்தினுலேதானே; ஞானம் வரவேண்டுங் கருமத்தினுலேதானே ஞானம் வரமாட்டாதே; யென்றுசொல்லுவார்கள். அஃதெப்படியென்றுல்? காயத்திரி, பஞ்சாக்ஷரி, எல்லாரிடத்திலுமிருக்கிறது. பொருட்டெரியாது. பொருட்டெரியவேண்டுமென்றுகோடியெக்கியந் தானந் தபசுகள் விரதங்கள் கங்காநதி ஸ்நானங்களைப் பண்ணினுலும்; அவைகட்குப்பொருட்டெரியாது. அஃதெப்படித்தெரியுமென்றுல்? பொருட்டெரிந்த மஹாத்மாக்களிடத்திலே கேட்டுக் காயத்திரிக்கும், பஞ்சாக்ஷரிக்கும், பொருட்டெரியவேண்டும். மார்க்கந்தெரிந்தவனிடத்திலே நின்றுங் கேட்டு மார்க்கந் தெரிந்துகொள்ளுகிறுப்போலே சிரவணத்தினுலேதானே; ஞானம்வரவேண்டுங் கருமத்தினுலே ஞானம் வரமாட்டாதென்றுநிச்சயம். சிலபேர் பெரியவாள் வேதாந்த சாஸ்திரத்திற்கும், பிரமத்துக்கும், பிரதிபாத்திய பிரதிபாதக சம்பந்தம். சாஸ்திரத்துக்கும், பிரமாத்ம அயிக்கியத்துவத்துக்கும், விடய விடயீபாவ சம்பந்தம். சாஸ்திரத்துக்கும், முக்திக்கும், சாதனசாத்தியபாவ சம்பந்தம். முமுக்ஷுவாய்ச் சாதனசதுஷ்டயசம்பன்னன் அதிகாரி

யென்றுஞ் சம்பந்தசதுஷ்டயஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் வேதாந்த சிரவணத்திலே மநுஷனதிகாரி. பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராளெல்லாரு மதிகாரிகளென்றுசொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் பிராமண க்ஷத்திரிய வைசியா ளிந்த மூன்றுபேரு மதிகாரியென்று சொல்லுவார்கள். இதுவல்லாமல்:— சிலபேர் பெரியவாள் வேதாந்தசிரவணத்திலே சந்நியாசிகள் மாத்திரமே; அதிகாரி யென்று சொல்லுவார்கள். இதுவல்லாமல்:— சந்நியாசி களுக்குத்தானே; சிரவணுதிகார மென்றும், ஞானத்திலே யதிகாரமென்றும், சந்நியாசி களுக்குத்தானே; ஞானநிஷ்டையென்றும், இதராளுக்கு ஞானவதிகாரமில்லை யென்றும், சந்நியாசம்பண்ணிச் சிரவணம்பண்ணச் சொல்லியும், சந்நியாசமில்லாமல் ஞானம் வந்தாலும்; நிஷ்டை சித்திக்கிறதற்காக சந்நியாசம்பண்ணச் சொல்லியும், சந்நியாசமில்லாமல் நிஷ்டை சித்தியாதென்றும், ஆனதால்; லௌகீக கருமங்களையும், விக்ஷேபங்களையும்,வரையறவாகப்பரிகரித்துவிட்டுச் சந்நியாசி ஆச்சிரமத்தை அங்கீகரித்து அப்பால் வேதாந்த சிரவணம்பண்ணு. அப்பால்நிஷ்டையைத் தேடென்று ஆசாரியர் மதம். இந்தப்படி ஆபஸ்தம்பரும், மனுவும், வேதசாஸ்திரபுராணங்களெல்லாமும், சந்நியாசியைத்தொட்டுச் சந்நியாசியாச்சிரமத்தையே; அதிகரித்துச் சந்நியாச தருமமாக ஞானத்தைச் சொல்லுகிறது. இனிமேல் பகவானுடைய மதம்:—காமிய கருமங்களைவிட்டா லதுவே சந்நியாசமென்றும், நித்திய நைமித்திய கருமங்களைப் பண்ணி ஈசுரன் பொருட்டுப் பலத்தைக் கொடுத்தா லதுவே சந்நியாசமென்றும், பகவான் சொல்லி யிருக்கிறூர். சாங்கியாளெல்லாக் கருமங்களுந் தோஷத்தோடே கூடியிருக்கிற

படியினாலே யொருகருமமும்பண்ணலாகாதென்று சொன்னார்கள். பகவான்றானே; ஞான சந்நியாசமே; சந்நியாசமென்றும், கரும சந்நியாசம்; சந்நியாசமல்ல வென்றும், சொன்னார். மீமாம்ஸாள் கருமமவசியம்பண்ணவேண்டுமென்று விதியிருக்கிற படியினாலே கருமங்களை விடலாகாதென்று சொன்னார்கள்.

பகவான்றானே; எக்கிய தான தபசுக ளெல்லாம்,பவித்திரம், பிராயச்சித்தங்கள், பாவக்ஷயசாதனங்கள், ஆனபடியினாற் பண்ணச்சொல்லி விதியிருக்கிறபடியினாலே ; பலத்தைப் பரிகரித்து அவசியம் பண்ணவேண்டுமென்று சொன்னார். கருமத்தைப் பண்ணிக்கருமபலத்தைப்பரிகரிக்க அதுவே சந்நியாசமென்று சொன்னார். மோகத்தினாலே கருமங்களை விட்டுவிட அது தாமத சந்நியாசமென்றுஞ்சொன்னார். துக்க புத்தியினாலேயும், காயக்கிலேச பயத்தினாலேயும், கருமத்தை விட்டுவிடுவது ராசதசந்நியாசமென்றுஞ் சொன்னார். அவசியங் கருமங்களைப் பண்ணி நான் பண்ணினேனென்கிற அபிமானத்தையும்,பலத்தையும்,பரிகரித்தா லது சாத்தீகசந்நியாசமென்றுஞ் சொன்னார். புண்ணியஞ் சுவர்க்கத்தைக் கொடுக்கும். பாவம் நரகத்தைக்கொடுக்கும். புண்ணியமும், பாவமுங் கூடிய மிசிரகருமம்; மநுஷலோகத்தைக் கொடுக்கும். இப்படி மூன்றுவிதமாயிருக்கிற கருமங்களுங் காமிய துராபிமானியைப் பந்திக்கும். பலவிச்சையில்லாமல், துரகங்காரமில்லாமல், ஞானியாயிருக்கிறவனை இந்த மூன்றுவிதகருமங்களும், பந்தியாதென்று பகவான் சொன்னார். துராபிமானமும், பலவிச்சையும், பரிகரித்தா லதுவே சந்நியாசமென்றுஞ் சொன்னார். ஞானமுண்டானால்; பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், ஸ்தி

ரீகளெல்லாருக்கும்; மோக்ஷமுண்டென்றும், ஞானாதிகார மெல்லாருக்கு முண்டென்றும், பகவான்றானே சொன்னார். நியாயத்திலே அருத்தசம்பாத்தியம் பண்ணிநியாயப்பிரகாரமாய் நடந்து அதிதிகளைப் பூசித்துப் பிதிர்சிரார்த்தங்களைப் பண்ணிஞானியாயிருக்கிறகிரகஸ்தன்முக்தியடைவனென்று கிரகஸ்தனுக்கு ஞானவதிகாரமும், முக்திப்பிராப்தியும், உண்டென்று வியாக்கியவர்க்கர் சொன்னார். மானமில்லாத தன்மையாதிகுணங்களோடே கூடியிருக்கிறவன்; ஞானாதிகாரியென்றும், பகவான்சொன்னார். ஈசுரபக்தன்றானே; பிரமத்தையறிந்தால்; மோக்ஷத்தை யடைவனென்றும், பக்தன்றானே; அதிகாரியென்றும், பகவான் சொன்னார். யாதொருவறிவினாலே நம்மையடைவனோ; அப்படிப்பட்ட வறிவை நம்முடையபக்தனுக்கு நாந்தானே கொடுப்போமென்றுஞ் சொன்னார். நம்முடையபக்தன் சோகம் பாவனை பண்ணினானால் நாந்தானே அவனுடைய வவித்தையை நாசம் பண்ணுவோமென்றுஞ் சொன்னார். நாம் பக்தியினாலேதானே; அடையத்தக்கவர், வேறேயொரு சாதனங்களினாலே அடையக்கூடாதென்றுஞ் சொன்னார். யாதொருத்தரிடத்திலே நின்று மிந்தச் சராசரப் பிரபஞ்சங்களெல்லா முண்டாயிற்றோ; அப்படிக்கொத்த பரமேஸ்வரனைச்சுகர்மங்களினாலே பூசித்தால்; ஞானசித்தியடைவனென்றும், பக்தன்றானே ஞானவதிகாரியென்றும், சொன்னார். உபசாந்தி பகிரிந்திரியநிக்கிரகம், தபோநியமம், சுசித்துவம், பொறுமை, ஒடுக்கம், வணக்கம், வேதசாஸ்திர சம்பத்தி, சமாதி, விக்கியானமுண்டென்கிற புத்தி, இதுகளெல்லா மெவனுக்குண்டோ; அவனே பிராமணன். இதுவேபிராமணதருமமென்று பகவான்சொன்னார்.

பூததயை, பொறுமை, அசூயையில்லாமை, சுசித்துவம், ஆயாசமில்லாமை, மங்களவசனம், எதிர்ச்சலாப சந்துஷ்டி, நிராசை, இவைகளெல்லாம்; ஆத்மகுணங்கள். இந்தயெட்டுக்குணமுள்ளவனே; ஞானதிகாரியென்று கௌதமாசாரியர் சொன்னூர். அக்குரோதாதி குணங்களு மெவனுக்குண்டோ; அவனே ஞானதிகாரியென்றும், ஞானமும், அக்குரோதாதிகளும், சகல ஆச்சிரமங்களுக்கும்; சகல வர்ணங்களுக்கும்; சாதாரணமென்று ஆபஸ்தம்பர்வசனம். பிரவர்த்தமென்றும், சுகசாதனமென்றும், காமியகருமஞ்சொல்லப்படும். நிவர்த்தமென்றும், மோக்ஷசாதனமென்றும், நிஷ்காம கருமஞ் சொல்லப்படும். இந்தப்படிவைதீககரும மிரண்டுவிதமென்றுஞ் சொல்லப்படும். சுகசாதனகாமியகருமம்பந்தகம். பலவிச்சையில்லாமல் நித்தியநைமித்திய லக்ஷணகருமம் ஞானத்தைமுன்னிட்டுக்கொண் டிருக்குகை மோக்ஷசாதனமென்று மனுவசனம். அகிம்சை, சத்தியம், திருடா திருத்தல், பிரமசரியம் தமம், சமம், சவுசம், தயை, வணக்கம், சந்தோஷம், ஆகப்பத்தும், இயமங்கள். இந்தக்குணங்களுள்ளவனே; சர்வத்தி ராதிகாரியென்று பதஞ்சலிரிஷிமதம். வருணன் பிருகுமஹாரிஷிக்கு ஞானேபதேசம் பண்ணினூர். மிருத்துவுநாசிகேதருக்கு ஞானேபதேசம் பண்ணினூர். பிரமாவிந்திரனுக்கு ஞானேபதேசம்பண்ணினூர். சனற்குமாரர் நாரதருக்கு ஞானேபதேசம் பண்ணினூர். வியாக்கியவர்க்கர் மையித்திரிக்கும், ஜனகருக்கும், ஞானேபதேசம் பண்ணினூர். உத்தாலகர் சுவேதகேதுவுக் குபதேசம்பண்ணினூர். ரயிக்கியர் சானசுருதியென்கிறராஜாவுக் குபதேசம்பண்ணினூர். ஒருரிஷி சேயராஜாவுக் குபதேசம்பண்ணினூர். பகவான் அருச்சுனனுக் குபதேசம்பண்ணினூர். சவரி சூடாலை, சுல

பை, கார்க்கீ, மைத்திரி யென்கிற ஸ்திரீகளுக்கு ஞானோ பதேசம்பண்ணினார். இவர்களெல்லாரும் ஞானசித்தாள். சூத்திர வேடனாகிறதரும வியாதன கோமுட்டித் துலாதாராளிவர்கள் ஞானசித்தாள். வியாசர், வசிட்டர், பரத்துவாசர், அத்திரி, பிருகு, குச்சரர், கௌதமர், காசிபர், ஆங்கிரீச ரிவர்க ளெல்லாருந் தபோஞானிகள். ஞானசித்தாள். ஆனபடியினாலே:—ஞானஞ்சகலவர்ணங்களுக்கும், சகலஆச்சிரமங்களுக்கும், சாதாரணந்தானே. பஞ்சசிகோவென்கிற ரிஷீசுவரர் கேசரராஜாவுக்கு ஞானோபதேசம்பண்ணினார். ஜடபரதர் சவீரராஜாவுக் குபதேசம்பண்ணினார். கபிலர் தம்முடைய மாதாவாகிய தேவபூதிக் குபதேசம் பண்ணினார். பகவான் உத்தவருக் குபதேசம்பண்ணினார். ரிபு நிதாகருக் குபதேசம் பண்ணினார். காண்டிகருக்கு கேசத்துவ ருபதேசம்பண்ணினார். பிப்பலாதர் கபந்தினி முதலான ஆறுரிஷிகளுக் குபதேசம்பண்ணினார். வியாசர் சுகருக் குபதேசம்பண்ணினார். இந்தப்படிக்கு அனேகம் ரிஷிக ளனேகமிராஜாக்களுக்கு ஞானோபதேசம்பண்ணினார்கள். பகவான்விவசுவானாகிற சூரியனுக்குபதேசம்பண்ணினார். விவசுவான் மனுவுக் குபதேசம் பண்ணினார். மனு இட்சுவாகுக் குபதேசம்பண்ணினார். இந்தப்படி சர்வத்திரா ஞானோபதேசஞ் சகலஜனங்களுக்கும் ரிஷிக ளுபதேசம்பண்ணியிருக்கிறார்கள்.

ஆனபடியினாலே ஞானஞ் சகலருக்குஞ் சாதாரணந் தானே. ஞானமே; சந்நியாசமென்றன்மை. ஞானம், வைராக்கியம், உபரதி மூன்றுமொன்றுக்கொன்றுசகாயம். மூன்றுங்கூடவே யிருக்கும். வைராக்கிய முபரதி யிரண்டுமங்கம். ஞானம் பிரதானம். ஞானமில்லாம லுபரதியினாலே சத்தியலோகங் கிடைக்கும். ஞானமில்லாமல் வைராக்கி

யத்தினாலே சுவர்க்கங்கிடைக்கும். ஞானத்தினாலே மோக்ஷங்கிடைக்கும். ஞானாப்பியாசி ஞானமுதிராமல் மரித்தானானால்; புண்ணியலோகங்களை யடைந்து தேவபோகங்களை புசித்து யோகப்பிரஷ்டனாக ராஜகுலங்களிலாகிலும், ஞானகுலங்களாகிற வியாசாதி ரிஷிகுலங்களிலாகிலும், ஞானிகள் குலங்களிலாகிலும், வந்து பிறப்பன். பிறந்து திரும்ப ஞானாப்பியாசம் பண்ணிப் பூருவவாசனையினாலே ஞானத்தை யப்பியாசித்து ஞானசித்தி வந்துஅப்பால் முக்தியடைவன்.

உபரதியுடையவன், ஞானமன்றியிலே யிருக்கிறவன், சத்தியலோகமடைந்து திரும்பப்பிறப்பன். ஞானமில்லாம லுபரதியினாலேதானே முக்தியில்லை. ஞானத்தினாலேதானேமுக்தி. ஞானநிஷ்டையெவனுக்குண்டோ; அவன்பிராமணனானாலும்,சண்டாளனானாலும், அவன்நமக்குக்குருவென்று ஆசாரியசுவாமிகள்மநுடாபஞ்சகத்திலேசொல்லியிருக்கிறார்கள். ஞானந்தேவதைகளுக்கும்,ரிஷிகளுக்கும்,மநுடாளுக்கும், சகலருக்கும், சாதாரணந்தானே. ஞானாதிகாரஞ் சூத்திராளுக்குமுண்டென்று நிச்சயம். கருமம்; இரண்டுவிதம். லௌகீக கருமமென்றும், வைதீக கருமமென்றும், சொல்லப்படும். அதில், வைதீககருமஞ் சுருதியுக்தமாகிய யெக்கியாதி கருமம். ஸமிருதியுத்தமாகிய சந்தியாவந்தனாதி கருமமென் றிரண்டுவிதம். அந்தக்கருமமஞ்சுவிதம். அதாவது? நித்தியம்,நைமித்தியம்,காமியம்,பிராயச்சித்தம், நிஷித்தமெனப்படும். நிஷித்தம் பாவமானதினாலேநரகங்களைக்கொடுக்கும். காமியம்சுவர்க்காதிகளைக்கொடுக்கும். பிராயச்சித்தம்பாவங்களைப்போக்கும். நித்தியம் ஸ்நானசந்தியாவந்தனாதிகள்.நைமித்தியம் பிள்ளைபிறந்தால் சாதககரும

ம்,நாமகரணமுதலானது. அது சாத்திகமிராசதந்தாமதமெ ன்று மூன்றுவிதம்.மிராசத தாமதங்களிரண்டும்;பந்தங்கள். சாத்தீகமாகியநித்தியநைமித்திய மாத்திரம்பாவக்ஷயத்தை ப்பண்ணிச் சித்தசுத்தியைக் கொடுக்கும். சித்தசுத்தியினாலே நித்தியாநித்தியவஸ் துவிவேகம் வரும். நித்தியாநித்தியவஸ் து விவேகத்தினாலே விகமுத்திரார்த்த பலபோக விராகம் வரும்.இகமுத்திரார்த்த பலபோகவிராகத்தினாலே சமாதி சட்கசம்பத்திவரும். சமாதிசட்கத்தினாலேமுமுக்ஷுத்துவம் வரும். அந்த மோக்ஷவிச்சையினாலே சற்குருலாபம் வரும். சற்குருலாபத்தினாலே சிரவணம் வரும். சிரவணத்தினாலே மனனம் வரும். மனனத்தினாலே நிதித்தியாசனம் வரும். அந்தப்பாவனாசமாதியினாலே சாக்ஷாத்காரலக்ஷண ஞானம் வரும். ஞானத்தினாலே மோக்ஷமென்று சிலபேர் பெரிய வாள் சொல்லுவார்கள். சிரவணந்தானே;ஞானசாதன மெ ன்றுண்மை நிச்சயம். சாஸ்திரம் லோகோப காரார்த்தந் தானே.குருசிஷியவுபதேச ஆசாரங்களைப்பார்த்தாற்சகலஜ னங்களுக்கும்; ஞானவதிகாரமுண்டென்றுண்மை நிச்சயம். சிலபேர் பெரியவாள் பிராமணன், பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசிஆகியவெல்லாருமதிகாரியென் றுசொல்லுவார்கள்.ஸ்திரீகளுக்கும்,சூத்திராளுக்கும், புரா ணாதிகளினாலேயும், ஸ்மிருதிகளினாலேயும், ஞானசம்பாத னமென்றும், ஞானத்தினாலே முக்தியென்றும்,சொல்லுவா ர்கள்.வேதாந்தசிரவணத்தினாலே சாதனசதுஷ்டய சம்பன் னன் அதிகாரியென்று பாஷியம். வைஷ்ணவாள் கரும காண்டமும், ஞானகாண்டமும், இரண்டுமொரு சாஸ்திரந் தானே; இரண்டிலேயு மதிகாரி யொருத்தன்றானே; என் று சொல்லுவார்கள்.

வேதாந்திகள் வைஷ்ணவ பக்ஷங் கூடாது கருமகாண்டத்திலே; கருமியதிகாரி. சாதனரூபமாகிய சற்கருமம் விஷயம். பிரயோஜனஞ்சுவர்க்கம். இந்தக்கருமகாண்டத்திலே யத்தியாச முள்ளவனே; அதிகாரி. அந்தவத்தியாசமாவ தேதென்றுவர:—கருமசாஸ்திர மெல்லா மத்தியாசமூலம். அத்தியாசமாவது? பிரமை. அஃதெப்படி யென்றுவர:—ஸ்தூலதேகத்திலே நானென்கிற வபிமானம் பிரதம வத்தியாசம். அப்பால்; நான்பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திர னென்கிற திரண்டாமத்தியாசம். நான் பிரமசாரி, நான் கிரகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் புருஷன், நான் ஸ்திரீ, இது மூன்றுமத்தியாசம். இந்த வத்தியாச முள்ளவனைத் தொட்டுக்கொண்டு சகலகருமசாஸ்திரங்களுங் கருமகாண்டமும் பிரவர்த்தித்தது. இந்தவத்தியாசங்க ளெவனுக்கிருக்கிறதோ வவனே; கருமவதிகாரி. இந்த வத்தியாசங்களெந்த ஞானிக்கில்லையோ; அவன் கரும வதிகாரியல்ல. அவனுக்கொரு கருமமும் பண்ணத் தேவையில்லை. அவன் மூக்தாத்மாத்தானே. இந்த வத்தியாசங்கள்தானே கருமகாண்டத்துக்கு மூலம். அத்தியாசந்தானே கருமகாண்டத்திலே யதிகாரமென்று பாஷியம்,

ஞானகாண்டத்திலே:—முமுக்ஷு அதிகாரி. பிரமஞானம் விடயம். மோக்ஷம் பலம். ஆனபடியினாலே கருமகாண்ட, ஞானகாண்டங்களுக்கு; அதிகாரி, விடயம், பிரயோஜனம், பேதமிருக்கிறபடியினாலே; இரண்டு சாஸ்திரங்களும் பின்னந்தானே. ஞானமார்க்க மென்றுங் கருமமார்க்கமென்றுங் காசிராமேசுர மார்க்கம்போலே யத்தியந்தம் பின்னங்கள்தானே. சாதனசதுஷ்டய சம்பன்னனே யதி

காரியென் றிங்கு சொன்னோம். அந்தச் சாதனசதுஷ்டய சம்பத்தியாவதேதென்றால்? நித்தியாநித்திய வஸ்துவிவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதி சட்கசம்பத்தி, முமுக்ஷுத்துவம், ஆகியவிது சாதனசதுஷ்டயசம்பத்தி. நித்தியாநித்திய வஸ்துவிவேகமாவ தேதென்றால்? பிரமநித்தியம் பிரபஞ்ச மநித்திய மென்கிற விவேகம். இகமுத்திரார்த்த பலபோகவிராகமாவ தேதென்றால்? மநுஷலோகத்திலே யுள்ளசுகந்தாதி சந்தனஸ்திரீ போகாதி விடயபோகங்களெல்லா மெப்படியநித்தியமோ; அப்படிப் போலே பரலோகாதி சுவர்க்கலோகத்திலே சுகந்தாதி சந்தனஸ்திரீ போகாதி விடயபோகங்க ளெல்லாங் கருமசெ ன்னிய மானபடியினாலே அநித்தியந்தானே.

ஆனதால்:— இகலோக விடயபோக விச்சையிலே நின்றும், பரலோக விடயபோக விச்சையிலேநின்றும், வாந் தியசன மலமூத்திரத்தின்பேரிலே விச்சையில்லாததுபோல வைராக்கியம் வரவேண்டுமென்று சொன்னது சிதந்தானே. விடயங்களிலே சுகமில்லாதபடியினாலே வைராக்கியம் அவசியம் வேண்டும். விஷத்தோடே கூடியிருக்கிற தேன் போல விஷயசுகமெல்லாந் துக்கத்தோடே கூடினதுதானே. விஷயங்கள், ஆதியுடனேயு மந்தத்துடனேயுங் கூடியிருக்கிறபடியினாலே துக்கவேதுக்கள்தானே. விஷயலாபத்துக்கு முன்னுந் துக்கந்தானே. அதுலபித்தாலு மிரக்ஷிக்கிறதுந் துக்கந்தானே. திரும்ப விஷயநாசமுந் துக்கந்தானே. விஷயங்கள் நசுவரமானபடியினாலே துக்கவேதுக்கள்தானே. ஸ்திரீதேகாதிவிடயங்களை விசாரித்துப் பார்த்தாலதுகளிலேசுகமுண்டோவில்லையே. துக்கத்தைத்தானே சுகமென்று பிரமிக்கிறான்.ஆனபடியினாலே விடயங்கள்சுகா

பாசந்தானே. போகஞ்சுகமானால்;விகாரமில்லாதபோ, தந் தப்போகத்திலே ருசிகாணோமே; போகித்தபிற்பாடு மதி லே ருசிகாணோமே; ஆனதாற் பிரவிருத்தியுங் காணோமே; தேகாதிவஸ்துக்களைத்தேகத்தில் பிரத்தியேகமாய்விசாரித் துப் பார்த்தாலெதிலே ருசியெதிலே சுகந் தேகத்திலே சுகபுத்தி பிராந்திதானே. விடயங்களிலே சுகபுத்தி பிராந்தி மூலந்தானே. தாகித்தால் ஜலபானம் பண்ணுகிறான். பசித் தாலன்னம் புசிக்கிறான். காமவிகாரம் வந்தால் ஸ்திரீயுட னே போகிக்கிறான். தாகமில்லாதேபோனாற் ஜலபானம் பண்ணவில்லை. பசியில்லாதேபோனா லன்னபோசனமில்லை. காமவிகாரமில்லாவிட்டால் ஸ்திரீபோகம் பண்ணவில்லை. ஆனபடியினாலே வியாதிகளுக்குப் பரிகாரத்தைச் சுகமென் று பிரமிக்கிறான். ஸ்திரீபோகஞ் சுகமானா லெப்போதுஞ் சற்கரை தித்திப்புப்போ லெல்லாருக்கு மெப்போதுஞ் சுகமாகத் தோற்றவேண்டும். விகாரமில்லாதபோ ததிலே சுகபுத்தி தோற்றவில்லை. அதிலே வேண்டாமென்கிற புத்தி யும், நிவிர்த்தியும், கண்டிருக்கிறோம். அதுசுகமானா லெப் போதுஞ் சுகமாக வெல்லோருக்குந் தோற்றவேண்டும். பா லருக்கும், விருத்தாளுக்கும், ரோகிகளுக்கும், விகாரமில் லாதபேர்களுக்கும், விவேகிகளுக்கும், அதுசுகமாகத்தோற் றவில்லை. பாரி:—வாலையாயிருக்கிறபோதும், விருத்தையா யிருக்கிறபோதும், ரோகியாயிருக்கிறபோது மவளிடத்தி லே சுகங்காணோமே.

இது மாத்திரதிரமல்ல:— விடயத்தை விசாரித்துப் பார்த்தாற்றுக்கந்தானே. ஆனபடியாற் சுகமில்லை. இந்தப் படி பக்தலகிரியும், பகவானுஞ் சொல்லி யிருக்கிறார்கள். வேதசாஸ்திர புராணங்களுஞ் சகலரிஷிகளுந் தத்துவப்பிர

கரணங்களிலே விடயங்களெல்லாந் துக்கந்தானே; சுகமில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். வாதம்பிடித்தவனுக்கும், வழிநடந்தவனுக்கும், குத்தப்பிடிக்க மிதிக்க விவைகளெல்லாஞ் சுகமாகத் தோற்றுகின்றன. சோம்பல்முரிக்க, போசனம்பண்ணி நித்திரைபண்ண, ஜலபானம் பண்ண, குளிர்ந்தவனுக்கு வெய்யி லக்கினி யிவைகளெல்லாஞ் சுகமாய்த்தோற்றுகின்றன. சிலபேருக்குக் குளிர்ந்த காற்றும், சிலபேருக்கு நிவாதமும், சிலபேருக் குஷ்ணஜலமும், சுகமாகத்தோற்றுகிறது. சிலபேருக்குச் சுரம், கண்வலி, பல்வலி, தலைவலி, வயிற்றுவலி, இவைமுதலானரோகங்களுக் குபசாந்தியவுஷதம் பண்ணினு லந்த ரோகோபசாந்திகள்தானே; சுகமாகத் தோற்றுகின்றன. சிலபேருக்கு மச்சுவீட்டிலே படுக்க, வெளியிலே படுக்க, பனியிலே படுக்க, குளிர்ந்த சந்தனம் பூசிக்கொள்ள, குளிர்ந்த ஜலத்திலே ஸ்நானம் பண்ண, உஷ்ண ஜலத்திலே ஸ்நானம்பண்ண, சிரங்குசொரிமுதலானவிவைகளெல்லாஞ் சுகமாகத்தோற்றுகின்றன. சிலபேருக்குஅவைகள் துக்கமாயிருக்கின்றன. பிரமதேவர் சுவர்ணத்திலேயும், ஸ்திரீ யினிடத்திலேயும், மோகத்தைச் சிருஷ்டித்தார். இந்த விரண்டிலேயு மாசை யற்றவன் முக்தன்றானே. அவன் ஈசுரன்றானே. ஆகாரம், நித்திரை, மைதுனங்கள், பசுக்களுக்கும், இராக மூடர்களுக்கும், சுகம்போலத்தோற்றும். விவேகிகளுக்குத் துக்கந்தானே. விவேகிகளிவைகளிலே சுகபுத்திகளை வையார்கள். இவைகள் நித்தவியாதிகள். பதினாயிர வருஷம் ஆகாரம், நித்திரை, மைதுனங்கள், பண்ணினாலும்; திருப்தி வாராது. திரும்பவுங் காமாசைகள் விருத்தியடையும். போகங்களினாலே காமத்துக்குத் திருப்தியில்லை. காஷ்டங்களினாலேயும், ஆச்சியாகுதி களி

னாலேயும், வன்னிக்கெப்படித் திருப்தியில்லையோ; நதி
வருஷப் பிரவாகங்களினாலே சமுத்திரத்துக் கெப்படித்
திருப்தியில்லையோ; அருத்தப் பிராப்தியினாலே ராஜாவுக்
கும், தாசிகளுக்கும், திருப்தியில்லையோ; அன்னபானங்களி
னாலே யுதரத்துக்குத் திருப்தியில்லையோ; அப்படிப்போல
லக்ஷம்வருஷம் விடயபோகப் புசிப்புகளினாலே காமாசை
களுக்குத் திருப்தி வாராது. திரும்பத் திரும்பக் காமாசை
கள் விருத்தி யடைகின்றன.

எயாதியென்கிறராஜா பதினாயிரம்வருஷம் விடயபோக
ங்களைப் போகித்து ஆசையொழியாமல் விடயங்களை விட்டு
ப்போட்டுத் தபோவனத்துக்குப் போகிறவன்; போகிறபோ
து பூமியிலே யுள்ள தனதானியங்கள் ஸ்திரீ பசு ரத்தினங்க
ளெல்லா விடயங்களும் ஒருத்தனாசைக்குப் போதாதென்
றறிந்தொழிந்து போகக்கடவன். லக்ஷம்வருஷம் வேண்டிய
விடய போகங்களைப் புசித்தாலும்; காமத்துக் குபசாந்தி
வாராது. எப்படிப்போல வென்னில்? ஆச்சிய அவிசுகளை
யோமம்பண்ணின லக்கினி விருத்தியைத்தானே யடையு
முபசாந்தி யடையாதென்றறிந் துபரதியை யடையக்கடவ
னென்று சொல்லித் தபோவனத்துக்குப்போனான். அற்ப
ங்களாய் நசுவரங்களாயிருக்கிற விடயங்கள் சுகமல்ல. பி
ரமசுகமே சுகமென்று வேதங்கள் சொல்லுகின்றன. நாரிக
ளுடைய தனபாரங்களைப் பார்த்து மோகத்தையடையா
தே; அவைகள் மாமிசாதிவிகாரங்கள், மனதினாலே யடிக்
கடி விசாரி? உள்ளே யிருக்கிறது அசுசியே. அந்தவஸ்துக்
களை யடிக்கடி விசாரி? வெளியிலே சருமரூபாதிகளைக்கண்
டு:—வஸ்திராபரணங்கள், மஞ்சட் பூச்சுக்கள், களபகஸ்
தூரி குங்குமங்கள், இவைகளைக்கண்டு மோகியாதே, ஸ்தன

ங்கள் மாமிசமுடிச்சுக்கள், அவைகள் சுவர்ணகலசம்போலே
யிருக்கின்றன. முகம் ரத்தஞ் சீழுளை சேர்ந்தது; அது சந்தி
ரன்போலிருக்கிறது. பெருகாநின்றிருக்கிற மூத்திரத்தினு
லே நனைக்கப்பட்டிருக்கிற ஜகனம்; அது யானைக்கும்பஸ்த
லம்போலேயென்று கவீசுராள் மெத்த ரூபங்களை வர்ணி
த்திருக்கிறார்கள். உற்றுப்பார்த்தால்:—உள்ளு மலபாண்ட
ம், வெளியிலே நவத்துவாரங்களினு லடிக்கடி பெருகாநின்
றிருக்கிற மலங்களோடே கூடியிருக்கிறது. பிரத்தியக்ஷ
மாய் மலமூத்திரப்பை. அடிக்கடி குளித் தடிக்கடி மலங்க
ளைக் கழுவிச் சுத்தம்போலே தோற்றுகிறது. உள்ளே
பார்த்தாற் சுத்தமில்லை. சுரோணித சுக்கிலங்கூடி யிந்தரூப
முண்டாயிற்றென்று ஆசாரியசுவாமிகள், பக்தலகிரி, அ
னேகரிஷிகள், சொல்லியிருக்கிறார்கள். ஆனதால்? விடயங்க
ளிலே சுகமில்லைச் சுகம் பிராந்திதானே. உற்றுப்பார்த்தால்
முழுதுந் துக்கந்தானே. அர்த்தங்க ளார்ச்சனையுந் துக்கந்
தானே. ரக்ஷணையுந் துக்கந்தானே. நாசமுந் துக்கந்தானே.
விடயார்ச்சனையுந் துக்கந்தானே. விடயரக்ஷணையும், விட
யநாசமு மெல்லாமுந் துக்கந்தானே. பார்க்கப்போனால் பிர
பஞ்சமெல்லாந் துக்கந்தானே. அணுமாத்திரமாகிலும் விட
யஞ் சுகமல்லவென்றறிந் தடிக்கடி விசாரித்துற்றுப்பார்த் தி
கலோகபோகங்களிலே நின்றும், பரலோக போகங்களிலே
நின்றும், வைராக்கியம்வந்து விரக்தியடையவேண்டுமென்கி
ற துண்மை நிச்சயம். சமாதி சட்க சம்பத்தியாவதேதென்
றால்? சமம், தமம், திதிக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதானம்,
ஆக ஆறு. இதிற் சமமாவதேதென்றால்? சிரவணாதியி லந்
தக்கரணத்தை நிறுத்துகிறது. தமமாவதேதென்றால்? ஞான
விந்திரிய கருமவிந்திரிய நிக்கிரகம். திதிக்ஷையாவதேதென்

ருல்? பொறுமை. அதாவதேதென்ருல்? பிராரத்தவசமாய் வருகிறதுவாராமற்போகாதென்று:—வந்ததுக்கங்களையும், பிறத்தியாராலே வந்த அவமானங்களையும், சகிக்கிறது. உபரதியாவதேதென்ருல்? சந்நியாசமும், நிஷ்காம கர்மா நுஷ்டானமுமாம். வியவகாரலோபமுமாம். அந்தச் சந்நி யாச மிரண்டுவிதம். அதாவதேதென்ருல்? பாகிய சந்நியாச மென்றும், ஆந்தர சந்நியாசமென்று மிரண்டுவிதம். அதில் பாகிய சந்நியாசமாவதேதென்ருல்? தாரபுத்திரதனுதியீஷ ணுத்திரயத் தியாகம். ஆந்தர சந்நியாசமாவ தேதென்ருல்? தேகேந்திரியாதிகளில் நானென்கிற மோகத்தியாகம். அது தானே பாசபந்த சேதமென்று சொல்லப்படும். அந்தப் பாசபந்த மெட்டுவிதம். அதாவதேதென்ருல்? அனுதி அவித் தையா வாசனையினுலே:—நான் பிறந்தேன்வளர்ந்தேனிருக் கிறேனென்கிற விவைமுதலானவை யாதியிலுண்டான பந் தம். தாய் தகப்பன்பெண்டுபிள்ளை க்ஷேத்திரமுதலானதிரண் டாம் பந்தம். வருணுச்சிரமதருமமும், அதின் கருமநிஷ்டை யனுஷ்டானசங்கற்பமும், மூன்ரும்பந்தம். கர்த்துருத்துவா தி யகங்காரம்நாலாம்பந்தம். லட்சைகுணசங்கற்பந்தேவதா சங்கற்பமைந்தாம்பந்தம். எக்கியம், விரதம், தபசு, தானம், நா னுவிதமான சங்கற்ப மாரும் பந்தம். அணிமாதி அஷ்டமாசி த்தி யேழாம்பந்தம். இயம நியமாதி அஷ்டாங்கயோகம், மோக்ஷாபேக்ஷை சங்கற்ப மெட்டாம்பந்தம். இப்படி நானு சங்கற்பாதியே பந்தபாசமென்று நிராலம்ப வுபநிடதத் திற் சொல்லியிருக்கிறபடியினுலே:—இப்படிக்கொத்த பந்த பாசத்தியாகமே சந்நியாசம். இனிச் சிரத்தையாவதேதென் ருல்? குருவேதாந்த வாக்கியங்களில் விசுவாசம். சமாதான மாவதேதென்ருல்? சித்தமேகாக்கிரமும், சிரவணுதிக் கநு-

கூலமாயிருத்தலுமாம். முமுக்ஷுத்தவ மாவதேதென்றால்? மோக்ஷத்திலே விச்சை. அஃதெப்படிப்போல வென்றால்? அத்தியந்தஞ் ஜலதாகங்களோடே கூடியிருக்கிறவனுக்கு ஜலபான விச்சைபோலவும், வெய்யிலிலே யடிபட்டவனுக்கு நிழலிலேபோகவேண்டுமென்கிற விச்சைபோலவும், அக்கினி தாபத்திலே யடிபட்டவனுக்கும், தீப்பட்ட புருஷனுக்கும், ஜலத்திலேபோய் விழவேண்டுமென்கிற விச்சைபோலவும், தாபச்சுரத்தி லடிபட்டவனுக்குச் சீக்கிரஞ் சுரவிமோசனத்திலே விச்சைபோலவும், தாபத்திரயங்களோடே கூடியிருக்கிற ஜனனமரணப் பிரவாக ரூபமாயிருக்கிற துக்க சமுசார சாகரத்திலே நின்றும் விடுபட்டு வெப்போ கைவல்யத்தை யடையப்போகிறேமென்கிற தீவிரவிச்சை மோக்ஷவிச்சை யென்று சொல்லுவார்கள். இப்படிக்கொத்தவ னதிகாரி. முக்தியிலே பிரமஞானஞ் சாதனம். பிரமஞானத்திலே வேதாந்த சிரவணஞ் சாதனம். வேதாந்தசிரவணங் குருவனுக்கிரகத்தினாலே யடையத்தக்கது.

குருவுபதேசமே பிரமத்துக்குச் சொரூபம். ஆனதினால்:—தத்துவஞானார்த்த லாபநிமித்தமாக ஆசாரியரருகுசெல்லல்வேண்டும். ஆசாரியருடைய வுபதேசத்தினாலேதானே; பிரமஞானம் வரவேண்டும். அஃதெப்படிப்போலே யென்றால்? காந்தாரதேசத்துக்குப்போக விச்சித்து வழியறியாதவன், கிராமங்கள்தோறும் போகிற பேரையும் வருகிற பேரையும் வழியறிந்தபேரையுங் கேட்டுக்கொண் டெப்படிக் காந்தாரதேசம்போய்ச் சேருவனோ; அப்படிப்போலே அடிக்கடி குருவுபதேசத்தைக் கேட்டுக்கொண்டு பிரமசொரூபத்தை யறிந்துகொள்ளுவன். குருவுபதேசத்தினாலேதானே; பிரமஞானம் வரவேண்டும். ஆனதினாலே:—ஞானார்த்

தமாக வாசாரிய ரருகுபோகவேண்டும். ஆசாரியரிடத்தில் போகிறபோது இஷ்டதனவஸ்துக்களை யெடுத்துக்கொண் டுபோய்க் கொடுத் தாசாரியரைச் சாஷ்டாங்கமாக நமஸ் காரங்களெல்லாம் பண்ணி ஆசாரியரை ஈசுரராகப் பாவித் தீசுரராகப் பூசித் தந்திசந்தி சிசுருடைகளெல்லாஞ் செய் தாசாரியரைப் பிரார்த்தித் தெனக்குப் பிரமஞானத்தைக் கடாக்ஷித் தனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று சொல்லிப் பிரார்த்தித்துக் குருவாக்கிய பரிபாலனம் பண்ணிக்கொண் டவர்க்குப் பிரீதியுண்டாகும்படி நடந்துகொண்டு குருவருகி ற்றனே காத்துக்கொண்டிருக்கவேண்டும். ஓடுக்கவணக்கப க்தியுடனே லக்ஷப்பிரபுவினிடத்திலே காத்துக்கொண்டிருக் கிறதுபோலே; காத்துக்கொண் டிருக்கவேண்டும். ஆசாரிய ருக்கும், ஈசுரருக்கும், பேதமில்லை. ஆசாரியரே பிரமா, ஆசாரியரே விஷ்ணு, ஆசாரியரே சிவன், ஆசாரியரேபரப்பி ரமமென்று வேதசாஸ்திரங்களெல்லாஞ்சொல்லுகின்றன. ஈசுரனை நன்று யுபாசித்தா லாசாரியரூபியாய் வந்து ஞா னத்தைக் கொடுப்பாரென்று சகலவேத சாஸ்திரங்களுஞ் சொல்லுகின்றன. ஆசாரியரும், மீசுரரு மிரண்டுபேரு மேக மென்கிற துண்மை நிச்சயம். விசாரிக்குமிடத்தி லீசுரரைக் காட்டிலும்; ஆசாரியரே யதிகம். அஃதெப்படியென்றால்? ஈசுரன் சகலபிராணிகளிடங்களிலேயு மந்தரியாமிரூபியாய்க் கருமத்தை அபேக்ஷித்துக்கொண்டுதானே; கருமானுரூப மாக ரக்ஷிப்பர்.

கருமானுசாரமாய்ப் பலத்தைக்கொடுப்பார். கரும அபே க்ஷை யில்லாம லிவனை ரக்ஷிக்கத்தக்கதில்லை. நல்லகதி கொடுக்கத் தக்கதுமில்லை. ஆசாரிய மூர்த்தமானால்; ஞானத் தினாலே சிஷியனுடைய மூலாக்கியானத்தை யறுத்துக் கிரு

யையினாலே யிவனுடைய கரும பாசங்களையுஞ் சேதித்து ஜனன மரண துக்கங்களையும் நீக்கி ஞானப்பிரசாதத்தை யனுக்கிரகம் பண்ணி யுக்கிருஷ்டமோக்ஷ சாம்பிராச்சியத்தைக்கொடுத் தனர்த்தநிவிர்த்தியையும், ஆனந்தப்பிராப்தியையும், கொடுப்பார். அதுமாத்திரமல்ல:—ஈசுரன்கோபித்தால் குரு ரக்ஷிப்பர். குருகோபித்தா லீசுரன் ரக்ஷிக்கமாட்டார் ஆனதா லீசுரரைக்காட்டிலு மாசாரியரேயதிகமென்று வேதசாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன. இதுமாத்திரமல்ல மாதா பிதாக்களைக்காட்டிலு மாசாரியரே; அதிகம். ஏனெனில்? மாதாபிதாக்கள் ஜன்ம கரும சமுசாரங்களைக் கொடுப்பார்கள். ஆசாரியர் ஜன்ம கருமங்களையு மறுத்துச் சமுசார நிவிர்த்தி பண்ணி ஞான சரீரத்தைக்கொடுத்து நித்திய முக்தி பதத்தைக்கொடுப்பார். முற்காலத்திலும்; ரிஷிகள், ராஜாக்கள், மற்றுமுள்ள, சகலருங் குருநிஷ்டையினாலேயும், குருசிசுருடையினாலேயும், சகல சித்தியுஞ் சற்கதியுமடைந்தார்கள். இது வல்லாமல்:— சந்நியாசிகள் சகலத்தையும் பரிகரித்து குருமூர்த்தத்தைத் தானே; பரப்பிரமமாக வைத்திருக்கிறார்கள். ஆனதால்? ஆசாரியரே; பிரமமென்ற துண்மை. இந்தப்படியே வேதசாஸ்திரங்கள் சகலமு முறையிடுகின்றன.

முதலாவது சிஷியப்பிரகரண முற்றிற்று.

இரண்டாவது. ஆசாரியருபதேசப்பிரகரணம்.

ஆசாரியருபதேசப் பிரகரணஞ் சொல்லுகிறோம்.

ஆசாரியராவதார்? உபதேசம்பண்ணுகிறவர். வேதாந்தங்களெல்லாம் படித்தவர். பிரம நிஷ்டர். சமதமாதிகளுடனே கூடினவர். நல்லாசாரசம்பன்னர். இப்படிப்பட்ட பிராமணன் குரு. அந்தவாசாரிய ரெட்டுவிதம். அதாவதேதென்றால்? போதககுரு. வேதககுரு. நிசிதககுரு. காமியகுரு. சூசககுரு. வாசககுரு. காரககுரு. விகிதகுரு. இப்படிச்சிஷியாளுடைய சாதகபேதத்தினாலே போதிக்கிற மார்க்கத்தை யனுசரித்துக் குருவு மெட்டு விதமாகும். சகலவர்ணங்களுக்கும், சகலவாச்சிரமங்களுக்கும், பிராமணன்றானே குருவென்று சொல்லிவேதாந்தங்களிலேகோஷிதம். வழிகேட்டுக்கொண்டறிந்திருக்கிறவன் வழிகாட்டவேண்டும். அப்படி வேதாந்தங்கள்படித் தநுபோகசம்பன்னனாக விருக்கிறவ னுபதேசம் பண்ணவேண்டும். ஞானோபாயத்தினாலே சிஷியனுடையவக்கியானக்கிரந்தியை யத்தியந்தம் போக்கிறதற்குச்சமர்த்தனாக விருக்கிறவர்குரு. சிருஷ்டிப்பிரளயங்களினாலே சிஷியனுக்கத்தொய்தப்பிரமக்கியானத்தை யுபதேசம்பண்ணுகிறதற்குச் சமர்த்தரா யிருக்கிறவர் குரு. வேதாந்தங்களுக்கு முக்கியார்த்தத்தைச் சேதித் திலக்ஷியார்த்தத்தைச்சொல்லுகிறதற்குச்சமர்த்தராயிருக்கிறவர் குரு. சிஷியனுடைய சித்தபரிபாகத்தையறிந்து சித்தானுசாரியாகச் சிஷியனுக்குபதேசம் பண்ணுகிறதற்குச் சமர்த்தராயிருக்கிறவர் குரு. இப்படிப்பட்ட வாசாரியரானவர் சிஷியனுக்கு வேதாந்தங்களினாலே யத்தொய்தப்பிரமஞானத்தை யுபதேசம் பண்ணவேண்டும்.

சிஷியரைப் பராக்குப் பாராம லேகாக்கிரசித்தனைக் கே ளென்று சொல்லி யுபதேசம் பண்ணுகிற பிரகாரம்—போ தானந்த மயராய், ஏகராய், அத்தொய்தராய், பரமாத்மா வொருத்தருண்டு. அவர் மாயையோடேகூடி அனாதி ஈசுர ரானார்.

சிலபேர் பெரியவாள் ஈசுரனிடத்திலே நின்று மனாதி யாயிருக்கிற பிரகிருதி புருஷா ளுண்டானார்கள். பிரகிருதி மாயா அம்சம். புருஷன் பிரம அம்சம். அவருக் கனந்தசக் திக ளுண்டென்றுஞ் சிலபேர் சொல்லுவார்கள். பிரகிருதி யென்றும், மாயையென்றும், சத்தித்துவயமுண்டென்றும், சிலபேர் சொல்லுவார்கள். மாயையென்றும், பிரகிருதியெ ன்றும், இரண்டு மீசுரனுக் கொரேசத்தியென்றும்,சிலபேர் சொல்லுவார்கள். சுத்தசத்துவப்பிரதானமாகவிருக்கிற பிர கிருதியே;மாயை.தமப்பிரதானமாகவிருக்கிறபிரகிருதியே; பிரகிருதி. மலினசத்துவப் பிரதானமாகவிருக்கிற பிரகிருதி யே; அவித்தை. போதமயரா யனாதியாயிருக்கிற பரமாத்மா வானவர்:—அனாதியாயிருக்கிற மாயையோடேகூடி ஈசுர ரானார். அந்த ஈசுரர் நிமித்தகாரணர். அவர் சர்வக்ஞத்த வாதி குணங்களுடனேகூடியிருப்பார். பரமாத்மா பிரகிரு தியோடேகூடிக் கூடஸ்தராய்;உபாதானகாரணமானார்.பர மாத்மா அவித்தையா வந்தக்கரணத்தோடேகூடி ஜீவனா னார். அப்படிப்பட்ட பரமாத்மா நீயென் றுபதேசிக்கவே ண்டும். வேதாந்தங்கள்—ஞானமே பிரமமென்றும், ஜீவ னைப்பார்த்து நீயே யந்தப்பிரமமென்றும், நானே பிரமமென் றும், இந்த ஜீவாத்மாவே பிரமமென் றுபதேசிக்கிறபடியி னாலே; தேகேந்திரியாதி சாக்ஷியாயிருக்கிற நீயே பிரமமென் றுபதேசிக்கவேண்டும். விசுவோற்பத்திக்கு முன்னே ஜீவ

னில்லை. மஹாபிரளையத்திலேயும் ஜீவனில்லை. மத்தியிலே ஸ்தூலதேக வந்தக்கரணசம்பந்தத்தினாலே ஜீவன்கற்பிதனானன். ஆனபடியினாலே ஜீவன் கற்பிதன். போதமயராயிருக்கிற வாத்மா தேகவந்தக்கரணத்தோடேகூடி ஜீவனானார். சிதாகாரராயிருக்கிற வந்தப்பரமாத்மாவே நீயென்று சொல்லி உபதேசிக்கவேண்டும். யாதொரு பரமாத்மாவானவர் நூற்பூச்சிபோலே விசுவத்தைச் சிருஷ்டித்து விசுவத்துக்குள்ளே தான்றானே ஜீவரூபமாய் விளையாடித் திரும்பவும் விசுவத்தை யுபசம்மாரம் பண்ணிக்கொள்ளுகிறாரோ; அந்தப்பிரமமே நீயென்று சொல்லி உபதேசிக்கவேண்டும். யாதொரு பரமாத்மாவானவர் தன்னுடைய சத்தியினாலே தேகாதிப்பிரபஞ்சத்தைச்சிருஷ்டித் ததற்குள்ளே தாந்தாமே ஜீவாத்மரூபியாகப் பிரவேசித்துக் கிரகியானவன் கிரகத்தைநிர்மாணம்பண்ணிக்கிரகத்துக்குள்ளே கிரகப்பிரவேசம் பண்ணினாற்போலவும், பக்ஷியானது கூட்டைச் சிருஷ்டித்து கூட்டுக்குள்ளே பிரவேசிக்கிறதுபோலவும், பிரவேசித்து விளையாடிக்கொண்டிருக்கிறபரமாத்மா நீதானேயென் றுபதேசிக்கவேண்டும். யாதொரு பரமாத்மாவானவர் பிராணவிந்திரியங்களுடனேகூடி ஜீவனென்கிறபேரை யடைந்தாரோ; அந்தப்பரமாத்மா நீயேயென்று சொல்லி யுபதேசிக்கவேண்டும்.

யாதொரு பரமாத்மாவானவர் சிருஷ்டிகர்த்தாவாய் ரக்ஷகராய்ச்சங்காரகர்த்தாவாயிருக்கிறாரோ; அந்தப்பரமாத்மா நீயென்று சொல்லி உபதேசிக்கவேண்டும். தத்தொம் பதங்களினாலேயும், லக்ஷணையினாலேயும், தேகேந்திரியாதி சாக்ஷியாயிருக்கிற நீயே பிரமமென்று சொல்லி யுபதேசிக்கவேண்டும். ஆகாசத்திற் சூரியனைப்போலே; பரமாத்மா. கட

த்தைப்போலே; தேகம். கடஜலத்தைப்போலே; அந்தக்கரணம். கடஜலத்தினுட் பிரதிவிம்ப சூரியனைப்போலே சைதன்னியப் பிரதிவிம்பம் ஜீவாத்மா வென்று சொல்லி; வேதாந்தத்திலே சொல்லப்பட்ட பரமாத்மா நீயேயென் றுபதேசிக்கவேண்டும். அக்கினிபோலே; பரமாத்மா. அதிலுண்டாகிய பொறிபோலேயும், தீபம்போலேயும், ஜீவாத்மா வென்று வேதாந்தங்களிலே பிரதிபாதிக்கப்படுகிற பரமாத்மா நீயேயென்று சொல்லி யுபதேசிக்கவேண்டும். பிரகிருதி புருஷவிவேகத்தினாலேயும், ஆத்மானாத்மா விசாரத்தினாலேயும், தொம்பதார்த்த சோதனையைப் பண்ணித் தேகேந்திரியாதிசாக்ஷியாயிருக்கிற நீயேபிரமமென்றுசொல்லியுபதேசிக்கவேண்டும். ஈக்ஷணாதிப் பிரவேசாந்த மீசுர சிருஷ்டியென்றும், ஜாக்கிர முதல்மோக்ஷபரியந்தம் ஜீவசிருஷ்டியென்றும், உபதேசிக்கவேண்டும். அந்த வுபதேசமாவதேதென்றால்? தேகமு நீயல்ல. சக்ஷுவு நீயல்ல. சுரோத்திரமுநீயல்ல. ஆக்கிராணமு நீயல்ல. சிங்குவையு நீயல்ல. தொக்குவிந்திரியமு நீயல்ல. வாக்கிந்திரியமு நீயல்ல. பாத விந்திரியமு நீயல்ல. அஸ்தவிந்திரியமுநீயல்ல. சிசினகுதங்களும் நீயல்ல. பஞ்சப்பிராணன்களுநீயல்ல. மனோபுத்திசித்தமகங்காரமாகிற வந்தக்கரணமு நீயல்ல. அவித்தையாகிற பிரகிருதியு நீயல்ல. இவைகளெல்லாஞ் சடமானபடியினாலேயும், திரிசியமானபடியினாலேயும், நசுவரமானபடியினாலேயும், பௌதிகமானபடியினாலேயும், விகார வஸ்துக்களானபடியினாலேயும், இவைகளெல்லாமநித்தியந்தானே.

இவைகளைக் காட்டிலும்—விலக்ஷணராய், இவைகளுக்கெல்லாஞ் சாக்ஷியாய், நானானென்று விளங்கிக்கொண்டு சின்மயராயிருக்கிற நீயே; பரமாத்மாவென் றுபதேசிக்க

வேண்டும். நித்தியன், நிருவிகற்பன், நிராகாரன், நிர்க்குண ன், நித்தியசுத்தன், பரிபூரணன், நிருவிசாரன், நிஷ்கிரியன், சச்சிதானந்த லக்ஷண பரிபூரண சுயஞ்சோதியா யிருக் கிற நீதானே;பரமாத்மாவென் றுபதேசிக்கவேண்டும். இன் னஞ் சொல்லுகிறோம்:—இந்த வாத்மாவானவர்; சரமில்லா தவர், நித்தியர்,சாசுவதர், புராணர்,முன்னு முற்பத்தியான வருமல்ல. இப்போது முற்பத்தி யானவருமல்ல. இனிமே லுமுற்பத்தி யில்லை. இந்தவாத்மாவைக் கத்தியினாலேயுஞ் சேதிக்கக் கூடாது. வன்னியினாலேயும் தகிக்கக் கூடாது. தண்ணீராலேயு மழுகத்தக்கது மல்ல. வாயுவினாலேயுஞ் சலிக்கத்தக்கதுமல்ல. இந்தவாத்மாவெங்கு மிருக்கிறவர். அசஞ்சலர், திரசுபாவர், அவ்வியத்தர், சிந்தையில்லாதவர், அவிகாரி, மஹாநுமிருக்கிறவர், தேஜோமயர், பிரபு,விபுவா யிருக்கிறவர், சர்வக்ஞர், சங்கமில்லாதவர், அக்ஷரர் சுக ரூபி, பயமில்லாதவர், சுரோத்திரமில்லா தவர், சுத்தர், சிர சில்லாதவர்,ஆக்கிராணமில்லாதவர்,கந்தமில்லாதவர்,ஆக்கி ராணம்பண்ணப்படாதவர், பரிசகுணரகிதர், புருஷரகிதர், வசனரகிதர், வசனியாதவர், ரசகுணரகிதர், ரசமறியாதவர், பசியில்லாதவர், தாகமில்லாதவர்,தானக்கிரியாரகிதர்,பாத ரகிதர்,சுழுத்தியில்லாதவர்,சூக்ஷுமர், அசரீரி, நாமமில்லா தவர், அகோத்திரர், அவர்ணர், அநச்சிரமர், மனமில்லாத வர், அகர்மர், அக்ரோதர், அலோபி, அமோகர், மதமில்லா தவர், அமாச்சரியர், அசங்கற்பர், பர்வரகிதர், சோரரகிதர், மிருத்தியுரகிதர், சோகரகிதர், சத்தராயிருக்கிறவர்,நிர்க்கு ணர், நிருவிகாரர், நித்திய சுத்தர், பரிபூரணர்; தேஜோ மயர், நாசரகிதர், ஆனந்தமயர், ஞானமயர். அகமகமெ ன்று பிரகாசித்துக்கொண் டிருக்கிறவர், இப்படிப்பட்ட

ஆத்மாவே; நீயென் றுபதேசிக்கவேண்டும். ஞானியாயிருக்கிறபேருக் கத்தொய்த பாவனை. அஞ்ஞானிகளுக்குத்தொய்த பாவனை. ஞானிக்கு லோகமிருட்டு. அஞ்ஞானிக்குப் பிரம மிருட்டு. ஞானிக்குப் பிரமநிஷ்டை. அஞ்ஞானிக்குக் கருமநிஷ்டை. அஞ்ஞானியா யிருக்கிறவன் தேகமே நானென்று நான் கர்த்தாபோக்தாவென்கிற சிந்தையோடே கூடி யிருப்பன். ஞானியானவன் தேகேந்திரியங்க ளெல்லாம் நாமல்ல. நாமகர்த்தா வபோக்தா. நாமே; பரமாத்மாவென்றெண்ணிக்கொண்டிருப்பன். எல்லாம் பிரமமென்கிற பாவனையினாலே பிரபஞ்ச புத்திபோய்விடும்.

நாமே; பிரமமென்கிற பாவனையினாலே ஜீவனென்கிற புத்தி போய்விடும். அஃதெப்படி யென்னில்? தாருவினாற் செய்த கஜத்திலேயும், அசுவத்திலேயும், மநுஷனிலேயும், தேவதையிலேயும், தாருதிருஷ்டிபண்ணினால்; கஜதிருஷ்டியும், அசுவ மென்கிற திருஷ்டியும், மநுஷ னென்கிற திருஷ்டியும், தேவதை யென்கிற திருஷ்டியும். நசித்துப்போம். தந்து திருஷ்டி பண்ணினால்; படமென்கிற திருஷ்டியும், நசிக்கும். மிருத்துவென்கிற திருஷ்டி பண்ணினால்; கடமென்கிற புத்தி நசிக்கும். சுத்தியென்கிற புத்திபண்ணினால்; ரசிதமென்கிற புத்திநசிக்கும். ரச்சுவென்கிற திருஷ்டி பண்ணினால்; சர்ப்பமென்கிற திருஷ்டிநசிக்கும். கானலென்கிற திருஷ்டி பண்ணின வுதகமென்கிற புத்தி நசிக்கும். சுவர்ணமென்கிற திருஷ்டி பண்ணினால்; ஆபரண மென்கிற திருஷ்டி நசிக்கும். சமுத்திர மென்கிற திருஷ்டிபண்ணினால்; தரங்கமென்கிற திருஷ்டி நசிக்கும். தாணுவென்கிறதிருஷ்டிபண்ணினால்; சோரனென்கிற திருஷ்டி நசிக்கும். இந்த நியாயங்கற்பிதஸ்தலங்களி லெல்லாம் பார்க்கத்தக்கது. பா

ரமார்த்த திருஷ்டியினலே கற்பித திருஷ்டி யெல்லாம் நசிக்கும். இந்தப்பிரகாரஞ் சர்வத்திராப் பிரமதிருஷ்டி பண்ணினல்; பிரபஞ்சமென்கிற திருஷ்டி நசிக்கும். ஆத்மாவினிடத்திலே பிரமதிருஷ்டி பண்ணினல்;தான்ஜீவனென்கிற திருஷ்டி நசிக்கும். சிலையென்கிற திருஷ்டி பண்ணினல்;பிரதமையிலே தேவதாபுத்தி நசிக்கும். அப்படிப்போலே ஆத்மாவினிடத்திலே சிவோக மென்கிற திருஷ்டி பண்ணினல்; ஜீவப்பிராந்தி நசிக்கும்.பாரமார்த்த திருஷ்டியினலே; சர்வத்திராகற்பித திருஷ்டி நசிக்குமென் று வேதங்கள் சொல்லுகின்றன.

இந்தப்படி பெரியவாளும்,தத்துவதிருஷ்டி யுடைத்தானபேர்களும், சிஷியாளுக்குபதேசம்பண்ணியிருக்கிறார்கள். அஞ்ஞானியா யிருக்கிறபேருக்குத் தேகத்திலேயாத்மபுத்தி. உபாசகர்களா யிருக்கிறபேருக்கு நான் ஜீவனென் றாத்மபுத்தி. ஞானிகளாயிருக்கிறபேருக்குப் பரமாத்மாவினிடத்திலே யாத்மபுத்தி. அஞ்ஞானிகளா யிருக்கிறபேருக்கு நான் கர்த்தாவென் று ஆத்மாவினிடத்திலே கர்த்துருத்துவபாரம். ஞானிகளாயிருக்கிறபேருக்கு இந்திரியங் கரணங்கள் கர்த்தா; நான் கர்த்தாவல்லவென் றிந்திரிய கரணங்களிலே கர்த்துருத்துவபாரம். உபாசகனயிருக்கிறபேருக் கீசுரன்றான் கர்த்தர்; நான் கர்த்தாவல்லவென் றீசுரனிடத்திலே கர்த்துருத்துவபாரம். தேகந்தானென் றும், தான் கர்த்தாவென்றும், மோகத்தினலே பெத்தனுகிருன். விவேகத்தினலே தேகநாமல்ல; நான் பரமாத்மா. நான் கர்த்தாவுமல்ல; இந்திரியகரணங் கர்த்தாவென்றறிந்தா லுடனே முக்தனுகிருனீதுண்மை.ஞானியா யிருக்கிறவனுக்கு விசுவம் பிரமமயம். அஞ்ஞானியாயிருக்கிறவனுக்கு விசுவம் நாமரூபமயம். ஞா

னியாயிருக்கிறவனுக்கு விசுவம் பொய். அஞ்ஞானியாயிருக்கிறவனுக்குப் பிரமம்பொய். மரத்தின்மேலேறிச் சறுக்கி யிரண்டுகையும் விட்டவனுக்குக் கீழே விழுகிறது சித்தம்போலே; அறிவுவந்ததென்றால்? தேகேந்திரியாதிகளையும் விட்டு;மோக்ஷமடைகிறது சித்தம். ராகுவானவன் தான் சுயமதிரிசியனாக விருந்தாலுந் திரிசியாளாயிருக்கிற சந்திரசூரியாளுடனேகூடித் திரிசியனாகிறானதுபோலே; பரமாத்துமாவானவர் தாஞ் சுய மதிரிசியராகவிருந்தாலுந்திரிசியமாகவிருக்கிற வந்தக்கரணத்துடனேகூடி நானென்று திரிசியபாவத்தை யடைந்தவர்போலே யிருக்கிறார். க்ஷீரோதகத்தை யம்ஸபக்ஷியானது பிரித்துக்ஷீரத்தைக்கிரகிக்கிறதுபோலேயும், எள்ளிலே யெண்ணெயைக் கிரகிக்கிறதுபோலேயும, கரும்பிலே ரசத்தைக் கிரகிக்கிறதுபோலேயும், ஆத்மானாத்மவிசாரத்தினாலே பரமாத்மாவே நானென்றெடுத்துக்கொண்டனாத்மாவாகிய தேகேந்திரியாதிகளை; நாமல்லவென்று தள்ளிவிடவேண்டும். இதே ஆத்மலாபமென்று பெரியவாள் சொல்லுவார்கள். முகமானது யெல்லாத்தையு மறியுந் தன்னை அறிகிறதற்குக் கண்ணாடியை யபேக்ஷிக்குமது போலே ஆத்மாவானவ ரெல்லாத்தையு மறிவர் தன்னையறிகிறதற்கு சுத்தாந்தக்கரணத்தையும், வேதாந்தத்தையும், அபேக்ஷிப்பர். நிதியஞ்சனத்தினாலே நிதியறிகிறதுபோலவும், பூதாஞ்சனத்தினாலே பூதங்களை யறிகிறதுபோலவும், அக்ஷரதோஷமுள்ளவன் கண்ணாடியிலே யக்ஷரமறிகிறது போலவும், வேதாந்தங்களினாலே யாத்மாவை யறியவேண்டும். ஞானியினுடைய வாத்மா தேகேந்திரியாதிகளுடனே யொட்டத்தக்கதில்லை. அஃதெப்படியென்னில்? கடைகிறதிலே நின்று முண்டாயிருக்கிற வெண்ணெயை மோரிலே

போட்டிருந்தாலும்; அதோடேகூடத் தக்கதில்லை. தாமரை யிலையும் ஜலமும் போலவும், புளியம்பழமு மோடும்போ லவு மொட்டத்தக்கதில்லை. இன்னஞ் சொல்லுகிறோம்:—செம்பரத்தம் பூவினுடைய சிவப்புப் படிகத்திலே தோற்றுகிறதுபோலவும், வன்னியிடமாயிருக்கிற உஷ்ணத்துவம் ஜலத்திலே தோற்றுகிறதுபோலவும், அந்தக்கரணதருமமாகிய கர்த்துருத்துவாதி தருமங்களெல்லாஞ் சுத்தமாயிருக்கிற ஆத்மாவினிடத்திலே தோற்றுகின்றன. ஆகாசத்தினிடத்திலே கறுப்புத் தோற்றுகிறதுபோலே; அந்தக்கரண தருமமாயிருக்கிற கர்த்துருத்துவாதி சமுசார மாத்மாவினிடத்திலே தோற்றுகிறது.

சிலபேர் பெரியவாள் சகலகருமக் கூட்டங்களையும் விட்டுவிடவேண்டுமென்று சொல்லுவார்கள். மனு வியாச வசிட்டாதிகளுக்கும், சகல வர்ணங்களுக்கும், சகல வாச்சிரமங்களுக்கும், ஸ்திரீ சூத்திராதிகளுக்கும், பிரமாப்பியாசஞ் சாதாரணந்தானே. ஞானமெல்லாருக்கும் பொதுத்தானே. மோக்ஷமுமெல்லாருக்கும் பொதுத்தானேயென்று சித்தாந்தம். ஞானியானவன் ஸ்திரீபாலராதிசமுசாரத்துடனே கூடியிருந்தாலும்; ஆயிரஞ் சுதருமத்துடனே கூடியிருந்தாலு மவனை யொரு கருமமு மொட்டமாட்டாது.

ஜனகாதிகளைப்போலே ஜீவன் முக்தனய் ஞானியாயிருக்கிறவன் ஆயிரமசுவமேதயாகம் பண்ணினாலும்; ஆகாசம் போலே யவனை யொன்றுமொட்டாது. அவன்பண்ணுகிற கருமங்களெல்லாம் லோகோபகாரந்தானே. ஞானியாயிருக்கிறவன் கருமங்களைப் பண்ணினாலும்; பலமில்லை. பண்ணுதிருந்தாலும்; பிரத்தியபாயமாகாது. அவன் பண்ணுதிருந்தால்

லோகங் கெட்டுப்போ மவனுக்குத் தோஷமில்லை. ஆனாலும்; லோகோபகாரார்த்தமாகக்கருமங்களைப்பண்ணவேண்டுமென்று சொல்லிச் சித்தாந்தம். அஞ்ஞானியா யிருக்கிறவன் நானே கர்த்தாவென்றுசொல்லி யாத்மாவினிடத்திலே கருமபாரஞ் செலுத்துவன். சிலபே ருபாசகாள் நமக்கந்தரியாமியாக விருக்கிற வீசுரன்றானே சகல கருமகர்த்தர்; நமக்கொன்றுந் தேவையில்லையென்றுசொல்லிஈசுரனிடத்திலே கருமபாரஞ் செலுத்துவாள். சூக்ஷும திருஷ்டிகளாய்த் தத்துவ விசாரங்களோடே கூடியிருக்கிற வேதாந்தஞான சம்பன்னருக்கு; நாம்பரமாத்மா, நாம்பரப்பிரமம், நாமொன்றும் பண்ணவில்லை, நமக்கொரு கருமமுமில்லை, நம்முடைய சன்னிதானத்தினாலே யந்தக்கரணஞ் சேட்டிக்கிற தென்கிற நிட்சயமிருக்கும்.

அஃதெப்படியென்றுவர:—காந்த சன்னிதானத்தினாலே ஊசி சேட்டிக்கிறதுபோலே சூரியோதய சன்னிதானத்தினாலே-லோகப்பிராணிகளெல்லாம் மெப்படிச் சேட்டிக்கிறார்களோ; சகலபூஷணபூர்த்தியாய் ரூபவதியாயிருக்கிற தாசியானவள் தன்னுடைய சன்னிதானத்தினாலே லோகங்களுக்கு பிரவிருத்தி விகார வேதுவாக வெப்படி யிருக்கிறார்களோ; அப்படி யாத்மசன்னிதானத்தினாலே யந்தக்கரண தேகேந்திரியங்களெல்லாஞ் சேட்டித்துத் தந்தம் வியாபாரங்களை பண்ணுகுதுகள்; நாமொன்று பண்ணவில்லையென்று ஞானிகளுக் கந்தக்கரணதேகேந்திரியாதிகளிடத்திலே கருமபாரபுத்தி. சாங்கியாள் அந்தக்கரணப் பிரகிருதிக்கிச் சுதந்தரத்துவ மங்கிகரித்தார்கள். வேதாந்திக ளாத்மாவுக்குச் சுதந்தர மங்கிகரித்தார்கள். இந்த வாத்மாவானவர் தேகமயமாய்த் தேகத்தை நானென்றிருக்கிறபோது மநுஷாதிவிய

வகாரத்தை யடைவர். அந்தக்கரண மயராயிருக்கிறபோது ஜீவன் ஜீவனென்று சொல்லப்படுவர். பிரகிருதியுடனே கூடினுற் கூடஸ்தரென்று சொல்லப்படுவர். போதமயமாயிருக்கிற வாத்மா மாயையுடனே கூடினுலீசுரரென்று சொல்லப்படுவர். ஆத்மா போதமயராகவிருந்தால் பரமாத்மாவென்று சொல்லப்படுவர். ஆத்மாவுக்குத் தேகசம்பந்தத்தினுலே சுகதுக்க சம்பந்தம் வந்தது. தேகசம்பந்தம் புண்ணியபாவ சம்பந்தத்தினுலே வந்தது. புண்ணியபாவ சம்பந்தம் ராகத்துவேஷாதிகளாலே வந்தது. ராகத்துவேஷங்கள் தேகாபிமானத்தினுலேவந்தது. தேகாபிமானம்மோகத்தினுலேவந்தது. மோக மவித்தையினுலேவந்தது. அவித்தையாகிறதஞ்ஞானம். இஃது அனுதி. இதற்கு நிவிர்த்தி சொல்லுகிறேரும்:—தேகசம்பந்தம் போனுற் சுகதுக்கந்தோற்ருது. புண்ணியபாவங்கள் போனுற் றேகசம்பந்தம் போம். ராகத்துவேஷங்கள்போனுற் புண்ணியபாவசம்பந்தம்போம். தேகாபிமானம் போனுல் ராகத்துவேஷங்கள் போம். மோகம் போனுற் றேகாபி மானம் போம். அவித்தைபோனுல் மோகசம்பந்தம் போம். அவித்தை வித்தையினுற் போகவேண்டும். பெரியவாளுக்கு நிஷ்டைசொல்லுகிறேரும்:—தேகேந்திரியாதிகள் நாமல்ல, நாமே பரமாத்மா நம்முடைய சன்னிதானத்தினுலே தேகேந்திரியாதிகள் சகலகருமங்களேயும் பண்ணுகுதுகள்; நாமொன்றும் பண்ணவில்லேயென்கிற நிஷ்டையே சித்தாந்தம். சிஷியனுக்குச்சித்தபரிபாகமுண்டானுற் றேகேந்திரியாதி சாக்ஷியாய்ப் போதமயனுயிருக்கிற நீயே சின்மாத்திரப்பரப்பிரமமென் றுபதேசம் பண்ணவேண்டும். சித்தசுத்தி யில்லாவிட்டால் சகுணப்பிரமத்தை யுபதேசம் பண்ணவேண்டும். சகுணப்பிரமமென்றும், நிர்க்குணப் பிர

மமென்றும்,பிரமம் ரூபியென்றும், அரூபியென்றும்,சவ்விசே ஷம் நிருவிசேஷமென்றும்,சகள நிஷ்களமென்றும்,வியத்த மவ்வியத்தமென்றும், ஸ்தூலமென்றும், சூக்ஷுமமென்று ம், மூர்த்தமென்றும், அமூர்த்தமென்றும், காரணப்பிரமமெ ன்றும்,காரியப்பிரமமென்றும்,வேதாந்தங்கள் சொல்லுகின் றன, அதைச் சகுனப்பிரமமென்றும், நிர்க்குணப்பிரமமென் றுமிரண்டுவிதமா யங்கீகரித்தார்கள். நிர்க்குணம் பரமார்த் தம்.சகுணங்கற்பிதம். அரூபிபரமார்த்தம். ரூபிகற்பிதம்.சகு ணப்பிரம முபாசிக்கத்தக்கது. நிர்க்குணப் பிரமமறியத்தக் கது.சகுணப்பிரமமுபாசனை கர்த்ததந்திரம்.நிர்க்குணப்பிரம ஞானம் வஸ்துதந்திரம். இதிற் சகுணப்பிரம வுபாசனையாவ தியாருக்கென்றால்? வெகுவிதம் ஞானசத்தனு யிருக்கிறவனு க்கு சகுணப்பிரம்மான வீசுரனை யுபாசிக்கத்தக்கது. அவர் சகல காரண சமஷ்டி யுபாதிகர். பிரமம் வேதாந்தங்களினு லே யறியவேண்டும்.பிரமமுண்டென்கிறதிலே பிரமாணமே து? சகல வேதாந்தங்களும் பிரமாணம். பிரமத்துக்கு லக்ஷ ணமேது? ஜகத்காரணம் பிரமலக்ஷணம். இது தடஸ்தலக்ஷ ணம். இது ஈசுரனுக்கும்; லக்ஷணமாகலாம். சச்சிதானந்த லக்ஷணம் பிரமசொரூப லக்ஷணம். தடஸ்த லக்ஷணமாவ திரண்டுபேருக்கும் பொதுவாயிருக்கிறது. அஃதெப்படியெ ன்றால் ? பிரகிருதியினிடத்திலே யிருக்கிற வுபாதான கா ரணத்துவம் விவித விசித்திரப் பிரபஞ்சத்தை சிருஷ்டிக் கிறதிலேயீசுரானுக்கிரகக்கியானமன்றியிலேபோனாற்கூடா து. ஆனபடியினாலே; ஈசுரக்கியானத்தையுங் காரணமாக வபேக்ஷிக்குது. ஆனபடியினாலே;தடஸ்தலக்ஷணம். பிரகிரு தியேவப்படுகிறபடியினாலேயும்,ஈசுரன்யேவிவிக்கிறவரான படியினாலேயும்; பிரகிருதியினிடத்திலேயிருக்கிற காரண

த்துவ மீசுரனைக் காரணமாக வபேக்ஷிக்குது. ஆனபடியினாலே; தடஸ்தலக்ஷணம் பிரகிருதி கற்பிதம். ஆனபடியினாலே; ஈசுரப்பிரமமாதாரம். ஆனபடியினாலே; அவரைவிட்டுத்தனித்திருக்கமாட்டாது. ஆனதால் பிரகிருதியினிடத்திலே யிருக்கிற காரணத்துவ மதிஷ்டானமாயிருக்கிற யீசுரப் பிரமத்தைக் காரணமாக வபேக்ஷிக்குது. இது தடஸ்தலக்ஷணம். காரணத்துவம் நிமித்த காரணராக விருக்கிற வீசுரனிடத்திலேயு முபாதானகாரணமாயிருக்கிற பிரகிருதியினிடத்திலேயுமிருக்கிறபடியினாலே; தடஸ்தலக்ஷணம். பிரகிருதியினிடத்திலே யிருக்கிற காரணத்துவந் தன்னுடைய பிரவிருத்தியிலேயும், தன்னுடைய நிவிர்த்தியிலேயு மீசுரரைக் காரணமாக அபேக்ஷிக்குது. ஆனபடியினாலே தடஸ்த லக்ஷணம் ஜகத்காரணத்துவம்.

சாகாசந்திர நியாயம்போலே தடத்தலக்ஷணமென்று வித்தியாரண்ணிய சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள். பிரமம் அனுமானத்தினாலே அறியத்தக்கதென்று தார்க்கீகாள் சொல்லுவார்கள். அஃதெப்படியென்றால்? பூமி முதலானதும், முளை முதலானதும், கர்த்தாவோடே கூடியிருக்கும். கடமுதலானதுபோலக் காரியமானதினாலென்கிற வனுமானத்தினாலே சித்திக்கிற வீசுரனானவர் சர்வக்ஞராய், ஏகராய், கர்த்தாவாய், சித்திப்பரென்று தார்க்கீகாள்மதம். வேதாந்திகள்:—பிரமம் நிர்க்குணம் நிர்த்தருமமான்படியினாலே அடையாளவனுமானத்தினாலேயறியக் கூடாதென்பார்கள். பிரமம் வேதத்தினாலேதானேயறியத்தக்கதென்றுவேதாந்தங்கள் சொல்லுகின்றன. அஃதேனென்றால்? பிரமத்திலே நின்றும் வேதமுண்டாய்ச் சர்வக்ஞமானபடியினாலேயென்று வேதாந்திகள் சொல்லுவார்கள். மீமாம்ஸாள் வேதமு

ம் நித்தியந்தானேயென்று சொல்லுவார்கள். தார்க்கிகாள் மதத்திலேயும், யோகிமதத்திலேயும், ஈசுரனுண்டு. சைவ வைஷ்ணுவாளுக்கு மீசுரனுண்டு. இந்த வீசுரப்பிரமஞ் சகலவேதங்களினுலேயு மறியத்தக்கது. பிரமமானது வே தத்தினுலே யறியத்தக்கது. சர்வமயமான படியினுலேயும், சகலவேதங்களும் பிரமத்தைத்தானே சொல்லுகின்றன. ஆனதால்; வேதாந்தங்கள் பிரமத்தினிடத்திலே ஞானத் தை விதிக்கிறதென்று சொல்லக்கூடாது. பிரமமுஞ் சித் தித்த வஸ்துவானபடியினுலே; விதிவிஷய மாகமாட் டாது. ஆனதால்; வேதாந்தங்கள் பிரம்மபரங்கள்தானே. வேதாந்தங்க ளுபாசனையையுஞ் சொல்லுகின்றன. ஞான காண்டத்தையுஞ் சொல்லுகின்றன. ஆனபடியினுலே; உபா சனு காண்டமு முண்டு:— ஞானகாண்டமு முண்டென்று வேதாந்திகள் சொல்லுவார்கள். சைவவைஷ்ணுவாள் வே தாந்தங்க ளுபாசனுகாண்டத்தைத்தானே சொல்லுகுது கள்; ஞானகாண்டத்தை சொல்லவில்லையென்று சொல்லு வார்கள். அதற்கு வேதாந்திகள் வேதாந்தங்களுக்கு அத் தொய்தத்திலேதானேதார்ப்பரியம்; தொய்தம் பிரத்தியக்ஷ சித்தமானபடியினுலே தொய்தத்திலே தார்ப்பரிய மில்லை யென்று சொல்லுவார்கள். அஃதெதினுலென்ருல்? வேறே யொருபிரமாணத்தினுலே நிச்சயிக்கப்படாத தாயும், பலத் தையுடையதாயு மிருக்கிற அர்த்தத்திலே சாஸ்திரத்துக்குத் தார்ப்பரிய மென்று பெரியவாள் அங்கீகரித்தபடியினுலே; தொய்த சுருதிகளுக்கும், தொய்தப் பிரத்தியக்ஷங்களுக் கும், கற்பித வியவகாரமுங் கற்பித பேதமுந்தானே விஷ யம். அபேத சுருதிகளுக்கும், ஜனகாதிகளுடைய வபேதப் பிரத்தியக்ஷத்துக்கும், பரமாத்மாவா யிருக்கிற அபேதந்

தானேவிஷயம். ஆனதாற்றெய்தச் சுருதியினுலேயும், அபே தச்சுருதியினுலேயும், தொய்தாத்தொய்த மிரண்டு முண்டெ ன்று சிலபேர் சொல்லுவார்க ளந்தப் பக்ஷங் கூடாது. வஸ் திரண்டுவிதமாகவிராதே; ஸ்தூல திருஷ்டியினுலே சூக்ஷ ம விசாரமில்லை. ஆனதால்:—மந்தப்புத்திகளா யிருக்கிறபே ர்களந்தப்படி சொல்லுவார்கள். யதார்த்தமாகப் பாரமார் த்ததிசையிலே சகல வேதாந்தங்களுக்கும்; அபேதத்திலே தானே தார்ப்பரியம். தார்க்கீகோள்மதம் யெல்லாம் பிரம மென்கிறவேதாந்தங்களுக்குக் கடபடாதிகளெல்லாம்பிரம மென் றுபாசிக்க வேண்டுமென்று தார்ப்பரியம். கஞ்சனூ ராழ்வார்மதம் வேதாந்தகளுக்கபேதத்திலே தார்ப்பரியமி ல்லை; அபேதத்தையுஞ் சொல்லவில்லை. ஆனுல்? அபேதவுபா சனையைச் சொல்லுகிறது பேதம் பிரத்தியக்ஷ சித்தமா யிருக்கிறது.

அபேதவுபாசனைபொய்தானே. பொய்யாயிருந்தாலும்; அபேதவுபாசனை யனர்த்தமாயிருக்கிற அவித்தையாதுக்க த்தைப்பொக்கடிக்கும். அஃதெப்படிப்போலென்றுல்? விஷ ந்தீண்டினவனுக விருக்கிறவன் அபேதமாகக்கெருடபாவனை பண்ணிணு லந்தவிஷத்திலே நின்றும் விடுபடுவன். அப்படிப் போலவென்று கஞ்சனூராழ்வார் சொன்னுர். மாத்துவாள் எல்லாம் பிரமமென்கிற வாக்கியத்துக் கிராசாதீனம் ராச் சியமென்கிறதுபோலே யெல்லாம் பிரமாதீனந்தானே யெ ன்று சொல்லித் தார்ப்பரியஞ் சொல்லுவார்கள். வைஷ் ணுவாள் சைவாளெல்லாம் பிரமமென்கிறவாக்கியத்திற்கெ ல்லாம் பிரமசரீரம் பிரமஞ்சரீரியென்று தார்ப்பரியஞ்சொல் லுவார்கள். வேதாந்திகளெல்லாம் பிரமமென்கிற வாக்கிய த்திற் கபேதந்தானே தார்ப்பரிய மென்பார்கள். இந்த

விசுவத் துக்கும், பிரமத் துக்கும், பேதமில்லை. ஜீவனு
க்கும், பிரமத்துக்கும், பேதமில்லை. பிரமத்தைத் தவிர
இரண்டாம் வஸ்துவில்லை யென்கிறஞானம் அபேதஞானம்.
இந்தவிசுவத்துக்குப் பிரமந்தானேயாதாரம். பிரமந்தானே
நிமித்தகாரணம். பிரமந்தானே யுபாதான காரணம். பிரமந்
தானே போக்தாவா யிருக்கிற ஜீவன். ஆனபடியினாலே;
எல்லாம் பிரமந்தானே யென்கிறஞானம் அபெதஞானம்.
யெதெதுகாணப்படுகிறதோ;யெதெது கேட்கப்படுகிறதோ;
யெல்லாம் பிரமமயந்தானே யென்கிறஞானம் அபேதஞா
னம். இப்படிப்பட்ட அத்தொய்தக் கியானம் வேதாந்தங்
களினாலே வரவேண்டுமென்பார்கள். இன்னம் சொல்லுகி
றோம்; அத்தியாரோப வபவாதங்களினாலே சிஷியனுக்கு
அத்தொய்தப் பிரமக்கியானத்தை யுபதேசம்பண்ணவேண்
டும். அத்தியாரோபவபவாதங்களேதுவென்றவர:—சிருஷ்
டிப்பிரளயங்க ளுற்பத்தி நாசங்களென்றும், உபக்கிரமம்
உபசங்காரங்களென்றும், சொல்லுவார்கள். சூரிய அஸ்த
மானம்போலேயும், சூரிய வுதையம்போலேயும், ஜாக்கிரஞ்
சுழுத்திபோலேயும், பகல் ராத்திரிபோலேயும், சிருஷ்டிப்
பிரளயஞ் சொல்லுவார்கள். அஃதெப்படிப்போலென்றால்?
தரங்காதிகளுக்கெல்லாஞ் சமுத்திரத்தினிடத்திலே தானே
யுற்பத்தி. சமுத்திரத்தினிடத்திலேதானே லயம். அப்படிப்
போல நாமரூபப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பிரமத்தினிட
த்திலே யுற்பத்தி. பிரமத்தினிடத்திலேதானே லயமென்று
சொல்லிப் பெரியவாள் சொல்லுவார்கள். ஞானமாகிறது;
அந்தக்கரணத்தினுடைய அவித்தையாமலத்தைநசிப்பித்துத்
தானுங்கூடப் பிரமசொரூபத்திலே தேற்றாங்கொட்டையை
ப்போலே யிருக்கும். கர்பூரவன்னியானது; கர்ப்பூரத்தை

யுண்பதுபோலே யந்தக்கரணத்திலே யுதித்திருக்கிற ஞானமானது; அந்தக்கரண மலங்களையெல்லா முண்டுவிடும். ஞானமானது; ஆத்மாவை மோக்ஷராச்சியத்துக்குப்பட்டத்தையுடையவனாகப் பண்ணும்.

இரண்டாவது ஆசாரியருபதேசப்பிரகரணம் முற்றிற்று.

மூன்றாவது. அத்தியாரோபப்பிரகரணம்.

இனிமேலத்தியாரோபசிருஷ்டியை விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

தார்க்கிகாள்:—ஈசுரன் நிமித்தகாரணம், பரமாணுக்களுபாதானகாரணம்,காலாதிஷ்டாதிகளுஞ்சகாகாரிகாரணம், ஜீவனீசுரனைக்காட்டிலும் பின்னம், ஜீவாளு மொன்றாக்கொன்று பின்னாள்,சுகதுக்காதிகள் நானாவிதமாயிருக்கையினாலே ஜீவன் சரீரந்தோறும் பின்னன்;பிருதுவி அப்புத்தேயு,வாயு நாலும் காரியபூதங்கள், நித்தியம், விபு, திரவியம், நவத்திரவியம், அவைகளியாதென்றால்? பிருதுவி, அப்பு,தேயு, வாயு,ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனசு, ஆகத்திரவியமொன்பது. குணங்க ளிருபத்துநான்கு அவைகள் யாவையெனில்? ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியா, பரிமாணு, பிரத்ததுவா, சய்யோகா, விபாக, பரத்துவா, அபரத்துவா, குருத்துவ, திரவத்துவா, சினேக, சத்த, புத்தி, சுக, துக்க, இச்சா, துவேஷா, பிரயத்தன, தரும, அதரும, சமுஸ்கார, ஆகக் குண மிருபத்துநான்கும்; நவத் திரவியகுணங்கள். ஈசுரர்:—சர்வக்ஞர், அரூபி, விபு. ஜீவர்களும் விபு,

நித்தியாள். ஈசுரனுக்கு ஜீவபோகார்த்தம், பூதசிருஷ்டியி லே பிரவிருத்திசிருஷ்டி காலம்வந்தமட்டிலேதானே; பிரா ணிகளுடைய வதிட்ட வசத்தினுலே ஈசுரருக்குச் சிருஷ்டிக் கிற விச்சையுண்டாம். அந்த விச்சையினுலே விரண்டு பரமா ணுக்கள் கூடி யொரு திவேணுகம் பிறக்கும். மூன்று திவே ணுகங்கூடி யொரு திறிவேணுகம் பிறக்கும். நாலு திறிவே ணுகங்கூடிச் சதுரணுகம் பிறக்கும். இந்தப்படி கிரமத்திலே ஸ்தூலமும், அதிலுமதிகமான ஸ்தூலதருமமும், அதிலுமதி கமான ஸ்தூலதருமமும், அதிலுமதிகமான மஹாப்பிருதுவி பிறக்கும். இப்படித் தார்க்கீகாள் சிருஷ்டிபிறக்கிற கிரிஙைக சொல்லுவார்கள். அவர்கள் மதத்திலே சொல்லுகிறது:— ஆத்மா சடமயர், அந்தக்கரணத்தோடேகூடி ஞானமுடை யராயிருக்கிறூர், சேதனர், நானென்கிற ஞானத்துக்குவிஷ யர், புத்தியாதி யட்டகுணகர், புத்தியாதிகளாகிற தே தென்றூல்? புத்தி, சுக, துக்க, இச்சா, துவேஷா, பிரயத்த ன, தரும, அதரும, சமுஸ்கார, ஆக வொன்பது மாத்மா வுக்குக் குணமென்று மாத்மாச் சடமயர், ஞாஞசிரயர், கர்த்தா, போக்தாவென்றுஞ் சொல்லுவார்கள்.

பிதாவினிடத்திலே யுண்டான புத்திரன் போலவென் றவர்கள் மதம். இஃது:— ஆரம்பவாதமான பேதவாதம். தர்க்க மதத்தை வேதவிருத்த மென்றும், பரமாணுவுக்கு ஜகத்காரணத்துவம் வேதங்களிலோரிடத்திலேயுஞ் சொல் லியிருக்கவில்லை யென்றும், தர்க்க மதத்தையவைதிக மென் றும்,வியாசாசாரியர் தூஷித்திருக்கிறூர். சாங்கியன்மதம்:— பால்தானே தயிரானுற் போலப் பிரகிருதி தானே விசுவ மாகப் பரிணமித்ததென்று சிருஷ்டி சொல்லப்படும். இது பரிணுமவாதம். இது வேத விருத்தாமஙபடியினுலே:—இங்

தப்பக்ஷங் கூடாது. வேதாந்திகள் சிருஷ்டிசொல்லுகிறோ ம்:— ரச்சு சர்ப்பம்போலேயும், சுத்திரசிதம் போலேயும், கானற்சலம்போலேயும், தமகுணத்தோடே கூடியிருக்கிற பிரமம்:— விவர்த்தவுபாதானப் பிரமமென்று தார்ப்பரியம். இது விவர்த்தவாதம். சிருஷ்டிக்கு முன்னே பிரமமே:— யேகமாய், அத்தொய்தமாகவிருந்தது. அந்த அத்தொய்த மாவது பிரமமொன்று தானே; இரண்டாம் வஸ்து வில்லை: இதர்க்கர்த்தம் சுஜாதீயபேதமுமில்லை. விஜாதிய பேதமு மில்லை. ஸ்வகதபேதமுமில்லை. அஃதெப்படியென்றுவர:— சூரியன்றானே ஜலசூரியன் போலவும், சந்திரன்றானே ஜலசந்திரன்போலவும், முகந்தானே கண்ணாடியிற் பிரதி முகம்போலவும், பிரமந்தானே யவித்தையா வந்தக்கரணத் தோடே கூடி ஜீவனானார்; பிரமத்தைத் தவிர வேறே ஜீவ னில்லை. ஆனபடியினாலே:— பிரமத்துக்கும், ஜீவனுக்கும், பேதமில்லை. இது சுஜாதீயபேத மில்லாமலிருக்கிறது. இனி மேல் விஜாதீயபேதரகித மெப்படி யென்று வர:—சுவர்ண த்திலே குண்டலாதிகளெல்லாங் கற்பிதம்,மிருத்திகையினிட த்திலே கடாதிகளெல்லாங் கற்பிதம், இரும்பி னிடத்திலே யாயுதாதிகளெல்லாங் கற்பிதம், தந்துவிலேபடாதிகளெல் லாங் கற்பிதம், சமுத்திரத்திலே தரங்காதிகளெல்லாங் கற் பிதம்,கானலினிடத்திலே ஜலங்கற்பிதம், சுத்தியிலே ரசிதங் கற்பிதம்,அப்படிப்போலே வுபாதானமாயிருக்கிற பிரமத்தி லே பிரபஞ்சங் கற்பிதம்.ஆனபடியினாலே; கற்பிதங்கள் கார ண அதிஷ்டானத்தைக் காட்டிலுமன்னியமல்ல. ஆகையினா லே; நாமரூபப் பிரபஞ்சங் கற்பிதம். பிரபஞ்ச வியவகாரமு ம் கற்பிதம், ஜீவனுங் கற்பிதம், ஜீவசமுசாரவியவகாரமுங் கற்பிதம், தேகமுங் கற்பிதமென்று பெரியவாள் சொல்லு

வார்கள். நாமரூபப்பிரபஞ்ச மெப்படிக்கற்பித மென்றால்? மாதா பிதா விரண்டுபேருங் கூடி யுண்டான குமாரனுக்கு நாமகரணம் பண்ணுகிறார்களே; அது தவிரப் பிரமசாரி யென்றும், கிரகஸ்த னென்றும், வானப்பிரஸ்த னென்றும், சந்நியாசி யென்றும், வித்துவானென்றும், உபாத்தியாரென்றும், சிர்வுதியென்றும், தீக்ஷிதரென்றும், சோமயாசி யதிராதிரிவாச பெயரென்றும், சுயம்பாகி யென்றும், மந்திரவாதி வயித்தியனென்றும். இவைமுதலாய்க் கிரியா கற்பிதமாயிருக்கிற நாம வியவகாரங்களும், லோகத்திலே கண்டிருக்கிறோம். இதுவல்லாமல்:—பாதாதிகேசபரியந்தம் அவையவங்களிலேயுற்றுப்பார்த்தாற்பெயரைக்காணோமே. இதுவல்லாமல்:—பாதாதிகேசபரியந்தம் பார்க்குமிடத்திற் றுக்காதிகள்தவிரப் பாதாதி வஸ்துக்களையுங் காணோமே. பாதாதி கேசங்களிலே ரூபமென்கிற சரீரவஸ்துவையுங் காணோமே.

இந்தப்படி கிரகமென்கிற விடத்திலே திரணகாட்டத்தைத் தவிரக் கிரகமென்கிற வஸ்துவைக்காணோமே. இரத்தினக் கம்பளமென்கிற விடத்திலே விசித்திர தந்துகள் தவிர ரத்தினக்கம்பளத்தைக்காணோமே. பல்லாக்கு வென்கிற விடத்திலே பட்டுநூற்கயிறு தந்தங்கள் கொம்பு விவைகளைத்தவிர பல்லாக்கைக் காணோமே. தந்து படத்தலத்திலேயும், கடமென்கிற தலத்திலேயும், சுத்திரசிதத்தலத்திலேயும், ரச்சுசர்ப்பத்தலத்திலேயும், கானற்ஜலமென்கிற தலத்திலேயும், ஆபரணமென்கிறதலத்திலேயும், அலையென்கிறதலத்திலேயும், ஸ்தாணு புருஷனென்கிற தலத்திலேயும்,இந்தநியாயந்தானே கண்டிருக்கிறோம்.ஆனபடியினாலே சொப்பனப் பிரபஞ்சம்போலே ஜாக்கிரநாமரூபப் பிரபஞ்ச

ங் கற்பிதந்தானே. பிரபஞ்சவியவ காரமுங் கற்பிதந்தானே. அஃதெப்படியென்னில்? கஜமும்பொய் ஓடுதலும்பொய் யென்கிற நியாயம்போலே:—வியவகார மெல்லாங் கற்பிதந் தானே. இன்னஞ்சொல்லுகிறோம்; தேவதத்தன்றானே தன் பிள்ளையைக் குறித்துத் தோப்பனாகவும், பிதாவைக்குறித்துப்புத்திரனாகவும், தம்பியைக் குறித்துத் தமையனாகவும், தமயனைக்குறித்துத் தம்பியாகவும், மாமனைக்குறித்து மருமகனாகவும், மருமகனைக்குறித்து மாமனாராகவும், மாமனாரைக்குறித்து மாப்பிள்ளையாகவும், மாப்பிள்ளையைக் குறித்து மாமனாராகவும், சிஷியனைக்குறித்து வாசாரியராகவும், ஆசாரியரைக்குறித்து சிஷியனாகவும், எஜமானைக்குறித்து ஏவலாளாகவும், ஏவலாளைக்குறித்து எஜமானாகவும், பாரியைக்குறித்துப் பதியாகவும், பேரனைக்குறித்துப் பாட்டனாகவும், பாட்டனைக்குறித்துப் பேரனாகவும், இவை முதலான வனந்த வியவகாரங்களொருதேவதத்தனிடத்திலே கற்பிதங்களாகக் கண்டிருக்கிறோம். ஆனதால் பிரபஞ்ச வியவகாரங்களெல்லாஞ் சொப்பன வியவகாரம்போலே கற்பிதந் தானே.இன்னஞ்சொல்லுகிறோம்; பரமாத்மாத்தானே விசுவகாரணர். சுத்தியினிடத்திலே ரசிதங் கற்பிதம்போலே பரமாத்மாவினிடத்திலே விசுவம் மாயையினாலே கற்பிதம். சுத்தியிலே கற்பித ரசிதம்போலே பிரபஞ்சம் பரமாத்மாவைக்காட்டிலும் பின்னமன்று.சுத்தியிலேகற்பிதரசிதஞ்சுத்தியைக் காட்டிலும் அபின்னம்போலே பரமாத்மாவினிடத்திற்கற்பிதவிசுவம் அவ்வாத்மாவைக்காட்டிலும் அபின்னந் தானே.விசுவோற்பத்திக்கிமுன்னேபரமாத்மாவேகமாயிருந்தார். அஃதெப்படியென்னில்? கற்பித ரசிதோற்பத்திக்கு முன்னே சுத்திமாத்திரமா யிருந்தாற்போல:— மாயை

யோடே கூடியிருக்கிற பரமாத்மாத்தானே; பிரபஞ்சமாகத்தோற்றுகிறார். இது விவர்த்தவாதம். இன்னஞ் சொல்லுகிறோம்; பரமாத்மாத்தானே ஜீவனாயிருக்கிறார். ஸ்தாணு தானே புருஷனாயிருக்கிறதுபோ லிருக்கப்பட்ட கற்பித ஜீவன் பரமாத்மாவைக் காட்டிலும்பின்னமன்று. ஸதாணுவைக்காட்டிலுங் கற்பிதபுருஷனெப்படிப்பின்னமல்லவோ; அப்படிப்போலேபரமாத்மாவைக்காட்டிலும் கற்பிதஜீவன் அபின்னந்தானே. ஜீவப்பிரமத்துக்குமுன்னேயும், ஜீவவுபாதியுடனே கூடுகிறதுக்கு முன்னேயும், பரமாத்மா வேகராயிருக்கிறாரே; அப்போது ஜீவனில்லையே.

அஃதெப்படியென்னில்? கற்பிதபுருஷனைக்காட்டிலுங் ஸ்தாணு அன்னியந்தானே; பிராந்திக்குமுன்னே கற்பித புருஷனில்லையே. அப்போதுஸ்தாணுமாத்திரமா யிருக்கிறதே; ஆகாய சூரியனிடத்திலே ஜலசூரியன் கற்பிதன். கற்பித ஜலசூரியனாகாயசூரியனைக்காட்டிலும் பின்னமன்றே; ஆகாயசூரியனானால்கற்பித ஜலசூரியனைக்காட்டிலும் விலக்ஷணர் தானே. கடஜலமில்லாதபோது ஆகாய சூரியன் மாத்திரமாகத்தானே யிருக்கிறாரே; அப்படிப்போலே ஜிவன் கற்பிதன். கற்பிதங்களெல்லா மதிஷ்டானத்தைக் காட்டிலும் பின்னமல்ல அதிஷ்டானமோவென்றால்? ஆரோபஜீவனைக்காட்டிலு மன்னியந்தானே; ஆரோபமில்லாதபோ தாத்மாத்தானே யிருக்கிறார். பரமார்த்த ஞானத்தினாலே கற்பித விசுவதிருஷ்டியும், கற்பித ஜீவதிருஷ்டியும், நசித்துப்போம். சர்வத்திர காரண பரமார்த்த திருஷ்டியினாலே கற்பிதகாரியதிருஷ்டிகளெல்லா நசித்துப்போ மீதுண்மை. இனி ஜீவனெப்படிக்கற்பிதமென்றால்? ரச்சுசர்ப்பம்போலேயும், ஸ்தாணுபுருஷன்போலேயும், ஜலசூரியன்போலேயும், ஜலசந்தி

ரன்போலேயும், ஜலாகாசம்போலேயும், ஜலமுகம்போலேயும், கற்பிதந்தானே. அஃதெப்படியென்றால்? சைதன்னிய மாத்திரம் ஜீவனல்ல. அந்தக்கரணமாத்திரம் ஜீவனல்ல. ஆனால்:—சித்து அம்சமும், அந்தக்கரண விர்த்தியுங் கூடி ஜீவனானான். அந்த ஜீவன் சமுசாரி. அந்தக்கரணத்திலே பிரதிபலித்திருக்கிற சைதன்னியம் ஜீவன். அந்தக்கரணத்தினாலே மறைக்கப்பட்டிருக்கிற சைதன்னியம் ஜீவன். இவன் விக்ஞானமயனென்று வியாசர் மதம். அவித்தையோடே கூடியிருக்கிற சைதன்னியம் ஜீவன். அவித்தையிலே பிரதிபலித்திருக்கிற சைதன்னியம் ஜீவன். அவித்தையினாலே யாவரிக்கப்பட்டசைதன்னியம் ஜீவன். அவர்தான்கூடஸ்தர். அவர் தான்;பாரமார்த்தீக ஜீவன், விக்ஞானமயர், வியவகாரிகஜீவனென்றுபாஷியக்காரர்மதம். விக்ஞானமயர்ஜீவன். கூடஸ்தர்தானே ஆனந்தமயர். அவ்வியத்தோபாதிக ரவர் தானே; பரமாத்மாவென்று சூத்திரக்காரர் மதம். விஷ்ணுவினிடத்திலே தாசாதிபாவம்போலேயும், கருணனிடத்திலே தேர்பாகத் தன்மைபோலேயும், ராஜபுத்திரனிடத்திலே வேடபாவம்போலேயும், தசமனிடத்திலே தசமனல்லவென்கிற பாவம்போலேயும், ஜீவபாவம் பிரமத்தினிடத்திலேகற்பிதம். அவித்தையினாலே ரச்சுவினிடத்திலே சர்ப்பபாவம் கற்பிதம். அவித்தையினாலே ஸ்தாணுவினிடத்திலே புருஷபாவம் கற்பிதம்போலே, பரமாத்மாவினிடத்திலே யவித்தையினாலே ஜீவபாவங் கற்பித்ந்தானேயென்று பாஷியக்காரர் மதம். இனி ஜீவசமுசாரங் கற்பிதமெப்படியென்னிற் சமுசாரமாவது? புத்திரதாராதி சம்பந்தலக்ஷணம். இன்னம் ஜனனமரணப்பிரவாகாதி சம்பந்தலக்ஷணம். இந்தவுபயவிதசமுசாரமுங் கற்பிதந்தானே.

அஃதெப்படியென்னில்? ஒரு கிரகத்திலே பிதாவென்றும், புத்திரனென்றும், பாரியென்றும், தம்பியென்றும், தமையனென்றும், பேரனென்றும்,பாட்டனென்றும், அம்மானென்றும்,மருமகனென்றும், தங்கையென்றும்,தமக்கையென்றும், தாயென்றும், சிறியதாயாரென்றும், அத்தையென்றும், மாமியென்றும், பசுக்களென்றும், ஆடுகளென்றும், ஆளடிமை யென்று மொருகிரகத்தி லெல்லாருங் கன்மானுசாரமாக வந்துகூடி ரமித்துக்கொண் டிருக்கிறார்கள். அவாளவாள் தன் தன் கருமவேதுவாக வந்திருக்கிறார்கள். தன் தன் கருமத்தினாலே சஞ்சரிக்கிறார்கள். தன் தன் கருமங்களைத்தானே புசிக்கிறார்கள். அஃதெப்படியென்றால்? இராத்திரி காலத்தி லொருவிருக்ஷத்திற் பக்ஷிக்கூட்டம்போல்வும், சந்தைக் கூட்டம்போலவும், கலியாணத்திலும் திருநாளிலும்வந்து கூடுகிறஜனக்கூட்டம்போலவு மொரு கிரகத்திலே கருமானுசாரமாகப் புத்திரதாராதிகளெல்லாம் வந்து கூடியிருக்கிறார்கள். தன்கருமங்களைப் புசித்துக் கருமக்ஷயமான மட்டிலே; தானே தன் கருமங்களைத் தழிஇ தன்கருமங்களினாலே;இழுக்கப்பட்டுப்பரலோகத்தை யடைகிறார்கள். ஆனா லெத்தன்மைத்ததாய்த் தென்றால்? புத்திரபாரிகளெல்லாருந் தன்கருமங்களினாலேவந்து, தன் கருமங்களினாலே சஞ்சரித்துத் தன் கருமங்களைப்புசித்துத் தன்கருமங்களினாலே பரலோகத்துக்குப் போகிறார்கள். கடன் சம்பந்தத்தால்:— பசுஸ்திரீ, பிள்ளைகள், வீடுகளித்தியாதி ரூபமாக வந்து கடன்தீர்ந்தாற் சமஸ்தமுநாசத்தை யடைகின்றன. இதிலே துக்கமென்னவென்று சுலோகமிருக்கிறபடியினாலே போகிறபோது கிரமமில்லாமல் அவரவர்கருமப்படி பரலோகத்துக்குப்போவார்கள்,சமுசா

ரவிசித்திரமனைத்தும் கருமகற்பிதந்தானே. ஏ! பிராந்தா? வுனக்குஸ்திரீயார், புத்திரனார், அதி விசித்திரமா யிருக்கிற சமுசாரமியாதுநீயாருக்குயார், நீதான்யார், நீதான்யெங்கே யிருந்து வந்தாய்; ஆதலால்:—தத்துவத்தைச்சிந்தனைபண்ணு வென்று ஆசாரியசுவாமிகள் வசனமிருக்கிற படியினாலே; சொப்பனசமுசாரம்போலே ஜாக்கிரசமுசாரமுங் கற்பிதந் தானே. ஜனனமரணப்பிரபஞ்சலக்ஷணமாயிருக்கிற சமுசார முமுபாதி கற்பிதந்தானே. ஆத்மா அசங்கரென்றும், அசமு சாரியென்றும், அவிகாரியென்றும், நிர்க்குணரென்றும், நிஷ் க்கிரியரென்றும், வேதசாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. ஆனபடியினாலே; ஆத்மாவினிடத்திலே ஜீவபாவமும், சமு சாரமும், அந்தக்கரணோ பாதி கற்பிதம். ஜலசூரியனிடத்தி லேயும், ஜலசந்திரனிடத்திலேயும், ஜலாகாயத்தினிடத்திலே யும், ஜலமுகத்தினிடத்திலேயும், இருக்கிற அலைச்சலெப்படி ஜலோபாதியதிஷ்டானத்தினிடத்திற் கற்பிதமோ; அப்படிப் போலே:—இந்திரியவந்தக்கரணோபாதி கற்பித சமுசாரமா த்மாவினிடத்திலே யேத்தப்படுகிறது. மேகமோடுகிறபோது சந்திரன்நட்சத்திரஞ் சீக்கிரகதியாக வோடுகிறது போலே எப்படித்தோற்றுகிறதோ; அப்படிப்போலே:—இந்திரிய வி யவகாரங்களாத்மாவினிடத்திலே தோற்றுகிறது. இன்னஞ் சொல்லுகிறோம்; புத்தியிருந்தாற் ஜாக்கிர சொப்பனங்களி லே ராகத்துவேஷாதிகள் சகல கிரிகைகளுங் கண்டிருக்கி றோம். சுழுத்தியிலே புத்தியில்லாதபோது ராகத்துவேஷா திகளுமில்லை. ஒருகருமங்களுமில்லை. ஆனபடியினாலே; ராக த்துவேஷாதிகளும், சகல கருமங்களும், புத்திதருமந்தா னே. அதுமாத்திரமல்ல:— ராகத்துவேஷாதிகள் புத்தி தருமமென்று வேதங்களுஞ் சொல்லுகின்றன.

ஆனபடியினாலே; புத்திதானே கர்த்தா. ஞானவிந்திரியங்கருமவிந்திரியங்களுடனேகூடியிருக்கிற வந்தக் கரணந்தானே; சகலகிரியா கூட்டங்களுடனே கூடியிருக்கிறது. இதுமாத்திரமல்ல:— சொப்பனத்திலே புத்திதானே சகல சொப்பனப்பிரபஞ்ச வியவகாரமெல்லா நிருவகிக்கிறது. மானத பூசையிலே; தானானே சகலவியவகாரமுங் கற்பிதமாக பண்ணுகிறது. மனோராச்சியத்திலேயும்; சகலநிருவாகமும் புத்திதானே பண்ணுகிறது. பாகியவிந்திரியங்களெல்லாஞ் சகாகாரி அந்தக்கரணந்தானே பிரதானம். பாகியவிந்திரியங்களுடனே கூடியிருக்கிற வந்தக் கரணந்தானே கர்த்தா.

பூருவம் பாகிய விந்திரியங்களினாலே யநுபவித்தபதார்த்தங்களையெல்லா மேகாந்தத்திலே யிருந்துகொண்டு ஸ்மரிக்கிறான். ஆனதால்? அந்தக்கரணந்தானே; சகலகர்த்தா. சகலபோக்தா. சகல சமுசாரி. அந்தக்கரண சம்பந்தத்தினாலே; ஆத்மா கர்த்தாப்போலவும், போக்தாப்போலவும், ஜீவன்போலவும், சமுசாரிபோலவும், வியவகாரிபோலவும், அவிவேகிகளுக்குத் தோற்றுகிறார். ஜலத்தினுடைய வலச்சல் ஜலசூரியனிடத்திலே தோற்றுகிறதுபோல வந்தக்கரண சமுசார மாத்மாவினிடத்திலே தோற்றுகிறதென்று சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன.

ஆனதால்:—ஆத்மாவினிடத்திற் சமுசாரம் ரத்தப்படிகம், நீலஸ்படிகம், ரத்தஜலம், நீலஜலம், பரிமளஜலம், உஷ்ணஜலம், இத்தியாதிகளைப்போலே கற்பிதந்தானே. அப்படிப்பட்ட கற்பிதபுத்தி யதார்த்தக் கியானத்தினால் நசித்துப்போம். இனித்தேகம் கற்பிதமெப்படியென்றால்? தேகம், அநிர்வசநீயம். அஃதெப்படிபோலேயென்னில்? புசிக்கிற அ

ன்னபானங்கள் சுக்கில சுரோணிதமாய்ப் பரிணமித்துக் கெற்ப கோளகத்திலே இரண்டுங்கூடிப் பிண்டமாய்க் கர சரணுதி யவையவங்கள் முளைத்துச் சேதனனுய்ப் பத்து மாதங் கெற்பத்திலிருந்து வெளியிலே வந்து, வாலிபயவ்வன கௌமார வார்த்திக அவத்தைகளுடனே கூடுகிறது, பார்க்கிறது, கேட்கிறது, வசனிக்கிறது, கொடுக்கிறது, வாங்கிறது, போகிறது, வருகிறது, இருக்கிறது, எழுந்திரிக்கிறது, படுக்கிறது, அன்னபானங்களைப் புசிக்கிறது சகல வியவகாரங்களையும் பண்ணுகிறது, இவைகளெல்லா மெப்படி நடக்கிறதென்றால்; பிரதியுத்தர முகபாவந்தானே. அநிர்வசனீயந்தானே. இந்தத்தேகத்திலே:—முன்னூத்தறுப் தெலும்பு, எழுபத்திராயிர நாடி, மூன்ரரைக்கோடிரோமம், ஆறுதுவக்கு, அஸ்தி, மாமிசம், உதிரம், மேதசு, மச்சை, சனுயு, மூத்திரபுரிச சங்காத மிந்தச் சரீரம். இவைகளெல்லாங்கூடி யெப்படிக் காசரணுதியவயவமாய்ச்சரீரமாயிருக்கிறது; இந்தச்சரீரஞ் சகல சமுசாரங்களையும், சகல வியவகாரங்களையு மெப்படிப் பண்ணுகிறதென்று கேட்டாற் பிரதியுத்தர மாச்சரியந்தானே. ஆனதால்:—தேகாதிப் பிரபஞ்சம் விசாரிக்குமிடத்திற் கற்பிதம் அன்றியி லநிர்வசனீயந்தானே. விசுவப் பிரபஞ்சத்துக்கும், பிரமத்துக்கும், பேதமில்லை. இது விஜாதீகபேதரகிதம். இரண்டாம் பிரமமில்லை. ஒன்றே பிரமமானபடியினலே ஸ்வகதபேதமில்லை. இப்படி பேதத்திரய சூனியமா யன்னியவஸ்துவில்லாதபடியினலே பிரமமத்தொய்தமென்று சொல்லப்படும். பிரமமனந்தமென்று சொல்லப்படும். அதாவது? காலத்தினலேயும், தேசத்தினலேயும், வஸ்துவினலேயும், பரிச்சேதரகித மிதற்கர்த்தம். பிரமம் நித்தியமானபடியினலேயும், காலத்தைகடந்

திருக்கிற படியினாலேயும், இன்னகாலத்திலே பிரமமில்லையென்கிற அபாவங்கிடையாது. பிரமம் விபுமானபடியினாலே:—இன்னதேசத்திலே யில்லையென்கிற விதிரேகங்கிடையாது. பிரமஞ் சகல உபாதான காரணமானபடியினாலே இன்னவஸ்துப் பிரமமல்லவென்கிறவிதிரேகங் கிடையாது. ஆனபடியினாலே :—பிரமம் பரிச்சேதத்திரய சூனியம். இதை யானந்தமென்று சொல்லப்படும். அப்போதுபிரமமேகமாயிருக்கு மிரண்டாம் வஸ்துவில்லை. அப்போதொரு பூதங்களுமில்லை. ஒரு பிராணிகளுமில்லை. அண்டமுமில்லை. புவனங்களுமில்லை. சூரிய சந்திராளுமில்லை. பூமி யந்திரிக்ஷசுவர்க்கமுமில்லை. ஸ்தூலமுமில்லை. சூக்ஷுமமுமில்லை. காரணதேகமான மாயை யவ்வியத்தமுமில்லை.

பிரமத்தைத்தவிர வேறே வஸ்துவுமில்லை. பிரமமாத்திரம் மேகமாயிருந்தது. அப்போது சகலபிராணிகளும், சகலபிரபஞ்சங்களும், ஆலவிரையி லாலமரம் லயித்திருந்தாற்போலவும், அரசவிரையி லரசமரம் லயித்திருந்தாற்போலவும், அந்தந்தப் பீசங்களிலே யந்தந்த விருக்ஷம் லயித்திருந்தாற்போலவும், அப்புவிலே உப்புப்போலவும், சகலமுஞ் சூக்ஷுமப்பிரமத்தினிடத்திலே லயித்திருக்கும். அப்போது பிரமம் நித்தியமாய், நிருவிகற்பமாய், நிராகாரமாய், நிர்க்குணமாய், சுத்தபரிபூரணமாய், ஆனந்தமாய், ரக்ஷிக்கத்தக்கதாய், சித்தாய், முக்கிய ரசமாய், சத்திய ஞானானந்த லக்ஷணமாய், சுயஞ்சோதியாய், சுகாகாரமாய், போதரூபமாகத்தானே யிருந்தது. சைவ வைஷ்ணுவாள், சூரியமண்டலமுஞ் சூரிய கிரணம் போலவும், சந்திரமண்டலமுஞ் சந்திரகிரணம்போலவும், தீபமுந் தீபப் பிரவைபோலவும், மணியு மணிப்பிரவைபோலவும், பரமாத்மா ஜீவாத்மா யிரு

க்கிறார். அவரை:—ஞானமயர், ஞானகுணகரென்றுஞ் சொல்லுவார்கள். இப்படி மந்தப்புத்தியினாலே சொல்லுவார்கள். நிர்க்குணச்சுருதிவிரோதத்தினாலே யந்தபக்ஷம்போயிற்று. அப்பாற் பிரமம் நிஷ்பிரபஞ்சமாய் வெகுகாலமிருந்தது. சிருஷ்டிகாலம் வந்தமட்டிலேதானே; பரப்பிரமத்தினிடத்திலே நின்றும்மாயை யுண்டாயிற்று. அப்படிப்பட்ட மாயையுடனே பரபிரமங்கூடி ஈசுரனானார். ஈசுரர் சர்வக்ஞத்துவாதிகுணங்களுடனே கூடினவர். அப்படிப்பட்ட வீசுரரானவர் தாமேகாங்கியா யிருந்துகொண்டு சிருஷ்டிகாலம் வந்தமட்டிலேதானே சுயவிச்சையினாலே விசுவப்பிரபஞ்சத்தை சிருஷ்டிக்க வேண்டுமென் றிச்சித்தார் தாந்தானே பிரபஞ்சரூபியாய், வெகுரூபமாய், விளையாடவேண்டுமென் றிச்சித்தார். பிரமந்தானே நிமித்தோபாதானம். அனந்தசத்திகளோடே கூடியிருக்கிற பரமேசுரரானவர்:—தம்மிடத்திலே நின்றும் பிரகிருதி புருஷாளென்று சொல்லுகிற விரண்டு தத்துவங்களைச் சிருஷ்டித்தார்.

மூன்றாவது அத்தியாரோகப்பிரகரணம்

முற்றிற்று.

நான்காவது. பிரகிருதிசிருஷ்டிப்பிரகரணம்.

—:o:—

இனிப்பிரகிருதி சிருஷ்டி சொல்லுகிறோம்.

அந்தப் பிரகிருதிதானே; இருபத்துநாலுதத்துவ மாயிற்று. புருஷனிருபத்தைந்தாந் தத்துவமென்று வேதாந்தங்கள் சொல்லுகின்றன. பிரகிருதி மாயா அம்சம். புருஷன் பிரம அம்சம்:— போதமயன். சிலபேர் பெரியவாள் சுத்த

சத்துவப் பிரதானமாக விருக்கிற பிரகிருதி தானே; மாயை
யென்று சொல்லுவார்கள். மலினசத்துவப்பிரதானமாகவிரு
க்கிற பிரகிருதிதானே; அவித்தையென்றுசொல்லுவார்கள்.
தமப்பிரதானமாக விருக்கிற பிரகிருதிதானே பிரகிருதி
யென்று சொல்லுவார்கள். பிரமந்தானே; மாயை யுடனே
கூடி நிமித்தகாரணமான வீசுர ராளுரென்றும், பிரமந்தா
னே; பிரகிருதியுடனேகூடி யுபாதானகாரணமா யிருக்கிற
கூடஸ்த ராளுரென்றும், பிரமந்தானே ; அவித்தையா
வந்தக்கரணத்துடனேகூடிப் போக்தாவான ஜீவனுரெ
ரென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் மா
யை வேறே, பிரகிருதி வேறே, இரண்டுக்கும் பேதமுண்டு;
மாயோபாதிக ரீசுரர், பிரகிருதி ஜீவோ பாதியென்று
சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் பிரகிருதி யீசுரோ
பாதியென்றும், அந்தக்கரணம் ஜீவோபாதி யென்றுஞ்
சொல்லுவார்கள். பரமேசுரரானவர்:—விசுவோற்பத்திநிமி
த்தியம் பிரகிருதி புருஷாளை யொன்ருய்க் கூட்டவேண்டு
மென்று நினைத்தார். ஸ்திரீபுருஷாள்கூடிப்பிரசவோற்பத்தி
போலவும், பீசங்களும் பூமியுங்கூடிப் பயிருற்பத்திபோல
வும், பிரகிருதி புருஷாள்கூடி விசுவோற்பத்தியிலே; கார
ணம். சையோகமாவ தத்தியாசசம்பந்தம். பிரகிருதி புருஷ
பிரிவு:—விசுவசங்காரத்திலே காரணம். பிரகிருதி புருஷ
சையோகமென்றும், ஆத்மாளுத்ம சையோகமென்றும், சிற்
சடசையோகமென்றும், பெரியவாள் சொல்லுவார்கள்.
சைவவைஷ்ணுவாள் பக்ஷம்:—ஈசுரன் வேறே, பிரகிருதி
புருஷாள் வேறே, ஈசுரனுக்குப் பிரகிருதிபுருஷாளிரண்டும்
விசுவசிருஷ்டி லீலையிலே யுபகரணசாதனம். புருஷனுட
னேகூடியிருக்கிற பிரகிருதியினிடத்திலேயின்றும் மகதத்து

வமென்கிற தத்துவாந்தர முண்டாயிற்று. அந்த மகதத்துவம்:—அந்தக்கரண சமஷ்டிரூபம். இரணிய கற்பவுபாதி. அவர்தானே; ஜீவசமஷ்டிரூபர். இரணியகற்பர். அந்தக்கரணசமஷ்டிரூபி. மகதத்துவத்திலே நின்று மகங்காரதத்துவமுண்டாயிற்று. அகங்காரம் மூன்றுவிதம்.வைகரி,தைசதம், பூதாதி,அதைத்தானே:—சாத்தீக அகங்காரம், ராசத அகங்காரம், தாமத அகங்காரமென்று சொல்லுவார்கள். சாத்தீக வகங்காரத்திலே நின்றும் ஞானேந்திரியங்களுந் தேவதைகளு முண்டானார்கள். ராசத அகங்காரத்திலே நின்றுங் கருமேந்திரியங்களுஞ் சகலவியாபாரங்களு முண்டாயிற்று. பூதாதி தாமத வகங்காரத்திலே நின்றுஞ் சத்ததன்மாத்திரை யுண்டாயிற்று.

நான்காவது பிரகிருதிசிருஷ்டிப்பிரகரணம்
முற்றிற்று.

ஐந்தாவது. பூதசிருஷ்டிப்பிரகரணம்

பூதசிருஷ்டிப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

சிலபேர் பெரியவாள்:—ஆத்மாவினிடத்திலே நின்றுமாகாசமுண்டாயிற்று, ஆகாசத்திலே நின்றும், வாயுவுண்டாயிற்று, வாயுவிலே நின்றுந் தேயு, தேயுவிலே நின்றும் அப்பு, அப்புவிலேநின்றும் பிருதுவி, பிருதுவியிலே நின்றுமோஷதிகள், ஓஷதியிலேநின்று மன்னம், அன்னத்திலே நின்றும், ஜீவாளுண்டானார்களென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள்:—பிரமத்தினிடத்திலே நின்றும் தேயுவுண்டாயிற்று, தேயுவிலேநின்றும் அப்பு, அப்புவிலே நின்

றம் பிருதுவி, பிருதுவிலே நின்று மன்னம், அன்னத்திலே நின்றும் பிராணிகளுண்டானார்களென்றுஞ் சொல்லுவார்கள். ஸ்மிருதிபுராணங்கள் வேதத்தினுடைய பொருளைச் சொல்லுகிறபடியினாலே; வேதங்களையும், ஸ்மிருதிபுராணங்களையும், மொன்றாகக்கூட்டி யவிரோதமாக அர்த்தஞ் சொல்லுகிறோம். பூதாதியாயிருக்கிற தாமதவகங்காரத்திலே நின்றும்; சத்ததன்மாத்திரையுண்டாயிற்று, தன்மாத்திரை, மஹாபூத சூக்ஷுமவவத்தை, சத்த தன்மாத்திரத்திலே நின்று மாகாசமுண்டாயிற்று, ஆகாசத்துக்குச் சத்தங் குணம். ஆகாசத்திலே நின்றும் பரிசதன்மாத்திரை யுண்டாயிற்று, பரிசதன்மாத்திரையிலே நின்றும் வாயுவுண்டாயிற்று, வாயுவுக்குப்பரிசங்குணம். வாயுவிலேநின்றும் ரூபதன்மாத்திரையுண்டாயிற்று, ரூபதன்மாத்திரையிலே நின்றுந் தேயு வுண்டாயிற்று, தேயுவுக்கு ரூபங் குணம். தேயுவிலே நின்றும் ரசதன்மாத்திரை யுண்டாயிற்று, ரசதன்மாத்திரையிலே நின்றும் அப்புவுண்டாயிற்று, அப்புவுக்கு ரசங் குணம். அப்புவிலே நின்றும் கந்ததன்மாத்திரை யுண்டாயிற்று, கந்ததன்மாத்திரையிலே நின்றும் பிருதுவியுண்டாயிற்று, பிருதுவிக்கிக் கந்தங் குணம். தன்மாத்திரைகளைப் பீசாக்ஷரங்களென்றுஞ் சிலபேர் சொல்லுவார்கள். இந்தப்படி பரமேசுரரானவர் சூக்ஷுமபஞ்ச மஹாபூதங்களைச் சிருஷ்டித்தார்.

பிரகிருதியானது திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். மகதத்துவந் திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். அகங்காரதத்துவம் திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். ஆகாசதத்துவம்திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும்.

வாயுவுதத்துவந்திரிகுணாத்மகம்;சைதன்னியத்துடனே கூடியிருக்கும். தேயுவுதத்துவந் திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். அப்புதத்துவந் திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். பிருதுவிதத்துவந் திரிகுணாத்மகம்; சைதன்னியத்துடனே கூடியிருக்கும். பூருவபூருவதத்துவ முத்திரோத்திர தத்துவத்துடனே கூடியிருக்கும். உத்திரோத்தர தத்துவங்கள் பூருவ பூருவ தத்துவங்களுடனே கூடியிருக்கும். ஆனபடியினாலே:—ஆகாசத்துக்குச் சப்தங் குணம். வாயுவுக்கு சப்தம், பரிச மாகக் குணமிரண்டு, தேயுவுக்குச் சப்தம்,பரிசம், ரூப மாககுணமூன்று, அப்புவிக்குச் சப்தம், பரிசம், ரூபம், ரச மாகக்குணநான்கு, பிருதுவிக்குச் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்த மாகக்குணமைந்து. ஆகாசமிடங்கொடுக்கும். வாயுவுசலனப்படும். தேயு வுஷ்ணப்பிரகாசம். அப்பு சீதத்திரவத்திரவியம். பிருதுவிகடினத்திரவியம். அக்கினியினுடைய சன்னிதானத்திலே யரக்குருகிறதுபோலவும்,வெண்ணெயுருகிறதுபோலவும், மண்ணிலுண்டாகிறவளை யுருகிறதுபோலவும், ஈயமுருகிறதுபோலவும், புருஷசன்னிதானத்திலே;பிரகிருதி விகாரப்படும். சப்தமாவது:—தொனியாத்மகம், வர்ணாத்மகமென்று விரண்டுவித மாகாசத்துக்குக் குணம். சுடுகை, குளிர்மை, சீதோஷ்ணதொந்த மாகப் பரிசமூன்று விதம் வாயுவுக்குக் குணம். வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, பச்சை, மஞ்ச ளாக ரூபமஞ்சுவிதம் தேயுவுக்குக் குணம். தித்திப்பு, புளிப்பு, துவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப் பாக ரசமாறுவிதமாகவிருக்கு மப்புவின் குணம். பரிமளந்துற்கந்தமென்று கந்தமிரண்டுவிதம் பிருதுவிக்குக் குணம்.இத்தப்படிபரமேசுரரானவர் குணசிருஷ்டியைப் பண்ணினார். சிலபேர் பெரிய

வாள்:—பஞ்சமஹா பூதங்கள்தானே; பிரகிருதியென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் பிருதுவி, அப்பு, தேயு விந்த மூன்றுந்தானே பிரகிருதி யென்று சொல்லு வார்கள். சிலபேர் பெரியவா ளாத்மாத்தானே சகலத்துக் கும்பிரகிருதியென்று சொல்லுவார்கள். பிரகிருதியாவது? உபாதானகாரணம். சிருஷ்டி திதி சங்காரகர்த்தா வாத்மா த்தானே. ஆனபடியினலே அபின்ன நிமித்தோபாதான மாத் மாவென்றும் பெரியவாள் சொல்லுவார்கள். சிலபேர் பெரி யவா ளாகாசாதி:—சாத்தீகாங்கிசத்திலேநின்றும் ஞானேந் திரியங்களுந் தேவதைகளு முண்டானார்கள். ஆகாசாதிகளு டையரசாங்கிசத்திலேநின்றுங் கருமேந்திரியங்களுஞ் சகல வியாபாரங்களு முண்டாயிற்று. அஃதெப்படியென்றால்? ஆகாசத்தினுடைய சாத்தீகாங்கிசத்திலே நின்றுஞ் சுரோத் திரேந்திரிய முண்டாயிற்று:—சப்தம் விஷயம். வாயுவினு டைய சாத்தீகாங்கிசத்திலே நின்றுந் தொக்கிந்திரிய முண் டாயிற்று:—பரிசம் விஷயம். தேயுவினுடைய சாத்தீகாங்கி சத்திலே நின்றுஞ் சக்ஷு வுண்டாயிற்று:—ரூபம் விஷயம். அப்புவினுடைய சாத்தீகாங்கிசத்திலே நின்றும் ரசவிந்திரி முண்டாயிற்று:— ரசம் விஷயம். பிருதுவினுடைய சாத்தி யாங்கிசத்திலே நின்று மாக்கிராண விந்திரிய முண்டா யிற்று:—கந்தம் விஷயம். ஆகாசத்தினுடைய ரசாங்கிசத்தி லேநின்றும் வாக்கிந்திரிய முண்டாயிற்று:—வசனம் விஷய ம். வாயுவினுடைய ரசாங்கிசத்திலே நின்றும் பாதவிந்திரிய முண்டாயிற்று:— கமன கமனம் விஷயம். தேயுவினுடை ய ரசாங்கிசத்திலே நின்றும் அஸ்தவிந்திரிய முண்டாயி ற்று:—தானதானவிஷயம். அப்புவினுடைய ரசாங்கிசத்தி லே நின்றும் சிசினவிந்திரிய முண்டாயிற்று:—ஆனந்தம்

விஷயம். பிருதுவியினுடையரசாங்கிசத்திலேநின்றும்குதேந்திரியமுண்டாயிற்று:—விசர்க்கம் விஷயம். இந்தப்படிக்கருமேந்திரியங்களும் வியாபாரங்களு முண்டாயிற்று:—ஆகாசத்துடனே கூடியிருக்கிற வாயுவுதத்துவத்திலே நின்றும் சாத்தீகாங்கிசத்திலே மனதுண்டாயிற்று:— சலனுத்மகம். தேயுவினுடைய சாத்தீகாங்கிசத்திலே நின்றும் புத்தியுண்டாயிற்று:—நிச்சயாத்மகம். அப்புவுனுடைய சாத்தீகாங்கிசத்திலேநின்றுஞ் சித்தமுண்டாயிற்று:—தாரணுத்மகம். பிருதுவியினுடையசாத்தீகாங்கிசத்திலேநின்றும் அகங்காரத்துவமுண்டாயிற்று:—அபிமானுத்மகமென்றுபேர். சிலபெரியவாள்:—பிருதுவியிலே நின்று மனதும், அப்புவிலே நின்று பிராணனும், தேயுவிலே நின்று வாக்கிந்திரியமு முண்டாயிற்றென்றுசொல்லுவார்கள். சிலபேர் புராணிகாள்:—பிரமா, விஷ்ணு, ருத்திரர், ஈசுரர், சதாசிவர், ஆகிய பஞ்சவதி தேவதைகள் பஞ்சமஹாபூதங்களுக்கு ஐந்து பீசாக்ஷரங்களுமைந்துவர்ணங்களுமாக வுண்டாயிற்றென்று சொல்லுவார்கள். அதாவது? ஹ ய ர வ ல யிந்தவைந்தும்பீசாக்ஷரம். வெளுப்பு ஆகாசம். புகைவர்ணம் வாயுவு. சிவப்புதேயு. பொன்னிரமப்பு. நீலவர்ணம் பிருதுவி. சிலபேரப்பைவெளுப்பென்றும், ஆகாசத்தைக் கறுப்பென்றும், பிருதுவியைப் பொன்னிரமென்றுஞ் சொல்லுவார்கள்.

பரமாத்துமாவானவர்:—ஐந்து பஞ்சபூதங்களோடேயாறும்பூதமாய்க் கலந்து, சித்தாளுடைய ரசகுளிகையோடே கூடின லோகந்தானே பொன்னுகிறதுபோலே; தாந்தானே விசுவப்பிரபஞ்சமானுர். உருச்சமைக்கிற கன்னுனவன்:—மண்ணினுலே கருவுருரூபமாய்ப்பிடித் துள்ளே மெழுகு கட்டி மேற் செம்பை யுருக்கிவிட்டு விம்ப முண்டு

பண்ணுகிறதுபோல; ஈசுரனானவர் தேகக்குகையைப் பிடித்து மனதாகிற மெழுகை யுள்ளேவிட்டுத் தம்முடைய அம்ச சைதன்னிய ஆத்மாவாகிய தாம்பிரத்தை யந்தக்கரணத்துக்குள்ளே பாய்ச்சி ஜீவனானார். தேகமும், மனதும், சைதன னியமுங்கூடி ஜீவனானார். இந்தப்படி பரமேசுரனுடைய சிருஷ்டி. பரமேசுரனானவ ரிந்தப்படி பஞ்சமஹாபூதங்களை யுஞ்சிருஷ்டித்து விந்த வைந்துகளையு மொன்றாகச்சேர்த்து அண்டத்தையும்விசுவத்தையுஞ்சிருஷ்டிக்கவேண்டுமென்று நினைத்தார்.

ஐந்தாவது பூதசிருஷ்டிப் பிரகரணம்

முற்றிற்று.

ஆறுவது. அண்டசிருஷ்டிப்பிரகரணம்.

பஞ்சமஹாபூதங்களொன்றுக்கொன்று சேராதபடியினாலே விரோதம் பரிகரிக்க வேண்டிப் பஞ்சீகரணம் பண்ணினார். பஞ்சீகரணமாவது? ஆகாசாதி பஞ்சபூதங்களை யிரண்டு கூறாகப் பிரித்துப் பாதியைத் தனிப்பிறம்பாய் வைத்து மற்றப்பாதியை நாலுபங்கு பண்ணி அதைத் தன் அம்சத்துடனே கூட்டாம லிதர பூதாம்சங்களுடனே கூட்டவே யது பஞ்சீகரண மென்று பேர். இதுவிஸ்தாரமெத்தவுமுண்டாயிருக்கிற படியினாலே; இப்போ சங்கிரகமாகச்சொன்னோம். பரமேசுரரானவ ரிப்படிப் பஞ்சீகரணம்பண்ணி விரோதம்பரிகரித்துப் பஞ்சமஹா பூதங்களையொன்றாகத்தானே சேர்த்துப் பஞ்சீகிருதமா யிருக்கிற பஞ்சமஹா பூதங்களிலேநின்றும் அண்டத்தைச் சிருஷ்டித்து

வண்டத்துக்குள்ளே தாந்தாமே யிரணியகற்ப ரூபியாய்ப் பிரவேசித் திந்த விசுவத்தைச் சிருஷ்டித்தார். இன்னஞ் சொல்லுகிறோம்; பரமேசுரரானவர் முன்னே யப்புவைச் சிருஷ்டித்தார். அப்புவுக்குள்ளே தன்னுடைய வீரியத்தை விசர்ச்சனம் பண்ணினார். அந்த வீரியசத்தியிலேநின்று மண்டமுண்டாயிற்று. அந்தவண்டம் பொன்மய மாயிரஞ்சூரியப் பிரகாசமா யிருக்கும் குக்கிடாவண்டம்போலவும், அத்திக்காய்போல்வு மிருக்கும். அப்படிக்கொத்த அண்டத்தைபரமேசுரரானவர் மஹாஜலமத்தியிலே நிறுத்தினார். சமுத்திரமத்தியிலே ஓடம் நிறுத்தினாற்போலே நிறுத்தினாரென்றும், அப்படிக்கொத்தவண்டத்திலே தாந்தானே இரணியகற்பரூபியாய் பிரவேசித்தாரென்றும், மனுவசனம்.

ஆறுவது அண்டசிருஷ்டிப்பிரகரண முற்றிற்று.

ஏழாவது. விசுவசிருஷ்டிப்பிரகரணம்.

:o:

விசுவசிருஷ்டி சொல்லுகிறோம்.

அண்டத்தைச் சிருஷ்டித்து அண்டத்துக்குள்ளே பரமேசுரர் தாமே இரணியகற்பரூபியாகப் பிரவேசித் திந்த விசுவப் பிரபஞ்சமெல்லாஞ் சிருஷ்டித்தார். தம்முடையசரீரங்களிலே நின்றுஞ் சகல பிரபஞ்சங்களையுஞ் சிருஷ்டித்தார். ஆதியிலே பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசங்களைச் சிருஷ்டித்தார். பதினாலுலோகம் புவனங்களையுஞ் சிருஷ்டித்தார். சத்ததீவுகளையுஞ் சிருஷ்டித்தார். சத்தசமுத்திரங்களையுஞ் சிருஷ்டித்தார். மஹாமேருமுதலான பருவதங்களை

யுங் கங்கைமுதலான நதிகளையுஞ் சிருஷ்டித்தார். பூமியந் திரஞ் சுவர்க்கங்களையுஞ் சிருஷ்டித்தார்.

மஹாலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்திய லோகம், முதலான புண்ணிய லோகங்களை யெல்லாஞ் சிருஷ்டித்தார். நாகலோகத்தையுஞ் சிருஷ்டித்தார். அதல, விதல், சுதல, ரசாதல, தராதல, மஹாதல,பாதாள,இந்தக் கீளேழு லோகமுஞ் சிருஷ்டித்தார். சூரிய சந்திராதிகளை முன்கற்பம்போலே யெல்லாஞ் சிருஷ்டித்தார். இந்திராதி லோகபாலாளையெல்லாஞ்சிருஷ்டித்தார்.அவாளவாளுக்கு ஸ்தான பலங்களை யெல்லாம் பூருவகற்பம்போலே சிருஷ்டித்தார். அதிகாரங்களை யெல்லாம் சிருட்டித்தார். இந்திரனுக்கு சுவர்க்காதி காரமும்,யமனுக்குநரகாதிகாரமுஞ்சிருஷ்டித்தார். தேவதைகள், கந்தருவாள், கின்னராள், கிம்புருஷாள், சித்தாள், வித்தியாதராள், நாகாள், எக்ஷாள்முதலாகிய தேவதைகளையுஞ் சிருஷ்டித்தார். அசுராள்,ராக்ஷதாள், பிசாசா ளிவர்களை யெல்லாஞ் சிருஷ்டித்தார். மனுஷாள், பசு, பக்ஷி மூதலாகிய மிருகங்களையுஞ் சிருஷ்டித்தார். பிராமண,க்ஷத்திரிய, வைசிய, சூத்திராள் முதலான வர்ணங்களையுஞ் சிருஷ்டித்தார். பிரமதேவர்; தம்முடைய முகத்திலே நின்றும் பிராமணாளைச் சிருஷ்டித்தார். புயத்திலே நின்றுஞ் க்ஷத்திரியாளைச் சிருஷ்டித்தார். தம்முடைய துடையிலே நின்றும் வைசியாளைச் சிருஷ்டித்தார். தம்முடைய பாதங்களிலே நின்றுஞ் சூத்திராளைச் சிருஷ்டித்தார்.

தம்முடைய பாரிசங்களிலே நின்றும் பிருதுவியைச் சிருஷ்டித்தார். தம்முடைய நாபியிலே நின்று மந்தரிசத்தைச் சிருஷ்டித்தார். தம்முடைய சிரசிலே நின்றுஞ்

சுவர்க்கத்தை சிருஷ்டித்தார். தம்முடைய கா்துகளிலே நின்றுந் திக்குகளைச் சிருஷ்டித்தார். தம்முடைய முகத்திலே நின்று மிந்திரனையு மக்கினியையுஞ் சிருஷ்டித்தார். தம்முடைய கண்களிலே நின்றும் சூரியனையும், பிராணனிலே நின்றும் வாயுவையும், மனதிலே நின்றும் சந்திரனையும், தம்முடைய சுக்கிலத்திலே நின்றும் அப்புவையும், சிருஷ்டித்தார். தம்முடைய சிரசிலே நின்று மாகாசத்தையும், இருதயத்திலே நின்றும் மனதையுஞ் சிருஷ்டித்தார். தம்முடைய ரோமங்களிலே நின்றும் மரம், செடி, கொடி, கல்பக விருக்ஷ முதலானதுகளையுஞ் சிருஷ்டித்தார். முன் சொன்ன நாலுவர்ணங்களையுஞ் சிருஷ்டித் தவர்களுக் கவரவர் தருமங்களையுஞ் சிருஷ்டித்தார். பிராமணனுக்கு யாகம்பண்ணுகிறதும், யாகம்பண்ணுவித்தலாகிய தருமங்களையும், சந்தியாதி தியானதி தருமங்களையும், அக்கினிஹோத்திராதி தருமங்களையுஞ் சிருஷ்டித்தார். க்ஷத்திரியனுக்குப் பிரஜைகளை ரக்ஷித்து பரிபாலனம் பண்ணுகிறது முதலான தருமங்களெல்லாஞ் சிருஷ்டித்தார். வைசியனுக்கு வெள்ளாண்மை, கோவை ரக்ஷிக்கிறது, வாணிப முதலான தருமங்களெல்லாஞ் சிருஷ்டித்தார். சூத்திரனுக்கு சிசுருடை முதலான தருமங்க ளெல்லாஞ் சிருஷ்டித்தார்.

பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, நாலாச்சிரமமுஞ் சிருஷ்டித்தார். அவர்களுக் கவரவர் தருமங்களையுஞ் சிருஷ்டித்தார். பிரமசாரிக்கி:— வேதாத்தியானம், பிரமசரியங், குருகிரகத்திலே வாசம், பிக்ஷைக்குச் சஞ்சரித்தல் முதலானதெல்லாஞ் சிருஷ்டித்தார். கிரகஸ்தனுக்கு:— விவாகம், பிள்ளைகளை யுண்டாக்குதல், அதிதி பூசை, தேவதைகள், பிதிர்க்க ளிவர்களுக்குத்

திருப்தி பண்ணுதல், ஓமம் பண்ணுதல், அக்கினிஹோத்திராதிக ளிவைகளெல்லா மவனுடைய தருமமாகச் சிருஷ்டித்தார். வானப் பிரஸ்தனுக்கு:—வனவாசம், காய், கிளங்குமுதலானது பக்ஷிக்கிறது, திரிகாலஸ்நானம், சடைதரிக்கிறது, பிரமசரிய மோதுதல் முதலானதெல்லா மவனுடைய தருமமாச்சிருஷ்டித்தார். ஸ்திரீயோடுகூடிய வானப்பிரஸ்தாள்:—ஸ்திரீஇல்லாதவானப்பிரஸ்தா ளிரண்டுவிதம். சந்நியாசிகளுக்குச் சகல தருமங்களையும் விட்டுவிட,காஷாயந் தண்டங்களைத் தரிக்க, வேதாந்தத்தினாலே பிரமவிசாரம்பண்ண, பிக்ஷாசனம், பிரமசரியம், மடவாச மிதுமுதலான தெல்லாஞ் சந்நியாசிகள் தருமமாக சிருஷ்டித்தார்.

பிராமணனுக் கிந்த நாலாச்சிரமுஞ் சிருஷ்டித்தார். க்ஷத்திரியனுக்கு மூன்றாச்சிரமும், வைசியனுக் கிரண்டாச்சிரமமும், சூத்திரனுக் கோராச்சிரமு மிந்தப்படிசிருஷ்டித்தார். ஸ்திரீகளுக்கும், சூத்திராளுக்கும், சிசுருடை தருமமாகச் சிருஷ்டித்தார். வேதசாஸ்திர புராணங்களையுஞ் சிருஷ்டித்தார். எக்கியம், தானம், தபசுகளையெல்லாஞ் சிருஷ்டித்தார். அவரவர்களுக்கவரவர் தருமத்திலேசிரத்தையை சிருஷ்டித்தார். அண்டசம், சுவேதசம், முற்பிச்சம், சராயுசம், மானசிக மிந்த வைந்துவகைப் பிராணிகளையுஞ் சிருஷ்டித்தார். அண்டசம் முட்டையிலே யுண்டான பக்ஷி சர்ப்பாதிகள். சுவேதசம் வேர்வையிலே யுண்டான கிருமி முதலானதுகள். உற்பிச்சம் விருக்ஷாதி பூண்டுகள். சராயுசம் பையிலே யுண்டான மனுஷாதிகள், தேவதைகள், ரிஷிகள், மானசாள். இந்தப்படிக்குச் சகலபிராணிகளையும், சகலபூதங்களையும், சிருஷ்டித்துத் தாந்தானே சகல பூதங்க ளிடங்களிலேயும் ஜீவரூபியாய்ப்பிரவேசித்தார். கிரகியானவன் கிர

கத்திலே பிரவேசித்தாற்போலவும், பக்ஷியானது கூட்டுக்குள்ளே பிரவேசித்தாற்போலவும், பிரவேசித்தார். தாந்தானே விசுவரூபியாய், அனந்தரூபியாயினர். பரமேசுரரானவர்:—மாயாவியானவன்மாயையினலேயனந்தரூபங்களையெடுத்தாற் போலவும், வேஷதாரியானவ னனேகம் வேஷங்களையெடுத்தாற்போலவும், அனந்த சத்திகளுடனே கூடியிருக்கிற பரமேசுரரானவ ரனந்தகோடி ரூபங்களையெடுத்து விளையாடிக்கொண்டிருக்கிருர்.

இந்த விசுவப்பிரபஞ்சத்துக்கு பரமேசுரன்ருனே யாதாரம். சிருஷ்டிகர்த்தாவும், ரக்ஷிக்கிறகர்த்தாவும், சம்மாரகர்த்தாவும்; அப்பரமேஸ்வரன்ருனே. சிருஷ்டிக்கப்படுகிற வஸ்துக்களு மவர்தாமே ரக்ஷிக்கப்படுகிற வஸ்துக்களும், அவர்தாமே. சங்கரிக்கப்படுகிறவஸ்துக்களும் அவர்தாமே. இந்தப்பிரபஞ்சத்துக் கவர்தாமே மாயையோடேகூடி ஈசுரராய் நிமித்தகாரணம், இந்தப்பிரபஞ்சத்துக்குப் பிரகிருதியோடேகூடிக் கூடஸ்தரா யுபாதானகாரணம். அவர்தாமே யவித்தையா வந்தக்கரணங்களோடேகூடி ஜீவனுனர். சூரியன்ருனே ஜலசூரியன்போலவும், சந்திரன்ருனே ஜலசந்திரன்போலவும், முகந்தானே கண்ணுடியிலேயும், ஜலத்திலேயும், பிரதிமுகம்போலவும், வன்னிதானே பொறிபோலவும், மஹாகாசந்தானே கடாகாசம்போலவும், வாயுவுதானே பிராணன்போலவும், பிரமந்தானே:—மாயையோடேகூடி ஈசுரனுகவும், அவித்தையா வந்தக்கரணங்களோடேகூடி ஜீவனுக யிருந்துகொண்டு விளையாடுகிருர். மிருத்துத் தானே கடம்போலவும், தந்து தானே படம்போலவும், சுத்திதானே ரசிதம்போலவும். ரச்சுத்தானே சர்ப்பம்போலவும், சுவர்ணந்தானே ஆபரணம்போலவும், கானல்

தானே ஜலம்போலவும், சமுத்திரந்தானே தரங்கம்போல வும், கூடஸ்தப்பிரமந்தானே விசுவமயம். எதுவெது காணப் படுகிறதோ, எதுவெது கேட்கப்படுகிறதோ, அதுவெல்லாம் பிரமமயந்தானே. சரமசரமெல்லாம், பிரமமயந்தானே. ஸ்தூ லம், சூக்ஷூமம், வியத்தம், அவ்வியத்தம், மூர்த்தம், அமூர் த்தம், காரணம், காரியம், சாதனம், சாத்தியம், ஆகிய வெ ல்லாம் பிரமமயந்தானே. பிரமத்தைத்தவிர வேறேவஸ்து வில்லை. பிரபஞ்சத்திலே:— அஸ்திபாதிப் பிரிய மூன்றும் பிரமரூபம். நாமரூப மிரண்டும் மாயாரூபம். அவ்வைந்து நாமங்களும், பிரமத்தினாலே கற்பிதம். குழந்தைகள் விளை யாடுகிறதுபோலவும், ராஜாக்கள் சொக்கட்டான் சதுர ங்கம் விளையாடுகிறதுபோலவும், கேளிக்கை கூத்துப்பார்க் கிறதுபோலவும், ஈசுரனுக்குப் பூதசிருஷ்டியெல்லாம் விளை யாட்டுத்தானே பிரயோஜனம். ஈசுரனுக்குப் பூதசிருஷ்டி ஜீவபோகார்த்தமென்று தார்க்கிகோள் சொல்லுவார்கள்.

சைவ வைஷ்ணுவாள் ஜீவனைக் குறித்துப் போகார்த் தம், ஈசுரனைக்குறித்து லீலார்த்தம், பூதசிருஷ்டியென்று அங்கீகரித்தார்கள். வேதாந்திக ளீசுரனுக்கு லீலார்த்தந் தானே பூதசிருஷ்டியென் றங்கீகரித்தார்கள். லோகவிய வகார்ரதிசையிலே; துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனர் ஈசுர ன்றானே. இதனாலே சமவின்மையுந் தயையின்மையு மில்லை. அவரவர் கருமானுசாரமாக நடப்பிப்பர். மாதாவானவள் சொன்னபடி கேட்டாற் சீராட்டுவாள், துஷ்டத்தனம்பண் ணினால் நிக்கிரகம் பண்ணுவாள். அப்படிப்போலவும்; பிதா வானவர் புத்திரனைச் சிக்ஷைபண்ணுவர்; சீராட்டுவர். அப் படிப்போலே பரமேசுரன் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபால னம் பண்ணுவர். அவரவர் கருமானுசாரங்களாகக் கருமபல

ன்களைக் கொடுப்பர். புண்ணியவான்களைச் சுவர்க்கத்திலே சுகிகளாகவும், பாவிகளை நரகத்திலே துக்கிகளாகவும், புண்ணியபாவ மிசிராளா யிருக்கிறபேரை, மனுஷலோகத்திலே சுகதுக்கிகளாகப்பண்ணி நடப்பிப்பர். சாத்திகாளுக்குத் தேவலோகம், ராசதாளுக்கு மனுஷலோகம், தாமதாளுக்கு அதோகதி, இந்தப்படி பலத்தைக் கொடுப்பர். தாமதாளுக் கெஞ்சியிருக்கிற பாவத்துக்கு:— தாபர ஜன்மங்களையும், பசு பக்ஷி ஜன்மங்களையும், சண்டாளாதி ஜன்மங்களையும், கொடுத்துக் கருமானுசாரியாகச் சுகதுக்கபலன்களைக் கொடுப்பர். பரமேசுரனுக்கிதனாலே சமமின்மையுந் தயையின்மையுமில்லை. ஆனதால் அவரவர் கருமானுசாரமாக அவரவர்களுக்குப் பலங்களைக் கொடுப்பர். ஈசுரன்றானே அந்தரியாமியா யிருந்துகொண் டந்தக் கருமானுசாரமாகப் பூருவகருமப்படிக்குத் திரும்பவுங் கருமங்களிலே பிரேரிப்பர். சாத்தீகாளைச் சாத்தீக கருமங்களிலேயும், ராசதாளை ராசத கருமங்களிலேயும், தாமதாளைத் தாமதகருமங்களிலேயும், இந்தப்படி பூருவகருமப்படிக்கிப் பிரேரிப்பர். மீமாம்ஸாள்:—ஈசுரனேயில்லை கருமமே பலதாதாவென்று சொல்லுவார்கள். அந்தப்படி சாங்கியாளும்:—ஈசுரனில்லையென்று சொல்லுவார்கள். அதுகூடாது; முன்சொன்னதருமமுடைய அப்பரமேசுரனைத்; தன்னுடைய தருமத்தினாலே பூசித்து, எக்கிய தான தபசுகளினாலே பூசித்து, நித்திய நைமித்திய கருமங்களினாலே பூசித்துப், பூசாதோத்திராதிகளினாலே யவரை பிரீதிபண்ணிவித்து, அவைகளாலவர் சந்துஷ்டரானால்; சகலகாமியங்களையு மடைவன். தருமார்த்த காமபலன்க ளற்பபலன்கள். மோக்ஷந்தானே மஹாபலம். ஆனபடியினாலே மஹாபலமோக்ஷம் வேண்டுமென்று சுய

மே பரமேசுரனைப் பிரார்த்திக்கவேண்டும். அவாந்திர பலன்களா யிருக்கிற தருமார்த்தகாமங்கள் தானேசித்திக்கும்.

அஃதெப்படியானால்? பழம்வேண்டுமென்று மாமரம்,வாழைமரம்,பலாமரம்,இவைகளை வைத்துப்பயிராக்கினால்;காயிலைபுஷ்ப மவாந்திரமாகச்சித்திக்கிறதுபோலவும், கங்காஸ்நான முக்கியபலத்துக்குப் போகிறவனுக் கிதர நதிகளுடைய ஸ்நானங்களெல்லா மவாந்திரமாகச் சித்திக்கிறதுபோலவும், அற்ப பலமாயிருக்கிற தர்மார்த்தகாமங்கள் முக்கியமாயிருக்கிற முக்திபலத்தை யிச்சிக்கிறவனுக் கவாந்திரபலமாகச் சித்திக்கும். பிரமஞானமாகிற தேன்பாகைப் புசித்தால்; அவித்தையாரோகம்போய் முக்தியாகிற புஷ்டியையடைவன். ஈசுரனுக்கு மாயையுண்டோ வில்லையோவென்றவர:—தார்க்கீகா ளீசுரன் அரூபி, மாயாரகிதனென்று சொல்லுவார்கள். சிலபேர்வேதாந்திக ளீசுரனுக்கு அனந்தசத்திகளுண்டென்று சொல்லுவார்கள். சிலபேர் மாயையென்றும், பிரகிருதியென்றும், இரண்டு சத்திகளுண்டென்று சொல்லுவார்கள். சிலபேர் மாயையென்றும், பிரகிருதியென்றும், இரண்டு மொன்றுதானே; ஆனபடியாற் பரமேசுரனுக் கொரேசத்தியென்றுஞ் சொல்லுவார்கள். அப்படிக்கொத்த பரமேசுரர்:—தாமே காமதேனு, கற்பகவிருக்ஷம், சிந்தாமணிபோலேயிஷ்டவஸ்துக்களைக்கொடுப்பார். அவரை மஹாபலமாயிருக்கிற முக்தியைத்தானே கொடுக்கச்சொல்லிப் பிரார்த்தித்தாற் கேட்டவரங்களைக் கொடுப்பார்.விடயங்களிலே சுகமில்லை.சவுக்கிய போசனங்களிலேயும்,ஜலபானங்களிலேயும்,கந்தகஸ்தூரிசுகந்தாதி திரவியந் தரிக்கிறதிலேயும், ஸ்திரீபோகாதிகளிலேயும்; ஆகியவிவை

களிலேசுகசவுக்கியமில்லை. இவைகளின் சுகம்பிராந்திதானே. இவைகளெல்லாம் வியாதிகளுக் குபசமனந்தானே. பசிரோகத்துக் கன்னம், தாகரோகத்துக்கு ஜலபானம், காமரோகத்துக்கு ஸ்திரீபோகம், உபசமனம். அற்பவிஷயபோகங்களிலே சுகமில்லை. வழிநடந்தவனுக்கு:—மிதிக்கிறது, குத்துகிறது, பிடிக்கிறது, இவைகளெல்லாம் சுகமாய்த் தோற்றுகின்றதுபோலே; விஷயங்களிலே சுகமில்லை. வியாதிக் குபசமனந்தானே சுகம்போலே தோற்றுகிறது. விஷயசம்பாதனமுந் துக்கம். ரக்ஷிக்கிறதுந் துக்கம். நாசமுந் துக்கந்தானே. ஸ்திரீபாலராதி சமுசார சம்பாதனமுந் துக்கம். ரக்ஷிக்கிறதுந் துக்கம். நாசமுந் துக்கந்தானே. ஆனதால்? விஷயபோகங்களெல்லாந் துக்கந்தானே: பிராந்திதானே. பிரமந்தானே சுகம். பிரமந்தானே சவுக்கியம். பிரமசாயுச்சியந்தானே முக்தி. அந்தமுக்தி ஞானத்தினாலே யடையத்தக்கது. ஞானம்:—வேதாந்தசிரவணத்தினாலேயும் குருகடாக்ஷத்தினாலேயும், வரத்தக்கது. தேகேந்திரியாதிகளெல்லா நாமல்ல; நமக்கு ஜீவத்துவங் கற்பிதந்தானே. நாந்தானே பரப்பிரமமென்கிற நிச்சயமே மோக்ஷசாதனம். அந்தவறிவே மோக்ஷம். ஞானிகளா யிருக்கிறபேர்களுக்கு:— எதுவெது காணப்படுகிறதோ, எதுவெது கேட்கப்படுகிறதோ, எதுவெது சொல்லப்படுகிறதோ, ஆகிய சகலமும் பிரமமயந்தானே யென்று நிஷ்டை. நெல்லிக்காயைத்தின்று ஜலமாதுரியத்தை யறிகிறதுபோலே:—வேதாந்தசிரவணத்தினாலேயும், குருவுபதேசத்தினாலேயும், பிரமத்தைக் கேட்டறிந்து பிரமசவுக்கியத்தை யநுபவிக்கவேண்டும்.

ஏழாவது விசுவசிருஷ்டிப்பிரகரண முற்றிற்று.

எட்டாவது. அதிகாரிப்பிரகரணம்.

அதிகாரிப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

புண்ணியபாவங்களிலே மனுஷன்றானே யதிகாரி. சுவர்க்கத்திலேயும், நரகத்திலேயும், மனுஷன்றானேயதிகாரி. ஞானத்திலேயும், மோக்ஷத்திலேயும், மனுஷன்றானே யதிகாரி. சாங்கியயோகங்களிலேயும் மனுஷன்றானே யதிகாரி. பசுபக்ஷிமிருகாதிக்கெல்லாம்புண்ணியபாவங்களைச்சொல்லவுந்தெரியாது, கேட்கவுந்தெரியாது; சுவர்க்க நரகங்களிலேயு மதிகாரமில்லை. வேதசாஸ்திர புராணங்களிலேயும், எக்கியந் தானந் தபசுகளிலேயும், அதிகாரமில்லை. நித்திய நைமித்திய கருமங்களிலேயு மதிகாரமில்லை. பசு பக்ஷி மிருகாதிகளுக்கு:—இங்கேதானே யடிக்கடி பிறக்கவுஞ் சாகவு மதிகாரம். பரலோகத்திலே கமன கமனமு மில்லை. தேவதைகளுக்கும், ரிஷிகளுக்கும், ஞானாதிகார முண்டென்று பெரியவாள் சொல்லுவார்கள். ஜனகாதிகளெல்லாரும் ஞானயோகிகள். இந்திராதி தேவதைகளெல்லாரும் ஞானகரும யோகிகள். வியாசவசிட்டாதிகளெல்லாருஞ் சித்தகருமயோகிகள். மனுஷாள் கருமயோகிகள். ஞானத்திலேயும், கருமத்திலேயும், சுவர்க்கத்திலேயும், மோக்ஷத்திலேயும், மனுஷன்றானே யதிகாரி. இந்தப் பரதபூமிதானே; கருமபூமி. இதரபூமிகளெல்லாம் போக பூமிகள். மனுஷனுக்குத்தானே; சொல்லுகிறதற்கும், கேட்கிறதற்குந் தெரியு மதிகாரமுண்டு. நல்ல கண்ணாடியிலேயும், தெளிந்த ஜலத்திலேயும், முகத்தைப்பார்த்தால் முகம் நன்றாய்த் தெரிகிறதுபோல, மனுஷனுக்குப் பிரமக்ஞானம் நன்றாய்த்

தெரியவரு மதிகாரமுண்டு. சந்திரமண்டலத்திலேயும்,பிதிர் லோகத்திலேயும், பிரமவிசாரத்துக்குக் கூடினுற் சொப்ப னக்ஞானம்போலே போய்விடும். நரகத்திலே துக்கபா குள்ளியத்தினுலே; கேட்கவுந்தெரியாது, சொல்லவுந்தெரி யாது. சுவர்க்கத்திலே கூத்தும், பாட்டும், சங்கீதமு மதிக மானபடியினுலே; அலையெறிகிற ஜலத்திலே நிழற்பார்த்தா ப்போலே சித்தமலைந்துபோய்விடும். வேதாந்தசிரவணத்தி னுலே:—அறிவிலே புத்திவாராது. நிழலுக்கும், வெய்யிலுக் கும், பேதந்தெரிகிறதுபோலப் பிரமலோகத்திலே நன்ருக அறிவுதெரியும். சொல்லுகிறதற்குங் கேட்கிறதற்கு மதிகார முண்டு. பிரமலோகத்திலே போகிறதாற்கதிகாரமானுல்? மனுஷலோகத்திலேதானே மனுஷனுக விருக்கிறவன் பிர மவிசாரம் பண்ணிப் பிரமவுபாசனை பண்ணிப் பிரமவுபாசக னுக விருந்தா லவனுக்குப் பிரமலோகத்திலே போகிறதற் கதிகாரமானபடியினுலே; ஞானுதிகார வுபாசனையிலே யதி காரம் மனுஷனுக்குத்தானே. அப்படிப்பட்ட பிரம்க்ஞா னம் வேதாந்த சிரவணத்தினுலேயும், குருகடாக்ஷத்தினு லேயும், வரவேண்டும்.வேதாந்தசிரவணத்தினுலே மனுஷ னதிகாரியென்று சிலபேர் சொல்லுவார்கள். சிலபேர் பிர ம,க்ஷத்திரிய, வைசியா ளதிகாரியென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் பிராமண ளதிகாரியென்று சொல்லு வார்கள். சிலபேர் பெரியவாள் சந்நியாசி யதிகாரியென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் ஸ்திரீ சூத்திராளு க்கு ஞானுதிகாரமுண்டு முக்தியுமுண்டென்று சொல்லு வார்கள். ஸ்திரீ சூத்திராளுக்குப் புராணுதிகளினுலேயும், ஸ்மிருதிகளினுலேயும், ஞானசம்பாதனமென்று சொல்லு வார்கள். சிலபேர் பெரியவாள் சாதனசதுஷ்டய சம்பன்ன

னாக விருக்கிறவ னதிகாரியென்று பாஷியவிருதயம். ஆயிரம்பேரிலே யொருத்தன் சிரவணம்பண்ணுவன். இப்படிச் சிரவணம் பண்ணுகிறபேரிலே யாயிரத்திலே யொருத்தனறிந்துகொள்ளுவன். இப்படி யாயிரத்திலே யொருத்தன் மனனம்பண்ணுவன். இப்படி யாயிரத்திலே யொருவன் அநுபவ சம்பன்னனாக விருப்பன். ஆசாரிய ராயிரத்திலே யொருவர் கிடையாது. சிரவணம்பண்ணி ஞானம்வந்து கைவல்லியத்தை யடையவேண்டும். மனுஷ ஜன்மமெடுத் தாத்மாவை யறியாமற்போனா லவன் மனுஷ ஜன்மம் போனபிறகு கருமபரம்பரையும், ஜன்மபரம்பரையுந்தானே யடைவன். மனுஷஜன்மத்திலே ஞானமில்லாதேபோனால்; அநித்திய லோகத்தைத்தானே யடைவன். மனுஷ ஜன்மமெடுத்து ஞானமன்றியிலே போனா லவன் பசுவென்றுசொல்லப்படும். வெகுஜன்மங்களெடுத்து, வெகுபிரயாசப்பட்டுப், புண்ணியவசத்தினாலேயும், தெய்வயோகத்தினாலேயும், மனுஷ ஜன்மத்தை யடைந்து ஞானஞ் சம்பாதித்தால்; பிரயாச ஸாபல்லியம். ஜன்மஸாபல்லியம். அல்லவென்றால்? நஷ்டந்தானே. அஃதெப்படிப் போலவென்றால்? ஒவ்வொரு பணமா யொவ்வொரு காசாய், வெகுபணஞ் சம்பாதித்தவனுக்குச் சற்பாத்திரங்களிலே கொடுத்துத் தானும் புசித்தாற் ஸபலம். அல்லவென்றால்? நஷ்டந்தானே. மனுஷ ஜன்மத்தையெடுத்தும்; ஞானஞ் சம்பாதியாமற்போனாலவன்றான், குருடு, செவுடு, ஊமையென்று சொல்லுவார்கள். மனுஷஜன்மமெடுத்து அஞ்ஞானியா யிருந்தானானா லவன்றான் தன்னைக் கொன்றவன். அவன்றா னாத்மசோரன். மனுஷஜன்மமெடுத் ததனால் முக்தியெப்படி; பந்தமெப்படி வந்தது? நாமெங்கேயிருந்து வந்தோமென்று விசாரிக்கவே

ண்டும். இப்படி விசாரித்தா லதுவே, தவசென்று சொல்லு வார்கள். சிலபேர் பெரியவாள் திரவியத்தைச் சற்பாத்தி ரங்களிலே கொடுக்கிற தானத்தைத் தவசென்று சொல் லுவார்கள். சிலபேர் நியமத்தைத்தானே தவமென்று சொ ல்லுவார்கள். சிலபே ருபவாசத்தைத்தானே தவமென்று சொல்லுவார்கள். சிலபேர் பிரமவிசாரத்தைத்தானே தவ மென்று சொல்லுவார்கள். இந்தச்சமுசாரம் மஹாவிசித்தி ரம். ஸ்திரீயார், புத்திரனார், தம்பியார், தமையனார், தகப் பனார், தாயாரார், தானார், தானெங்கேயிருந்து வந்தோ மென்று விசாரித்துப் பார்த்தாலொன்றுமில்லை. கூடவந் தபேருமில்லை. கூட வருகிறபேருமில்லை. மாயாமோகத்தை யென்னவென்று சொல்லப்போகிறோம். சந்தைக் கூட்டம் போலேயும், பொழுதுவிழுகிறநேரம் நானாதேசத்துப் பக்ஷி களெல்லா மொருவிருக்ஷத்திலே கூட்டங்கூடியிருந் துதை யமானவேளையிலே யந்தவிருக்ஷத்தைவிட்டுக் கருமவசத்தி னாலேதங்களுடைய விச்சையினாலே போய்விடுகிறபக்ஷிகள் போலேயும், ஒருகிரகத்திலே:— தாய்தகப்பன், அண்ணன் தம்பி, பெண்சாதிபிள்ளை யென்று ரொணானுபந்தப்படியே கூடியிருக்கிறார்கள். ரொணம்க்ஷயமானா லிந்தச்சமுசாரமெ ல்லாமெங்கேயோ மறைந்து போய்விடுகின்றன. வழிநட க்கிறபே ரிரண்டுபேர்கூடிச் சிறிதுதூர மொன்றாகப் போ வார்க ளப்பா லிடையிலே பிரிந்துபோவார்கள். பிரவாகத் திலே யிரண்டுகாட்டங்க ளொன்றாய்க்கூடிவந்து திரும்பப் பிரிந்துபோம். அதுபோலே புத்திரமித்திராதிசமுசாரக்கூட் டுறவும், பிரிச்சலும், இப்படியாகவே யிருக்கும். எதெதுபிற ந்துதோணுகிறதோ வதுவெல்லாமிறந்துபோகிறதுதானே. நிலவாஞ்சை யோகமெல்லாம் பிரிச்சிலோடேகூடின தென்

கிறது நிலவ்ரம். உயர்ந்ததெல்லாந் தாழும். நீர்க்குமிழி
போலே:—இந்தச்சரீரம். மாதாபிதாக்களுடைய சுக்கிலசு
ரோணிதத்தினாலேயுண்டானது.பிதாவினுடையவிந்துமாதா
வினுடைய கெற்பகோளகையிலேவிழுந்து மாதாவினுடைய
சுரோணிதத்துடனேகலந்து இரண் டுருவாயடைவிலேயுரு
ப்பும், காலும்,கையுமுண்டாய் ஜீவனாய் வெளியிலேவந்து சி
சுவாய்க் கௌமாரம்,வார்த்திகமென்றுவெகுவேசங்களோ
டேகூடிப் பார்க்கக், கேட்கச் சொல்லக் கொடுக்க, வாங்கப்
போக, வரப்,பக்ஷிக்கப், பானம் பண்ணிச் சிந்திக்கத்,தியான
ம் பண்ண, இவைகளெல்லா மந்தவிந்துதானே நடப்பிக்கிற
து.இதைப்பார்க்க விந்திரசாலமுண்டோ வில்லை. இன்னுஞ்
சொல்லுகிறோம்; இந்தத்தேகத்திலே:—முன்னூற்றறுபதெ
லும்பு, எழுபத்தீராயிரம் நரம்பு, மூன்றரைக்கோடி ரோ
மம், ஆறுதொக்கு, சத்ததாது, துவக்கு, அஸ்தி, மாமிசம்,
உதிரம், மேதை, மச்சை, சனாயு, மூத்திரம், மலம், கிருமி,
இவைகளுடைய கூட்டுறவும்;மலமூத்திரப்பை, பஞ்சபூதங்க
ளுடைய சங்காதம். இந்தத் தேகமாவது? பொய். நாளைக்கி
ருக்குமென்று நிலவரமில்லாதது.ஈசுரனுடைய மாயையை
யொருத்தராலேயு மளவிடக்கூடாது. ஈசுரன் பொம்மை
யாட்டுகிற சூத்திரதாரிபோலே தேகவெந்திரத்தைப்பிரா
ணனுகிற சூத்திரத்தினாலே மாயையாகிற திரைக்குள்
ளே யிருந்துகொண்டு ஆட்டிவிக்கிறாரிந்த மாயாமோகத்
தை யென்னென்று சொல்லப் போகிறோம். வெகுவித பாவ
ங்களினாலே எண்பத்துநாலுலக்ஷம் ஜன்மத்தையு மெடுத்து
ப் புண்ணியவசத்தினாலேயும்,தெய்வாதீனத்தினாலேயும்,உத்
தம மனுஷஜன்மத்தை யடைந்து, அதிலேயும் புருஷஜன்
மமாக வித்தியாவிவேகத்துடனே கூடியிருந்தாலும்; பிரம

விசாரம்பண்ணி யாத்மஞானஞ் சம்பாதியாமல்: வித்தியா கெறுவம், ஐசொரியகெறுவம், நல்லகுலம், நல்ல சவுந்திரிய மென்கிற கெறுவபருவதத்தி லேறிச் சமுசாரமாகிற குழியிலே; குருடனானவன் கிணத்திலே விழுந்தாற்போலே விழுகிறான். சிலபேர் மூடாள்; பாவமாகிற கல்லோடத்திலேறி நரகக்குழியிலே விழுந்து போகிறார்கள். சிலபேர் கருமமாகிய வோட்டைத்தோணியிலேறிநடுவாந்திரத்திலே சமுசாரசமுத்திரத்திலே மூழ்கிப்போகிறார்கள்.

சிலபேர்பெரியவாள் ஞானமாகிறநல்லவோடத்திலேறி யாயாசமில்லாமற் சமுசாரமாகிய சமுத்திரத்தைக் கடந்து அக்கரையாகியமுக்திபதத்தை யடைவார்கள். ஆற்றுமணலை யெண்ணினாலுமெண்ணலாம், ஆகாசத்திலேயிருக்கிறநட்சத்திரங்களையெண்ணினாலு மெண்ணலாம், சமுத்திரஜலத்தை யளந்தாலுமளக்கலாம், ஜீவனெடுத்தஜன்மங்களை எண்ணக் கூடாது. சம்பாதித்தபண்டபதார்த்தங்களெல்லாங்கிரகத்திலேதானேயிருக்கும். பந்துஜனங்களெல்லாம் மயானபரியந்தம் வருவார்கள். அப்பாற் றானேகாங்கியாய்ப் போவன். செய்த புண்ணியபாவங் கூடவரு மிதுவே நிச்சயம். அசனார்க்குக் கையிலே பலகாரம், கட்டமுதுகொண்டுபோகிறவன் சுகமேபோவான். சும்மாவே போகிறவன் பசிதாகங்களுடனே யுலைந்துபோவா னப்படிப்போல; மனுஷலோகத்திலே தானே யன்னதானம், ஜலதானம், பலதானம், இவைமுதலான தானங்களைக் கொடுத்திருக்கிறவனுக்குப் பரலோகத்திலேயும், இவைகளெல்லா மாகாரமாக வந்து லபிக்கும். இங்கேதானே கொடுத்திருக்க வேண்டும். கொடாதே யிருந்தவனுக்கு யிந்தலோகத்திலேயு மொன்றும் லபியாது. அந்தப் பரலோகத்திலேயு மொன்றும் லபியாது. ஆனபடி

யினாலே யுண்டாயிருக்கிறவ னிராவும், பகலும், கொடுக்க வேண்டும். இவ னிருக்கிறபோதுங் கூடவேயிருத்துவிருப்பன். எழுந்திருந்தாலும், படுத்தாலும், அசலூருக்குப்போனாலும், புசித்தாலும், ஒருத்தனுடனே வார்த்தை சொன்னாலும், மிருத்துவானவன் பிரியாமலிருப்பன். இதுவன்றியிலே யென்னேரமும் பிடரியிலே யிருந்துகொண் டெப்போ சமயமென்று பார்த்துக்கொண்டிருப்பன்.

சமயம் வந்தமட்டிலே பாம்பு தவளையைப் பிடித்தாற்போலக் கொண்டுபோவன். ஆனதால்? தனக்கு நன்மை தான்றானே சீக்கிரஞ் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். சமுசாரம் துக்கபாகுள்ளியந்தானே. செல்வம்:—சம்பாதித்தலுந் துக்கம். ரக்ஷணையுந் துக்கம். நாசமுந் துக்கம். அன்றியிற்று பத்திரயங்களுடனேகூடினது. அடிக்கடி மரிக்கிறது மடிக்கடிஜனிக்கிறது மடிக்கடி மாதாவினுடைய கெற்போளகையிலேவந்திருக்கிறதுமேசமுசாரம். ஆதியாத்மீகம்; சுராதிகள். ஆதிபவுதிகம்; சுவர்க்காதிகள். ஆதிதெய்வீகம்; பெருமழை பெருங்காற்று, இடி, இவைமுதலான வுபத்திரமான துக்கங்களோடே கூடியிருக்கும். சமுசார சமுத்திர மித்தன்மைத் தா மாகையாலிவை துக்கமயமாகத்தானே யிருக்கும். சுகம் லேசமுமில்லை. விடயங்களெல்லாந் துக்கந்தானே. பிரமமே சுகம். விடய சுகாபாசங்களைத் தூரத்திலே விட்டுப்போட்டுப் பிரமசுகத்தைத் தேடவேண்டும். பிரமசுகத்திலே ஞானஞ் சாதனம். ஞானத்திலே வேதாந்தசிரவணஞ் சாதனம். வேதாந்தசிரவணத்திலே மனுஷன்றானே யதிகாரியென்று வேதாந்தங்களெல்லாமுறையிடுகின்றன. இராவும், பகலும், வேதாந்த சிரவணம்பண்ணவேண்டும். அதினாலே

யாத்மா வறியப்படுவார். ஆத்மாவை யறிந்தாற் பிரமசாயுச்சிய முக்தியென்று வேதாந்தங்கள் கோஷிக்கின்றன.

எட்டாவது அதிகாரிப்பிரகரணம் முற்றிற்று.

ஒன்பதாவது. ஸ்தானப்பிரகரணம்.

ஸ்தானப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

பிராமணனாய்ச் சுதருமசீலனாய்க் கிரகஸ்தனாக யிருக்கிறவனுக்குத் தசப்பிரமாக்களுடைய லோகம். வானப்பிரஸ்தனாய்ச் சுதருமத்தோடே கூடியிருக்கிற பேருக்குச் சத்தரிஷிகள் லோகம். நைஷ்டிகப் பிரமசாரிகளுக்கும், சந்நியாசிகளுக்கும், பிரமலோகம். ஞானிகளாய் வேதாந்திகளாயிருக்கிறபேர்களுக்கு மோக்ஷம். எக்கிய சீலாளாயிருக்கிறபேர்களுக்கும், க்ஷத்திரியாளாய்ச் சுதரும சீலாளாயிருக்கிற பேருக்கும், இந்திரஸ்தானம். விஷ்ணுபக்தாளுக்குவிஷ்ணுலோகம். சிவபக்தாளுக்கு சிவலோகம். தபசிகளா யிருக்கிறபேருக்குத் தபோலோகம். எக்கியசீலாளா யிருக்கிறபேருக்குத் தவலோகம். சூரியவுபாசகாளாயிருக்கிறபேருக்கு ஆதித்தலோகம். வைசியாளாய்ச் சுதருமசீலாளாயிருக்கிற பேருக்குத் தேவலோகம். சூத்திராளாய்ச் சுதருமசீலாளா யிருக்கிறபேருக்கு கந்தருவ சுவர்க்கலோகம். அந்த அந்த வர்ணஸ்திரீகளாய்ச் சுதரும சீலிகளா யிருக்கிறபேருக்கு அவரவர் பத்தாவினுடைய லோகம். புண்ணிய சீலாளாயிருக்கிறபேருக்குத் தேவலோகமென்று பொதுவசனம். எக்கியதான, தபசீலாளாய்ப் புண்ணியசீலாளாய்ச் சுவர்க்காமிகளாக விருக்கிறபேர்கள் தக்ஷிணாயனத்திலே யிறந்து அவர

வர்கள் செய்த யாகமார்க்கத்தினாலே சந்திரமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு சுவர்க்கத்தை யடைந்து சுவர்க்கபோகங்களை யநுபவித்துத் திரும்ப மனுஷலோகத்திலே வருவார்கள். பிரமவுபாசனையே கூடியிருக்கிற பேர்க ளுத்தராயணத்திலே யிறந்து வுபாசனா மார்க்கத்தினாலே பிரமலோகத்தை யடைவார்கள். அவர்களுக்குப் புனரா விர்த்தியில்லை. மனுஷலோகத்திலே திரும்ப வருதலுமில்லை.

ஒன்பதாவது ஸ்தானப்பிரகரண முற்றிற்று.

பத்தாவது. விதேகமுக்திப்பிரகரணம்.

பூரணக்ஞானிகளாய் நிஸ்காமாளாய்ப் பூரணப்பிரமமாக விருக்கிற பேருக்கு இவ்விடத்திலேதானேமுக்தி. அவர்களுக்குப் பிராணன்போய்க் கருமவசத்தினாலே இன்னொரு தேகமெடுக்கிறதில்லை. லோகாந்திரங்களிலே போக்குவரத்துமில்லை. பூரணப்பிரமமாகத்தானேயிருப்பார்கள். பிராரத்தங்களைப் புசித்துத் தேகேந்திரியாதிகள் நஷ்டமாய்ப் போனபிறகு; வாயு வாயுவோடே கூடினாற்போலவும், ஜோதி ஜோதியுடனே கூடினாற்போலவும், ஜலஞ் ஜலத்துடனே கூடினாற்போலவும், ஆகாயம் ஆகாயத்துடனே கூடினாற்போல்வும், கங்காநதிகளெல்லாஞ் சமுத்திரத்துடனே கூடினாற்போலவும், கல்லாற்றிலேபோய்க் கூடினதெல்லாஞ் சிலையாய்ப் போனாற்போலவும், ஞானியினுடைய வாத்மாப் பிரமசாயுச்சியத்தை யடைந்து ஞானி பூரணாகாயம்போலே பூரணப் பிரமமாகத்தானே யிருப்பன்: சின்மாத்திர மாகத்தானே யிருப்பன். சிலபேர் பெரிய

வாள் ஈசுரசாயுச்சியத்தை யடைந்து ஈசுரனுகத்தானே யிருப்பனென்று சொல்லுவார்கள். இது விதேக கைவல்லிய முக்தி. சைவவைஷ்ணுவா ளீசுரனுக் கவித்தையில்லைச் ஜீவனுக் கவித்தையுண்டு, பிரமவுபாசனையினாலே ஜீவனுக் கவித்தைநீங்கும். அவித்தைநீங்கின வீசுரன்போலே யிருப்பன். இது சாமீபமுக்தியென் றங்கீகரித்தார்கள்.

பத்தாவது விதேகமுக்திப்பிரகரணம்

முற்றிற்று.

பதினோராவது. ஜீவன்முக்திப்பிரகரணம்.

———:o:———

ஜீவன்முக்திப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

பிராணனிருக்கச்சேதானே; பிரமவித்தையினாலே யவித்தையிலே நின்றும், விடுபட்டது ஜீவன் முக்தியென்று சொல்லுவார்கள். ஞானியினுடைய ஜீவதிசை ஜீவன்முக்தி யென்று சொல்லுவார்கள். ஞானியாயிருக்கிறவனை ஜீவன் முக்தனென்று சொல்லுவார்கள். சகல ஜீவாத்மாக்களுக் குள்ளே மனுஷன் சிரேஷ்டன். மனுஷாளுக்குள்ளே பிராமணன் சிரேஷ்டன். பிராமணாளுக்குள்ளே வித்துவாமிஷன் சிரேஷ்டன். வித்துவாமிஷாளுக்குள்ளே கருமகருத்தாவாயிருக்கிறவன் சிரேஷ்டன். கருமகருத்தாக்களுக்குள்ளே தவசி சிரேஷ்டன். தவசிகளுக்குள்ளே யோகி சிரேஷ்டன். யோகிகளைக்காட்டிலும் ஞானி சர்வசிரேஷ்டன். ஞானியாயிருக்கிறவ னெந்தவமிஷத்திலே, எந்தகுலத்திலே ஜனிக்கிறானோ; அந்தக்குல வமிஷமெல்லாங் கரையேறுமென்று சொல்லிச் சகலவேதாந்த சம்மதம், ஞானியா யிருக்கிறவ

னெந்தத்தேசத்திலே, எந்தக்கிராமத்திலே யிருக்கிறனே; அவடமெல்லாங், காசி, குருக்ஷேத்திரமென்று சொல்லு வார்கள். ஞானியாக விருக்கிறவனைப் பாவிகள்கண்டா லுட னே புனிதாளாவார்கள். சிலாமயமாய்த்தாம்பிரமயமா யிரு க்கிறதேவதைகள், கங்காதி தீர்த்தங்கள், பாவியாக விருக் கிறவனைச் சிலகாலத்துக்குப் பிறகு புனிதனுகப் பண்ணும். ஞானிகளாக விருக்கிறபேர் பாவிகளைக்கண்டா லுடனே புனிதனுகப் பண்ணுவார்கள். ஞானியாய்ப் பெரியவாளாயிரு க்கிற மகாத்மாக்களைக்கண்டா லவர்களை; ஈசுரனுகப் பா வித் தீசுரனுகப் பூசிக்கவேண்டும். ஞானிக ளீசுர ரவதார மென்று மீசுர மூர்த்தியென்றுஞ் சாக்ஷாதீசுரன்றனேயெ ன்றும், வேதாந்தசம்மதம். ஞானியாயிருக்கிறபேர்கள் கை யிலே பிக்ஷாமாத்திரம், ஒருகாசாகிலு மொரு சங்குதீர்த்த மாகிலுங் கொடுத்தா லனந்தமேருவா யிருக்குமென்று பெ ரியவாள் சொல்லுவார்கள். ஞானியா யிருக்கிறவன் புசித் தால்; மூன்றுலோகமும் புசித்ததாகவிருக்கும். ஞானியாயி ருக்கிறவன் திருப்தியடைந்தாற் சகலபிராணிகளுந் திருப்தி யடையும். ஞானியாயிருக்கிறவன் சந்துஷ்டனுனற் சகல லோகமுஞ் சந்துஷ்டியாகுமென்று சகலவேதாந்தமும், மனுவாதிசுருதிகளும், சொல்லுகின்றன. ஞானிகளாயிருக்கி றபேருக்குப்பிராரத்தகருமங்கள் நிகழ்கால வநுபவத்தினு லே நாசம். இலவம்பஞ்சிலே நெருப்புப்பற்றினுற் போல வும், காஷ்டங்களை சொற்பாக்கினி தகிக்கிறதுபோலவும், சகல சஞ்சித கருமங்களும் ஞானக்கினியினுலே தகனமாய்ப் போம்.

ஞானிகளுக்கு; ஆகாமிய கரும சம்பந்தமில்லவேயில் லை. புளியம்பழமு மோடும்போலவும், தாமரையிலையுந்

தண்ணீரும் போலவும், பிள்ளைப்பூச்சியும் சேறும்போல வும், கருமத்துடக்குகள் ஞானிகளுக்குக் காட்டாது. ஞானி யாயிருக்கிறவனுக்குப் புண்ணியபாவ லக்ஷணமாயிருக்கிற வாகாமிய கரும மெப்படிப்போமென்றால்? ஞானியாயிருக் கிறவனுக்கு; மித்துருவனென்றுஞ் சத்துருவென்றுமிரண்டு புத்திராளுண் டிவர்களிற் சிசுருடை முதலானது செய்து மித்துரு புண்ணியத்தைக் கொள்வன். தூஷிக்கிறதுமுதலா னவை செய்து சத்துரு பாவத்தைக் கொள்வன். ஞானியா யிருக்கிறவனுடைய கருமத்தினாலே சித்தியாகிற பரப் பிரம சாயுச்சியத்தையடைவன். தேகேந்திரியாதிகளெல்லா ம் நாமல்ல: தேகேந்திரியாதிக்கிச் சாக்ஷியாய்ப் போதமய னாயிருக்கிற தானே பரமாத்மாவென்றும், எதெது காணப் படுகிறதோ; எதெதுகேட்கப்படுகிறதோ; அவைகளெல்லாம் பிரமமயந்தானே யென்கிற நிஷ்டையுமுள்ளவனே ஞானி. சிலபேர் சூரியன்றானே சமஸ்த தேவதாசொரூபி, சிலபே ரக்கினிதானே சமஸ்த தேவதாசொரூபி, சிலபேர் பிராம ணாள்தானே சமஸ்த தேவதாசொரூபி, சிலவேதங்கள் அப் புத்தானே சமஸ்த தேவதாசொரூபி, சிலவேதங்க ளிருதய ந்தானே சகலசொரூபி, இருதயத்திலேதானே வீசுரரிருக் கிறாரென்று சொல்லுகின்றன. சகல வேதங்களும், எல்லாம் பிரமந்தானேயென்று கோஷிக்கின்றன. சிலமூடாளாயிருக் கிறபேர்கோயில்களிலேயும், குளங்களிலேயும், சிலாதி தாம் பிராதி விக்கிரகங்களிலேயும், ஈசுரரிருக்கிறாரென்று பார்ப் பார்கள். அவர்க ளத்தியந்தமூடாள்தானே. கிரகத்துக்குள் ளே புதைத்திருக்கிற நிதியை யறியாமலதின்மேலே சஞ்ச ரித்துக்கொண்டு தாரித்திர பிக்ஷகாளாயிருக்கிறபே ரெப்ப டியோ; அப்படிப்போலத் தேகத்துக்குள்ளே யிருதயத்தி

லாத்மாவாய்த்தானாகவிருக்கிறபிரமானந்தநிதியையறியாமல் வெகிர்முகாளாய்க் கோயில் முதலியவைகளிலே ஈசுரதிருஷ்டியைப் பண்ணுகிறார்கள். அவர்களத்தியந்த மூடாள். கண்ணில்லாதவனுக்குச் சூரியன்றெரியாது கண்ணுள்ளவனுக்குச் சூரியன்றெரியும். அப்படிப்போல வஞ்ஞானிக்காத்மப்பிரமந் தெரியாது. ஞானியாயிருக்கிறவனுக்காத்மப்பிரமம் விளங்கும்.

பரமேசுரரானவ ராதியிலே சகல லோகங்களிலேயும் ஞானிகளாகச் சிருஷ்டித்தார்விருத்தியில்லாமற் போயிற்று அப்பால் மிதுனமாகிய ஸ்திரீ புருஷாளையும், அவித்தையாமோகத்தையும், இந்திரியங்களையும் வெகிர்முகங்களாகச் சிருஷ்டித்தார். ஆனபடியினாலே; சகலலோகங்களும் வெகிர்முகாளாக விஷய நாட்டமுடையவர்களாக வொன்றுக்கொன்று சேர்க்கையாய்க்கூடி விருத்தியடைந் தந்தர்முகத்தைவிட்டுச் சகல ஜனங்களும் விஷயநிஷ்டாளானார்கள். லக்ஷத்திலே யொருத்தன், கோடியிலே யொருத்தன், முமுக்ஷுவாயிருக்கிற ஞானி;வெகிர்முகமாகிற விஷய நிஷ்டையைவிட் டிந்திரியநிக்கிரகம்பண்ணி யந்தர்முகமாகிற பிரமநிஷ்டையை யடைந்து முக்தியடைவனென்றுகடவல்லியுபநிடதத்திற் சொல்லியிருக்கிறது சிலபேர்மாதாவேமுந்தினதெய்வம்,சிலபேர் பிதாவேமுந்தினதெய்வம்,சிலபேர் யதிதியேமுந்தினதெய்வமென்றுசொல்லுவார்கள்.அதிலுமாசாரியரே சமஸ்ததேவசொரூபியென்றுசகலவேதங்களுஞ்சொல்லுகின்றன. தைத்திரியவுபநிடதத்திலேயுஞ் சொல்லியிருக்கிறது.மாதாபிதாக்கள் ஜன்மத்தைக்கொடுப்பார்கள்.அதிதி சுவர்க்கத்தைக்கொடுப்பன். ஆசாரியரானவ ரறிவைக்கொடுத்துச் சகல ஜன்ம கருமங்களையு மொழித்து மோக்ஷ சாம்பி

ராச்சியத்திலே பட்டாபிஷேகம் பண்ணிப் பிரமசாயுச்சிய த்தை யடையப்பண்ணுவர். ஆனபடியினாலே; ஆசாரியரே யதிகம். சமஸ்த்த தேவதா சொரூபி, திரிமூர்த்தி சொரூபி. குருப்பிரசாத்தினாலே; வேதாந்த சிரவணம்பண்ணித் தே கேந்திரியாதிக ளெல்லாமனாத்மா; நஸ்வரம், ஆனபடியினா லே; தேகேந்திரியாதி சாக்ஷியாய்ச் சின்மயனாக விருக்கிற தானே பரமாத்மாவென்று யாதொருத்த னறிகிறானோ வவனே ஞானியென்று ஞானிலக்ஷணஞ் சொல்லுவார்கள்.

யாதொருத்த னிகலோக பரலோக விஷய விச்சை யைத் தகித்துச் சமதமாதிகளுடனேகூட முமுக்ஷுவாய் வேதாந்த சிரவணத்தினாலே தேகேந்திரியாதிகளெல்லா ம னாத்மாவென்று தள்ளிப்போட்டுத் தேகேந்திரியாதி சாக்ஷி யாய்ச் சின்மாத்திரமாயிருக்குகிறதுதானே பரப்பிரமமென் று யாதொருத்த னறிகிறானோ வவனே பிரமவித்து. இப்படி யறிந்து பூரணப்பிரமமாக விருந்துகொண்டு தேகேந்திரி யாதிகளாத்மசன்னிதானத்தினாலேசகலகிருத்தியங்களையும் பண்ணுகிறது நாமொன்றும் பண்ணவில்லை நாமசங்கோதா னே சின்மாத்திரப்பிரமமயனென்கிறநிஷ்டையுடனேகூட லோகோபகாரார்த்தமாகத் தேகேந்திரியாதி திருஷ்டியி னாலே நித்திய, நைமித்திகமாகிய, சற்கருமங்களெல்லாம் பண்ணிக்கொண்டு ஞானசந்நியாசியா யிருக்கிறானோ வவ னே ஞானியென்று சொல்லுவார்கள். பகவான் வாக்கியம்:— யாதொரு மனுஷன் குருப்பிரசாதத்தினாலேயும், வேதாந்த சிரவணத்தினாலேயும், இந்திரிய சம்பந்தமாயிருக்கிற தேக ம் நாமல்லக் கரணசாக்ஷியா யறிவுமயனா யிருக்கிறதுதா னே பரமாத்மாவென் றறிந்துகொண்டு கரணவிந்திரியங் கள்தானே சிற்சன்னிதானத்தினாலே சகல கருமங்களையும்

பண்ணுகிறது நாமொன்றும் பண்ணவில்லையென்று பூரண ப்பிரமமாக விருந்துகொண்டு மானமின்மை முதலிய ஞான குணங்களோடே கூடிக்கொண்டு லோகோபகாரார்த்தமாக வர்ணுச்சிரம தருமங்களை யிந்திரிய திருஷ்டியாய் இந்திரியங்கள்தானே பண்ணுகிறதென்று யாதொருத்த னுசரிக்கிருனே வவனே ஞானி. யாதொருத்த னக்குரோதாதி ஞான குணங்களோடே கூடி வேதாந்த சிரவணத்தினுலே வாக்குமனுேதேகங்கள் நாமல்லத் தற்சாக்ஷியாய்ப் பிரக்ஞானமயனு யிருக்கிறதுதானே பரமாத்மாவென் றறிகிருனே வவனே பிரமவித்து. இப்படிப் பூரணசிதாகாசப் பிரமமா யிருந்துகொண்டு லோகோபகாரார்த்தமாக வாக்குமனுேதேகங்கள் பண்ணுகிறது; நாம்பண்ண வில்லையென் றசங்கனு யிருந்துகொண்டு நித்திய, நைமித்திக, கருமங்களை, யாதொருத்த னுசரிக்கிருனே; அவனே ஞானி: ஞானசந்நியாசியென்றுஞ் சொல்லப்படுவன். யாதொருத்தனுவன் தனயாதி யட்டவித குணங்களுடனேகூடி வேதாந்த சிரவணத்தினுலேயும், குருப்பிரசாதத்தினுலேயும், தேகேந்திரியாதிகள், மனது, புத்தி, இவைகளெல்லாம்நாமல்ல: தேகேந்திரிய மனுேபுத்திசாக்ஷியாய்ச்சிதாகாசனுயிருக்கிறதானே பரமாத்மாவென் றந்துகொண் டநுபவநிஷ்டையையடைந்துதேகேந்திரியங்களோடேகூடியிருக்கிற மனுேபுத்திலக்ஷணமான வந்தக்கரணந்தானே சகலகிருத்தியங்களையு மாத்மசன்னிதானத்தினுலே பண்ணுகிறது; நாமொன்றும் பண்ணவில்லை யென்கிற வசங்காநுசந்தானத்துடனேகூடி லோகோபகாரார்த்தமாக வெக்கிய தான தபசுகளை யாசரிக்கிறவன்போலே யிருக்கிருனே; அவனே சந்நியாசி. அவனே ஞானி, ஞானமில்லாமற் கருமத்தியாகியா யிருக்கிறவன்

சந்நியாசியு மல்ல, ஞானியுமல்ல, அவனுக்கு முக்தியுமில்லை. ஞானமில்லாமற் கருமத்தைப் பண்ணுதிருந்தாலும், கருமத்தைப்பண்ணிப் பலத்தை யிச்சித்தாலும், அவன் பந்தகமான சமுசாரத்தைத்தானே யடைவன். பூரணக்ஞானியாயிருந்துகொண்டு ஆயிரங்கருமசாலங்களை யாசரித்துக்கொண்டிருந்தாலு மவன் சந்நியாசிதானே. அவன் ஞானபலமாகிய பிரமசாயுச்சியத்தை யடைவன. ஞானமே சந்நியாசமென்று சகல வேதாந்தங்களுடைய சித்தாந்தம். யாதொருத்தன் லோகவாசனையும்விட்டு, சாஸ்திரவாசனையும்விட்டு, தேகவாசனையும் பரித்தியாகம் பண்ணி யந்தர்முகனுய்ப் பிரமநிஷ்டனுக விருக்கிருனே; சமதமாதிகளுடனேகூடி யிருக்கிருனே; அவனேஞானி. யாதொருத்தன் வர்ணுச்சிரமதருமங்களுடனேயும், சமதமாதிகளுடனேயுங்கூடி, வேதாந்தக்ஞானசம்பன்னனுக வந்தர்முகனுய்ப் பிரமநிஷ்டனுக விருக்கிருனே; அவனே ஞானி. யாதொருத்த னிகலோகவாசைகளையும் விட்டுப், பரலோக விஷயவாசைகளையும் விட்டு, வேதாந்தசிரவணத்தினுலே ஞானுபநிஷ்டையுடனேயும், ஆத்மாவினிடத்திலே சந்தோஷத்துடனேயும், கூடியிருக்கிருனே; அவனே ஞானி. யாதொருஞானியானவன் பிரமநிஷ்டையோடேகூடி துக்கங்கள் வந்தபோது துக்கமன்றியிலே; சுகங்கள் வந்தபோது சுகமன்றியிலே; ஆசை, பயம், குரோத, லோப, மோகமில்லாதவனுகத் தானேபிரமமென்கிற நிச்சயத்தோடேகூடினவன் ஞானி. நல்லமனதோடேகூடினவன், மித்துரு, சத்துரு, வுதாசீனன், மத்தியஸ்தன், பந்து, துவேஷி, புண்ணியவான், பாவி, இவர்களை யெல்லாம் பிரமமென்று பார்க்கிறவன்ஞானி. வித்தைகளோடேகூடியிருக்கிற பிராமணன், பசு, யானை, சுவர்ணம், குத்தி

ரன், மனுஷன், சண்டாளன், இவர்களை யெல்லாம் பிரம மென்று பார்க்கிறவன் ஞானி. பிரமநிஷ்டனாய், மோக சூனியனாய், நானே பிரமமென்றும், சகலமும் பிரமமென் றும், நிச்சயத்தோடேகூடிச், சுகம்வந்தாற் சந்தோஷமில் லாமற் றுக்கம் வந்தால் விசனமன்றியிலே யிருக்கிறவன் ஞானி. யாதொருத்தன் ஆத்மக்ஞானத்தோடே கூட ஆத் மானந்த சந்துஷ்டனா யந்தர்முகனாய்ப் பிரமநிஷ்டனாக விருக்கிறானோ; அவனே பிரமவித்து. யாதொருத்தன் சிர வணத்தினாலே யறிவுசம்பாதித்து மனனத்தினாலே சகல சமுசயமும் போய் அசங்கபாவனையினாலே சகல கரும்பந் தங்களும் போய்ச் சமதமாதிகளுடனேயும்; பிரமநிஷ்டை யுடனேயுங் கூடி, யாதொருத்த னிருக்கிறானோ, அவனே ஞானி.

உபவாசங்களிருந்தால் விஷயங்களிலே பிரவிருத்தி போம். ஆசையொழியாது. பிரமத்தைக்கண்டாற்சகலவாசை யுமொழியுமானபடியினாலே பிரமத்தையறிந்து சகலவாசை களுமொழிந்து பிரமநிஷ்டையோடே யிருக்கிறானோ; அவ னே ஞானி. ஆமையானது ஜனங்களைக்கண்டாற் றன்னவை யவங்களை யுள்ளே சுருக்கிக்கொள்ளுமோ; அப்படிப்போலே ஞானியானவன் விஷயங்களைக்கண்டா லிந்திரியங்களை ய டக்கியந்தர்முகனாய்ப் பிரமநிஷ்டையோடே கூடியிருக்கிறா னோ; அவனே ஞானி. சகலகாமியங்களையும்விட்டாசையொ ழிந்து நானெனதென்கிற மோகமில்லாம லாத்மஞானியா யாதொருத்தன் சஞ்சரிக்கிறானோ; அவனே ஞானி. சுயசனம் பரஜனமென்கிற பிராந்தி யில்லாமற் கனகங்களையு மோடு களையுஞ் சமமாய்ப்பார்த்துச்சகல ஸ்திரீகளிடங்களிலேயும் மாதுருதிருஷ்டியோடேகூட வாத்மக்ஞானியா யாதொரு

த்தனிருக்கிறனே; அவனேஞானி. ஆயிரம் ஸ்திரீபோகங்களு டனேயும், ஆயிரங்கருமங்களோடேயுங் கூடியிருந்தாலும்; நானென்கிற வகங்கார வாண்மையற்று: ஆத்மக்ஞானியா யறிவோடே யாதொருத்த னிருக்கிறனே; அவனேஞானி. கூடியுங் கூடாமலும், பண்ணியும் பணணுமலும், அறிந்து மறியாமலும், அநுபவித்து மநுபவியாமலுமிருந்துகொண்டு ஞானத்தோடேகூடி யாதொருத்த னிருக்கிறனே; அவனே ஞானி. தேகேந்திரியாதிகளிலே நானென்கிற மோகமன்றி யிலேயும், அந்தக்கரணதருமமாகவிருக்கிற கிருத்தியங்க ளிலேயும், நான் கர்த்தாவென்கிற மோகமன்றியிலேபூரண மாயிருக்கிற வறிவோடேகூடி யாதொருத்தனிருக்கிறனே; அவனேஞானி. விசுவத்திலே கண்ணிருந்தாலுங் கண்ணில் லாதவனய், காதிருந்தாலுங் காதுகேளாதவனய், மனே வாக்குகளிருந்தாலுமவைகளில்லாதவனய்ப், பிரமநிஷ்டை யோடேகூடி யாதொருத்த னிருக்கிறனே; அவனேஞானி. லோகசாஸ்திரங்களைப் படித்து, லோகங்களைப் பார்த்து, கேட்டு, சிந்தித்து, அதினலே முக்தனல்ல. யாதொரு வறிவு னலேயும், நிஷ்டையினலேயும், முக்தனகிறனே; அவனே ஞானி. யாதொருத்தனுடைய வறிவு கருமபந்தத்தின் பொ ருட்டாகவில்லையோ; யாதொருத்தனுடையவறிவு முக்தியின் பொருட்டாகிறதோ; அவனே பூரணமாயிருக்கிறவறிவுள்ள ஞானி. லோகமெல்லா மியாதொரு வஸ்துவைப் பார்க்கவி ல்லையோ; அந்தவஸ்துவை யாதொருத்த னறிகிறனே; லோகவிஷய நிஷ்டையைத் தள்ளிப் பிரமநிஷ்டனய யா தொருத்த னிருக்கிறனே; அவனேஞானி. யாதொருஞான மன்றியிலே யிருக்கிறவன் சூத்திரனே; யாதொரு ஞானத் தினலே பிராமணனே; அப்பட்டிப்பட்ட வாத்மக்ஞான

முள்ளவனே ஞானியென்று சொல்லுவார்கள். யாதொரு ஞானியானவன் சூரியனைப்போலே சகலவிஷயத்திலேயு மிருக்கிற நெகிழ்ச்சியாதியைக் கிரகிக்கிறுனே; வாயுவைப்போலே யெங்குஞ்சஞ்சரிக்கிறுனே; அக்கினியைப்போலே சர்வ பக்ஷணனாக விருக்கிறுனே; ஆகாசம்போலே தானே யெங்கும் பூரணனாக விருக்கிறுனே; அப்படிப்பட்டவனே ஞானி. யாதொருத்தன்சொந்தஸ்திரீயோடேகூடி ரமித்துக் கொண்டும், தன்னுடைய தருமத்தை நடப்பித்துக்கொண் டும, பரஸ்திரீகளை மாதாவைப்போலே பார்த்துக்கொண் டும், பரதனங்களை யோடுபோலே பார்த்துக்கொண்டும், பிரமநிஷ்டனாக ஞானகுணங்களோடேகூடி யிருக்கிறுனே; அவனேஞானி. யாதொருத்த னிந்திரியங்கள்தானே சகல வியாபாரங்களையும் பண்ணுகிறது நாமொன்று பண்ணவி ல்லை நாம்பரப்பிரம மென்கிற பாவனையோடேகூடப் பிரம நிஷ்டனாக விருக்கிறுனே; அவனேஞானி.

யாதொருத்தன் வாக்கு, மனது, தேகங்களே கர்த் தா நாம் பரமாத்மா நாமொன்றும் பண்ணவில்லையென்கிற பாவனையோடே யெக்கிய தான தபசுகளை லோகோபகா ரார்த்தமாக நடப்பிவித்துக்கொண்டு பிரமநிஷ்டனாகவிருக் கிறுனே; அவனேஞானி. ஜீவன்முக்தன்; சரீரத்தைத் தேரா கவும், இந்திரியங்களைக் குதிரையாகவும், மனதைக் கயிருக வும், புத்தியைச் சாரதியாகவும், விஷயங்களைத் தேசங்களா கவும், பரமாத்மாவாகிற தன்னைத் தேராளியாகவும், அறி ந்து பாவித்து ஞானகுணங்களோடேகூட ஞானியா யா தொருத்த னிருக்கிறுனே; அவன் பிரமபதத்தைத்தானே யடைவன்: அவன் முக்தன்றுனே. யாதொருத்தன் சரீரத் தைச் சிவாலயமாகவும், இருதயகமலத்தைக் கெற்பகிரக

மாகவும், அதில் மனஹைதச் சிவலிங்கமாகவும், மனோபாதிக ராயிருக்கிற ஜீவனைச் சிவனாகமறிந்து; அக்ஞான மாகிற நிர்மாலியத்தைப் பரிகரித்துச் சோகம்பாவனையினாலே பூசித்து; இந்தப்படி நிரந்தரபூசையோடேகூட ஜீவபாவத்தை விட்டுச் சிவனாக விருந்துகொண்டு ஞானகுணங்களோடே கூட ஞானியா யிருந்து தேகாந்தத்திலே சிவசாயுச்சியத்தை யடைவானோ; அவனே ஜீவன்முக்தன். யாதாமொருத்தன் சரீரமாகிற கிரகத்திலே யிருதயகமலமாகிற சயனக்கிரகத்திலே புத்தியாகிற ஸதிரீயோடேகூடி யிந்திரியங்களாகிற பரிவாரங்களோடேகூடப் பரமாத்மாவாகிறதான் கிரகத்துக்குடையவனாகவு மறிந்து பாவித்தவன் ஞானகுணங்களோடேகூட ஞானியாய்ப் பிரமசாயுச்சியத்தையடைவன்; அவனே ஜீவன்முக்தன். யாதாமொருத்தன் சரீரமாகிற விருக்ஷத்தி லிருதயக்குகையாகிற கூட்டிலே ஜீவிசுராளாகிற விரண்டு பக்ஷிகளுண்டு; அதில் விக்ஞானமயன் ஜீவன். ஆனந்தமயரீசுரர். அந்த வீசுரனிடத்திலே விக்ஞானமயராகிய ஜீவன்; முகங் கண்ணாடியிலே பிரதிவிம்ப முகம்போலேயும், சூரியன் ஜலசூரியன்போலேயும், கற்பிதரானதால்; ஈசுரன்றானே இந்த ஜீவன். ஆனதா லன்னியமல்ல. அவனே நானாகிய பரமாத்மாவென் றறிந்து பாவித்துக்கொண்டு ஞானகுணங்களோடேகூட ஞானியா யீசுரசாயுச்சியத்தைத்தானே யடைவனோ; அவனே ஜீவன்முக்தன். யாதாமொருத்தன் சரீரமாகிற பிரமபுரத்திலே நவத்துவாரவாசலுடனே கூடியிருக்கிற பட்டணத்திலே யிருதயகமலமாகிற அரண்மனையி லாத்மாவாகிற ராசா;வித்தையாகிற ஸ்திரீயோடேகூடி யிந்திரியங்களாகிற பரிவார ஜனங்கள்சூழ மனதாகிற சிங்காதனத்தின்பேரிலே யிருந்துகொ

ண்டு பரமாத்மா ஜீவனென்கிறபெயரோடேகூடி விஷயங்க ளாகிற ராச்சியபரிபாலனம் பண்ணி விளையாடிக்கொண் டிருக்கிறார். அந்தப்பரமாத்மாவே தானென்றறிந்துபாவித்து ஞானகுணங்களோடேகூட ஞானியாய்ப் பிரமசாயுச்சியத் தைதானே யடைவனே; அவனே ஜீவன்முக்தன். யாதொ ருத்தன் சரீரமாகிற கடத்திலே யந்தக்கரணமாகிற ஜலத் திற் சூரியன் ஜலசூரியன்போலே பரமாத்மாப் பிரதிவிம் பித்து ஜீவனானார். அந்தக்கரணத்திலே பரமாத்மாவினுடை ய பிரதிவிம்பம் ஜீவனென்றறிந்து பாவித்து நானே பரமா த்மாவென் றறிந்து ஞானகுணங்களோடேகூட ஞானியா ய்ப் பிரமசாயுச்சியத்தைத்தானே யடைவனே; அவனே ஜீ வன்முக்தன். யாதொருத்தன் மனதாகிய குதிரைமேலே பரமாத்மாவேறி ஜீவனென்கிற பேரையடைந் திகலோக பரலோகங்களாகிற ஜகங்களிலே விஷயாநுபவ மார்க் கங்களிலே சவாரிபண்ணிக் குதிரையுந் தானு மிளைப்புடனே கூடவந் திருதயகமலமாகிற அசுவாலயத்திலே குதிரை யுங் கட்டித் தாமுஞ் சுகமாய்த் தூங்குகிறார்.

அவரே சுழுத்தியானந்தமயர். அவரே விக்ஞானமயர். அவரே பரமாத்மாவென்று மிந்தக்கற்பனை வவத்தாபே தங்களெல்லா மவருடைய விளையாட்டென்றுந் தானே பர மாத்மாவென்று மறிந்து ஞானகுணங்களோடேகூட ஞா னியாய்ப் பிரமசாயுச்சியத்தை யடைவனே; அவனே ஜீவன் முத்தன். யாதாமொருத்தன் சூரியனும், சூரியகிரணமும், போலே பிரம அம்சம் ஜீவனென்றும், மேகம்போலே அவி த்தையென்றும், அறிந்து; மேகத்தினாலே சூரியகிரணங் கள் மூடப்பட்டதுபோலப் பரமாத்மாவுக் கன்னியமில்லாம லிருக்கிற ஜீவன் அவித்தையினாலே மூடப்பட்டானென்றும்,

வித்தையினாலே யவித்தைபோயுள்ளளவில்பூருவம்போலே யன்னியமில்லாமற்றானே விளங்குவனென்றும், அறிந்து; தானே பரமாத்மாவென்று பாவித்து; ஞானகுணங்களுடனேகூடப் பிரமமாகத்தானே யிருந்துகொண்டு பிரமசாயுச்சியத்தை யடைவனே; அவனே ஜீவன்முக்தன். தானே பரமாத்மா. அவித்தையுடனேகூட விசுவவிலாசமெல்லாஞ் சொப்பனப்பிரபஞ்சம்போலே தன்னிடத்திலே தன்னாலேதானே கற்பிதமென்கிறவறிவுயாதொருத்தனுக்குத் திடநிச்சயமோ; அவன்பிராமணனானாலும், சூத்திரனானாலும், அவன்ஜீவன்முக்தன். யாதாமொருத்த னிந்தவிசுவமெல்லா மநுபவத்தினாலேயும்; சாஸ்திரத்தினாலேயும், குருவுபதேசத்தினாலேயும், அநித்தியமென்றும், நான் தேகவிலக்ஷணமென்றும், ஜீவத்துவங் கற்பிதமென்றும், தானே பிரமமென்று மறிந்து, ஞானகுணங்களோடேகூட ஞானியாகிவிடுவனே; அவனுக்கு ஞானத்தினாலே யவனுடைய சஞ்சிதகருமத்திற்கெல்லா நாசம். ஆகாமிய கருமத்துடனே சம்பந்தமில்லை. பிராரத்துவமாத்திரம் புசிக்கத்தக்கது. அப்படிப்பட்ட ஞானி ஜீவன்முக்தன். யாதாமொருத்தன் லோகத்திலேயிருந்தும்பயமில்லாதிருக்கிறானே; யாதொருத்தனைத்தொட்டு லோகத்துக்குப் பயமில்லையோ; ஞானகுணங்களுடனேகூடி ஞானியாயிருக்கிறானே; அவனே ஜீவன்முக்தன். யாதொருத்த னிந்திராதிபதங்களையுந் திரணிகரித் தாசையில்லாமல் கரபாத்திரவானாய்ப், பூமிதானே சயனமாய்க், கைதானே தலைக்குயரமாய்த், திகம்பரனாய்க், காடுகள், வனங்கள், மார்க்கங்களிலே படுக்கின்றவனாய்க், கிராமமேகராத்திரி சஞ்சாரியாய்ச், சகல கருமங்களையும் பரிகரித்துச் சந்நியாசியாய், ஞானகுணங்களுடனேகூடி, ஞானியாய், மௌனியாய்ப், பிரமநிஷ்டனா

யிருக்கிறவனே; ஜீவன்முக்தன். யாதொருத்தன் விசுவமெல்லாந் தானுயிருக்கிறுனே; அப்படிப்பட்டஞானி யெதினுலெந்தவஸ்துவைப் பார்க்கப்போகிறுன், எதினுலெந்தவஸ்துவைக் கேட்கப்போகிறுன், எதினு லெந்தவஸ்துவைச சொல்லப்போகிறுன், எதினு லெந்தவஸ்துவைப் பரிசிக்கப் போகிறுன், எதினு லெந்தவஸ்துவை ரக்ஷிக்கப்போகிறுன், எதினு லெந்தவஸ்துவைச் சிந்திக்கப்போகிறுன், எதினு லெந்தவஸ்துவை யறியப்போகிறுன், சகலமுந் தானுகவிருக்கிற அந்தமஹாத்மா ஜீவன்முக்தன். யாதொரு ஞானியானவன் காமக் குரோத லோப மோகாதி துற்குணங்களைப் பரிகரித்துக்குருவுபதேசத்தினுலே சிவோகமென் றறிந்துபாவித்தாற் சிவனுகிவிடுவன். அவனே ஞானகுணங்களுடனேகூடி ஞானியாய்சிவசாயுச்சியத்தைத்தானே யடைவன். அவனே ஜீவன்முக்தன்.

பதினோராவது ஜீவன்முக்திப் பிரகரணம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது. சாஸ்திரப்பிராசரணம்.

சாஸ்திரப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

சாஸ்திரத்தினுலே சகலமு மறியவேண்டும். சளுந்துனுலேயும், தீவட்டியினுலேயும், தீபத்தினுலேயும், இருட்டிலே யிருக்கிற பதார்த்த மறிகிறதுபோலே:—சா்ஸ திரக்கண்ணினுலே சகலமு மறியவேண்டும். அன்னமென்றுற்பசிபோகாது. ஜலமென்றுற் றுகம்போகாது. ஆவிழத மென்றுல்

ரோகம்போகாது. தேற்றுங்கொட்டையென்று லப்புத்தெ ரியாது. அந்தப்படி செய்து பலனடையவேண்டும். அப்ப டிப்போலச் சாஸ்திரம் படித்தமாத்திரத்தினாலே யவித்தை யாகிறவக்ஞானம்போகாது.பின்னையேதினாலென்றால்?சிரவ ண, மனன, நிதித்தியாசனமாகிற வநுபவக்ஞானத்தினாலே யவித்தையாகிற வக்ஞானம் நீங்கும். அந்தகாரம் விளக்கி னாலே போகிறதுபோலே யென்று சிலபேர் சொல்லுவார் கள். சிலபேர் யோகிகள் சாஸ்திரவிவேகத்தினாலே மோகம் போம். விளக்குப் பிரபையினாலே யந்தகாரம் போகிறது போலே:— வாசனைக்கூட்டம் அடிக்கடி பாவனையினாலே போம். அஃதெப்படிப்போலே யென்னில்? பாத்திரத்திலே யிருக்கிற நெய்ப்பூச்சு வுஷ்ணஜலத்தினாலே போகிறதுபோ லேயும், தாம்பிரபாத்திரம் புளிகொண்டு தேய்க்கிறதினா லே களிம்பாகிய வழுக்குப்போய்ச் சுத்தமாகிறதுபோலே யும், சாம்பலினாலே வெங்கலப்பாத்திரத்தை தேய்க்கவே யந்தப்பாத்திரஞ் சுத்தமாகிறதுபோலேயும்,வாசனைக்கூட்ட மாகிய மலம்போய்ச் சித்தஞ் சுத்தமாம்.

அப்பால் கருமமயமாயிருக்கிற வவித்தையா மலம் பிரமத்தியானத்தினாலே:—அக்கினிப்புடத்தினாலே சுவர்ண மலம் நீங்கினாற்போல நசித்துப்போம். அப்பால் சர்வக் ஞத்துவமாகிய திவ்வியக்ஞான முதிக்குமென்று சொல்லு வார்கள். அப்படியாகட்டு மென்று சங்கைவர:— அந்த மதம் வேதாந்திகளுக்குச்சம்மதமல்லவென் றுத்தரம்.மனு ஷனுக் காகாரம், நித்திரை, பயம், மைதுனம், இவை முதலா யிருக்கிற வறிவிருக்கிறபடினாலே சாஸ்திரக்ஞா னமேதுக்குத் தேவையில்லையென்று சங்கைவர:— அந் தச் சாமான்னியக்ஞானம் பசு, பக்ஷி, மிருகாதிகளுக்கெல்

லாமுண்டு. அந்த சாமான்னியக்ஞானத்தினாலே யிவன் ஞானியல்ல. விசேஷக்ஞானத்தினாலே யிவன் ஞானியாகவேண்டும். விசேஷக்ஞானமாவதேது? கிருத்தியா கிருத்திய விவேகம். அந்தவறிவு சாஸ்திரத்தினாலே வரவேண்டும். ஆனதால்; சாஸ்திரம் விசாரித்தறியவேண்டுமென் றுத்தரம். நதிப்பிரவாகத்தின் பின்னோடே போகிறதுபோலே; ஆகாரம், நித்திரை, பயம், மைதுனங்களோடே கூடியிருத்தல்; பசுக்ஞானம். ஓடத்தின்பேரிலேறி யக்கரைக்கிப் போகிறதுபோலே சாஸ்திரக்ஞானமாகிய வோடத்தை யடைந்து மோக்ஷமாகியகரையிலேறவேண்டுமென் றுத்தரம். சில பேர் ஸ்தூலவாதிகள் சமுசாரமாகிய சமுத்திரத்திலேநின்றுங் கரையேறுகிறதற் கீசுரனாகிய வோடக்காரனைத் தோத்திரபூசாதியாகிய நல்லவசனஞ் சொல்லவே யவ ராயாசமன்றியிலே கரையேற்றி விடுவர்.

ஞானமார்க்கம் அதிசூக்ஷுமம் கடினமென்று சொல்லுவார்கள். சமுத்திரத்தைக் கைகளினாலே நீந்திக் கரையேறினாற்போல ஞானமார்க்க மதிககடினம். ஈசுர வுபாசனாமார்க்கமே சுவர்க்கமென்று சொல்லுவார்கள். அவர்கள் பக்ஷம்போராது. அவர்களுக்குச்சாஸ்திரவிருதயந்தெரியாது. அந்த வோடந்தானே யறிவு அந்தவோடக்காரனாயிருக்கிற வீசுரன்றானே ஜீவாத்மா. தான்றானே ஈசுரனென்கிற வறிவில்லாம லொன்றுகிடக்க வொன்றை யுளறுகிறார்கள். இனிமேற் சித்தாந்தஞ் சொல்லுகிறோம். சாஸ்திரத்தினாலே தானே யறிவுவரவேண்டும். அறிவினாலே மோக்ஷமென்று சகலமத சம்மதமென் றுத்தரம். சாஸ்திரத்துக் கெல்லா மிந்திரியங்களினாலே காணப்படாத வஸ்துவிலேதானே தாற்பரியம். வேறேயொரு பிரமாணத்தினாலே யறியப்

பட்ட வஸ்துவிலே தாற்பரியமில்லே. பிரத்தியக்ஷமெப்படி ஞானசாதனமோ; அனுமானமெப்படி ஞானசாதனமோ; வுபமானமெப்படி ஞானசாதனமோ; அப்படிச் சாஸ்திரம் ஞானசாதனஞ் சாஸ்திரத்தினலே தத்துவக்ஞானம் வரவேண்டும். அபசப்தம், நல்லசப்தம், தெரியவேண்டும். தர்க்கசாஸ்திரத்தினலே; தர்க்கக்ஞானம் வரவேண்டும். மீமாம்ஸத்தினலே நியாயக்ஞானம் வரவேண்டும். நீதிசாஸ்திரத்தினலே ராஜநீதிக்ஞானம்வரவேண்டும். தருமசாஸ்திரத்தினலே தருமக்ஞானம் வரவேண்டும். காவிய நாடகவலங்காரங்களினலேவிற்பத்திக்ஞானம்வரவேண்டும். வைத்திசாஸ்திரத்தினலே அவுழதக்ஞானம் வரவேண்டும். அப்படிப்போலே வேதாந்தசாஸ்திரத்தினலே பிரமக்ஞானம் வரவேண்டும்.

இஃது குருகடாக்ஷ வுபதேசத்தினலே வரவேண்டும். வேதாந்தத்தினலே வந்திருக்கிற பிரமக்ஞானம், அவித்தையைநசிப்பித்து முக்தியைக் கொடுக்கும். ஞானமிரண்டுவிதம். பரோக்ஷக்ஞானமென்றும், அபரோக்ஷக்ஞானமென்றுஞ்சொல்லுவார்கள். பிரமமுண்டென்று சொல்லுகிறது பரோக்ஷக்ஞானம். நானேபிரமமென்கிற தபரோக்ஷக்ஞானம். பரோக்ஷக்ஞானத்தினலே சகல பாவங்களும்போம். அபரோக்ஷக்ஞானத்தினலே யவித்தை நசித்துப் பிரமானந்தமாக யிருக்குகை மோக்ஷமென்று பெரியவாள் சொல்லுவார்கள். வேதாந்தக்ஞான மாதியிலே யப்பியாசிக்கிறபோது பரோக்ஷக்யானம்போலே யிருக்கும். அந்த வேதாந்தக்ஞானந்தானே யடிக்கடி விசாராப்பியாசங்களோடே கூடின லபரோக்ஷக்ஞானமா யிருக்குமென்று வித்தியாரண்ணியசுவாமிகள் சம்மதம். விவரணுசாரியாள் சம்மதஞ்

சொல்லுகிறோம். சாஸ்திரத்தினாலே யறிவு. அந்தவறிவு:— ஆதியிலே பரோக்ஷக்ஞானம்போலே யிருக்கும். அடிக்கடி யப்பியாசத்தோடேகூடனாலதுதானே யபரோக்ஷக்ஞான மென்று சம்மதம். பாஷியக்காரர் சம்மதம்; வேதாந்த சிரவணந்தானே ஞானசாதனம். முக்கியசாதனம் மனன நிதித்தியாசனம். இரண்டுமங்கங்கள். பிரதிபந்தங்களைப்போக்கடிக்கும். பிரதிபந்த நிவிர்த்தி யெப்படியென்று சங்கைவர:—மனனத்தினாலே சமுசயநிவிர்த்தி. நிதித்தியாசனத்தினாலே விக்ஷேபப்பிரமை நிவிர்த்தி. சிரவணத்தினாலேயறிவு. அறிவினாலே முக்தியென்று பாஷிய சம்மதம். சிரவண, மனன, நிதித்தியாசனங்களோடே கூடியிருக்கிற வந்தக்கரணந்தானே யறிவுக்குச் சாதனமென்று வாசஸ்பதி மிசுரர் சம்மதம். தார்க்கிகாள் சம்மதஞ் சாஸ்திரத்தினாலே பரோக்ஷக்ஞானம்; இந்திரியத்தினாலே யபரோக்ஷக்ஞான மென்று சொல்லுவார்கள். அதுகூடாது? வேதாந்திகள் பரோக்ஷ வஸ்துவைப்பற்றி வருகிறக்ஞானம் பரோக்ஷக்ஞானம். அபரோக்ஷ வஸ்துவைப்பற்றி வருகிறக்ஞான மபரோக்ஷக்ஞானம். பிரமமாவது ? நித்தியாபரோக்ஷ வஸ்துவானபடியினாலே; வேதாந்தத்தினாலே பிரமத்தைப்பற்றிவருகிறக்ஞானம் பரோக்ஷக்ஞானந்தானே. பிரம மபரோக்ஷ வஸ்துவென்று வேதாந்தங்கள் சொல்லுகிறதுகளென்று சொல்லுவார்கள். அதுமாத்திரமல்ல:—பிரமத்துக்கும், அபரோக்ஷவாத்மவஸ்துவுக்கும்; அந்தப்பிரமமே நீயென்றுபதேசமிருக்கிறபடியினாலே பிரம மவித்தையினாலே பரோக்ஷம்போலே தோற்றுகிறது. அபரோக்ஷ வஸ்துப் பிரமமென்று சித்தம். சைவ வைஷ்ணுவா ளுபாசனைதானே காரணமென்றும்; முக்கியசாதனமென்றுஞ் சொல்லுவார்கள். அவர்கள்மதஞ்

ஜீவேசுராளுக்குப் பந்தந்தானே. அந்தப்பந்தம் பரமார்த்தந்தானே. ஜீவன் அவித்தையை யுடைத்தானவன். பிரமத்தையறிந்து வுபாசித்தாற் பிரமவுபாசனையினாலே யவித்தை நீங்கும். அவித்தை நீங்கின லந்தவுபாசகன் பிரமம் போலே யிருப்பனென்றும், அதுவே சமானமுக்தியென்றும், அவர்கள் மதம். சிலபேர் சைவாள் சாயுச்சிய முக்தியை யங்கீகரித்தார்கள். வைஷ்ணவாள்மதஞ் ஜீவனு மரூபிதானே, பிரமமு மரூபிதானே, சாரூபமுக்தியே முக்தியென்று மவர்கள்மதம்.

பன்னிரண்டாவது சாஸ்திரப்பிரகரணம்
முற்றிற்று.

பதின்மூன்றாவது. வேதாந்தப்பிரகரணம்.

வேதாந்தப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

வேதாந்தங்களுக்கு அபேதத்திலேதானே தாற்பரியம். பேதத்திலே தாற்பரியமில்லை. பேதம் பிரத்திக்ஷசித்தமானபடியினாலே யதுவேதென்றுவர:—வேறேயொரு பிரமாணத்தினாலே யறியப்படாததாயும், பலத்தை யுடையதாயும், இந்திரியத்தினாலே யறியப்படாததாயு மிருக்கிறவர்த்தத்திலே சாஸ்திரம் பிரமாண மென்று பெரியவா ளங்கீகரித்திருக்கிறார்கள். ஆனபடியினாலே யிந்திரியத்துக்கு விஷயமில்லாமலிருக்கிற வபேதத்திலே வேதாந்தங்களுக்குத் தாற்பரியம். அஃதெப்படியென்னில்? பிரமத்துக்கும், விசுவத்துக்கும், பேதமில்லை. ஜீவனுக்கும், பிரமத்துக்கும், பேதமில்லை. பிரமத்தைத்தவிர விரண்டாம்வஸ்துவில்லையென்கிறக்ஞா

ணம்அபேதக்ஞானம்.வேதாந்தவிசாரத்தினலே ஈசுரராகிற குருப்பிரசாதத்தினலே யபேதக்ஞானம் வரவேண்டும்.பேதக்ஞானத்தினலே முக்தியென்று சொல்லுவார்கள். வேதாந்தங்களுக்கு அபேதத்திலேதானே தாற்பரியம். சடுவிதலிங்கங்களினலேசொல்லுகிறேம். சடுவிதலிங்கமாவதேதென்றால்? உபக்கிரமம், உபசம்மாரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அருத்தவாதம்,உபபத்தி, எனப்படும். இந்தஆறுலிங்கங்களினலே வேதாந்தங்களுக்கு அத்தொய்தப் பிரமத்தினிடத்திலேதானே தாற்பரியம். அஃதெப்படியென்னில்? சாந்தோக்கியத்திலே; சட்டத்திலே; ஆதியிலே அபேதவுபக்கிரமம். அந்தத்திலே யபேதவுபசங்கார மிரண்டு மொருலிங்கம். ஒன்பதுதரம் நீதானே பிரமமென்று அடிக்கடிசொல்லியிருக்கிறது: இதுவிரண்டாவது அப்பியாசலிங்கம். *பிரமமாவது? வேதத்தினலே யறியத்தக்கது, குருவுபதேசத்தினலேயறியத்தக்கது,அபூர்வதை:இதுமூன்றாம்லிங்கம். †பிரமஞானத்தினலேமுக்தி பலம்:இது நாலாமிலிங்கம். ‡ பிரமத்தை யறிந்தாற் சகலத்தையு மறிந்தது; அருத்தவாதம்: இது அஞ்சாமிலிங்கம். இதற்குயுக்தி மிருத்துபிண்டத்தை யறிந்தாற் சகலகடங்களையுமறிந்தாற்போலேயென்கிறது.

---

* துரியன் றிகழ்பிரமாணுதீத னென்கை யபூர்வதை என்றும் பாடம்.

† பாரிலுயிரொன்றறித லெலாமறிதலென்கை பலம் என்றும் பாடம்.

‡ பிரத்திகான்மவுருமாம் பிரமந்தனக்கு, மாறரிய வைந்தொழிற்கத்துருத்துவஞ் செப்புறுதல் வயங்கருத்தவாதமெனவும் பாடம்.

கடத்துக்கு மிர்த்திகை, தந்துவுக்கு வூர்ணநாபி, நிமித்தம்போல ஜகத்துக்குக்காரணம் பிரம்மமென்று சொல்வதே திருஷ்டாந்தமென்கின்ற உபபத்தி: இது ஆரும்லிங்கம்.

இந்த ஆறுலிங்கங்களினுலே வேதாந்தங்களுக்கபேதக்ஞான மத்தொய்தப் பிரமத்தினிடத்திலே தாற்பரியமென்றும்; பெரியவாள் சொல்லுவார்கள். வேதாந்த விசாரம் பண்ணுகிறபோது அதிலே வேதாந்தக்ஞானம் பரோக்ஷக்ஞானம் போலே யிருக்கும். அடிக்கடி விசாராப்பியாசங்களுடனே கூடினு லதுதானே யபரோக்ஷக்ஞானம். அந்த அபரோக்ஷக்ஞானமே மூக்திசாதன மென்று பெரியவாள் சொல்லுவார்கள்.

பதின்மூன்ருவது வேதாந்தப்பிரகரணம்

முற்றிற்று.

பதிநான்காவது மஹாவாக்கியப்பிரகரணம்.

:o:

மஹாவாக்கியப்பிரகாணஞ்சொல்லுகிரும்.

பிரத்தியக்ஷமெப்படி ஞான சாதனமோ; அனுமான மெப்படி ஞானசாதனமோ; உபமான மெப்படி ஞானசாதனமோ; அப்படி மஹாவாக்கியம் பிரமக்ஞானத்துக்கு அந்தரங்கமா யிருக்கிற சாதனம். இந்த வுபதேசத்தைத்தானே பிரமக்ஞான வுபதேசமென்றுசொல்லுவார்கள். மஹாவாக்கியார்த்த விசாரத்தினுலே அத்தொய்தப்பிரமக்ஞானம் வரும். மகத்தாய்ப் பூரணமா யிருக்கிற பிரமத்தைச்சொல்லுகிற

படியினாலே மஹாவாக்கிய மென்று சொல்லுவார்கள். மக த்தாயிருக்கிற அர்த்ததையும், அபேதத்தையும், சொல்லு கிறபடியினாலே மஹாவாக்கிய மென்று சொல்லுவார்கள். மஹாபதமா யிருக்கிறமுக்தி ஞானசாதனமா யிருக்கிறபடி யினாலே மஹாவாக்கிய மென்று சொல்லுவார்கள். வேதங் களுடைய சிரசிலே கிரீடம்போலே பூசிக்கப்பட்டதா யிருக் கிறபடியினாலே மஹா வாக்கியமென்று சொல்லுவார்கள். சகல வேதங்களுக்கும் பொருளாயிருக்கிற பிரமத்தைச் சொல்லுகிறபடியினாலே மஹாவாக்கிய மென்று சொல்லு வார்கள். சிரேஷ்டமா யிருக்கிற வாக்கியமானபடியினாலே வேதாந்தங்களுக்குள்ளே மஹாவாக்கியமென்று சொல்லப் படும். வேதாந்தங்களினாலேயும், மனதினாலேயும், அளவிட ப்படாம லிருக்கிற ஜோதியைச் சொல்லுகிற படியினாலே மஹாவாக்கியமென்றே சொல்லுவார்கள். யாதொருஞான த்தினாலே மனுஷனானவன் சகலலோகத்துக்கும் பூசிக்கப் படுகிறவனாகிறானோ; யாதோரறிவினாலே சகல பாபங்களி லே நின்றும் விடுபட்டுச் சகல கரும பந்தங்களிலே நின்று முக்தனா யவித்தையாபாசத்திலே நின்று முக்தனாய் மோக்ஷ சாம்பிராச்கிய பதமாகிற மஹா பலத்தை யடைகிறானோ; அந்த ஞானசாதன வாக்கியமே மஹாவாக்கியமென்று சொல்லப்படும். மந்தனாய்ச் சகல வேதாந்தங்களையு மறிகிற தற்குப் புத்தியீனனாயிருக்கிறவனுக்குச் சுலபவுபாய மதி சீக்கிரசித்தமாயிருக்கிற வுபாயங் கடத்திவிக்கிறதா யிருக் கிறவுபாய மிதுவே. இது ஜன்மஸாபல்லியத்தைக் கொடுக் கும் குருவுபதேசத்தினாலே வரவேண்டும். இது ஜனகாதிக ளா யிருக்கிறயோகிகளுக்கு மறியப்படாமலிருக்கிற பிர மக்ஞானத்தைக்கொடுக்கும்.

இந்த ஞானத்தினுலே ஜீவன் முக்தனுவன். அப்படிப் பட்டமஹாவாக்கியத்தைச் சொல்லுகிறோம்.

மஹாவாக்கியத்துக்கு முமுக்ஷுவதிகாரி. ஆத்மாவுக் கும், பிரமத்துக்கும், ஏகத்துவம் விடயம். அத்தொய்த க்ஞானம் விஷயீ. அத்தொய்தக்ஞானஞ்சாதனம். மோக்ஷஞ் சாத்தியம். இன்னஞ் சொல்லுகிறோம். தற்பதத்துக்கு, சர் வக்ஞத்துவாதி விசிஷ்ட சைதன்னியம் முக்கியார்த்தம். தொம்பதத்துக்கு, தேகேந்திரியங்களுடனே கூடியிருக்கிற கிஞ்சிஞத்துவாதி விசிஷ்ட சைதன்னியம் முக்கியார்த்தம். அசிபதத்துக்கு, இரண்டுபேருக்கு மைக்கியஞ் சொல்லப்படு கிறது. இப்படி ஜீவீசுராளுக்கு, ஐக்கிய மங்கீகரித்தாற் பிரத்தியக்ஷ விரோதம். அஃதெப்படியென்றுல்? ஈசுரன் சர்வக்ஞத்துவாதியோடும், ஜீவன் கிஞ்சிஞத்துவாதியோ டும், கூடி முக்கியார்த்தமாயிருப்ப தைக்கியங்கூடாது. வி ரோதம் பரிகரிக்கவேண்டி லக்ஷியார்த்த மங்கீகரித்தார் கள். முக்கியார்த்தத்தை யொன்றுக்கொன்று சேர்க்கிற தில் விரோதம் வர:—அதற் குசிதமான அர்த்தத்தைக் கற்பி க்கிறது லக்ஷணையென்று சொல்லுவார்கள். அந்த லக்ஷணை மூன்றுவிதமா யிருக்கும். அஃதியாதெனில்? ஜகரலக்ஷணை யென்றும், அஜகரலக்ஷணையென்றும், ஜகதஜகரலக்ஷணை யென்றும், இப்படிலக்ஷணையின்கிரமம் மூன்றுவிதமென்று சொல்லுவார்கள். அஃதெப்படியென்று வர:—கங்காயாங் கோஷாவென்கிறவிடத்திலேஜகரலக்ஷணை. சோணேதாவ தியென்கிறவிடத்திலேயஜகரலக்ஷணை. சோயந்தேவதத்த காவென்கிறவிடத்திலே ஜகதஜகரலக்ஷணை. அஃதெப்படி என்றுல்? கங்காபதத்துக்கு, கங்காஜலமர்த்தம். கோஷசப்தத் துக்கு, இடைச்சேரியர்த்தம், கங்காயாங்கோஷாவென்கிற

வாக்கியத்திற்கு, ஆதாரவாதேயபாவமர்த்தம். அஃதெப்படியென்றுவர:--கங்காஜலத்திலே இடைச்சேரியிருக்கிறதென்கிறவர்த்தம்முக்கியார்த்தம். இப்படியங்கீகரித்தால்நெகிழ்த வஸ்துவாகியஜலத்திலேஇடைச்சேரி இருக்குமோ; இராது. இருக்குமென் றங்கீகரித்தால்; இதுபிரத்தியக்ஷவிரோதமானபடியினாலேவிரோதம்பரிகரிக்கவேண்டி லக்ஷணையையங்கீகரித்தார்கள். கங்காபதத்துக்கு, ஜலமாகிறஅர்த்தத்தை விட்டுச் சமீபக்கரையில் லக்ஷணையை யங்கீகரித்தார்கள்; அப்போது விரோதமில்லை. கங்காபதத்துக்கு, கங்காதீரம் அர்த்தமென்று அங்கீகரித்து இடைச்சேரிக்கும், தீர்த்தத்துக்கும், ஆதாரவாதேயபாவமாயிருக்கிற வாக்கியார்த்தங் கூடுமென் றுத்தரம்.

இனி அஜகரலக்ஷணை சொல்லுகிறோம். சோணோதாவதி யென்கிறவிடத்திலே சிவப்புக்குணமோடுகிறதென்று வாக்கியார்த்தஞ் சொன்னால்; சிவப்பாகிய குணஞ் சிவப்பாகிய குதிரையைவிட்டுத்தனியேஇராது: தனியே யோடாது. சிவப்போடுமென்றால்? பிரத்தியக்ஷ விரோதமானபடியினாலே விரோதம் பரிகரிக்கவேண்டி லக்ஷணை யங்கீகரித்தார்கள். சோணபதத்துக்குச் சிவப்புக் குதிரை யர்த்தம். சிவப்புக்குதிரை யோடுதென்றால்? விரோதமில்லை. இது விப்போ அஜகரலக்ஷணையென் றுத்தரம்.

இனிமேல் ஜகதஜகரலக்ஷணை சொல்லுகிறோம். சோயந்தேவதத்தகாவென்கிற விடத்திலே வாக்கியத்திற்குப் பொருளேதென்றுவர:— முன் காசியிலே கண்ட தேவதத்தனே இப்போ திராமேசுரத்திலே கண்டா னிவனாந்தத்தேவதத்தனென்று அபேதக்ஞானம்வருகிறது. சகாவென்கிற தற்பதத்துக்கு, அந்தத்தேச மந்தக்காலங் காலத்

தோடே கூடியிருக்கிறதேவதத்தன் அர்த்தம். அயமென்கிற துவம்பதத்துக்கு, இந்தத்தேச மிந்தக்காலங் காலத்தோடே கூடியிருக்கிற தேவதத்த னர்த்தம். இரண்டுபேருக்குமைக்கியஞ் சொல்லுகிறபோது பிரத்தியக்ஷவிரோதம். அந்தக்கால மந்தத்தேசத்தோடே கூடியிருக்கிறவனுக்கும், இந்தக்கால மிந்தத்தேசத்தோடே கூடியிருக்கிறவனுக்கும், ஐக்கியங்கூடுமோ; கூடாது. அந்தக்காலமந்தத்தேசவிசேடத்துக்கும், இந்தக்கால மிந்தத்தேச விசேடத்துக்கும், ஐக்கியங் கூடுமோ; கூடாது. ஐக்கியஞ்சொன்னால்; பிரத்தியக்ஷ விரோதமென்று வர:—விரோதம் பரிகரிக்கவேண்டி யுபாதிகளும், வுபாதியோடே கூடியிருக்கிற இரண்டுபேருகளுக்கு மைக்கியமாகிற முக்கியார்த்தத்தை விட்டு லக்ஷணை யங்கீகரித்தார்கள். அஃதெப்படியென்று வர:—தற்பதத்துக்கு, அந்தக்கால மந்தத்தேச விசேஷணங்களைப் பரித்தியாகம் பண்ணித் தேவதத்தனிடத்திலே லக்ஷணையென்றும், தேவதத்த னர்த்தமென்றும், அங்கீகரித்தார்கள். துவம்பதத்துக்கு, இந்தக்கால மிந்தத்தேச விசேஷணங்களையெல்லாம் பரித்தியாகம்பண்ணித் தேவதத்தனிடத்திலே லக்ஷணை யென்றும், தேவதத்தன் பொருளென்றும், அர்த்த மங்கீகரித்தார்கள். இரண்டுதேவதத்தனுக்கும் விசேஷங்களை விட்டு விசேடியாளா யிருக்கிற தேவதத்தானுக்கு, ஐக்கியஞ் சொன்ன லுசிதந்தானே. அப்படிப்போலே மஹாவாக்கியத்திலே விட்டுவிடாத லக்ஷணை யங்கீகரித்தார்கள். அஃதெப்படியென்றுவர:—தற்தபத்துக்குச் சர்வக்ஞத்துவ ஈசுரத்துவ ஜகத்காரணத்துவாதி விசேடங்களோடே கூடியிருக்கிற வீசுரசைதன்னிய மர்த்தம். தொம்பதத்துக்குக் கிஞ்சிக்ஞத்துவ அக்ஞத்துவ தேகேந்திரியாதி விஷ்டத்துவ

ஜீவத்துவாதி விசேடங்களோடே கூடியிருக்கிற சைதன்னிய மர்த்தம். இரண்டு சைதன்னியங்களுக்கு மைக்கியஞ் சொல்லுகிறபோது பிரத்தியக்ஷ விரோதம். அதேதென்றுவர:—சர்வக்ஞரா யிருக்கிற வீசுரருக்கும், கிஞ்சிக்ஞ யிருக்கிறஜீவனுக்கும்,ஐக்கியங்கூடுமோ? கூடாது. ஐக்கியஞ் சொன்னாற் பிரத்தியக்ஷ விரோதமென்று வர:—விரோதம் பரிகரிக்கவேண்டி லக்ஷணை யங்கீகரித்தார்கள். அஃதெப்படியென்று வர:—தற்பதத்துக்கு, சர்வக்ஞத்துவாதி, ஈசுரத்துவாதி, விசேடங்களையெல்லாந் தகித்து லக்ஷணையினாலே சுத்தப்பிரம சைதன்னிய மர்த்தம். தொம்பதத்துக்கு, கிஞ்சிக்ஞத்துவாதி ஜீவத்துவாதி விசேடங்களை யெல்லாந் தகித்து லக்ஷணையினாலே தேகேந்திரியாதி சாக்ஷி சைதன்னிய மர்த்தம். இரண்டு சைதன்னியங்களுக்கு மைக்கியஞ் சொன்னால்; பிரத்தியக்ஷ விரோதமில்லை: உசிதந்தானே. இதுதானே விட்டுவிடாதலக்ஷணை. மஹாவாக்கியத்தினாலே ஐக்கியக்ஞானம்வரவேண்டும்குருவுபதேசத்தினாலேவரவேண்டும். இந்தப்படி மஹாவாக்கியார்த்தத்தை யடிக்கடி விசாரித்தா லைக்கியக்ஞான முதிக்கும். ஆதியிலே மஹாவாக்கியக்ஞானம் பரோக்ஷக்ஞானம்போலேயிருக்கும். அடிக்கடி விசாரித் தடிக்கடி மனன நிதித்தியாசனத்தோடே கூடினலந்த மஹாவாக்கிய க்ஞானந்தானே யபரோக்ஷக்ஞானமா யிருக்கும். இந்தக்ஞானமே சாரம். தானியம் வேண்டுமென்கிறவன் வைக்கோலையெல்லாந் தள்ளித் தானியத்தை யெப்படிச் சேகரிப்பானோ வப்படிப்போலவும், அம்ஸமானது பாலையும் ஜலத்தையும் பிரித்து ஜலத்தைத் தியாகம்பண்ணிப் பாலை யங்கீகரிக்கிறதுபோலவும், அனேகக்கிரந்தங்களை விசாரித்துப் பார்த்துச் சாரமாயிருக்கிற வறிவை

யெடுத்துக்கொண்டு கிரந்தங்களையெல்லாம் பரித்தியாகம் பண்ணவேண்டும். சாஸ்திரமனந்தம், அறியத்தக்க பொருளனந்தம், ஆயுளற்பம், விக்கினங்களனந்தம், இப்படியாயிருக்கிறபடியினாலே:—எதுசாரமோ வதைத்தானே யங்கீகரிக்கவேண்டும். ஆனபடியினாலே:—மஹாவாக்கியப் பிரமக்ஞானந்தானே சாரம். இராவும் பகலும் பிரமத்தைத்தானே; உபாசிக்கவேண்டும். சமதமாதிகளோடேகூட மஹாவாக்கியத்தினாலே பிரமத்தை விசாரித்தறிந்து பிரமவித்தாய்ப் பிரமநிஷ்டையைச் சம்பாதித்தானானால்; அவன்றானே பிரமக்ஞானி. அவன்றானே பிரமசாயுச்சியத்தை யடைவன்.

பதினான்காவது மஹாவாக்கியப்பிரகரணம்

முற்றிற்று.

பதினைந்தாவது

தொம்பதார்த்தசோதனைப்பிரகரணம்.

தொம்பதார்த்த சோதனைப்பிரகரணஞ் சொல்லுகிறோம்.

தொம்பதத்துக்கர்த்தமார்? ஜீவன். ஜீவனார்? நீயென்று வியவகரிக்கிறவன் ஜீவன். அந்தஜீவனாவதார்? நானறியேன் நானக்ஞானி யென்கிற யவித்தையோடே கூடியிருக்கிறவன். அவித்தையாவதியாது? அனாதி, திரிகுணாத்மகம், அநிர்வசநீயம், பிரகிருதி யென்றுஞ் சொல்லப்படும். ஆத்மாவாவதார்? அகண்டானந்த வேகரசர், போதமயர், பரமாத்மா, அனாதி, வேதாந்த வேத்தியர். அவித்தைக்கு மாத்மாவுக்குஞ் சம்பந்த மனாதி. அந்தச்சம்பந்தங் கற்பி

தம். போதமயரா யிருக்கிற பரமாத்மாவானவர் தன்னுடைய அவித்தையோடேகூடி ஜீவனென்கிறபெயரையடைந்தார். பரமாத்மாவுக்குத்தானே யவித்தையினாலே ஜீவபாவங்கற்பிதம். அஃதெப்படியென்னில்? ஜீவனும்; ரச்சுசர்ப்பம் போலேயும், ஸ்தாணுபுருஷன்போலேயும், ஜலசூரியன்போலேயும், ஜலசந்திரன் போலேயும், ஜலாகாசம்போலேயும், ஜலமுகம்போலேயுங், கற்பிதந்தானே. இன்னஞ்சொல்லுகிறோம். சிருஷ்டிக்கு முன்னும் ஜீவோபாதிலயத்தில் நாங் காரணோபாதிகரா யிருந்தபடியினாலேயும், மஹாப்பிரளையத்திலேயும், சுழுத்தியிலேயும், மூர்ச்சையிலேயும், சமாதியிலேயும், பிராணன்போகிறதிலேயும், நாம் பிரமந்தானே. இந்த ஆறு அவசரங்களிலேயுங் காரணோபாதிகராய் நாம் பிரமமாகத் தானே யிருந்தோம். மத்தியிலே ஜாக்கிரசொப்பனங்களாகிய இரண்டவசரங்களிலே நாம் அந்தக்கரணத்தோடேகூடி ஜீவனென்றும், போக்தாவென்றுமானோம். இந்த ஆறு அவசரங்களிலேயும், பிரமமாகத்தானே யிருந்தோம். பிரமபாவத்தை யடைந்தவனுக்குத் திரும்பவருத்தில்லை. ஜலத்தோடே ஜலங் கூடினால் அந்தஜலந்தானே திரும்ப வரமாட்டாது. அப்படிப்போலத் திரும்ப வருத்தில்லை. ஆனால்; சுழுத்தியாதியிலே யிருந்துந் திரும்ப வருகிறவன் வேறே யொரு ஜீவனென்றுதானே சொல்லவேண்டும்? அப்படியல்ல:—அவன்றானே வாரான். சுழித்தி யடைந்தவன்றானே திரும்பவரவேண்டுமானால்? ஞானத்தினாலே பிரமத்தை யடைந்தவன்; திரும்பவரவேண்டும். இரண்டிடத்திலேயும் பிரமத்தை யடைந்திருக்கிறது சரிதானே யென்றால்? இரண்டுக்கும் பேதமுண்டு. சுழுத்தியாதியிலே யந்தக்கரணம்:—அவித்தை கருமங்களோடே யடைந்திருக்கிறான்.

அஃது யெப்படியென்னில்? கயிறுந்தோண்டியும், தோண்டி யிற் றண்ணீருங் கூடவே தடாக ஜலத்துக்குள்ளே லயித்தி ருந்தா லெப்படியோ வப்படிப்போலக் கயிற்றைப் பிடித்தி ழுத்தா லந்தத் தோண்டியு மந்தத் தண்ணீரும் வெளியிலே வரும். அப்படிப்போலே கருமபாசத்தினலே யந்தவந்தக்கர ணமும், அந்த ஜீவனும், சுழுத்தியாதியிலே யிருந்து வெளி க்கு வருவன். நேற்றைக்கு ஜாக்கிர சொப்பனஞ் சுழுத்திக ளிலே யநுபவித்த பதார்த்தங்களையும், மறுநாள் ஸ்மரிக்கி ருனே; ஆனதால்? அவன்ருனே திரும்பவந்தானென்று சொ ல்லவேண்டும். சுழுத்திக்கும், முக்திக்கும், பேதமுண்டு. முக்தியிலே ஞானத்தினலே; ஜீபோபாதியாகிய அவித் தையும், கருமங்களும், அந்தக்கரணமும், நசித்துச் சுத்த ஜீவன் சுத்தப்பிரமத்திலே லயித்தபடியினலே திரும்ப வரு த்தில்லை. பாசத்தையு மறுத்து, தோண்டியையு முடைத்து, சுத்தஜலஞ் சுத்தஜலத் தண்ணீரோடே கூடினு லஃதெப்ப டித் திரும்ப வாராதோ; கங்காதி நதிகளெல்லாஞ் சமுத்தி ரத்தை யடைந்து யெப்படித் திரும்ப வாராதோ; அப்படிப் போலவென்றறியத்தக்கது. சைவ வைஷ்ணுவாள்:— ஈசுர னுக்கு அவித்தையில்லை. ஜீவன் கற்பிதனல்ல; ஈசுரரைக் காட்டிலும் பின்னன், அவித்தையாசிரயன், சரீரந்தோரும் பின்னன், ஞானகுணகன், அவித்தையினலே மூடப்பட்ட க்ஞானமுடையவன், பிரமோபாசனையினலேயவித்தைநீங்கு மவித்தை நீங்கினுற் சர்வக்ஞத்துவாதி குணங்களோடேகூட வீசுரனைப்போலே யிருப்பன். அவன் முக்தாத்மாவாகிய ஞானியென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள்பிரா ணதாரணையினலே ஆத்மாவுக்கு ஜீவனென்கிறபேருண்டா யிற்றென்று சொல்லுவார்கள். அஃதெப்படி யென்றுவர:—

சாந்தோக்கியத்தின் பஞ்சம வத்தியாயத்திற் சொன்னபிரகாரம்ஞானேந்திரியமைந்து,கருமேந்திரியமைந்து,பிராணனைந்து, மனோபுத்தி யிரண்டு,ஆகப் பதினேழும் பிராணனென்று சொல்லப்படும். இவைகளுடைய தாரணையினாலே:—ஜீவனென்றும், பிராணவாயுவென்றும்,பிராணியென்றும், சொல்லப்படுகிறார். சிலபேர் பெரியவாள் தேகேந்திரியாதிகளிலே நானென்ன திதுவென்கிற பிரமையோடே கூடி:—நான் பிராமணன்,நான் க்ஷத்திரியன்,நான்வைசியன்,நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிரகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஸ்திரீ,நான்புருஷன், நான் தேவதத்தன், நான் யெக்கியதத்தன், நான் வெளுப்பன், நான் கருப்பன், நான் சிவப்பன், நான் அந்தன், நான் வெதிரன், நான் மூகன், நான் பசித்தவன், நான் தாகித்தவன், நான் காமி, நான் குரோதி, நான்லோபி, நான்கர்த்தா, நான் போக்தா, நான் அறியேன், நான் அக்ஞானியென்று யிகலோக பரலோக காமியாய், கரும பந்தனாய், கரும பல போக்தாவாயிருக்கிறவாத்மா ஜீவனென்றுஞ்சொல்லுவார்கள். சிலபேர்பெரியவாள் போதமயராயிருக்கிற வாத்மாவுக்குத் தேகேந்திரியபிராண மனோபுத்திசித்தவகங்காரப்பிரகிருதிகளுடைய வத்தியாச சம்பந்தத்தினாலே; ஜீவபாவங் கற்பிதமென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் போதமயராயிருக்கிறவாத்மாவைச் சரீரத்திரயசம்பந்தத்தினாலே ஜீவனென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் போதமயரா யிருக்கிற வாத்மாவுக்குப் பஞ்சகோச சம்பந்தத்தினாலே ஜீவனென்கிறபேர் வந்ததுயென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் போதமயரா யிருக்கிறபரமாத்மா விருபத்து நான்கு தத்துவ சம்பந்தத்தினாலே ஜீவ

னென்கிற பெயரை யடைந்தாரென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் போதமயராயிருக்கிற வாத்மா அவத்தாத்திரய சம்பந்தத்தினாலே ஜீவநாமத்தை யடைந்தாரென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் போதமயராயிருக்கிற வாத்மாவானவர் குணத்திரய சம்பந்தத்தினாலேயும், வாக்கு மனோதேக சம்பந்தத்தினாலேயும், அந்தக்கரண சம்பந்தத்தினாலேயும், ஜீவனென்கிற பெயரை யடைந்தாரென்று சொல்லுவார்கள். ஆத்மா தேகேந்திரியாதி விலக்ஷணர். தேகேந்திரியங்களாவதெது? தேகேந்திரியப் பிராணமனோபுத்தி சித்தமகங்காரப் பிரகிருதிகள். இந்த வெட்டு தத்துவங்களும் ஆனாத்மா. ஆத்மாவானவர்:— அனாதியாயிருக்கிற அவித்தையாமோகத்தினாலே தேகேந்திரியங்களுடனேகூடிக் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விகாரிபோலேயும், குணிபோலேயும், ஜீவன்போலேயுந் தோற்றுகிறார்.

அஃதெப்படிப்போலே யென்னில்? செம்பரத்தம் பூவினுடைய சன்னிதானத்தினாலே படிகஞ் சிவப்பாய்த் தோற்றுகிறதுபோலேயும், நீலவஸ்திர சம்பந்தத்தினாலே படிகம் நீலம்போலேயும், சித்திரவஸ்திர சம்பந்தத்தினாலே படிகஞ் சித்திரவர்ணம்போலேயும், ஜலசூரிய விம்பம் ஜலசம்பந்தத்தினாலே யலைகிறதுபோலேயும், கடசம்பந்தத்தினாலே கடாகாசஞ்சலிக்கிறதுபோலேயும், மேகங்கள் துரிதமாயோடுகிறபோது சந்திர நட்சேத்திரங்கள் துரிதமாயோடுகிறதுபோலேயும், ஓடத்திலே யிருக்கிறவனுக்குப் பிரமையினாலே கரையிலே யிருக்கிற விருக்ஷங்கள் ஓடுகிறதுபோலேயும், அந்தப்படி யாத்மாவுந் தோற்றுகிறார். வேதாந்தசிரவணத்தினாலேயும், குருப்பிரசாதத்தினாலேயும், ஆத்மானாத்ம

விசாரத்தினாலேயும், தேகேந்திரியாதிகள் சடமானபடியி
னாலேயும், அவைகள் திரிசியமானபடியினாலேயும், அவைக
ள் நஸ்வரமானபடியினாலேயும், அவைகள் பவுதிகமானப
டியினாலேயும், ஆத்மாவல்ல. தேகேந்திரியாதி சாக்ஷியாய்ப்
போதமயரா யிருக்கிற தானே பரமாத்மாவென்று யாதொ
ருத்த னறிகிறானோ வவனே முக்தாத்மா வாகிய ஞானியெ
ன்று சொல்லப்படும். ஆத்மா சரீரத்திரய விலக்ஷணர். சரீ
ரத்திரயங்களாவதேதென்றால்? ஸ்தூலசரீரம், சூக்ஷ்மசரீ
ரம், காரணசரீரமென்று மூன்றுவிதம். இதிற் ஸ்தூலசரீரமா
வது? சிரசு பாணியாதியாகிற-ஸ்தூலபிண்டம், பஞ்சீகிருத
பஞ்சமஹா பூதகாரியம், கருமசஞ்சித சுகதுக்கங்களுக்கெல்
லா மிருப்பிடம், சுக்கிலசுரோணிதமயம், அன்னமயம், துவ
க்கு, அஸ்தி, மாமிசம், உதிரம், கொழுப்பு, மச்சை, சனா
யு, மூத்திரம், மலம், கிருமி, ரோமம், மிகுந்தகூட்டமாகிய
மல மூத்திரப்பை, மலமூத்திரப் பாண்டமென்று சொல்லப்
படும். நீர்க்குமிழிபோலே நஸ்வரம். இப்படிப்பட்ட சரீரம்
ஸ்தூல சரீரமென்று சொல்லப்படும்.

இதுபோகத்துக்கு யிருப்பிடம். இதற்குப்பிரமாணவாக்
கியமேதென்றால்? பஞ்சீகிருத மஹாபூதகாரியமாயும், கரு
மத்தால் சம்பாதித்ததாயு மிருக்கிற சரீரம், சுகதுக்கபோக
த்துக்கு ஸ்தானமென்று சங்கராசாரியாள் வசனம். இனி
ச் சூக்ஷ்மசரீரமாவது யாதென்றால்? பஞ்சப்பிராணன்க
ளைந்து, ஞானேந்திரியமைந்து, கருமேந்திரியமைந்து, மனோ
புத்திகளிரண்டு, ஆகப் பதினேழுஞ் சூக்ஷ்ம சரீரமென்று
சொல்லப்படும். இதுபோகசாதனம். இதுஜீவோபாதி. இதற்
குவாக்கியப்பிரமாண மேதென்றால்? பஞ்சப்பிராணமனோபு
த்திதசேந்திரியம் ஆகப் பதினேழும் அபஞ்சீகிருத பூதவுற்ப

த்தி. சூக்ஷுமசரீரம் போகசாதனமென்று சங்கராசாரியாள் வசனம். காரணசரீரமாவதேதென்றால்? அவித்தை, அநாதி, அநிர்வசநீயம், பிரகிருதியென்றுஞ் சொல்லப்படும். இந்தக்காரண சரீர மீசுரவுபாதியென்றுஞ் சிலபேர் சொல்லுவார்கள். சூத்திரசம்மதம்:—ஸ்தூலசூக்ஷுமங்களுக்குக் காரணமானபடியினாலே காரணசரீரமென்று சொல்லப்படும். காரணசரீரமென்கிற பதத்துக் கர்த்தம்; ஞானத்தினாலே நாசமாய்ப்போகிறபடியினாலே சரீரமென்று சொல்லப்படும். காரணசரீரமென்றும், காரணோபாதியென்றும், பெயர். அநாதியாயும், இன்னபடி யென்று சொல்லக்கூடாததாயும், யாதொரு வவித்தையுண்டோ வதற்குக் காரணசரீரமென்றும், காரணோபாதியென்றும், பெயராத்மபோதத்திற் சொல்லியிருக்கிறதே; இதற்கு வாக்கியப்பிரமாணம். போதமயராக விருக்கிற வாத்மாவானவர் ஜாக்கிரதிசையிலே ஸ்தூலதேகத்தோடேகூடி விசுவனென்கிற பெயரோடுங் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விளையாடுவர். சொப்பனதிசையிலே லிங்கதேகத்துடனே கூடித் தைசதனென்று நாமம்பெற் றனேக சொப்பனங்களோடேகூடிக் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விளையாடுவர். சுழுத்தியிலே காரணசரீரத்தோடே கூடிப் பிராக்ஞனென்கிற பேரோடு மானந்தங்களையநுபவிக்கிறதுபோலே தோற்றுவர். சின்மயரா யிருக்கிற வாத்மாவானவர் சரீரத்திரய சம்பந்தத்தினாலே கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விகாரிபோலேயும், குணிபோலேயும், ஜீவன்போலேயுந் தோற்றுவர். வேதாந்த சிரவணத்தினாலேயும், குருப்பிரசாதத்தினாலேயும், சரீரத்திரயங்களுங் கடம்போலே திரிசியமானபடியினாலேயும், சடமானபடியி

ைலேயும், நஸ்வரமானபடியினைலேயும், போகசாதனமான படியினைலேயும், அனாத்மா. சரீரத்திரய சாக்ஷியாயி ருக்குருபரா யிருக்கிற தானே பரமாத்மாவென் றெப்போதறிகிருனே; அப்போதே ஜீவன் முக்தன்.

ஆத்மா பஞ்சகோச விலக்ஷணர். பஞ்சகோசங்களாவதேதென்றால்? அன்னமயம், பிராணமயம், மனோமயம்,விக்ஞானமயம், ஆனந்தமயமென்று பஞ்ச கோசங்களுள. அதிலன்னமயகோசமாவதேதென்றால்? அன்னவிகாரத்தினைலேயும், சுக்கிலசுரோணிதங்களாலேயு முண்டானது. இதைத்தானே ஸ்தூலதேகமென்றுசொல்லப்படும். இது துவக்காதிலக்ஷணமாயிருக்கிறதேகம். பிராணமயகோசமாவ தேதென்றால்? பஞ்சப்பிராணன்களும், கருமேந்திரியங்களும், கூடிப்பிராணமய கோசமென்று சொல்லப்படும். இது அன்னமயகோசத்துக்குள்ளே யிருக்கும். மனோமய கோசமாவதேதென்றால்? மனதும் ஞானேந்திரியங்களுங் கூடி மனோமய கோசமென்று சொல்லப்படும். விக்ஞானமய கோசமாவதேதென்றால் ? புத்தியும் ஞானேந்திரியங்களுங்கூடி விக்ஞானமயகோசமென்று சொல்லப்படும். பிராணமயகோசங் கிரியாசத்தி. மனோமயகோச மிச்சாசத்தி. விக்ஞானமய கோசம் ஞானசத்தி. இந்தமூன்று கோசங்களும்ஜீவோபாதி. இனி ஆனந்தமயகோச மாவதேதென்றால்? பிரியம்,மோதம், பிரமோதம், ஆனந்த மிந்த நாலு விர்த்திகளோடுங் கூடிய அவித்தையென்றுசொல்லப்படும். போதமயராயிருக்கிறஆத்மாவானவர்:—ஜாக்கிரதிசையிலே யன்னமயகோசத்தோடேகூடிக் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயு மிருப்பர். சொப்பன திசையிலே பிராணமய, மனோமய, விக்ஞானமய கோசங்களுடனேகூடிக் கர்த்தாப்போலே

யும், போக்தாப்போலேயுந் தோற்றுவர். அனேக சொப்ப னங்களெல்லாங் காணுவர். சுழுத்தியிலே ஆனந்தமய கோசத்தோடே கூடிப் போக்தாப்போலே யிருப்பர். ஜாக்கி றதிசையிலே புருவமத்தியிலேயிருந்துகொண்டு மனோபாதி கராய், ஸ்தூலோபாதிகராய், விசுவனென்கிறபெயருடனே கூடிஸ்தூலவிஷயபோகங்களையநுபவிக்கிறவனைப்போலே யிருப்பர். சொப்பனதிசையிலே கண்டத்திலேயிருந்துகொண் டு சூக்ஷுமதேகவுபாதிகராய்த் தைசதனென்கிற பெயருட னே கூடி கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயு மிரு ப்பர். சுழுத்தியிலே, இருதயத்திலே, அவித்தியோபாதிக ராய் பிராக்ஞனென்கிற பெயருடனே கூடி கூடஸ்தப்பிரம மாகவிருந்துகொண்டுசுவானந்தங்களையநுபவித்துக்கொண் டு போக்தாப்போலேயிருப்பர். ஆனந்தமய கோசமீசுரோ பாதியென்று சூத்திரக்காரர் மதம். ஞானமயமாயிருக்கிற வாத்மாவானவர் அவித்தையினாலே பஞ்சகோசங்களுடனே கூடித் தத்தன்மயர்போலேயும், பூருவஞ்சொன்ன கர்த்தா ப்போலேயும், போக்தாப்போலேயும், விகாரிபோலேயும், குணிபோலேயும், ஜீவன்போலேயுந், தோற்றுகிறார். பஞ்ச பாத்திரங்களை யடுக்கிவைத்தா லொன்றுக்குள்ளே யடங்கி யொன்றாக தோற்றுகிறதுபோலவும், வாழைமரம்போல வும், முஞ்சிப் புல்லுப்போலவும், உமித்தண்டுலம் போலவு ம், கத்தியு முறையும்போலவும், பஞ்சகோசங்க ளிருக்கு மென்று சொல்லப்படும். வேதாந்த விசாரத்தினாலேயும், கு ருப்பிரசாதத்தினாலேயும், பஞ்சகோசங்களும்:—என்னுடை ய சரீரம், என்னுடைய பிராணன், என்னுடையமனது, என் னுடைய புத்தி, என்னுடைய வானந்தமென்று அநுபவத்தி னாலே திரிசியங்கள். குட்டியம்போலே சடங்கள். புற்புத

ம்போலே நஸ்வரங்கள். ஆனபடியினாலே:—இவைகளனாத்மா. பஞ்சகோசவிலக்ஷணராய்ச் சாக்ஷியாய்ப் பிரக்ஞானமயரா யிருக்கிறதானேபரமாத்மாவென் றெப்போதறிகிறானோ; அப்போதே முக்தனாகிய ஞானியென்று சொல்லப்படும். இதற்கு வாக்கியப்பிரமாண மேதென்றால்? நிரவயவமாகிய வாத்மா பஞ்சகோசாதி சம்பந்தத்தினாலே தத்தன்மயர் போலேயிருக்கிறார்.

அஃது யெப்படியென்றால்? நீலவஸ்திராதி சம்பந்தத்தாற் படிகமெப்படி யதன் மயமாகிறதோ வப்படியென்று சங்கராசாரியாள் வசனம். ஆத்மா விருபத்துநான்கு தத்துவ விலக்ஷணர். இருபத்துநான்கு தத்துவங்களாவதேதென்றால்?பஞ்சமஹாபூதங்களைந்து,ஞானவிந்திரியங்களைந்து, கருமேந்திரியங்களைந்து, ரூபரசகந்த பரிசசப்தங்களைந்து, மனோவாங்கார புத்திகள்மூன்று,மூலப்பிரகிருதியொன்று,ஆகவிருபத்துநான்குதத்துவங்களென்று சொல்லப்படும்.போதமயரா யிருக்கிற வாத்மா விருபத்தைந்தாந் தத்துவமென்று சொல்லப்படும். சிலபேர் பவுராணிகள்தசப்பிராணன்களையு மிருபத்துநாலு தத்துவங்களுடனேகூடக் கூட்டிச் சொல்லுவார்கள். போதமயராயிருக்கிற பரமாத்மாவானவர்:—விகாரிகளாய், வியாபாரிகளாய், குணிகளாய், கிரியாசிரயங்களா யிருக்கிற விருபத்துநான்கு தத்துவங்களோடுங்கூடி யத்தன்மையர் போலேயும், கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விகாரிபோலேயும், குணிபோலேயும், ஜீவன்போலேயும், தோற்றுகிறார். வியாபாரிகளாயிருக்கிற விந்திரியங்களோடேகூடி நான் பார்த்தேன், நான் கேட்டேன், நான்சொன்னேன், இவைமுதலாயிருக்கிறவிந்திரியப்பிரமைகளைத் தம்மிடத்திலே யாரோபித்து விளை

யாடுகிறார். வேதாந்த சிரவணத்தினாலேயும், குருப்பிரசா தத்தினாலேயும், இருபத்துநான்கு தத்துவங்களையும், ஆத்மாவையும், பிரித்தறிந்து; நெற்குத்துகிறவுபாயத்தினாலே நெல்லுமியைத் தள்ளித் தண்டுலத்தைக் கிரகிக்கிறதுபோலவும், தானியத்தை யெடுத்துக்கொண்டு வைக்கோலைத் தள்ளுகிறதுபோலவும், ரசத்தைக் கிரகித்துக் கரும்புச்சக்கையைத் தள்ளி விடுகிறதுபோலவும், தாம்பூல ரசத்தைக் கிரகித்துத் தாம்பூல கவளத்தை தள்ளுகிறதுபோலவும், அனாத்மாவா யிருக்கிற விருபத்துநான்கு தத்துவங்களையு மாத்மாவல்லவென்று தள்ளித் தத்துவங்கள் சடமாகியும், திரிசியமாயும், நஸ்வரமாயு மிருக்கிறபடியினாலே யனாத்மாத்தானேயென்று நிச்சயித் திருபத்துநான்கு தத்துவங்களுக்குஞ் சாக்ஷியாய்ச் சச்சிதானந்த லக்ஷணரா யிருக்கிறதானே பரமாத்மாவென் றெப்போதறிகிறானோ; அப்போதே ஜீவன்முக்தன். இது விப்போ தத்துவக்ஞான மென்றும், பிரகிருதி புருஷவிவேக மென்றும், ஆத்மானாத்ம விவேக மென்றும், சிற்சடவிவேக மென்றுஞ் சொல்லப்படும். இது சாங்கிய மதம். ஆத்மா வவத்தாத்திரய சாக்ஷி, அவத்தாத்திரயங்களாவ தேதென்றால்? ஜாக்கிரவவத்தை சொப்பனவவத்தை, சுழுத்தியவத்தை யென்றுமூன்றுள. அதில் ஜாக்கிராவவஸ்தையாவ தேதென்றால்? பாகியேந்திரியங்களினாலே ஸ்தூல விஷயா நுபவம் ஜாக்கிராவவத்தை யென்று சொல்லப்படும். சொப்பனவவத்தையாவ தேதென்றால்? பாகியேந்திரியங்க ளபாவமாயிருக்கிறபோ தந்தரேந்திரியத்தினாலே சூக்ஷுமங்களாய்ப் பொய்களா யநிர்வசநீயங்களாய் வாசனாமயங்களா யிருக்கிற விஷயாநுபவஞ் சொப்பனமென்று சொல்லப்படும். சுழுத்தியவத்தையாவ

தேதென்றால்? பாகியேந்திரியங்களும், அந்தரிந்திரியமாகிற மனதும்,லயித் தவித்தையோடேகூட வவித்தையாவிர்த்தி மயங்களாயிருக்கிற பிரியம், மோதம், பிரமோதம், ஆனந்தமென்கிறவிடயாநுபவஞ் சுழுத்தியென்று சொல்லப்படும். சிலபேர் ஜீவனுக்குக் கூடஸ்தராகிய பிரமத்தினிடத்திற் சேர்க்கை சுழுத்தியென்று சொல்லுவார்கள். போதமயராயிருக்கிற ஆத்மா ஸ்தூலதேகத்தோடேகூடி ஜாக்கிரபோகங்களை யநுபவிப்பர். சூக்ஷுமதேகத்தோடேகூடிச் சொப்பனபோகங்களை யநுபவிப்பர். காரணசரீரத்தோடேகூடிச் சுழுத்தி யநுபவிப்பர். தார்க்கீகாள், வைஷ்ணுவாள், சைவாள், சொப்பனவவத்தை ஜாக்கிரத்தினுடைய ஸ்மரணையென்றும், சொப்பனஞ் சத்தியந்தானே யென்றும், சொல்லுவார்கள்.வேதாந்திகள் சொப்பன மநிர்வசநீயமா யசத்தியமென்று சொல்லுவார்கள். ஜாக்கிரப்பிரபஞ்சஞ் சொப்பனப்பிரபஞ்சம் போலேயும், இந்திர சாலவித்தை போலேயும், பொய். சித்திரசபைபோலே அநிர்வசநீயம். கற்பிதம். நாமரூபமெல்லாம்:—வியவகாரிகசத்தியம். ஜாக்கிரத்திற்பிராதிபாதிகசத்தியம்.சொப்பனத்திற்பாரமார்த்திகசத்தியம். சுழுத்திப்பிரமத்திற் பிரமவெதிரிக்தம். சகலபிரபஞ்சமும்பிரமத்தினிடத்திலே மாயையினாலே கற்பிதம். பிரமந்தானே சத்தியம். மேகமானது சூரியனை யெப்படி மறைக்கிறதோ; நித்திரையானது மனுஷனை யெப்படி மறைக்கிறதோ;ஜாக்கிரஞ்ஞானத்தை மறைத்து மயக்கசத்தி சொப்பனத்தையெப்படி யுண்டாக்கிறதோ; அப்படி யவித்தை யாத்மாவை மறைத்துஆத்மாவினிடத்திலேஜாக்கிரத்தைக்கற்பிக்கிறது. வேதாந்திகள்:— அவத்தாத்திரயங்க ளந்தக்கரணதருமமாத்மதரும மல்லவென்றும், அந்தக்கரணவத்தியாசத்தினு

லே யவத்தாத்திரயங்க ளாத்மதருமம்போலே தோற்று கிறதென்றும், அவத்தாத்திரயங்க ளாத்மாவினிடத்திலே கற்பிதமென்றுஞ் சொல்லுவார்கள். அதேதென்றுவர:—அன்னுவய விதிரேகங்களினாலே யந்தக்கரணதருமந்தானே. அஃதெப்படியென்றால்? ஜாக்கிரதிசையிலேயும், சொப்பனதிசையிலேயும், அந்தக்கரணமுண்டு. அதினுடைய தருமமா யிருக்கிற ஜாக்கிரசொப்பன வுபாதிகளிலுங் கண்டோம். சுழுத்தியி லந்தக்கரணமில்லை. ஜாக்கிராதிகளு மில்லை. ஆனதால்; அவத்தாத்திரய மந்தக்கரணதருமந்தானே. ஆத்ம தருமமல்ல. அன்னுவய விதிரேகங்களாவ தேதென்றால்? அது வுண்டானா லது வுண்டென்கிற தன்னுவயம். அதுவில்லாவிட்டா லது வில்லையென்கிறது விதிரேகம். அஃதெப்படியென்னில்? தந்துவுண்டானாற் படமுண்டென்பது தன்னுவயம். தந்துவில்லாவிட்டாற் படமில்லையென்பது விதிரேகம். சைவ வைஷ்ணுவாள்:—அவத்தாத்திரயங்களை யாத்ம தருமமென்று சொல்லுவார்கள்.

போதமயராயிருக்கிற வாத்மா வந்தக்கரணத்தோடே தத்தாய பிண்டம்போலே ஐக்கியப் பிரமையை யடைந்து அதுபோலே யானார். அந்தக்கரணத்தைப் பொருந்தி தேகத்தோடேகூடி யவத்தாத்திரயங்களை யநுபவிக்கிறதுபோலே தோற்றுவர். வேதாந்தவிசாரத்தினாலேயும், குருப்பிரசாதத்தினாலேயும், தேகாந்தக்கரணங்களைப்பிரித்தறிந்தந்தக்கரண தருமங்க ளவத்தாத்திரயங்களாத்மாவுக் கில்லையென்றறிந்து:—அவத்தாத்திரய சாக்ஷியாய், தேகாந்தக்கரண சாக்ஷியாய், போதமயரா யிருக்கிறதுதானே பரமாத்மாவென் றெப்போ தறிகிறானோ வப்போதே முக்தாத்மா ஆத்மாவானவர், குணத்திரயவிலக்ஷணர். குணத்திரயங்

ளாவ தேதென்றால்? சத்துவ ரசோ தமோ குணங்கள். குண சமட்டி சாமியாவத்தை பிரகிருதியென்று சொல்லுவார்கள். பிரகிருதி முதலான சகல தத்துவங்களுங் குணத்திர யாத்மகமென்று பெரியவாள் சொல்லுவார்கள். இருபத்து நான்கு தத்துவ விலக்ஷண ராத்மாவென்கிற விசாரத்தினாலே குணத்திரய விலக்ஷண ராத்மாவென்றுஞ் சொல்லப் படுகிறது. குணங்கள் மூன்றும் பிரகிருதி அம்சந்தானே; ஆத்மாவுக்கில்லை. பிரகிருதி சம்பந்தத்தினாலே குணத்திரயங்க ளாத்மாவினிடத்திலே கற்பிதமாய்த் தோற்றுகிறது. வன்னியிலே யிருக்கிற உஷ்ணத்துவம் பாண்டத்துக்குள்ளிருக்கிற ஜலத்திலே தோற்றுகிறதுபோலவும், புஷ்ப பரிமளம் வாயுவினிடத்திலே தோற்றுகிறதுபோலவும், ஜலசயித்தியம் பூதலத்திலே தோற்றுகிறதுபோலவுந் தோற்றுகிறது. வேதாந்தவிசாரத்தினாலேயும்,குருப்பிரசாதத்தினாலேயும், நிர்க்குண ராத்மாவென்றறிந்து:—குணத்திரய சாக்ஷியாய் ஜோதிசொரூபனா யிருக்கிறதானே பரமாத்மாவென்றெப்போ தறிகிறானோ; அப்போதானே முக்தாத்மா. ஆத்மாவானவர் அந்தக்கரண விலக்ஷணரென்றும், வாக்கு மனோதேக விலக்ஷணரென்றும், இவை யிரண்டும் ஸ்புடந்தானே. இப்படிப்பட்ட ஆத்மாவானவர் சித்தோசடமோ வென்றால்? தார்க்கிகா ளாத்மா சடமயர், மேகம்போலே யந்தக்கரண சம்பந்தத்தினாலே வாத்மாவினிடத்திலே யறிவு பிறக்கிறது, மேகத்திலே மின்வேட்டுப்போல வென்று சொல்லுவார்கள். சைவ வைஷ்ணுவா ளாத்மாவை ஞான குணகர், ஞானமயரென்று சொல்லுவார்கள்.

தீபமுந் தீபப்பிரபை போலவுஞ் சூரியனுஞ் சூரியப் பிரபைபோலவும், சந்திரனுஞ் சந்திரப்பிரபைபோலவு

மென்று திருஷ்டாந்தஞ் சொல்லுவார்கள். மீமாம்ஸாள் மின்மினிப் பூச்சிபோலவும், குன்றுமணிபோலவும், சிற் சடாத்மாவென்று சொல்லுவார்கள். சாங்கியாளும் யோகி களுஞ் சின்மயராத்மாவென்று சொல்லுவார்கள். வேதா ந்திகள் சின்மயரென்று சொல்லுவார்கள். அந்தக்கரணசம் பந்தத்தினாலே யாத்மாவுக்கு ஞானாசிரயத்துவ மென்று தார்க்கிகாள்சொல்லுவார்கள். ஆத்மா ஞானாசிரயரானபடி யினாலே சேதனரென்றுஞ் சொல்லுவார்கள். ஆத்மா போத மயரென்று வேதாந்தங்களிலே யாயிரமிடத்திலே சொல்லி யிருக்கிறது. ஆத்மா சுயம்பிரகாசரான படியினாலேயும், சாக்ஷியானபடியினாலேயும், பிரமமானபடியினாலேயு மிவர் சின்மயர்தானே. ஆத்மாவானவ ராதியோ? அனாதியோ? ஆத் மாதேகரோ ? தேகேந்திரிய பின்னரோ? ஒருதேகத்திலே யொருவாத்மாவோ ? அனேகாத்மாவோ வென்றால்? பவுத் தாள்:—தேகமேயாத்மா. போகமேமோக்ஷம். கண்ணினாலே பிரத்தியக்ஷமாகக் கண்டதேமெய். அதுவே பிரமாணம். வேதசாஸ்திரங்க ளெல்லாம் பொய். ஈசுரனும் பொய். பர லோகமும் பொய். கருமத்தனாலே ஸ்திரீபுருஷாள் கூடிப் பிரபஞ்ச வுற்பத்தியென்று சொல்லுவார்கள். தேகநாசந் தானே; மோக்ஷமென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பவு த்தா ளிந்திரியங்கள்தானே யாத்மாவென்று சொல்லுவார் கள். சிலபேர் பவுத்தாள் பிராணன்றானே யாத்மாவென்று சொல்லுவார்கள். சிலபேர் பவுத்தாள் மனதுதானே யாத் மாவென்றுசொல்லுவார்கள். சிலபேர் பவுத்தாள் புத்தியே யாத்மா வென்று சொல்லுவார்கள். சிலபேர் பவுத்தாள் சூனிய மாத்மாவென்று சொல்லுவார்கள். வைதீகாள் போ தமயரா யிருக்கிற வாத்மா தேகேந்திரியாதி விலக்ஷணர்,

தேகேந்திரியாதி சாக்ஷியா யிருக்கிறவர், நானென திது வென் றநுபவரூபியா யிருக்கிறவ ரப்படிப்பட்ட வாத்மா சட்பாவவிகாரசூனியர், நித்தியர், அனாதியென்று சொல்லு வார்கள். ஆத்மாசாதியென்றும், சட்பாவவிகாரங்களோடே கூடினவரென்றும், பவுத்தாள்சொல்லுவார்கள். சாதியாவ தெப்படியென்றவர:— பிள்ளைபிறந்தால்; பிறந்தவுடனே செய்கிற கருமாதிகளும் பண்ணுகிறார்கள். பாலன், உவா, விருத்தன், செத்தானென்று பிரத்தியக்ஷமாகக் காண்கிற படியினாலே யாத்மத்துவஞ் சாதிதானே. சட்பாவவிகாரங் களுடனே கூடினவரென்றவர:—சட்பாவவிகாரங்களாவ தேதென்றால் ? கருவிலே யிருத்தல், பிறத்தல், வளர்தல், பருத்தல், குறைதல், நசித்த லிவைகள்சட்பாவவிகாரங்கள். இந்தவாறுந் தேகவிகாரங்க ளாத்மாவுக்கில்லை. இந்தத்தேக கருமங்களு மாத்மாவினிடத்திலே தோற்றுகிறது. தேகத்தி லே முக்கியதருமங்க ளாத்மாவினிடத்திலே யமுக்கியகற்பி தம். ஆத்மா சட்பாவவிகாரசூனியர்: அனாதிநித்தியர்தானே.

ஆத்மாவுக்கு ஜனனமரண மங்கீகரித்தால் வெகு சுரு தி விரோதம். ஆத்மாவுக்கு அநித்தியத்துவமும் வரும். அநித்தியத்துவ மங்கீகரித்தால்; பவுத்தமதமாம். அந்தமத த்திற்றூஷணமேதென்றவர:— ஆத்மாவுக்கநித்தியத்துவ மங்கீகரித்தால்; தேகத்தோடேகூட, ஆத்மாப்பிறந்திருக்கிறா ரென்று சொல்ல வேண்டும். இந்த ஜன்மத்திலே பண்ணின யெக்கிய தான தபசு தருமங்களுக்கும், பாவங்களுக்கும், போகாநுபவங்க ளில்லாமல் நாசம்வரவேண்டும்? ஜன்மாந் திரத்திலே பண்ணின கருமங்களுங் கர்த்தாவா யிருக்கிற தேவதத்தனும் நசித்துப் போனபடியினாலே இப்போது தேவதத்த னனுபவிக்கிற சுகதுக்காநுபோகம் முன்செய்த

கருமமில்லாமற்றானே வரவேண்டும்? கருமமன்றியிலே சுக துக்கங்க ளநுபவிக்கவேண்டும்? உண்டான சிசுவுக்கு முன் வாசனுகுணம் நஷ்டமாய்ப்போனபடியினாலேயும், இஷ்டசா தனஞானமில்லாதபடியினாலேயும், தன்னியபானத்திலே பிர விருத்தியில்லாதேபோகவேண்டும்? முன்ஜன்மத்திலேசெய் தகருமங்களேதுவென் றங்கீகரியாவிட்டா லோகத்திலேசில பேருக் கைஸ்வரியம், சிலபேருக்குத்தாரித்திரம், சிலபேருக் குச்சுகம், சிலபேருக்குத் துக்கம், சிலபேருக்குத்தீர்க்காயுசு, சிலபேருக்கு அற்பாயுசு, சிலபேரரோகிகள், சிலபேர்ரோகி களென்கிற போகவிசித்திரங்க ளில்லாதே போகவேண் டும்? ஆனபடியினாலே; இதற்கேதுவாய்ப் பூருவ கருமங்களு முண்டு. கருமகர்த்தாவாயிருக்கிற ஆத்மா நித்தியர்தானே யென் றங்கீகரிக்கவேண்டும்? ஆத்மா நித்தியரென் றீசுரகற் பிதமா யிருக்கிற வேதசாஸ்திரங்க ளெல்லா முறை யிடுகி ன்றன. அஃதப்பிரமாணமானால்; மாதாவென்றும், பெண் ணென்றும், சகோதரியென்று மிவர்களைத் தொடலாகா தென்கிற வாசாரமுதலியதெல்லாஞ் சரியாகப்போகவேண் டும்? அமூலமாகப் போகவேண்டும்? அப்படிச்சொல்லுகிற பவுத்தம் அற்ப மதந்தானே.

ஆனதா லாத்மாவானவர் நித்தியர்தானே. சடூர்மிரகி தர்தானே. சடூர்மியாவதேதென்றால்? ஜனனமரண மிரண் டுந் தேகதருமம், பசிதாகங்கள் பிராணதருமம், சோகமோ கங்க ளந்தக்கரணதருமம், இந்தச்சடூர்மிகளு மாத்மாவினிட த்திலே கற்பிதமாய்த் தோற்றுகிறது. ஆத்மாவானவர் அணு பரிமாணமோ? மத்திம பரிமாணமோ? விபுபரிமாணமோ வென்றுவர:—ஆத்மா மத்திம பரிமாணர். சாவயவர். தேக மெவ்வளவோ அவ்வளவநிகிறவர். மசகாதி தேகங்களுக்கு

ள்ளேயு மதுக்குத்தக்கதா யிருப்பர்.கஜாதிதேகங்களுக்குள் ளேயு மதுக்குத்தக்கதா யிருப்பர். மனுஷாதிதேகங்களுக் குள்ளேயும், பசுவாதி தேகங்களுக்குள்ளேயும், பக்ஷியாதி தேகங்களுக்குள்ளேயு மந்தந்தத் தேகத்துக்குத் தக்கதாக விருப்பர். ஆனபடியினாலே யாத்மா மத்திமபரிமாணரென்று பவுத்தாள் சொல்லுவார்கள். அப்படி அவவயத்துடனே கூடியிருப்பாரென் றங்கீகரித்தா லாத்மாவுக் கனித்தியத்து வம்வரு மதை யாத்மாவுக் கங்கீகரித்தாற் பண்ணின கரும த்துக்குப் பலமில்லாமலும், பண்ணாத கருமபலம் வருகிற தாகவும், முன்சொன்னபடிதோஷம்வரு மானதால்; மத்தி மபரிமாண வாதங்கூடாது. சைவ வைஷ்ணவா ளணுபரி மாண மாத்மா:—மசகாதி தேகங்களுக்குள்ளேபிரவேசிக்கி ருர்; அந்தந்தத்தேகத்திலேயிருந்தும் வெளியிலேபோகிருர். கஜாதி மனுஷாதி பசு பக்ஷியாதி தேகங்களுக்குள்ளே பிரவேசிக்கிருர்; அந்தத்தேகங்களுக்குள்ளே பிரவேசித்து வெளியிலேபோகிருர். அதுமாத்திரமல்ல:—சுவர்க்கத்துக் குப்போகிருர், நரகத்துக்குப்போகிருர், திரும்பவும் வருகிரு ரானபடியினாலே யணுத்துவ மில்லாதே போனு லாத்மாவு க்கு லோகாந்திரத்திலே கமனுகமனம், தேகங்களுக்கு ள்ளே பிரவேச மிந்தத் தருமங்களெல்லாங் கூடாது. ஆன தா லாத்மா வணுத்தானேயென்று சொல்லுவார்கள். அது கூடாதாத்மா விபுதானே.ஆத்மாவுக் கிந்தத்தேகத்திலேநின் றும்நீங்கி யின்னொருதேகத்திற் பிரவேசிக்கிறது கமனுகம னுதிகள். இவைகளெல்லா மந்தக்கரண வுபாதியைப்பற்றிக் கற்பிதமாகத் தோற்றுகிறது. போதமயராயிருக்கிற பரமா த்மா மஹாகாசம்போலே யொருத்தர். அனேககடங்கள் போல வனேகவந்தக்கரணங்கள். அனேக கடாகாசங்கள்

போல வனேகவந்தக்கரணவச்சின்ன சைதன்னியங்கள் ஜீவாளென்று சொல்லப்படும்.

ஜீவத்துவங் கற்பிதம். வியாபகராய் விபுவாயிருக்கிற வாத்மாவினிடத்திலே யந்தக்கரண யோகத்தினலே சகல தருமங்களுங் கற்பிதமென்று வேதாந்த டிண்டிமையாகிய முரசறைகிறது. ஆத்மா விபுவென்றுதானே சொல்லவேண்டுமென்றுவர:— சர்வத்திராகாரியோபலமபாது விபு இதற்குத் தாற்பரியம் ராமேசுரத்திலேயிருக்கிற தேவதத்தனுக்குக் கோலக்கொண்டையிலேயிருந்தும்வருஷச்சாப்பாடுவருகிறது, அது அதிஷ்டங்காரணமென்று சொல்லவேண்டும்? பலத்தை யிழுக்கிறதிலே காரணமாயிருக்கிற அந்த வதிஷ்டகுணம் ராமேசுரத்திலே யிருக்கிற தேவதத்தனுடைய வணுவாயிருக்கிற வாத்மாவின்பேரிலே யிருந்தது. அந்தப்பலத்துக்கு மதிஷ்டத்துக்குஞ் சம்பந்தமில்லை. ஆனபடியினலே ராமேசுரத்திலே யிருக்கிற தேவதத்தனுக்குக் கோலக்கொண்டையிலே யிருந்துவருகிற வருஷாசனப் பலப்பிராப்தியில்லாதேபோகவேண்டும்? ஆனதா லாத்மாவிபு. இன்னஞ் சொல்லுகிறோம். ஆத்மா வணுவானல்; சிரசிலே யாத்மாவிருந்தால், காலிலே கிள்ளினல் நோகாமற் போகவேண்டும்? அல்லது காலிலே யாத்மாவிருந்தாற் றலையிலே குட்டினல் வலியாமற்போகவேண்டும்? இரண்டிடத்திலேயு மாத்மாவிருக்கிறானு லணுத்துவமில்லாதே போகவேண்டும்? ஆத்மா வணுவானல் அட்டாவதானமில்லாமற் போகவேண்டும்? சரீரத்திலே பத்துப்பேர் பத்திடத்திலே யொருமித்துக் கிள்ளினற் பத்திடத்திலேயும் வலியாமற் போகவேண்டும்? ஆத்மா வணுத்தானே யவனுடைய வறிவு தீபப்பிரபைபோலே யாத்மா தீபம்போலே யென்று சொன்

னால்; சுகதுக்கங்க ளாத்ம தருமமோ? ஞானதருமமோ?ஞா னதருமமானு லென்னிடத்திலே வலிக்கிறது யென்னிடத்தி லே சுகதுக்கமென்கிற வியவகாரங்கூடாது. சுகதுக்கங்கள் ஞானகுணமல்ல வாத்மதருமமென்று சொன்னால்; நீ யணு வென்று சொல்லிய வாத்மாவுக்குக் காலிலேயுஞ்சிரசிலேயு மேகமாய்ச் சுகதுக்கா நுபவங் கூடாதென்று முன்னமே தூஷித்திருக்கிறோமே? அப்படியில்லையாத்மாவுக்கும், ஞான குணத்துக்கும், தீபப்பிரபைபோலே பேதமில்லை. ஆனபடி யினாலே சுகதுக்கா நுபவங் கூடுமேயென்று சொன்னால்? சுகதுக்கங்களு மாத்மதருமமென்று வங்கீகரித்தியேயா னால்? நீ இச்சியாமலிருந்தாலு மாத்மாவுக்கு விபுத்துவம் வந் தது. ஆனபடியினாலே யாத்மா விபுதானே. நீசொன் னவணுத்துவ மாத்மாவுக்குக்கூடாது. ஆத்மாவிபுவானா லிந் தத்தேகம் விட்டு வேறுதேகத்திற் பிரவேசித்து லோகாந் தர கமனாகமனாதிகள் கூடாதென்று சொன்னியேயானால்? கடாகாச கமனாகமனம்போலே யந்தக்கரண சம்பந்தத்தி னாலே கூடும். அந்தக்கரண தருமங்களா யிருக்கிற பிரவே ஷாதிகளெல்லாம் விபுவாயிருக்கிற வாத்மாவினிடத்திலே கற்பிதமாகத் தோற்றுகிறது. ஆனபடியினாலே யாத்மா விபு தானே. ஆத்மாவானவர் கர்த்தாவோ? அகர்த்தாவோ? புத்திகர்த்தாவோ? அகர்த்தாவோவென்று வர:— வேதாந் திகள் மனோபுத்தி கர்த்தாவென்றுசொன்னார்கள். அதற்குச் சாங்கியாள் சடமாயிருக்கிற வந்தக்கரணத்துக்குக் கர்த் துருத்துவங் கூடுமோ? கூடாதென்கிற சங்கைக்கு, ஆத்ம சன்னிதானத்தினாலே யந்தக்கரணத்துக்குக் கர்த்துருத்து வங்கூடும். அதுவல்லாமலந்தக்கரணம் விகாரியானபடியி னாலேயுங் குணியானபடியினாலேயும், கிரியாசிரயத்துவமா

கிற கர்த்துருத்துவ மந்தக்கரணத்துக்குத்தானே சொல்லவேண்டும். நிருவிகாரராய், நிர்க்குணராய், அசங்கராயிருக்கிறவாத்மாவுக்குக்கர்த்துருத்துவங்கூடாதென்றுத்தரம்.

மனதினாலே சிந்திக்கிறேன், மனதினாலேபாவனை பண்ணுகிறேனென்கிறவிடத்திலே மனதுக்குக் கரணத்துவங் கண்டிருக்கிறோம். கரணமாகியமனதுக்குக்கர்த்துருத்துவங் கூடாது. கரண கர்த்துருத்துவ மிரண்டு மனதுக்குத்தானே யங்கீகரிக்கில்விரோதமென்றுற்சிற்சன்னிதானத்தினாலேசகலமுங் கூடுமென்றும், ஆத்மா வசங்கர், உதாசீனர், சுபாவர், நித்தியர், நிருவிகற்பர், நிராகாரர், நிர்க்குணர், நித்தசுத்தர், போதசொருபர். பிரகிருதி அந்தக்கரணத்து அவிவேகத்தினாலேயாத்மாவுக்குச்சமுசாரம்வருகிறதுபிரகிருதிக்கிக்கர்த்துருத்துவஞ் சுதந்தரமென்றும், பிரகிருதி புருஷவிவேகத்தினாலேமோக்ஷமென்றும், வேதாந்திகளுக்குள்ளே சாங்கியாளங்கீகரித்தார்கள். வேதாந்திகள் நான் கர்த்தாவென்று சொல்லி யநுபவ மிருக்கிறபடியினாலேயும், வேதாந்தங்களுமாத்மாத்தானே கர்த்தாவென்று சொல்லுகிறபடியினாலேயும், எத்தனவான கர்த்தாவென்றுசொல்லிக்கர்த்துருத்துவலக்ஷண மிருக்கிறபடியினாலேயும், கிரியானுகூல ஞானத்துவங் கர்த்துருத்துவமென்கிறலக்ஷண மாத்மாவுக் கிருக்கிறபடியினாலேயும், புருஷன்றானே கர்த்தா. கரணமாயிருக்கிற வந்தக்கரணத்துக்கு கர்த்துருத்துவஞ் சொல்லக்கூடாது. ஆனாலசங்கராயிருக்கிற வாத்மாவுக்குக்கர்த்துருத்துவமெப்படியென்று சங்கித்தால்; கரணவிசிஷ்டராகவிருக்கிறவாத்மாவுக்குத்தானே; கர்த்துருத்துவஞ் சாதனம். ஞானவானாக விருக்கிற வாத்மாவுக்குத்தானே கர்த்துருத்துவம். அதுமாத்திரமல்ல வாத்மாபோக்தாவானபடியினாலே யிவர்

தானே கர்த்தாவென்று சொல்லவேண்டும். ஆனாற் கர்த்துருத்துவங் கற்பிதமோ? வாஸ்தவமோ வென்றுவர:— தார்க்கிகோள், சைவவைஷ்ணுவாள், கர்த்துருத்துவம் வாஸ்தவமென்று சொல்லுவார்கள். இரும்பு சுடுதென்கிறதுபோலே நான்கர்த்தாவென்கிறது பிராந்திதானே.

அஃதெப்படி யென்னில்? தச்சனானவன் வாச்சியுளியோடே கூடினானாற் றச்சவேலை செய்வன்; அவைகளுடனே கூடாவிட்டாற் றச்சவேலை செய்யமாட்டான். அப்படிப்போலே யாத்மா கரணங்களுடனே கூடின லப்போது நான் கர்த்தா போக்தாவென்றுந் தோற்றுவார்; கரணங்களுடனே கூடாதிருந்தால் நிஷ்கிரியராகவிருப்பார். ஆனதாலாத்மாவினிடத்திலே கர்த்துருத்துவங் கரணகற்பிதம். சிலபேர் இப்படிக்கொத்த வாத்மாவானவர் பிரமப்பிரதிவிம்பரென்றும், சிலபேர் பிரமஅம்சமிவரென்றும், சிலபேர் பிரமாவச்சினரென்றுஞ்சொல்லுவார்கள். ஜீவிசுரர்களுக்குவிம்பப்பிரதிவிம்பபாவபக்ஷம், அம்சாம்சபாவபக்ஷசம், அவச்சின்னபக்ஷம், ஆகமூன்றும் வேதஞ் சொல்லுகிறது. சூத்திரக்காரரும் விசாரித் திருக்கிறார். விம்பப்பிரதிவிம்பபாவபக்ஷமெப்படியென்றுவர:—சந்திரன்போலேயும், சூரியன்போலேயும், முகம்போலேயும், பரமாத்மா. ஜலசந்திரன்போலேயும், ஜல சூரியன்போலேயும், கண்ணாடியிலேபிரதிமுகம்போலேயும், ஜலத்திலேபிரதிமுகம்போலேயும், ஜலாகாயம்போலேயும், ஜீவன். அஃதெப்படி யென்றுவர:— மாயாப் பிரதிவிம்ப சைதன்னிய மீசுரனென்பார்கள். பிரமமாயாப் பிரதிவிம்ப சைதன்னிய மவித்தையாவந்தக்கரணப்பிரதிவிம்பஜீவனென்பார்க ளிவைக ளிரண்டுவிதமாய்க் கற்பிக்கிறது.

இனி மூன்றுவிதமாய்க் கற்பிக்கிறது யாதென்றால்? மஹாகாசம், கடாகாசம், ஜலாகாசம்போலே மாயாப்பிரதி விம்பசைதன்னியமீசுரன். அவித்தையாப்பிரதிவிம்பசைதன்னியங்கூடஸ்தர். அவித்தையென்றும், பிரகிருதியென்று மிரண்டுமொன்றுதானே. அந்தக்கரணப் பிரதிவிம்பசைதன்னியம்ஜீவர். இனி நாலுவிதமாய்க் கற்பிக்கிறதாவதேதென்றால்? போதமயர்பரமாத்மா. மஹாகாசம்போலே மாயாப்பிரதிவிம்பசைதன்னியமீசுரர். மேகாகாசம்போலே யவித்தையாப்பிரதிவிம்பசைதன்னியங்கூடஸ்தர். கடாகாசம்போலே வந்தக்கரணப்பிரதிவிம்பலசைதன்னியம் ஜீவன். சிலபேர் பெரியவாள் கடஜலாகாசம்போலே, மாயையிலே பிரமப்பிரதிவிம்பித மீசுரர். அவித்தையிலே ஈசுரப்பிரதிவிம்பிதங் கூடஸ்தர். அந்தக்கரணத்திலே கூடஸ்த பிரதிவிம்பிதம் ஜீவர். இந்தப்பக்ஷத்திலே:— பிரமத்தினிடத்திலே மாயையினாலே ஈசுரர் கற்பிதர். ஈசுரரிடத்திலே யவித்தையினாலே கூடஸ்தர்கற்பிதர். கூடஸ்தரிடத்திலே அந்தக்கரணத்தினாலே ஜீவன் கற்பிதனென்று சொல்லுவார்கள். முன்சொன்ன மதத்திலே பிரமத்தினிடத்திலே மாயையினாலே ஈசுரர் கற்பிதர். பிரமத்தினிடத்திலேயவித்தையினாலே கூடஸ்தர் கற்பிதர். பிரமத்தினிடத்திலே யந்தக்கரணத்தினாலே ஜீவன் கற்பிதன். இப்படி விம்பப்பிரதிவிம்பத்தன்மையாயிற்று. இந்தப்க்ஷபத்திலே பிரதிவிம்பமாயிருக்கிறஜீவன் மித்தியாபூதனானபடியினாலே யவனுக்குக் கர்த்துருத்துவங் கூடாது. போக்துருத்துவமுங் கூடாது. இதுமாத்திரமல்லப் பிரதிவிம்ப ஜீவனுக்குப் பந்தமென்றும், சுத்தாத்மாவுக்கு மோக்ஷமென்றும், பந்தமோக்ஷங்களுக்குக் கர்த்தாவிரண்டாகவரும். இதுமாத்திரமல்லப் பிரதிவிம்பனாகிற

கற்பித ஜீவனுக்குச் சமுசாரித்துவங் கூடாதென்று வருவதால்? விம்பப்பிரதிவிம்பபாவபக்ஷம் போராது; நல்லதல்ல. இதற்கு அம்சாம்சபாவபக்ஷநல்லது. அஃதெப்படியென்னில்? சுத்தசைதன்னியம்பரப்பிரமமதுதானே மாயையுடனேகூடி யீசுரரானார். அந்தப் பிரமந்தானே யவித்தையுடனேகூடிக் கூடஸ்தரானார். அந்தப்பிரமந்தானே யந்தக்கரணத்துடனே கூடி ஜீவனானார். இவைகள்தான் நாலுவிதமாய்க் கற்பிக்கிறது. மஹாகாசம் கடாகாசம் ஜலாகாசம் போலே இனி மூன்றுவிதமாய்க் கற்பிக்கிறதாவதேதென்றால்? பரமாத்மாவு மீசுரனு மொன்று, கூடஸ்தரொன்று, ஜீவனென்று ஆக மூன்று. மஹாகாசங் கடாகாசம் ஜலாகாசம்போலே இனி யிரண்டுவிதமாய்க் கற்பிக்கிறதாவதேதென்றால்? மஹாகாசம் கடாகாசம்போலே ஜீவிசுரா ளிரண்டுதானே. இந்தப்பக்ஷத்திலே பரமாத்மாவு மீசுரனுமொன்று, கூடஸ்தரும் ஜீவனு மொன்றென்று சொல்லுவார்கள்.

இந்தப்பக்ஷத்திலே பிரமாம்சமீசுரன். ஈசுராம்சங் கூடஸ்தர். கூடஸ்தாம்சம் ஜீவனென்று சிலபேர் சொல்லுவார்கள். சிலபேர்பெரியவாள்மாயோபாதிகசைதன்னியமீசுரர். அவித்தையோபாதிகர் ஜீவனென்று சொல்லுவார்க்ள். சிலபேர் அவித்தையோபாதிகராகிய கூடஸ்தர்தானே ஈசுரர். அந்தக்கரணோபாதிகர் ஜீவனென்று சொல்லியம்சாம்சபாவபக்ஷஞ் சொல்லுவார்கள். பொறியும் வன்னியும்போலே திருஷ்டாந்தம்:—வன்னிபரமாத்மா. பொறி ஜீவன். [இந்தப்பக்ஷத்துக்குத் தூஷணம். பிரமம்:—நிரம்சம், நிரவயவம், விபு, அதுக்கு அம்சம் பரமார்த்தமாய்க் கூடாது? கற்பிதமாய்ச் சொல்லவேண்டும். கற்பிதம் பொய்

யான படியினாலே:—அதுக்குக் கடாகாச மஹாகாசம்போலே அவச்சின்னபக்ஷம்நல்லது. மஹாகாசம்போலேபரமாத்மா. கடாகாசம்போலே ஜீவன். இவை யிரண்டுவிதமாய்க் கற்பிக்கிறது. அஃதெப்படியென்னில்? மாயா அவச்சின்ன சைதன்னிய மீசுரர். அவித்தையா அவச்சின்ன சைதன்னியம் ஜீவர். அவித்தையா அவச்சின்னசைதன்னியமீசுரர். அந்தக்கரண அவச்சின்னசைதன்னியம் ஜீவனென்றுசொல்லிக் கடாகாசம் மஹாகாசம்போலே சொல்லுவார்கள். சிலபேர் மாயைக்கும், அவித்தைக்கும், பேதமுண்டு. மாயையுடனேகூடினசைதன்னிய மீசுரர்தானே. அவித்தையுடனேகூடின சைதன்யந்தானே ஜீவன். அவர்தானே கூடஸ்தரென்று சொல்லுவார்கள்.

இந்த ஜீவாத்மா வெங்கேகற்பிதரென்றுவர:—மஹாகாசம் ஜலாகாசம்போலேயும், மஹாகாசங் கடாகாசம் போலேயும், பரப்பிரமத்தினிடத்திலே ஜீவன்கற்பிதன். சிலபேர் சூரியன்றானே யுபசூரியன்போலேயும், சந்திரன்றானே யுபசந்திரன்போலேயும், வன்னிதானே தீபம்போலேயும், லிங்கம்போலேயும், தோற்றுகிறதுபோலே பிரமந்தானே அவித்தையா வந்தக்கரண வுபாதியுடனேகூடி ஜீவனென்று தோற்றுகிறாரென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் வன்னிலிங்கம்போலே ஜீவிசுராளென்றிருக்கிறபடியினாலே ஈசுராம்சம்ஜீவன், ஈசுரனிடத்திலே ஜீவன் கற்பிதனென்கிறதாய்க்கீதாவசன மிருக்கிறதென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் சிருஷ்டிக்குமுன்னேயும், சுழுத்தி மூர்ச்சை சமாதியிலேயும், கூடஸ்தப்பிரமத்தோடே ஜீவ னைக்கியத்தை யடைந்திருக்கிறான், திரும்பவும் வெளியிலே வருகிறான், ஆனபடியினாலே, கூடஸ்த

ரிடத்திலே ஜீவன் கற்பிதனென்று சொல்லுவார்கள். சில பேர் பெரியவாள்பிரமத்துக்கு மூன்றவதாரமுண்டு: பிரமம் மாயையுடனே கூடி ஈசுராவதாரமானார். அவித்தையாப் பிரகிருதியுடனே கூடிக் கூடஸ்தாவதாரமானார். பிரமந்தானே யந்தக்கரணத்துடனே கூடி ஜீவ வவதாரமானாரென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் மாயையுடனே கூடிப் பிரமமீசுரரானார். ஈசுரன்றானே யவித்தையோபாதிகராய்க் கூடஸ்தரானார். கூடஸ்தர்தானே யந்தக் கரணோபாதிகராய் ஜீவனானாரென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் சுத்தசத்துவப்பிரதானமாயிருக்கிற பிரகிருதிதானே மாயையென்றும், மலினசத்துவப்பிரதானமாயிருக்கிற பிரகிருதி வவித்தையென்றும், தமப் பிரதானமாயிருக்கிற பிரகிருதிதானே பிரகிருதியென்றுஞ் சொல்லுவார்கள். பிரமசைதன்னியந்தானே மாயையுடனே கூடி நிமித்தகாரணமான வீசுரரானார். பிரமந்தானே பிரகிருதியுடனே கூடி யுபாதானகாரணமான கூடஸதரானார். பிரமந்தானே யவியத்தையா வந்தக் காரணத்துடனே கூடிப்போக்தாவான ஜீவனானாரென்று சொல்லுவார்கள். அவித்தைக்கும், மாயைக்கும், பேதபக்ஷத்திலே மாயையுடனே கூடின சைதன்னிய மீசுரர். அவித்தையுடனே கூடின சைதன்னியம் ஜீவன். மாயையில்லை யென்கிற பக்ஷத்திலே யவித்தையோபாதிக சைதன்னிய மீசுரன். அவரே கூடஸ்தர். அந்தக் கரணத்துடனே கூடின சைதன்னியம் ஜீவாத்மாவென்று சொல்லுவார்கள். சில பேர் பெரியவாள் அவ்வியத்தரென்றும், அக்ஷரரென்றும், கூடஸதரென்றும், பிராக்ஞரென்றும், ஆனந்தமயரென்று மெல்லாமொரே தன்மையாகச் சொல்லுவார்கள். தட்டா

ரப்பட்டடைக் கூடம்போலே நிருவிகாரராயிருக்கிறபடி யினாலே கூடஸ்தர். சகலத்துக்கு முந்தினவரா யிருக்கிறபடியினாலே கூடஸ்தர். விகாரியாயிருக்கிற தேகேந்திரியாதிகளுக்குத் தாம் அதிஷ்டானமாய் நிருவிகாரியாயிருந்துகொண்டு; விகாரியான தேகேந்திரியாதிக்கிச்சாக்ஷியானபடியினாலே கூடஸ்தர். இருதயக்குகையிலேயிருக்கிறபடியினாலே கூடஸ்தர். பொய்யாகிய தத்துவக்கூட்டத்திலிருக்கிறபடியினாலே கூடஸ்தர். அசலராயிருக்கிறபடியினாலே கூடஸ்தர். மறைப்பாகிய பிரகிருதியிலிருக்கிறபடியினாலே கூடஸ்தர். கூடமென்றது? அநிர்வசநீயமாயிருக்கிற வவித்தையாவாசனு லக்ஷணத்தையுடையது. அதிலேயிருக்கிறபடியினாலே கூடஸ்தர். இந்தப்படி பெரியவாள் சொல்லுவார்கள். இப்படிபட்ட கூடஸ்தரெங்கே கற்பிதர்? அவித்தையினாலே பரப்பிரமத்தினிடத்திலே கற்பிதர். பரப்பிரம அம்சமென்று சிலபேர் சொல்லுவார்கள். சர்வஜீவாளுடைய யிருதயத்திலேயுமீசுரனிருக்கிறுரென்று மீசுரவசனமிருக்கிறபடியினாலே கூடஸ்த ரீசுரர்தானே; ஈசுராம்சமென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் பிரமஅம்சமுமல்ல, ஈசுர அம்சமுமல்ல, இந்தக் கூடஸ்தரவித்தையோடே கூடியிருக்கிறபடியினாலே ஜீவன்றானே யென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் வேதாந்தங்களிலே வெகுவாய்க் கூடஸ்தரை ஜீவலக்ஷணராய்ச் சொல்லியிருக்கிறபடியினாலே யிவர் பிரமஅம்சமுமல்ல, ஈசுராம்சமுமல்ல, அன்னியர்தானேயென்றுஞ் சொல்லுவார்கள். இனிமேற் பாஷியக்காரர்மதம்:—பிரமந்தானே தன்னுடைவவித்தையினாலே சமுசாரியானுன். தன்னுடையக்ஞானத்தினாலே முக்தனானுன்.

அஃதெப்படி யென்னில்? ராஜகுமாரனானவன் தன்னுடைய வவித்தையினாலே வேடனாகி மாதாவினுடைய வுபதேசத்தினாலேயுந் தன்னறிவினாலேயு முடனே ராஜாவானாற்போலேயும், கருணனானவன் தன்னுடைய அவித்தையினாலே தேர்ப்பாகனுடைய பிள்ளையாய் மாதாவாகிய குந்திவுபதேசத்தினாலே யுடனே தேர்ப்பாகத் தன்மையைவிட் டுடனே குந்தி புத்திரனானாற்போலேயும், இராமரானவர் அவித்தையினாலே தசரத புத்திரனா யிராவணனைச் சங்கரித்த பிறகு தேவதைகளெல்லாரும் வந்தார்களப்போது பிரமதேவரானவர் இராமா நீர் தசரதபுத்திரரல்ல நீர் விஷ்ணுவென் றுபதேசம் பண்ணின பிறகு நான் தசரதகுமாரரென்கிற பாவத்தைவிட் டுடனே விஷ்ணுவானாற்போலேயும், சம்பராசூரனுடைய கிரகத்திலே பிரத்திம னென்கிற பெயரோடே குழந்தையாக மன்மதன் வளர்ந்துகொண்டிருக்கிறபோ தவித்தையினாலே நான் சம்பராசூரனுடைய புத்திரனென் றிருக்கிறகாலையி லொருநாள் ரகசியத்திலே ரதிதேவியானவள் நீ சம்பராசூரனுடைய புத்திரனல்ல நீ கிருஷ்ணசுவாமி புத்திரனாகிய மன்மதனென் றுபதேசம் பண்ணின மட்டிலே சம்பரா புத்திரனென்கிற பாவத்தைவிட் டுடனே மன்மதனானாற் போலேயும், தசமனானவன் அவித்தையினாலே தசமன் போனானென்று மயங்கித் தான் தசமனென்கிற பாவத்தை யடைந்து தசமனைக் காணாமற் றுக்கப்படுகிறபோ தாப்த்த சினேகிதன்வந் தெண்ணிப் பார்த்துத் தசமனாற்றோடே நஷ்டமாய்ப் போகவில்லை அந்தத்தசம னீதானென் றறியச் சொன்ன மாத்திரத்திலே தான்றான் றசமனென் றறிந்துகொண் டுடனே தசமபாவத்தை யடைந்தாற்போலேயும் பிரமந்தானே யவித்தையி

ணாலே ஜீவபாவத்தையடைந்து வுபநிடத்துக்களுடைய வுப தேசத்தினாலே யுடனே தன்னறிவுவந் துடனேபிரமமானார். ஸ்தாணுவைக்கண்டு அவித்தையினாலே புருஷனென்றுபிரமி த்து ஸ்தாணுவென்கிறவறிவினாலே புருஷப்பிரமைபோனாற் றுணு ஸ்தாணுவாகத்தானேயிருக்குமப்படிப்போலப் பிரம த்தினிடத்திலே யவித்தையினாலே கற்பிதமா யிருக்கிற ஜீவத்துவப்பிரமைபோனாற் பிரமம் பிரமமாகத்தானேயிரு க்கும். பிரமமென்கிறதும், ஆத்மாவென்கிறதும், ஆகமென் கிறதும், புருஷனென்கிறது மெல்லாம் பரியாயந்தானே. பிரமந்தானே விசுவாத்மா. பிரமத்தைத்தவிர வேறே ஈசுர னில்லை. பிரமத்தைத்தவிர வேறே கூடஸ்தரில்லை. பிரமத் தைத்தவிர வேறே ஜீவனில்லை. ஆனபடியினாலே வேதமெல் லாம் பிரமமென்றுதானே சொல்லுகின்றன. மிருத்தைத்தவி ரக் கடமில்லை. தந்துவைத்தவிரப் படமில்லை. கனகத்தைத் தவிரப் பூஷணமில்லை. சமுத்திரத்தைத்தவிர அலையில்லை. அப்படிப்போலப் பிரமத்தைத்தவிர பிரபஞ்சமில்லை; பிர பஞ்சம் பிரமமயந்தானே. பிரமத்தி னிடத்திலே:— பிரபஞ் சம், ஈசுரர், கூடஸ்தர், ஜீவர், சகலமுங் கற்பிதமானபடியி னாலே பிரமத்தைத்தவிர வேறே யொருவஸ்துவு மில்லை; சகலமும் பிரமந்தானே. விசுவத்தைதவிரப் பிரமமுண்டு, ஈசுரனைத்தவிரப் பிரமமுண்டு, கூடஸ்தரைத்தவிர பிரம முண்டு, ஜீவனைத்தவிரப் பிரமமுண்டு, பிரமத்தைத்தவிர ஜீவனில்லை, பிரமத்தைத்தவிரப் பிரபஞ்சமில்லை, ஈசுரருமில் லை, கூடஸ்தருமில்லை, சகலமும் பிரமந்தானேயென்று வேதா ந்தங்கள் சொல்லுகின்றன. சூரியனும் ஜலப்பிரதிவிம்ப சூரி யன்போலவும், சந்திரனும் ஜலப்பிரதிவிம்பசந்திரன் போல வும், பிரமமுமுண்டு; ஜீவனுமுண்டு; இரண்டுபேருக்கும் பே

தமில்லை. அந்தக்கரணமாகிய ஜலத்திலே பிரமமாகிய சூரிய ன்பிரதிபலித்து ஜீவனாகிற வுபசூரியனான ரப்பிரமத்தைத் தவிர வேறே ஜீவனில்லை. அந்தக்கரணத்திலே பிரமத்தினு டைய பிரதிவிம்பம் ஜீவன். மாயையிலே பிரமத்தினுடைய பிரதிவிம்ப மீசுரன். அவித்தையாகிற பிரகிருதியிலே பிர மத்தினுடைய பிரதிவிம்பங் கூடஸ்தர். சிலபேர் 'மாயாப் பிரதிவிம்ப மீசுரர்தானே; அவித்தையாப் பிரதிவிம்பம் ஜீவன்றானேயென்று சொல்லுவார்கள்.

அம்சாஅம்சபாவபக்ஷத்திலே அக்கினியும், பொறியும், போலே திருஷ்டாந்தம். அக்கினிபோலே பிரம்மம். பொறி போலே ஜீவன். அக்கினியானது யிரும்பிலே மேலுங் கீழு முள்ளும் வெளியு மெங்கும் வியாபித்துக்கொண்டிருக்கிற துபோலே; அவித்தையா வந்தக்கரண வுபாதியை யுடைத் தாயிருக்கிற பிரமசைதன்னிய மவித்தையா வந்தக்கரணங் களையுள்ளும் வெளியு மேலும் கீழு மெங்கும் வியாபித்து க்கொண்டிருக்கு மதுவே ஜீவன். அவச்சின்ன பக்ஷத்திலே மஹாகாசங் கடாகாசம்போலே திருஷ்டாந்தம். அவித் தையா வந்தக்கரணங்களினாலே யுள்ளே மறைக்கப்பட் டுப் பிரம சைதன்னியம் ஜீவனானார். தேகேந்திரியாதிசாக்ஷி யாய்ச் சச்சிதானந்த லட்சணமாயிருக்கிற தானே; பரமாத் மாவென்று சகல வேதாந்தங்களுக்கும், சகலமான பெரி ரியவாளுக்கும், சித்தாந்தம். இந்த வாத்மாவுக்கு விஷயா நுபோகத்திலே இந்திரியத்துக்கும், விஷயத்துக்கும், சம் பந்தங் காரணம். இந்திரியத்துக்கும், மனதுக்கும், சம்பந்தங் காரணம். மனதுக்கு மாத்மாவுக்குஞ் சம்பந்தங் காரணமெ ன்றுஞ்சொல்லுவார்கள். கூடஸ்தராகிறஆனந்தமயரீசுரனெ ன்றும், விக்ஞானமயன்ஜீவனென்றும், சூத்திரக்காரர்மதம்.

சுருதி, ஸ்மிருதி, புராணங்கள், லோகப்பிரசித்தி, ஜீவீசுராள் தேகத்துக்குள்ளே யிருதயத்தி லிருக்கிறார்களென்று வெகு பிரசித்தி. தார்க்கிகோள், சாங்கியாள், மீமாஸாளிவர்களுடைய மதம்:--கூடஸ்தராகிறவானந்தமயர் பாமார்த்திகஜீவன், விக்ஞானமயர் வியவகாரிகஜீவன், விக்ஞான மந்தக்கரணமென்றும், கூடஸ்தர்தானே ஜீவனென்றுஞ் சொல்லும். பாஷியக்காரர்மதம்:— விசுவத்துக்கும், பிரமத்துக்கும், பேதமில்லை. ஜீவனுக்கும், பிரமத்துக்கும், பேதமில்லை. ஜீவாளுங் கடாகாசங்களைப்போலே யொன்றுக்கொன்று பேதமில்லை. பிரமத்தைத்தவிர இரண்டாம் வஸ்துவில்லை; சகலமும் பிரமந்தானேயென்றுபெரியவாளுடையநிஷ்டை.

பதினைந்தாவது

தொம்பதார்த்தசோதனைப்பிரகரணம் முற்றிற்று.

பதினாறாவது

மாயா அவித்தையாநிரூபணப்பிரகரணம்.

மாயை யநிர்வசநீயமாயிருக்கிறபடியினாலே மாயோபாதிகசைதன்னியமீசுரர், அவித்தையோபாதிக சைதன்னியம் ஜீவனென்று சொல்லப்படும். மாயையவித்தைகளுக்கு லக்ஷணமேதென்னில்? மாயையென்றும், அவித்தையென்றும், பிரகிருதியென்றும், அவ்வியத்தமென்றும், பிரதானமென்று மிவைகளெல்லா மேகவாக்கியந்தானே. ஆச்சரியங்களாயிருக்கிற காரியங்களைப் பண்ணுகிறபடியினாலேயும், மெய்யாயும் பொய்யாயுமிருக்கிறபடியினாலேயும், அநிர்வசநீயமா யிருக்

கிறபடியினலேயும், மாயையென்று சொல்லப்படும். மோகாகாரமா யிருக்கிறபடியினலே மோகினியென்று சொல்லப்படும். கண்ணுக்குக் காணப்படாதபடியினலே யவ்வியத்தமென்று சொல்லப்படும். சகலத்திற்கு முபாதானமானபடியினலே பிரகிருதியென்று சொல்லப்படும். வித்தைக்கி விரோதியானபடியினலே அவித்தையென்று சொல்லப்படும். ஞானபின்னமானபடியினலே அக்ஞானமென்றுசொல்லப்படும். மறைப்பானபடியினலே தமசென்று சொல்லப்படும். இவைகளெல்லா மீசுரசத்தி யொன்றுதானே. சிலபேர் பெரியவாள் மாயையினுடைய அம்சம் பிரகிருதியென்று சொல்லுவார்கள். அவித்தை கருமமயமென்று வைஷ்ணுவாள் சொல்லுவார்கள். அக்ஞான மபாவரூப மித்தியா க்ஞானமென்று தார்க்கீகாள் சொல்லுவார்கள்.

அவித்தை மோகமயமென்று வேதாந்திகள் சொல்லுவார்கள். சிலபேர் வாசனமயமாகியும், கருமமய மாகியும் மோகமயமாகியும் அவித்தை யிருக்கமென்று சொல்லுவார்கள். சத்துவப்பிரதானமா யிருக்கிற பிரகிருதி மாயையென்றுசொல்லப்படு மது ஈசுரவுபாதி. மலினசத்துவப்பிரதானமா யிருக்கிற பிரகிருதி அவித்தையென்று சொல்லப்படு மது ஜீவோபாதி. தமப்பிரதானமா யிருக்கிற பிரகிருதியைப் பிரகிருதியென்று சொல்லப்படு மது கூடஸ்தருபாதி. சிலபேரவித்தை ஜீவோபாதி யென்றும், மாயை ஈசுரோபாதி யென்றும், சொல்லுவார்கள். சிலபேரவித்தை ஈசுரோபாதியென்றும், அந்தக்கரணம் ஜீவோபாதியென்றுஞ் சொல்லுவார்கள். மாயை யவிதஙைகளுக்குப் பேதபக்ஷத்திலே யவித்தைதானே ஜீவோபாதியென்றும், மா

யை ஈசுரோபாதியென்றுஞ் சொல்லுவார்கள். காரணவுபாதிகரீசுரரென்றும், காரியவுபாதிகன் ஜீவனென்கிறபக்ஷத்திலே பிரகிருதி முதலாய்ப் பிருதுவிபரியந்த மீசுரவுபாதி. சூக்ஷுமதேகம் ஜீவோபாதியென்று சொல்லுவார்கள்.சிலபேர் பஞ்சபூதங்கள்தானே பிரகிருதியென்றுசொல்லுவார்கள்.பிருதுவி, அப்பு, தேயுவு, இந்தமூன்றுதானேபிரகிருதி; வேறே பிரகிருதியில்லையென்றுஞ் சொல்லுவார்கள். பஞ்சபூதங்களைக்காட்டிலும் விலக்ஷணமாய்ப்பிரகிருதிதத்துவமுண்டென்று சகலவேதாந்தங்களுடைய சித்தாந்தம். ஆத்மாத்தானே யுபாதானகாரண மாத்மாத்தானே நிமித்த காரணமென்று சகலவேதாந்தங்களுஞ்சொல்லுகின்றன. அவித்தைக்கிலக்ஷணஞ்சொல்லுகிறோம். அவித்தை திரிகுணாத்மகம், அநிர்வசநீயம், அனாதி, பிரகிருதியென்றும், ஞானத்தினாலேநசிக்கத்தக்கதென்றுஞ் சொல்லப்படும். வைஷ்ணுவாள் காலம் நித்தியம், புருஷனித்தியம், பிரகிருதி நித்தியம், ஈசுரர் நித்தியர், இந்தநாலுமொன்றுக்கொன்று பின்னங்களென்று சொல்லுவார்கள். போதமயராயிருக்கிற பரமாத்மா சுத்தசைதன்னியமயர். அனாதிமாயையு மனாதி. மாயை திரிகுணாத்மகம், அநிர்வசநீயம். ஈசுரன் அனாதி. அவித்தையாகற்பிதமாயிருக்கிற ஜீவனு மனாதி. ஜீவீசுரானுக்குப் பேதமுமனாதி. கருமமு மனாதி. ஆத்மாவுக்கு மவித்தைக்குஞ் சம்பந்த மனாதி. சம்பந்தமாவதேதென்றால்? அத்தியாசசம்பந்தம். போதமயராயிருக்கிற வாத்மா அவித்தைக்குஅதிஷ்டானம். இப்படியிருக்கிற பிரமத்தை யவித்தை மறைக்குமென்று சொல்லுவார்கள். சிலபேர்பெரியவாள்ஜீவாசிரய அவித்தை ஆத்மாவுக்குத்தானீசுரனென்கிறபாவத்தைத் தெரியவொட்டாமல் மறைக்குமென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் அவித்

ணை ஈசுராதீனந்தானே; ஜீவனுக் கொன்றுந் தெரியாமல் மறைத்துமயக்கத்தைக்கொடுக்குமென்று சொல்லுவார்கள்.

அவித்தையாவதேதென்றால்? அவித்தையென்றும், அத்தியாசமென்றும், பிராந்தியென்றும், மோகமென்று மேக வாக்கியந்தானே. அவித்தைக்கிலக்ஷண மொருவஸ்துவை மற்றொருவஸ்துவாகக் காணல்; ஒரு வஸ்துவினுடைய தருமத்தை மற்றொருவஸ்துவினுடைய தருமமாக ஆரோபிக்கிறது. அவித்தையினுடைய லக்ஷணம் முன்னமே சிஷியப்பிரகரணத்திற் சொல்லியிருக்கிறோம். அவித்தையாகாரஞ் சொல்லுகிறோம். முன்னமுன்னே போதமயராயிருக்கிற ஆத்மாவுக்கு அந்தகரணத்திலே நாமென்கிற வத்தியாசம். அதின்பிறகு இச்சிக்கிறேன், பண்ணுகிறேனென்று அந்தக்கரண தருமவத்தியாசம். அதின்பிறகு ஸ்தூலதேகத்திலே நானென்கிற அத்தியாசம். அதின் பிறகு நான் மனுஷன், நான் பருத்தேன், நானிளைத்தேனென்கிற யித்தியாதி ஸ்தூலதேக தருமவத்தியாசம். அதின்பிறகு பிராணனிலே நானென்கிற அத்தியாசம். அதின்பிறகு யெனக்குப்பசிக்கிற தெனக்குத்தாகிக்கிறதென்று பிராணதரும அத்தியாசம். அதின் பிறகு இந்திரியங்களில் நானென்கிற அத்தியாசம். அதின்பிறகு நான் குருடன், செவுடன், ஊமையென்கிற வித்திரியதரும அத்தியாசம். அதின்பிறகு புத்திரமித்திராதி பாகிய பதார்த்தத்திலே நானென்கிற அத்தியாசம். அதின்பிறகுபுத்திரமித்திராதிகளுக்கு நாசம்விருத்திகள் வருகிறபோது தனக்குத்தானே நாசம் விருத்தி வந்ததென்று பாகியதரும அத்தியாசம். இந்த வத்தியாச மனாதியநிர்வசநீயம். இந்த வத்தியாசமயமாயிருக்கிற வவித்தை

பிரமவித்தையினாலே போகவேண்டும். இருட்டு, தேயுசுனாலே போகிறதுபோலே இந்த வவித்தைசகலபிராணிசித்தம். பிரமவித்தை வேதாந்த சிரவணத்தினாலேயும், குருவுபதேசத்தினாலேயும், ஆத்மனாத்மா விவேகத்தினாலேயும், வரவேண்டும். தத்துவ விவேகத்தினாலே யறிவுவரவேண்டுமென்று சாங்கியாள் சொல்லுவார்கள். வேதாந்திகள் வேதாந்த சிரவணத்தினாலேதானே யாத்மக்ஞானம் வரவேணடுமென்று சொல்லுவார்கன்.

பதினாறுவது மாயா அவித்தையா நிருபணப்பிரகரணம்

முற்றிற்று.

பதினேழாவது ஆவிருத்திமார்க்கப்பிரகரணம்.

:0:

சுமேருவென்றும், மஹாமேருவென்றும், மேமாத்திரியென்றும், மிரத்தினசாணுவென்றும், சுராலயமென்றும், மஹாமேருபருவதத்துக்குப் பெயர். மஹாமேரு பருவதம் வடக்குத்திக்கிலே லக்ஷயோசனை வுன்னதங் கனகமயம். தேவதைகளுடைய பட்டணங்களுக்கெல்லா மாலய மந்தப்பருவதத்தை ஆதித்தாதி நவக்கிரகாதி தேவதைகளும் அசுபதிமுதலான சகல நட்சேத்திரங்களு மந்தப்பருவதத்தைப் பிரதக்ஷணமாகச் சுற்றி வருகிறார்களென்று சாஸ்திரம். அதின் கொடுமுடியிலே துருவச்சக்கரம், மேற்றளத்திலே தேவலோகங்கள், மத்தியிலே பிரமபட்டணம், கிழக்கே இந்திரபட்டணம், அக்கினிமூலையி லக்கினிதேவபட்டணம், தென்பாகத்திலே யமனுடைய பட்டணம், நிருதிமூலையில்

நிருதிதேவதை பட்டணம், மேல்பக்கத்திலே வருணன பட்டணம், வாயுமூலையில் வாயுபட்டணம், வடபக்கத்திலே குபேர னளகாபுரிப் பட்டணம், ஈசானிய மூலையிலே சிவ புரம், இவைகளிப்போ தேவலோகமென்று பெயர். தேவ தைக ளெல்லாரு மாசிருப்பாக விருக்கிறவிடம், ஆகாசத்தி லே விமானங்களோடே சஞ்சார மது நட்சேத்திரமண்டல மென்று சொல்லப்படும். தேவதைகளுடைய விமானகாந் திகள் நட்சேத்திரமென்று சொல்லப்படும். பக்ஷிக ளாகா சத்திலே சஞ்சரித்து மரத்திலே வந்திருக்கிறதுபோலே தேவதைகள் சகலரும் புண்ணியபுருஷா ளானபடியினாலே; தேவதைகள் நட்சேத்திரரூபங்களாக ஆகாசத்திலே சஞ்ச ரிப்பார்கள். மஹாமேருவில் யவரவர்பட்டணங்களிலே குடி யிருப்பு. நட்சேத்திரவிமானங்களிலே அக்ஷரஸ்திக்கள் நட நாடகசாலைகள் சகலபாக்கியங்களு மவரவர்களுக்குப் பூர ணமாகவிருக்கும். மேகமண்டலபரியந்தம் பூலோகமென்று பெயர். மேகமண்டலத்துக்குமேற் சூரியமண்டலபரியந்தம் அந்தரிக்ஷலோகமென்று பெயர். சூரியமண்டலத்துக்குமே லே லக்ஷம்யோசனை யுன்னிதஞ்சந்திரமண்டலம். அதற்கு மேல்லக்ஷம்யோசனைதூரஞ்செவ்வாய்மண்டலம். அதற்கு மேல் லக்ஷம்யோசனைதூரம்புதன்மண்டலம். அதற்குமேல் லக்ஷம் யோசனைதூரம்வியாழபகவான்மண்டலம். அதற்கு மேல் லக்ஷம்யோசனைதூரஞ் சுக்கிரமண்டலம். அதற்கு மேல் லக்ஷம்யோசனைதூரஞ் சனிமண்டலம். அதற்குமேல் லக்ஷம் யோசனைதூரஞ் சத்தரிஷிகள்மண்டலம். அப்பால் லக்ஷம்யோசனைதூரந் துருவமண்மடலம். சூரியமண்டலந் தொடுத்துத் துருவமண்டலபரியந்தஞ் சுவர்க்கலோகமென் று சொல்லப்படும்.

அதற்குமேல்மஹாலோகம்,அதற்குமேல்ஜனலோகம், அப்பாற் றபோலோகம், அப்பாற்சத்தியலோகமாகியபிரம லோகம், துருவமண்டலத்துக் கப்பாற் பிரமலோகபரியந்த மவடத்திலே போனபேர்களுக்கும், பிரமவுபாசகாளுக்கும், யோகசித்தாளா யிருக்கிறபேர்களுக்கும், தபசித்தாளா யி ருக்கிறபேர்களுக்கும், பிரமவுபாசகாளாயிருக்கிற சந்நியாசி களுக்கும், பிரமவுபாசகாளாயிருக்கிற பிரமசாரிகள், கிரகஸ் தாள்,வானப்பிரஸ்தாளிவர்களெல்லாந்திரும்பயிவடத்திலே வருத்தில்லை. பிரமவுபாசகாளாயிருக்கிறபேருக் குபாசனு மார்க்கத்தினுலே யுத்தராயணத்திலே மரணத்தையடைந்து பிரமலோகப்பிராப்தி; அவர்களுக்குத்திரும்ப யிங்கேவருத் தில்லை. ஞானிகளாக விருக்கிற பேர்களுக்கு யிவட்த்திலே தானே முக்தி; லோகாந்தரத்திலே கமனுகமனமில்லையெ ன்று வேதாந்த சித்தாந்தம். கங்காதேவியானவள் சுவர்க்க லோகமுதலாய்ப் பிரமலோகபரியந்தம் சமஸ்ததேவலோக ங்களிலேயும் நதிரூபமாகச் சஞ்சரிப்பள். பூமி, அந்தரிக்ஷ, சுவ ர்க்க, மூன்றுலோகத்திலேயுஞ் சஞ்சரிக்கிறபடியினுலே யந் தக் கங்காதேவிக்குத் திரிபதகையென்றும் பெயராயிற்று. தேவநதியென்றும், தேவசிந்து வென்றும், பேராயிற்று. தேவலோகமாகிய மஹாமேரு பருவதத்திலே காமதேனு, கற்பகவிருக்ஷம், சிந்தாமணி, சகல பாக்கியங்களு முண்டு. அமிர்தமதனத்திலே பிறந்த அக்ஷரஸ்திரீகள, சிரோட்டைக ளாயறுபதுகோடிகள்; அவர்களுக்குப் பரிசாராதிகளாயிரு க்கிற அக்ஷரஸதிரீகளுக்கு யெண்ணிக்கை யில்லை. சகல அக்ஷரஸ்திரீகளுக்கும் பிரதானிகளாய் ரம்பை, ஊருவசி, திலோத்தமை, மேனகை, புஞ்சிகை, விதலை, இவர்கள் முத லானபேர் பிரதானிகள். சகலஅக்ஷரஸ்திரீகளுந்தேவதாசிக

ளொருவருக்கும் பாரியல்ல. தேவதைகளினாலேயும், புண்ணிய புருஷ தேவதைகளினாலேயும், அக்ஷரஸ்திரீகள் போகிக்கப்படுவார்கள். தேவதைகளாகிய அவாளவாளுக்குத் தனித்தனியே பாரிகளுண்டு. தேவலோகத்திலே யனந்த கோடி திவ்விய விருக்ஷங்களுண்டு. அந்தத்திவ்விய விருக்ஷங்கள்:—திவ்விய வஸ்திரங்களை, திவவியவலங்காரங்களை, திவ்விய சந்தனங்களை, திவ்விய பூஷணங்களை, திவ்வியபுஷ்பங்களை, திவ்வியரசங்களை, திவ்வியபலங்களை, திவ்வியங்களாயிருக்கிற வமிர்தங்களை, திவ்வியங்களா யிருக்கிற வஸ்துக்களை, திவ்வியங்களா யிருக்கிற ரசவஸ்துக்களை, திவ்வியங்களாயிருக்கிற அன்ன பானாதிகளை யிவைமுதலாகியகேட்ட வஸ்துக்களெல்லாங் கொடுக்கும். சுவர்க்க லோகத்திலே சுகசவுக்கியப் பிரதானமாகத்தானே யிருக்கும். சுவர்க்க லோகத்திலே யிந்திர னதிகாரி அவருடைய கொலுவுக்குச் சுவர்க்கலோகத்திலே யிருக்கிற பேர்களெல்லாம் போய் வர வேண்டும். குபேரனுடைய பட்டணத்திலே நவநிதிகளுமுண்டு; சகல பாக்கியமு நிறைந்திருக்கும். புண்ணிய புருஷர், தேவதைகளெல்லாரும், தேவலோகத்திலேயிருக்கிற தேவதைகளும், அக்ஷரஸ்திரீகளோடேகூட சகல போக போக்கியங்களையு மநுபவித்துக்கொண்டு சுகப்பிரதானராயிருப்பார்கள். பூலோகத்திலே பாரதபூமியிலே யாதொருத்தர் சுவர்க்ககாமிகளா யாகங்களைப் பண்ணுகிறார்களோ; அவர்களெல்லாஞ் சுவர்க்கலோகத்துக்குப்போவார்கள். யாதொருத்தர் சுவர்க்ககாமிகளாய்ச் சிலர்களா யிருக்கிறார்களோ; அவர்களுக்கெல்லாஞ் சுவர்க்கபூமி. யாதொருத்தர் சுவர்க்க காமிகளாய்த்தவசுகளைப்பண்ணுகிறார்களோ; அவர்களுக்கெல்லாஞ் சுவர்க்கபோகம். இந்தப் பூலோகத்தி

லே சுவர்க்கம் வேண்டுமென்று அக்கினிஹோத்திரிகள், இஷ்ட பசுபந் தாதிகளைப்பண்ணிச் சுவர்க்கதை யடைவர்கள். பூலோகத்திலேசுவர்க்கம் வேண்டுமென்று அக்கினிஷ்டோம், அதிராத்திரம், வாசபேயம், இவைகள்முதலாகிய கிறுத்துகளைப்பண்ணுகிறார்களோ; அவர்களெல்லாஞ்சுவர்க்கத்தை யடைவார்கள். யாதொருத்தர் சவர்க்கம்வேண்டுமென்று அருத்தங்களைக்கொடுத்து யெக்கியங்களைப் பண்ணி வைக்கிறார்களோ; அவர்களெல்லாஞ் சுவர்க்கத்தை யடைவார்கள். பூலோகத்திலே யாதொருத்தர் சுவர்க்கம் வேண்டுமென்று சாந்திராயண விரதம், கிருச்சிர விரதம், மாதவுபவாசம், பக்ஷவுபவாசம், வாரவிரதங்கள், நட்சேத்திர விரதங்கள், திதிவிரதங்களிவைகளை யாசரிக்கிறார்களோ; அவர்களெல்லாஞ் சுவர்க்கத்தை யடைவார்கள். யாதொருத்தர்சுவர்க்கம் வேண்டுமென்றுபூலோகத்திலேஜலபானம், வாயுபக்ஷணம், சருகு பக்ஷணம், பலங்களைப் பக்ஷிக்கிறது, கந்தமூல பலங்களைப் பக்ஷிக்கிறது, வனத்து நெல்லைப் பிறக்கிப் பக்ஷிக்கிறது, இந்தப்படி வனங்களிலே யிருந்துகொண்டு தபசிகளாய்ச் சுவர்க்கம்வேண்டுமென்று பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்துகொண்டு யாதொருத்தர் தபசுகளைப் பண்ணுகிறார்களோ; அவர்களெல்லாஞ் சுவர்க்கத்தை யடைவார்கள். யாதொருத்தர் சுவர்க்கம் வேண்டுமென்றுதீர்த்தயாத்திரைகளைப் பண்ணுகிறார்களோ; பூப்பிரதக்ஷணம் பண்ணுகிறார்களோ; ஸ்தலங்களிலே போய்ச் சேவிக்கிறார்களோ; ஸ்தலவாசங்களைப் பண்ணுகிறார்களோ; அவர்களெல்லாஞ்சுவர்க்கத்தை யடைவார்கள்.

யாதொருத்தர் சுவர்க்ககாமிகளாய்ச் சோடச மஹா தானங்களைப் பண்ணுகிறார்களோ; யாதொருத்தர் கஜதான

ங்களை, அசுவதானங்களைப் பண்ணுகிறுர்களோ; யாதொருத்தர் கோதானங்களைப்பண்ணுகிறுர்களோ; யாதொருத்தர் ஆட்டுத்தானங்களைப் பண்ணுகிறுர்களோ; யாதொருத்தர் பூதானங்களைப்பண்ணுகிறுர்களோ; யாதொருத்தர் கன்னிகாதானம்.உபநயனதானம், பசுக்கண்போடுஞ்சமையத்திற் கன்றின்தலை வெளியிலே வந்தவுடனேகொடுக்கிற தானம், பல்லக்கு, ரதவாகனம், மெருது, மெத்தை, ஆசனங்கள், வஸ்திரதானங்கள், இரணியாபரணதானங்கள், சில பாத்திரதானங்கள், அன்னதானங்கள், சத்திரங்கள் சாலைகள், ராத்திரிச் சத்திரங்கள், ஜலதானங்கள், தோப்புகள், உத்தியானவனங்கள், நந்தவனங்கள், வாவிகூபதடாகாதிகள் வெட்டிவைக்க, ஆறுகளை யுண்டாக்க, அக்கிரகாரங்களைப் பண்ண, சுவர்க்கம் வேண்டுமென்று சிவன் கோயிலையும் விஷ்ணுகோயிலையு மியற்றிப் பூசைசெய்விக்கவும், பாதைமார்க்கத்திலே மடங்கள், மண்டபங்கள் கட்டிவைக்க, வருஷாசனஞ் சர்வமானியமாகக் கொடுக்க, பிராமணுளைக் கோக்களை ரக்ஷிக்க, சரணமென்றடைந்த துக்கிகள் ரோகிகள் தரித்திரர்ள் அனுதாள் யிவர்களையெல்லாமிரக்ஷித்துச் சுவர்க்கம் வேண்டுமென்கிறபேர்கள் சுவர்க்கத்தை யடைவார்கள். யாதொத்தர் யுத்தகளத்திலே முன் வைத்தகால் பின்வாங்காமல் யுத்தம்பண்ணி மரணமாகிறுகளோ; அவர்களுஞ் சுவர்க்கத்தை யடைவார்கள். சுவர்க்ககாமிகள் யாதொருத்தர் தீர்த்தக்கரையிற் செய்கிற திதி திரவியத்தாலாவது, அன்னத்தாலாவது, திதி பண்ணுதலாகிய நித்திய நைமித்திய சிராத்தங்கள், மாத்தியானகாலத்திலே யாதித்தனைப் பார்த்து மந்திரஞ்செபித்தல், அவுபாசனம், தேவபூசை, வைசிய தேவம், இவைகளைப் பண்ணுகிறுர்களோ;

யாதொரு ஸ்திரீகள் பதிவிருதா தருமத்துடனே பத்தாவோடு மனபூரணமாகத் திரிகரண சுத்தியா யுடன்கட்டையேறுகிறார்களோ; யாதொருத்தர் யாகம்பண்ணின பிற்பாடு செய்கிற அக்கினி ஹோத்திராதிகள், யாகம் பண்ணாமற் செய்கிற அவுபாசனாதிகள், நித்திய கருமங்களை, வர்ணாச்சிரமதருமங்களை,சுவர்க்ககாமிகளாய்ப் பண்ணுகிறார்களோ; அவர்களெல்லாஞ் சுவர்க்கத்தை யடைவார்கள். சுவர்க்கத்திலே போய் அக்ஷரஸதிரீகளோடேகூட சகல போகபாக்கியங்களையு மநுபவிப்பார்கள். அப்படிச் சுவர்க்கத்திலேயிருக்கிறபோது அவனவன் பண்ணிய புண்ணியத்துக்குத் தக்கதாக போகபோக்கிய மநுபவிப்பன், சிலபேருக்கு ஆயிரம் அக்ஷரஸ்திரீகள், சிலபேருக்கு அஞ்ஞூறு, சிலபேருக்கன்பது, சிலபேருக்குப் பத்து, சிலபேருக்கைந்து, சிலபேருக்கொன்று, இந்தப்படிக்கி யவனவன் பண்ணின புண்ணியத்துக்குத்தக்கதாய் நிரம்ப நானுதிக்கமாகப் போகங்களுடைய யேற்றத்தாக்ஷி நடக்கும். அதுகளைக் கண்டு நமக்கிப்படி யில்லையே யென்று துக்க யேதுவாயிருக்கும். வெகுமான சமானமு நிரம்பவேற்றக்குறைச்சலா யிருக்கும். சிலபேருக் கிந்திரசபை,சிலபேருக்கியமசபை, சிலபேருக்குவர்ணசபை, சிலபேருக்குக் குபேரசபை, சிலபேருக்கு ரம்பை யூருவசி திலோத்தமை மேனகையாகிய பிரதானிகளாயிருக்கிற அக்ஷரஸ்திரீகள், இவர்களுடைய போகம், சிலபேருக்கு அப்பிரதானிகளா யிருக்கிற அக்ஷர ஸ்திரீகளுடைய போகம்;இவைகளை யெல்லாம்பார்த்துத்துக்கவேதுவாயிருக்கும்.சிலபேர் புண்ணியக்ஷமாய் விழுகிறபேரைப்பார்த்துத் துக்கவேதுவா யிருக்கும். நாம் புண்ணியக்ஷயமா யெப்போ பூமியிலே விழுவோமோ வென்று விசனத்தோடே கூடின

வர்களா யிருப்பார்கள். போகாதிசயங்களைப்பார்த்து நாம் பூமியிலே யிவர்களைப்போலே யெக்கியங்களைப் பண்ணுதே போனேம்! நாமிகுதியுந் தானங்களைப்பண்ணுதே போனேம்! நாமிகுதியுந் தவசுகளைப் பண்ணுதே போனேம்! நாமிகுதியும் புண்ணியங்களைப் பண்ணுதே போனேமென்று விசனப்படுவார்கள். ராக்ஷதாளு மசுராளும் வந் தடிக்கடி சுவர்க்கத்திலே பீடிப்பார்கள். அது வெல்லாந் துக்கவேதுவா யிருக்கும், நரகத்திலே கிடக்கிறபேரைச் சுவர்க்கத்திலே யிருக்கிற பேருக்குத் தெரியவரும். அவடத்திலே துக்க வேதுவா யிருக்கும். நாம் பூலோகத்திலே நித்திய பதத்துக்குச் சாதனத்தைப் பண்ணுதே போனேம்!ஞானப்பியாசங்களையும், யோகாப்பியாசங்களையும்,பிரமோபாசனைகளையும், பண்ணுதே போனேம்! அற்பசுகமாகிய வநித்தியசுவர்க்க பதத்தை விச்சித் தநித்தியபதத்தையடைந்தோமென்று விசனப்படுவார்கள். புண்ணியக்ஷயமாய் கீழேபோகிறேமென்று விசனத்தோடேகூடி யிருப்பார்கள். நித்தியங் கோடான கோடிபேர் சுவர்க்கத்துக்கு வருகிறபேர், சுவர்க்கத்திலே யிருந்து புண்ணிய க்ஷயமாய்ப் பூலோகத்துக்கு வருகிறபேர் கோடானகோடிபே ரிப்படி யிருக்கும் சுவர்க்கம். இப்படிப்பட்ட சுவர்க்கத்திலே அக்ஷரஸ்திரீகளோடேயும், திவ்யரதங்களோடேயும், திவ்வியாபரணங்கள், திவ்வியமாலைகள், திவ்விய வஸ்திரங்கள், திவ்விய கந்தங்கள், திவ்விய புஷ்பங்கள், கிரீடகுண்டலங்கள், அஸ்தாபரணங்கள், பதக்கங்கள், முத்துமாலைகள், சரப்பளிகள், திவ்விய சுவர்ண வரைஞாணும், திவ்யமோதிரங்களும், இவைகளினலே யலங்கிருதனய், திவ்விய ஸ்திரீகளோடே நடனாடகசாலை, நிருத்தம், வாத்தியஞ் சங்கீதபோகங்கள்,திவ்விய

ஸ்திரீகளோடே ஆலிங்கனுதிக்கிரீடாபோகங்கள்; அவாளோடே சல்லாபவுத்தரங்க ளந்தஸ்திரீகளாலே நிரம்ப வுபாசாரங்கள் பண்ணப்படுவன். இப்படிப்போக போக்கியங்களையநுபவித்துக்கொண் டிரவும் பகலுங் கூத்தும் பாட்டுமாய் ஸ்திரீகளோடேகூடி யிருப்பன். இப்படி யிருக்கிறபோது புண்ணிய க்ஷயம்வரும்; வந்தா லப்போது கழுத்திலே கிடக்கிற மாலைவாடும். மாலை வாடினவுடனே தேவ தூதர்கள் தலைகீழாகப் பிடித்துத் தள்ளிவிடுவார்கள். சிலபேர் அவர்கள் தள்ளாம லிருந்தாலும் புண்ணிய க்ஷயமானவுடனே தான்றுனே தலைகீழாகவிழுவார்கள்.

சுவர்க்கலோகம் வாயுவினுலே கட்டப்பட்ட லோகம். அதுகடினமாகப் பூமிபோல புண்ணியவான்களைத் தரித்துக்கொண்டிருக்கும். புண்ணியக்ஷயமானவுடனே வாயு வெளியா யவனைத் தரியாமல் வெளிவாங்கிப்போம். புண்ணியபுருஷனுனவன் புண்ணியக்ஷயமானவுடனே வாயுவு நீக்கத்தினுலே கீழே விழுவன்; அப்போது பூலோகத்திலே நட்சேத்திரம் விழுந்ததென்று கண்ணுக்குத்தெரியவரும். விழுகிறவனுடைய நட்சேத்திரங்களாகிய சரீரம் ஆகாசவர்ணம் போலே உருகிப்போய் கீழே சூக்ஷுமமாக விழுவன். விழுகிறபோது சமுத்திரங்களிலாவது, நதிகளிலாவது, காடுகளிலாவது, பருவதங்களிலாவது, பூமியிலாவது, பயிராதிகளிலாவது, தடாகத்திலாவது, பூந்தோட்டங்களிலாவது, வாவிகூபாதிகளிலாவது, கருமானுசாரமாக விழுவன். இன்னவிடத்திலே விழுவனென்று நிட்சயமில்லை. விழுகிறபோது நல்லவாளிடத்திலேபோய்ப் பிறக்கவேண்டுமென்று பிராத்திப்பன்; அந்த நட்சேத்திர தேவசரீர முருகிப்போனபிறகு சூக்ஷுமதேகத்தோடே விழுவன். போனசொருபமாகத்

திரும்பவருவன். அந்தச்சூக்ஷுமதேகத்தோடே விழுந்து ஆகாசமாய்ப் போய்விடுவன்.

ஆகாசமாய்ப்போனபிறகு வாயுவாய்விடுவன். வாயுவானபிறகு தேயிசுவாவன். தேயிசுவானபிறகு புகையாவன். புகையானபிறகு மேகமாவன். மேகமானபிறகு நீருண்டமேகமாவன். அதின்பிறகு வருஷஜலமாய்ப் பூமியிலே விழுந்து நெல்லு, உளுந்து, பயறு, யெள்ளு, முதலான தானிய விசேஷங்கள் ஓசதிகள், விருக்ஷங்கள், சிறுகொம்பு, புல்லுப்பூடு, கொடி, காய், கிழங்கு, கந்தமூலபலாதி யன்னமயமாய்ப் போய்விடுவன். இவைகளிலே சம்பந்தமாத்திரமிந்தஜன்ம மவனுக்கில்லை. ஆனாலிந்த ஜன்மங்களாருக்கென்றவர:—பாவிகளாயிருக்கிறபேர் நரகங்களை யநுபவித்துப் பூலோகத்திலேவந்து பாவஷேசத்தினாலே யோஷதிகள், பயிர்கள், மரங்கள், புல்லுப்பூடு, செடி, கொடி, நவதானியங்க ளிந்த ஜன்மங்களை யெடுப்பார்கள். அந்தஜன்மங்களோடே கூடி யதிலுண்டாகிய சுகதுக்கங்களை யநுபவிப்பார்கள். சுவர்க்கத்திலேயிருந்து வருகிறபே ரிந்தஓசதிகள், பயிர்கள், புல்லுப்பூடு, செடி, கொடி, நவதானிய மிவைகள் முதலாகிய அன்னமார்க்கமாக மனுஷதேகத்திலே வந்து, மனுஷ ஜன்மத்தை யெடுப்பார்கள். இவைகளிலே சம்பந்தமாத்திரம், அவர்களுக்கிந்த ஜன்மங்களில்லை. இதிலே யுண்டாகிய சுகதுக்கங்களுமில்லை. ஆகாசமுதலா யோஷதி யன்னம் புருஷதேகங்களிலே வருகிறது. இவைகளெல்லாம் புண்ணியபுருஷாள் சுவர்க்கத்திலே யிருந்து வருகிற மார்க்கமே யல்லாமற் பாவிகளைப்போலே யிந்தஜன்மங்க ளவர்களெடுக்கிறதில்லை. சுகிர்திகளா யிருக்கிறவர்கள், பிராமண க்ஷத்திரிய ஜன்மங்களை யெடுப்பார்கள். பாவிகளாயிருக்கிற

பேர் தாபரஜன்மங்களை, பசு பக்ஷி மிருகாதி ஜன்மங்களை யெடுத்துப் பிறகு மனுஷஜன்மங்களிலே சண்டாளாதி சங்கர ஜன்மங்களை யெடுத்துப் பிறகு புண்ணியஜன்மம் வரும். புண்ணியவான்களா யிருக்கிறபேர் புண்ணிய ஜன்மங்களை யெடுப்பார்கள். சுவர்க்கத்திலே யிருந்து வருகிறபேர் தருமிஷ்டாளாய்ப் பிறந்து போகபாக்கியமுதலிய ஐசுவரியங்களுடனே கூடித் திரும்பவும் வெகு புண்ணியங்களைப்பண்ணியடிக்கடி சுவர்க்கத்துக்குப்போ யடிக்கடி மனுஷலோகத்திலே வருவார்களென்று சாஸ்திர சித்தாந்தம். சிலபே ரன்னமயமா யெக்கிய வோமத்திரவியங்களாகிய அவிசுமுதலானதாய்விடுவன். அக்கினியி லோமபாவத்தை யடைந்து அமிர்தரூபியாய்த் தேவதைகளுக் காகாரமாய்த் தேவதாதிருப்தி பண்ணிவைத் தோமம்பண்ணுகிற விசமானுக் கிஷ்டபலத்தைக் கொடுத் தாதித்தரையடைந் ததின்பிறகுமேகமண்டலத்திலே வந்து வருஷ்ஜலமாய்ப் பூமியிலே வந்து அன்னபானரூபமாய்மனுஷாளிடத்திலே கெற்பத்திலேவருவன். சிலபேர் பெரியவாள் ஆதித்தபகவான் தம்முடைய கிரணங்களினாலே பூலோகத்திலேயுள்ள ஜலங்களையெல்லாங் கிரணங்களினாலே கிரகித்து மேகங்களிடத்திலேகொடுப்பர்;மேகங்கள் வருஷஜலரூபமாய்ப் பூலோகத்திலே வந்து அன்னபானரூபமாய் ஜீவனாவார்களென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் மேகங்கள்தானே சமுத்திரத்திலே யிருக்கிற ஜலங்களைக் கிரகித்து பூலோகத்திலே வருஷிக்கும் வருஷ ஜலரூபமாய்ப் பூலோகத்திலே வந்து அன்னபானரூபமாய்ப் பிராணியாவனென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் அக்கினியிலே ஓமம்பண்ணின அவிசுகளாகிய யன்னங்கள் ரசரூபமாக ஆதித்தரையடையு

மார்த்தரிடத்திலே நின்றும்மேகத்தின்வழியாகவருஷஜல மார்க்கமாய்ப் பூலோகத்திலேவந்து அன்னபானரூபமாகப் பிராணியாவனென்று சொல்லுவார்கள்.

மேகங்கள் வருஷிகிறபோது சமுத்திரங்களிலே வருஷித்து உபயோகமில்லாமல் வியர்த்தமாக்ப் போய்விடும்; அஃதன்றியிற் சமுத்திரங்களிலே யிருக்கிற செந்துக்கள் பக்ஷிக்கும். இந்த ஜலரூபியா யிருக்கிற வாத்மாவானவன் கருமப்படிக்கிச் சலசெந்துக்களுக்கு மாகாரமாய்ப் போய்ச் சமுத்திரஜலசெந்துவாய்ப்போய்விடுவன். பருவதங்களிலே வருஷித்தா லுபயோக மில்லாமல் வியர்த்தமாய்ப்போவன். பருவத செந்துக்கள் பானம் பண்ணின லிவ னந்தச்செந்துவாய்விடுவன். பருவதத்திலே யிருந்து நதிப்பிரவாகங்களினலே வந்து பயிர்களோடேகூடின லப்பயிராய்ப்போவன். காடுகளிலே வருஷித்தால் ஓசதிகள், சிறுசெடி, கொடி, புல்லுப்பூடு, மரங்கள், விருக்ஷங்களாய்ப் போய்விடுவன். சிங்க வியாக்கிரமுதலான மிருகங்கள், கஜ அசுவங்கள், கர்த்தபங்கள், காட்டுப்பன்றிகள், ஊர்ப்பன்றிகள், மயிடங்கள், கொக்குகளிவைகள் முதலாகிய செந்துக்கள் பானம்பண்ணின லந்தந்தக்கருமப்படிக்கிச் செந்துவாய் விடுவன். உழுகிற பூமியிலே வருஷித்தால் நெல்முதலான நவதானியப்பயிர்களாவன். உழுகிறபூமியில்லாதவிடத்திலே வருஷித்தால் புல்லுக்களாகவும், செடிகொடியாகவும், போய்விடுவன். உவர்ப்பூமியிலே விழுந்தால் வியர்த்தமாய்ப் போய்விடுவன். வாவிகூபதடாகங்களிலேவருஷித்தாற் றடாகஜலமாய்ப்போய்விடுவன். பூமியிலே பயிராய் முளைத்து நஞ்சை புஞ்சையிலே பயிராய்த் தண்ணீரில்லாமல் முளை கருகப்பட்டுப் போனலும், கதிர் வாங்கியும், கதிர்வாங்கிறதற்கு முன்னுதாக மணிபிடியாமற்

பட்டுப்போனாலும், வியர்த்தமாய்ப்போய் ஜன்மம் வருகிற துகடினம். பயிர்களாய்க் கீரைகள் கறிகளாய்ப் பாகப்பட்டு மனுஷாளிடங்களிலே வருவன். கர்மப்படிக் கிந்தபதார்த்தங்களை யாரார் பக்ஷிக்கிறார்களோ; அந்த வயிற்றிலே போய் விடுவன்.

இன்னஞ்சொல்லுகிறோம். நெல்லுப்பயிராய்விளைந்துதானியமாய்க்கிரகத்திலே வந்து விரையாயுலர்த்தினால் வயலிலே போய்முளைத்துப் பயிராய்த்திரும்பவரவேண்டும். அந்தத்தானியங்களைக் குரிவி கொறித்தாற் குருவியாய்ப்போவன். காக்கை கொறித்தாற் காக்காயாய்ப் போவன். எந்தப்பக்ஷி பக்ஷிக்கிறதோ வந்தப்பக்ஷியாய்ப் போய்விடுவன். பசுக்கள், மயிடங்கள், கர்த்தபங்கள், அசுவங்களாகிய இவைகளந்தத்தானியங்களைப் பக்ஷித்தாலவைகளுடையவயிற்றிலேபோயந்த ஜன்ம மாய்விடுவன். அந்தத் தானியங்களைச் சண்டாளன் கொண்டுபோய்ப்பக்ஷித்தாற்சண்டாளனாகப்போய்விடுவன். துலுக்கன் பக்ஷித்தாற் றுலுக்கனாய்ப் போய்விடுவன். சூத்திரன், வைசியன், க்ஷத்திரியன், பிராமண னிவர்களிலேயார் பக்ஷித்தார்களோவவர்களாய்ப்போய்விடுவன். சுவானங்கள், மாற்சாலங்கள், மூஷிகைமுதலானதுகள், பக்ஷித்தா லந்தந்த ஜன்மமாய்ப் போய்விடுவன். அன்னபான ரூபியாயிருக்கிற விந்தஜீவனை யார் பக்ஷித்தார்களோ; அந்த ஜன்மமாய்ப் போய்விடுவன். அன்னபானங்களைப் பாலாளாகிய குழந்தைகள் பக்ஷித்தால் வியர்த்தந்தானே. கன்னிகைகள், தூர மன்றியிலே யிருக்கிற ஸ்திரீகள், கெற்பணிகளா யிருக்கிற பேர்கள், மலடிகளா யிருக்கிறபேர்கள், விருத்தஸ்திரீகள், அமங்கலிகள், பக்ஷித்தால் வியர்த்தந்தானே. பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, விருத்தன், ரோகிகள், இந்திரி

யமில்லாதவன், ஸ்திரீயில்லாதே யிருக்கிறவன், மலடன், நபுஞ்சகன், யோகியாயிருக்கிறவன், தபசியா யிருக்கிற பேர்கள், பக்ஷித்தால் வியர்த்தந்தானே. ஸ்திரீபுருஷாளிரு வரும் பரிபக்குவங்களாகவிருந் திரண்டுபேரு மன்னபான ங்களைப் பக்ஷித்தா லிரண்டுபேர்களுடைய தேகத்திலே போய் முந்திச் சுரோணிதமாய்ப் பரிணமிப்பன். புருஷ னுடைய தேகத்திலே போயிருந்த சுரோணிதம் பிறகு சுக் கிலமாய்ப் பரிணமிக்கும். புருஷனுடையதேகத்திலே சுக்கி லரூபமாக விருப்பன்.

இவன் காமாதுரனு யீனயோனிகளிலேயும், சூத்திர ஸ்திரீகளிடத்திலேயும், தாசிகளிடங்களிலேயும், பரஸ்திரீக ளிடங்களிலேயும், போய்க் கூடி யிந்திரியங்களைவிட்டானே யானு லந்தந்த ஜன்மங்களிலே பிறப்பாய்ப்போவன். கெற் பணியிடத்திலே போனுனேயானுல் வியர்த்தமாய்ப்போம். ஸ்திரீகளுக்கு ருதுகாலமாகிய பதினாறுநாளுந் தப்பிக் கூடி னுனேயானுல் வியர்த்தமாய்ப்போவன். ரோகாதிஸ்திரீகள், மலடி, அன்பதுவயதுக்குமேல் ருதுகாலமன்றியிலே யிருக் கிற ஸ்திரீகள், விறுத்தைகளாகவிருக்கிற ஸ்திரீக ளிவர்க ளுடனே கூடினுல் வியர்த்தந்தானே. சொப்பனத்திலே யிந் திரியம்விட்டால் வியர்த்தந்தானே. பூமியிலே, ஜலத்திலே, வஸ்திரங்களிலே, இந்திரியம் விட்டானுனல் வியர்த்தந்தா னே. பசு, அசுவம், கழுதை, ஒட்டகம், அசம், புருஷாள், புருஷர்களுடனே கூடுகிற இதுமுதலானவைகளிலே யிந் திரியம் விட்டானுனல் வியர்த்தந்தானே. அத்தையாகிற வள், தகப்பனுடனேகூடப் பிறந்தவள், அம்மாமியாகிறவள், அம்மானுடைய ஸ்திரீ, பெண்கொடுத்த மாமியார், தங்கை, தமக்கை, புத்திரி, சிறியதாயார், பெரியதாயார், குருஸ்திரீ,

மாதா, ராஜபத்தினி, தமையன்ஸ்திரீ, இவர்களுடனே கூடி மைதுனம்பண்ணினுனேயானுலுடனேமஹாபாவியாயதோ கதியாய்ப்போய்விடுவன். தன்னுடைய ஸ்திரீயாயிருக்கிற வளுக்கு ருதுகாலமாயிருந்து பதினுறுநாளைக்குள்ளாக அவளுடனே கூடி யோனியிலே விந்திரியம்விட்டானுனு லிவன் கருமப்படிக்கி அவளுடைய கெற்பகோளகத்திலே பிரதமவிந்துபோய்க் கூடித் தெய்வயோகத்தினுலே யதிஷ்டவசத்தினுலே சுக்கிலசுரோணித மிரண்டுமொன்ருகக்கூடும். ஸ்திரீபுருஷாளிரண்டுபேருக்கும் ரோகமில்லாதிருந்தா லிரண்டுதாதுக்களு மொன்ருகக்கூடிக் கெற்பந்தரிக்கும். ரோகத்துடனே கூடியிருந்தால் வியர்த்தமாய்ப்போய்விடும். பாலிலேயுறைமோருகுத்தினுற்போலேபுருஷனுடையசொற்பவிந்து சுரோணிதப்பையினுள்ளே விழுந்து சுரோணிதத்துடனேகலந்து பால் தயிரானுற்போல கெற்பபிண்டமாம். அந்தக்கெற்பமொருமாதங் குழம்பாயிருக்கும்:—அப்போது மாதாவு மிவன் கெற்பத்திலே வந்திருக்கிறதை யறியாள்; பிதாவுமறியான்: அந்தக் கெற்பகோளகத்திலே யிருக்கிற ஜீவனுமறியாது. அப்போது சர்வக்ஞராகவிருக்கிற வீசுரன் சுக்கில சுரோணிதங்க ளிரண்டையு மொன்ருகச்சேர்த் துருவாகப்பண்ணுவாரென்று பெரியவாள் சொல்லுவார்கள். அஃதெப்படியென்ருல்? ருதுகாலத்திலே ஸ்திரீ புருஷாள் கூடுகிறபோது சுக்கிலசுரோணிதங்களை யொன்ருகக்கூட்டிச் சரீரமுண்டாகிறதற்கு ஈசுரரானவர் பஞ்சமஹாபூதங்களைச் சுக்கிலசுரோணிதங்களுடனே கூட்டி யொன்ருகக் கலப்பரென்று சொல்லுவார்கள். இரண்டாமாதங் கெற்பவாயுவும், சாடராக்கினியும், பட்டுச் சுக்கிலசுரோணித மிறுகும்; பின் மாமிசபிண்டமாம். மூன்ருமாதம் விருத்தி

யடையும், கால் கை யவயவங்க ளங்குரிக்குமென்று சொல்லுவார்கள். கருமவசத்தினாலே முதமாதம், இரண்டாம்மாதம், மூன்றுமாதம், கெற்பங் கரைந்துபோம்; தெய்வயோகத்தினாலே கெற்பந்தரித்து நாலாமாதம்வந்தா லங்கங்களவயவங்களெல்லாம் விருத்தியடையும். ஐந்தாமாதங் கெற்பத்திலே பிராணன் சலிக்கும். நாலாமாதத்திலேதானே கெற்பஞ் சலித்தசையுமென்று சொல்லுவார்கள்.

ஐந்தாமாதத்திலே யங்க மயிர் முதலான வுபாங்கங்கள், சகல அவயவங்களெல்லாம் பூரணமாமென்று சொல்லுவார்கள். ஆகாசபூதத்திலே நின்றும் நாலாக வவகாசம், வியானவாயு, சுரோத்திர விந்திரியம், சத்த மிவைகளெல்லாஞ் சிசுவுக்குண்டாம். வாயு பூதத்திலே நின்றும் ஜலனம், பிராணன், தொக்கிந்திரியம், பரிச மிவைகளெல்லா முண்டாம். தேயுவிலே நின்றும் வுஷ்ணபாவம், சக்ஷு விந்திரியம், ரூப மிவைகளெல்லா முண்டாம். அப்புவிலே நின்றும் ரசவிந்திரியம் ரசங்கள் சையித்திய மிவைகளெல்லா முண்டாம். பிருதுவியிலே நின்றும் கடினமாகக் கிராண விந்திரியங் கந்தமுதலாகிய குணங்களுண்டா யிருக்கும். ஆகாசத்தோடேகூடி யிருக்கிற வாயுவிலே நின்றும் மன துண்டாம், தேயுவிலே நின்றும் புத்தியுண்டாம், அப்புவிலே நின்றுஞ் சித்தமுண்டாம், பிருதுவியிலே நின்றும் அகங்கார முண்டாயிற்றென்று சொல்லுவார்கள். பிருதுவியி னுடையகூறு:— மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை, ஆகவைந்து. அப்புவின்கூறு:—நீர், மூளை, உதிரம், விந்து, மச்சை, ஆகவை[ந்]து. தேயுவின்கூறு:—ஆகாரம், சோம்பல், பயம்[...] துயில், ஆகவைந்து. வாயுவின்கூறு:—

த்தல், கிடத்தல், தத்தல், ஆகவைந்து. ஆகாசத்தின் கூறு:—லோபம், குரோதம், மோகம், மதம், மாச்சரியம், ஆகவைந்து.சுரோத்திரம், தொக்கு, சக்ஷு,சிங்நுவை,யாக்கிராணம், ஆகஞானவிந்திரிய மைந்து. அவைகளினு லநுபவிக்கப்படும் விஷயங்கள்:—சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகவைந்து. கருமேந்திரியம்:—வாக்கு, பாதம், பாணி, இலிங்கம், குதம்,ஆகவைந்து. அவைகளினு லநுபவிக்கப்படும் விஷயங்கள்:—வசனம், கமனம், தானம், ஆனந்தம், விசர்க்கம், ஆகவைந்து.ஆகியஞானேந்திரியங்கள்,கருமேந்திரியங்கள்,அதினுடையவிஷயங்கள், பஞ்சமஹா பூதங்களிலேநின்றுஞ் சிசுவுக்குண்டாம்.வாயுவினிடத்திலே நின்றும்:-பிராணன்,அபானன், வியானன், உதானன், சமானன்,ஆகப்பஞ்சப் பிராணன்களு முண்டாயிற்று. துவக்கு, அஸ்தி, மாமிசம், உதிரம், மேதசு,மச்சை,சஞயு,மூத்திரம், மலம், கிருமி, ரோகம், இந்தக்கூட்டுறவே சரீரம். மூன்னூற்றறுபது யெலும்பு, யெழுபத்தீராயிர நாடி, மூன்றரைக்கோடி ரோமம், தொக்குக்களாறு பதினெரு துவாரங்க ளென்றுஞ் சொல்லுவார்கள். நாபி, சிரசு, இரண்டு மடைபட்டிருக்கிறபடியினுலே நவத்துவாரமென்று சொல்லப்படும். சரீரத்திலே:—சேட்டுமம் நாழி, பித்த முளக்கு, சுக்கில மாழாக்கு,ரசமொன்பது, ஜலம் அஞ்சலி, பத்தஞ்சலி மலம், ஏழஞ்சலி ரத்தம், எட்டஞ்சலி மூத்திரம், நாலஞ்சலி சுக்கிலம், ஒரு அஞ்சலி சேட்டுமம், ஆறஞ்சலி பித்தம், அஞ்சு வசை, மூன்று மேதை, இரண்டு மச்சை, ஒன்று கரு, ஆறுமாதத்திலே சேதனமாகிய அறிவுண்டாம். மாதாவுக்குப் பசிதாகமுண்டானுற் சிசுவுக்கும் ...ண்டாம். மாதாவினுடைய ஆகாரமே சிசுவுக்கா... ...ள் மிளகாய் மிளகு பக்ஷணம் பண்ணி

னால் சிசுவுக்கு மெத்தக்கரிப்பா யிருக்கும். மாதாயெந்தவஸ்துக்களை யபேக்ஷிக்கிறாளோ; அந்தவஸ்துவைச்சிசுவு மபேக்ஷிக்கும். ஆனபடியினாலே:—கெற்பணியாக விருந்தா லபேக்ஷித்த பதார்த்தத்தைக் கொடுக்கவேண்டும். சுக்கிலம் அதிகமாகவிருந்தா லாண்பிள்ளை பிறக்கும். சுரோணித மதிகமாகவிருந்தாற் பெண்பிள்ளை பிறக்கும். இரண்டுஞ்சமனானால் அலியாகப் பிறக்கும். மாதாவானவள்:—வழிநடந் தாயாசப்பட்டாலும், சுமைகள், தீர்த்த குடங்கலெடுத்தாலும், உலக்கைகுத்தினாலும், நிரம்பவேலை செய்தாலு மாதாவினுடைய ஆயாசவேதனை யெல்லா மந்தச்சிசுவுக்குங் காணப்படும்.

மாதாவினுடைய விரண்டுபக்கத்தெலும்பு மந்தச் சிசுவுக் கீரரிவாட்போலே யறுக்கும். மாதாவினுடைய கெற்பவாயு, சாடராக்கினி, மாதாவினுடைய கெற்பத்திலேயிருக்கிற கிருமி, புழுக்கள், சிசுவை யுபாதிக்கும். மாதாவினுடைய மலமூத்திரங்களிலே கிடந் துழைந்துகொண்டிருப்பன்; அந்தச் சிசுவை மாதாவினுடைய கெற்பப் பையிலேபோட்டுக் கட்டியிருக்கு மான படியினாற் கைகா னீட்டவு முடக்கவும் படாது. மாதாவாயிருக்கிறவ ளதிகமா யாகாரத்தைப் பக்ஷித்தாளானாற் சிசுவுக்கு மெத்த நெருக்கமாய் மூச்சுவிடமாட்டாமல் மிகுந்த வுபாதியாயிருப்பன். மாதாவாயிருக்கிறவள் துக்கப்பட்டாற் சிசுவுக்குத் துக்கமும், மாதாவுக்குச் சந்தோஷமானாற்சிசுவுக்குஞ் சந்தோஷமுமுண்டு. சிலபேர் யேழாமாதத்திலே யறிவுவருமென்று சொல்லுவார்கள். எழாமாதத்திலே பூரணஞானமா யிருக்கும், சு[illegible] தா[illegible]னும் புஷ்டியாகத்தானேயிருக்கும், அப்போ[illegible]டுத்த வனந்த ஜன்மங்களெல்லாந்[illegible]

டாமாதத்திலே யிந்த ஞானங்களெல்லா முண்டாமென்று சொல்லுவார்கள். கருமவசத்தினாலே நாலாமாதம், அஞ்சாமாதம், ஆறுமாதம், ஏழாமாதம், எட்டாமாதங்களிலே கெற்பஞ் சேதமாய்ப்போமென்றுஞ் சொல்லப்படும். தெய்வகடாக்ஷத்தினாலே சிசுத் தப்பிப்பிழைத்திருந்தா லெட்டாமாதத்திலே பூருவக்ஞானங்களெல்லா நினைப்பன். எட்டாமாதத்திலே பிராணன்களுக்கு யிருப்பிடமாக விருக்கிற மாமிசபிண்டமானது சிசுவைவிட்டு வெளியிலே வந்து மாதாவினுடைய கெற்பத்திலே யடிக்கடிபோயிருக்குமானதால் யெட்டாமாதத்திலே பிறந்த பிள்ளை யந்த மாமிசபிண்டத்தைவிட்டுப் பிரிந்தபடியினாலே யெட்டாமாதம் பிறந்தபிள்ளைக்கிப் பிராணனில்லாமல் ஜீவியாதபடியினாலே மரித்துப்போமென்று யாக்கியவற்கர் ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறார். எட்டாமாதத்திலே தன்னுடைய வனந்தகோடி மாதா பிதாக்களையும், தன்னுடைய ஜன்மங்களையும் ஸ்மரிப்பன். தான் அனந்தஜன்மம் பிதாவாக விருந்தோம், அனந்தஜன்மம் புத்திரனாகவிருந்தோம், அனந்தஜன்மந் தம்பியாகவுந் தமையனாகவுமிருந்தோம், அனந்தஜன்மங்களேவுகிறவனாகவு மேவப்படுகிறவனாகவு மிருந்தோம், மனுஷஜன்மங்கள், பசு பக்ஷி, மிருகாதி ஜன்மங்கள், தாபரஜன்மங்களாக நாமெடுத்த ஜன்மமளவில்லை; தேவலோகத்துக்கு மனேகந்தரம் போய்வந்தோம், நரகத்துக்கு மனேகந்திரம் போய்வந்தோம், அனேகமாயிர மாதாவினுடையகெற்பகோளகத்திலே வருத்தமெல்லா மநுபவித்தோம், அனந்த[illegible]சாரதுக்கத்தை யடைந்தோம், நரகாக்கினியிலே யனந்[illegible]ந் தத்தனாகத் தபித்துக்கொண்டிருந்தோம், [illegible]ற பக்ஷிஜன்மங்களாயும், சுவேதசங்

களிலே யுண்டான கிறிமி கீடாதி ஜன்மங்களாகவும், உற்பிச்சங்களிலே யுண்டான விருக்ஷாதி ஜன்மங்களும், சராயுசங்களிலே யுண்டானமனுஷாதி ஜன்மங்களும், தேவயோனியிலெடுத்தஜன்மங்களு மிவைகள் மூதலான துகளிலே யெண்பத்துநா லுலக்ஷம் ஜன்மங்களுமெடுத்தோம்; ஆற்றுமணலையெண்ணினு லுமெண்ணலாம், நாமெடுத்த ஜன்மங்களை யெண்ணக்கூடாதென் றிவைகளை யெல்லா நினைத்துத்துக்கிதனுய்க்கிலேசப்பட்டுக்கொண் டெப்போநா மிந்தயோனியிலே நின்றும்விடுபட்டுப் பூமியிலே போவமோ! அனந்தகாலம் நரகங்களை யநுபவிக்கலாம், கெற்பநரகத்தை யொருசணிகமானு லுமநுபவிக்கக்கூடாதென்று மஹா துக்கிதனுய்ப் பூமியிலே ஜனித்தவுடனே சாங்கியயோக தத்துவக்ஞானங்களை யப்பியாசிக்கவேண்டும், நல்ல தருமங்களைத்தானே பண்ணவேண்டும், நல்ல வாசாரத்தைத்தானே பண்ணவேண்டும்; எக்கியம், தானம், தபசு யிவைகளெல்லா மீசுரப்பிரீதியாகப்பண்ணவேண்டும், ஈசுரனை யுபாசிக்கவேண்டும், சிவனுகிய மஹா தேவரைச் சரணமாக வடையவேண்டும், தத்துவக்ஞானத்தை யப்பியாசிக்கவேண்டும், சிவனுகியமஹாதேவ குருப்பிரசாதத்தினுலேயும், பிரமக்ஞானத்திலேயும், கைவல்யத்தை யடையவேண்டும், மாதாபிதாக்கள், பெரியவாள், குரு, அதிதிமுதலானபேர்களுக்கும், பூசைபண்ணிச் சிசுருஷையும் பண்ணிச் சந்தோஷம் பண்ணிவைக்கவேண்டும், நித்திய பதமான பிரமபதத்தை யடையவேண்டும், நமக்கி... மேற் ஜன்மந் தேவையில்லையென் றிப்படிப் ... துக்கொண் டிருப்பன்.

இப்படியிருக்கிறபோது ம... சுரம் தலையிடி, வயிற்று...

வந்தா லந்த வேதனைகளெல்லாஞ் சிசுவுக்குஞ்சரியாகத்தானே யிருக்கும். பாவத்தினாலே யெட்டாமாத மொன்பதாமாதங்களிலே கெற்பத்துக்குள்ளேதானே சிசுமரித்துப்போனாலும் போய்விடும். அப்போது சிசுவை யறுத்துத் துண்டதுண்டமாய் வெளியிலே வாங்குவார்கள். இந்தவுபாதிகளிலே மாதா பிழைத்தாலும் பிழைப்பாள்; மரித்தாலும் மரிப்பள்; தெய்வாதீனமா யிரண்டுபேரும் பிழைத்திருந்தால்; ஒன்பதாமாதம் பத்தாமாதங்களிலே வெளியிலே வருவன். அவன்வருகிறபோது குடத்திலேவளர்ந்த பூசணிக்காயைப் பிறகு வெளியிலே வாங்கிறதுபோலேயிவன்வெளியிலே வருகிறது மெத்தக்கடினம். இவன் பிறக்கிறபோது பிரசபவேதனையினாலேயும், வயிற்றுவலியினாலேயும், மாதா மெத்த வேதனைப்படுவள்; சிசுவுக்கு மந்த வேதனையெல்லாமுண்டு. அந்தப்பிரசபவாயுவு சிசுவை யதோமுகமாய் யோனி ரந்திரத்திலே தள்ளும். அந்தயோனிரந்திரத்திலே வருகிறபோது நெருக்கத்தினாலே மூர்ச்சைபோய்விடும்;மூர்ச்சிதனாய் வெளியிலேவருவன். யோனிரந்திரத்திலே வெளியிலே வரமாட்டாமலந்தச்சமையத்திலே மரித்தாலு மரிப்பன்;தெய்வாதீனத்தினாலே வெளியிலே வருவன். பிறந்தவுடனே மரித்தாலு மரிப்பனல்லவென்று ஜீவித்திருந்தானானால்;மூர்ச்சிதனாய் வெளியிலே வருவனென்று முன்சொன்ன பிரகாரம் பூமியிலே விழுந்தபிறகு மூர்ச்சை தெளியுமுடனே பூருவ
...ன மறைந்துபோம். அதுவேதென்னில்? விஷ்ணுமாயை
...கிய வாயுவந்து மறைத்துப்போடு மப்பா லொரு
...ாய்விடும்.

...ம்போலேயிருக்கும்; கூவாக்
...க் கொன்றுந் தெரி

யாது, மாதாவானவள் யீகளெறும்புகள், பாம்புபல்லிகள், பூனைபெருச்சாளி யிவைகளெல்லாங் கிட்டவரவொட்டாமற்சாவதானமாகத்தானே ரக்ஷிப்பள். அக்ஞானத்தினாலே பிள்ளை பசித் தழுதால்; வயிற்றை வலித் தழுகுதென் றுமிளகைப் புகட்டுவள். வயிற்றைவலித் தழுதாற்பசித் தழுகுதென்று பாலைப்புகட்டுவள். மாதாவைக்கண்டாற்பசாசைக் கண்டாற்போலே விபரீதமாகத்தோணும். எறும்பு, ஈய்கள், கொசுகளிவைகளெல்லாங் கடிக்கும். மாந்தம், கணம், கரப்பான், பக்ஷிதோஷம், குளிதோஷமிவைகளெல்லாம்வந் து பாதிக்கும். காலைக்கையை யசைக்கவு,மந்தப்பக்க மிந்தப்பக்கம் பிரளவுமுக்காரவு மெழுந்திருக்கவுஞ் சக்தியில்லாமலசத்தனாகக்கிடப்பன். பாலியத்திலே வருகிறரோகங்களுபாதிக்கும். பத்துநாளொருமாதத்துக்குள்ளாக மாதாவுக்குச் சயித்தியம்பிறந்து தோஷித்துப் பரலோகத்தையடைந்தாலு மடைவளல்லவென்று சுகமாகவிருந்தாலுமிருப்பள். பாலியத்தில் வருகிற ரோகங்களினாலே, சிசு பரலோகத்தை யடைந்தாலுமடையு மல்லவென்று சீவித்திருந்தாலு மிருக்கும். இன்னஞ்சொல்லுகிறோம்; குழைந்தைபிறந்தவுடனே குழந்தை பிராணனோடே புத்திரன் முகம் பிதாப்பார்த்தாற் பிதிர்க்கடன்றீருமென்று சாஸ்திரம். பிள்ளை பிறந்தவுடனே பிதாவானவர் சாதககருமம் பண்ணிப் பன்னிரண்டாநாள் நாமகரணம்பண்ணிப் பூரி சிலவழிப்பர். அதினாலே சிசுவுக்குத் தோஷபரிகாரம். சிசு பிறந்தவுடனே, புத்திரோற்சபம், சாதககருமம், நாமகரணம், ஆறுமாத மன்னங்கொடுத்தல், மூன்றும் வருஷஞ் சிகைவைக்கிறது, எட்டாம் வருஷ முபநயனம், அக்ஷராப்பியாசங்க ளிவைகளெல்லாமந்தந்தக் காலங்களிலே தப்பாமற் பண்ணவேண்டும். இ

வைகளெல்லாம் பிதாவினுடைய கிருத்தியம். சிசுவினு டைய கிருத்தியஞ் சொல்லுகிறோம். சிசுவானவன் மல மூத்திரங்களோடே பிரண்டமேத்தியங்களைப் பக்ஷித்துக் கிருமி கீடாதிகள், எறும்பு, ஈகள், முதலானவைகள் கடிக்க வுபத்திரத்தினாலே வாதைப்படுவன். மாதாவானவள்:—உ ஷ்ணஜலத்தினாலே அடிக்கடி குளிப்பாட்டி, எறும்பு, ஈகளெ ல்லாந் துடைத்து, அடிக்கடி யுச்சியிட்டு, அடிக்கடி தன்னிய பானங் கொடுத்து, வஸ்திரத்தினாலே போர்த்து, மார்ச்சா லாதி, மூஷிகங்கள் முதலானது வாராமற் காத்து, மடியி லேயும், மார்பிலேயும், கையிலேயும், வைத்துக்கொண் டிந்தப்படி நித்திரையுமில்லாம விராத்திரிபக லிரக்ஷிப்ப ளப்பாற் றொட்டியிலே போட் டடிக்கடி சீராட்டி ரக்ஷிப்ப ளப்பாற் சிசுவானது, இந்தப்பக்க மந்தப்பக்கம் பிரள, குப் புற்றுக்கொள்ள, தவழ விந்தப்படி சஞ்சரிப்பன். அப்போ து, பாம்பு, பல்லி, புழு, பூச்சி, விளக்கு, நெருப்பு, இவைகளைக் கையினாலே பிடிக்க, இவைகளினாலே, சிசு துக்கப்பட, இந்த ப்படி துக்காக்கிராந்தனாக விருப்பன். அப்பால் மாதாபிதா க்கள்:—அப்பா, அம்மா, ஐயா, அண்ணா வென்று வார்த்தை கள் படித்துக்கொடுப்பார்கள். ஒக்கலிலேயும், தோளிலே யும், மார்பிலேயும், மாதாபிதாக்கள் முதலானபே ரெடுத் துச் சீராட்டுவார்கள். அடிக்கடி சிசுவுக்கு பால்வாசனை, அன்னபானவாசனை, யெல்லாம் படிப்பிப்பார்கள். காது, கை, கால், அரை, இந்த அவயவங்களிலே:—கடுக்கன், மோதிரம், அரைஞாள், தண்டை முதலான பூஷணங்க ளைத்தரித்துச் சீராட்டுவார்கள். அடிக்கடி யப்பியங்கம், வய றுபேதிக்கக் காரம் முதலான மருந்துகள் கொடுத்துக் காப் பாத்துவார்கள். இப்படியிருக்கச்சே; மாந்தம், கணம், பக்ஷி

தோஷம், அம்மைவார்த்தல் முதலான வியாதிகளினாலே சிசுப் போய்விடும் அல்லவென்றுபிழைத்தாலும் பிழைக்கும்.

இப்படியிருக்கச்சே யொருசம்வர்ச்சரமாகும். அதிலே தாபத்திரயம் வந்து வாதிக்கும். தாபத்திரயமாவதெதுவெ ன்றவர:—ஆதியாத்மீகம், ஆதிபவுதீகம், ஆதிதெய்வீகம், ஆக மூன்று. ஆதியாத்மீகமாவதெதுவென்றால்? சுராதிமுத லான நாலாயிரத்தி நானூற்று நாற்பத்தெட்டுவியாதிகள். ஆதிபவுதீகமாவதெதுவென்றால்? சோரவியாக்கிர சர்ப் பாதிபயம். ஆதிதெய்வீகமாவதெதுவென்றால்? இடி, மின் னல், வருஷம், பெருங்காற்று, மண்டபங், கோபுரமிடிந்து விழுகிறதிவைகளினாலேவருகிறபயமென்று சொல்லப்படும். இப்படித் தாபத்திரயங்களினாலே வாதைப்படுவன். லோகத் திலே மனுஷாளுக்கிரண்டுவித மரணம். அதுகாலமிறுத்தி யுவபமிருத்தியுவென்றிரண்டிதிற் காலமிறுத்தியுவாவதுயா தென்றால்? ஆயுள்முடிந்து மரணமாகிறது. அபமிறுத்தியுவா வது யாதென்றால்? ஆயுளிருக்கச்சே யொரு பாவவிசேஷத் தினாலே மரணம்வரும். அஃதெப்படியென்னில்? யெண்ணெ யுந் திரியுமாண்டு விளக்கணைகிறதுபோலக் காலமிறுத்தியு. அபமிறுத்தியுவாவதுயாதென்றால்? யெண்ணெயுந்திரியுமிருக் கச்சே காற்றுவந்து விளக்கை யணைக்கிறதுபோலே யபமிரு த்தியுவென்றுசொல்லப்படும. லோகத்திலே யொருவோடத் திலே வெகுபே ரேறிக் கடலோடச்சே வோடங் கவுழ்ந்தவு டனே யத்தனைபேரு மொருமிக்க வொருக்ஷணத்திலேசாகி றார்களிது விப்போ வபமிறுத்தியுவென்று சொல்லப்படும். இதுவல்லாமலும் யுத்தகளத்திலே யாயிரம்பதினாயிர மேக காலத்திலே சாகிறார்களிது வபமிறுத்தியு; மிகுந்த பஞ்சம்

வந்து லக்ஷங்கோடி யிறந்துபோமூர்க ளிது வபமிறுத்தியு; அர்த்தராத்திரியிலே மஹாநதிப்பிரவாகம்வந் தாயிரம்பதி னாயிரம் லக்ஷம்பேர் வெள்ளத்தோடேபோய் மரித்துப் போமூர்க ளிதுமுதலானதெல்லா மபமிறுத்தியு. வற்சநாபி அலரி தின்று சாகிறது, நாண்டுகொண்டுசாகிறது, கிணறு குளங்களிலே விழுந்துசாகிறது, மரங் கோபுரமுதலானதி லேயேறி விழுந்துசாகிறது, பாம்புகடித்துச்சாகிறது, மாடு கரடி யானை புலி பாய்ந்து சாகிறது, அகங்காரத்தினாலே நஞ்சுதின்றும், நாக்கைப்பிடிங்கிக்கொண்டுங் குத்திக்கொ ண்டுமிப்படிச்சாகிறதுமபமிறுத்தியுவானதுன்மரணம். இவர் களுக்குப் பசாசத்துவம் வரும். சரீரமெடுத்தா விந்தவாபத் துக்களெல்லா மூடர்கதையாய்வருமிந்தப்படி யநுபவிப்பன்.

சிசுவானவ னிரண்டாம்வருஷம், மூன்றாம்வருஷம், விளையாட்டி லாசையுள்ளவனாய்; இராப்பகல்:—வாசல் மூத் தம் தெருப்புறமிவைகளிலேயும், அசலாத்துக்குழந்தைகளு டனேயும், விளையாடுவனப்போது பசிதாகமுதலானதுந்தோ ணும லசலாத்துப்பிள்ளை களை யிவன டிக்கவு மிவனை யசலாத் துப்பிள்ளை களடிக்கவு மழுதுகொண்டுவருவ னிந்தப்படி திரி கிறபோது மாடுகன்று பாய, கிணறுகுளங்களிலே விழ, பாம் புகடிக்க, இவைகளைக் கண்டு மாதாபிதாக்க ளடிக்க விப்ப டித்துக்கிதனாகவிருப்பன். பந்தடிக்க, சில்லடிக்க, சடுகுடுப் பாய, களக்கொட்டியாட, இவைகளினாலேயுபத்திரம்வரும். ஆறு, குளங், கிணறு, இவைகளிலே யசலாத்துப்பிள்ளைக ளுடனே குளித்து விளையாடும்போது தண்ணீரி லமிழ்ந்தி மரித்துப்போனாலும்போவ னிப்படி யிந்தக்கால முபத்திர ப்படுவன். அக்ஷராப்பியாசத்துக்கு வைப்பார்க ளப்போது

வாசிக்கிற வாத்தியாரிடம் போகமாட்டோமென்று கலவ டிப்பன். வாயிலே வித்தைவராமல் வாத்தியாரடிப்பர், ஆத் திலேவந்தாற் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லையென்று மாதா பிதாச் சிக்ஷைபண்ணுவார்க ளப்போ தொளிந்து கொள்ளுவன், கூடவாசிக்கிறபிள்ளைகள் பிடித்துக்கொண் டுபோய் வாத்தியாரிடத்திலே விட்டுத் தெண்டனைபண்ணி யடிப்பார்கள். மாதாபிதாக்கள் வித்தைவரவில்லையென்றுந் துஷ்டத்தனம் பண்ணுகிறானென்றுஞ் சொல்லி யடிப்பார் கள். ஆத்திலே யன்னத்துக்கில்லாமற்போனாற் பிக்ஷைக்கி ப்போவன், இப்படி வாலிபமெல்லாம் விளையாட்டினாலே யும், வித்தையாப்பியாசத்தினாலேயும், துக்கப்படுவன். சிக்ஷை பொறுக்கமாட்டாமற் குளங்கள் கிணறுகளிலே விழுந்து செத்துப் போனாலும் போவன். பிழைத்திருந்தால் வாலிப துக்கமாகிய வனந்ததுக்கங்களை யநுபவிப்பன்.

இப்படி யிருக்கச்சே வாலிபத்திலேதானே; மாதாபிதா க்கள் கலியாணம் பண்ணிவைப்பார்க ளப்பா லெவ்வனம் வரும். ஸ்திரீயும் வருவ ளப்போது மாதா பிதாக்கள்சொன் னவார்த்தைகேளாமல் ஸ்திரீபிராந்திவரும். வந்தா லிஸ்திரீ யிருக்கச்சேயு மோகத்தினாலே; பரஸ்திரீகள், தாசிகள், முதலான விஷயங்களிலே சஞ்சரிப்பன். இது நிமித்தியம் வீட்டிலே யிருக்கிற திரவியங்களுடமைகள், பண்ட பதார்த் தங்களைத் திருட்டுப் பண்ணி யெடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பன். இப்படிப்பரஸ்திரீ சஞ்சாரத்திலே யவர்களு டைய பத்தாவானவன் கண்டா லடிதெண்டமாகவடித்துக் கொல்லுவன். ராஜாவறிந்தா லாஸ்திபாஸ்தி சகலமு மற மாறிப் பிராணனுக்கும் வரும். இது வல்லாமலுந் தாசிகளு டனே சஞ்சரிக்கிறபோது கிரந்திரோகமுதலான வியாதி

கள்வரு மதினாலே துக்கப்படுவன். தாசிகளுக் குள்ளமட்டுங் கொடுப்ப னவனு மிவன்கையிலே யுள்ளமட்டு முபசாரம் பண்ணுவள்; கைக்கில்லாதே போனாற் கிட்ட வரவேண்டாமென்று சொல்லுவ ளதினாலே மிகுதியுந் துக்கப்படுவன். தாசி நிமித்திய மசல்வீட்டிலேபோய்த் திருடுவ னவர்கள்கண்டு பிடித்து அடிதெண்டமாக வடித்துச் சிக்ஷிப்பார்க ளதனாற் பிராணனுக்கு மானிவரும். இப்படிக் காமாந்தகாரனாகத் திரிவன். கூத்தும், பாட்டும், விடமார்க்கமுமாகத் திரிவன். கிரமமன்றியிலே யீனசாதி ஸ்திரீகளிலே சஞ்சரிப்பன். மாதா பிதாக்கள் சிக்ஷிப்பா ளெப்போதுந் துக்கந்தானே. தாசிகளிடமாய் மோகத்திலே யகப்பட்டுக் கிருத்தியா கிருத்திய விவேகந் தெரியாமல் விகிதங்களா யிருக்கிற தருமங்களை விட்டுவிட்டு நிந்திதங்களாயிருக்கிற கருமங்களைப் பண்ணிக்கொண் டிந்திரிய நிக்கிரகமன்றியிலே பதித கிருத்தியங்களாய் நடந்துகொள்ளுவன். காமத்தினாலே பீடிக்கப்பட்டவனாக யிருந்துகொண்டு:- காமப்பிரதானனாய்க் காமமே பிரதானம், காமமே புருஷார்த்தம்; காமமேஜகத்தாகத்தோணும். காமமோகிதனா யிருந்துகொண்டு; விபசார ஸ்திரீகளைத்தானே:—இராவும் பகலுஞ் சிந்திப்பன். அவாளுடைய சல்லாபம், அவாளுடைய பிரியவசனம், அவாளுடைய வார்த்தை, அவாளுடைய வபிநயங்களாகிய இவைகளைத்தானே சிந்திப்பன். அவாளுடைய வங்க மவையவங்கள், அலங்காரம்பண்ணிய கூந்தல்கள், கன்னங்கள், லலாடம், புருவங்கள், கண்கள், நாசிகள், தந்தங்கள், அஸ்தங்கள், ஸ்தனங்கள், நாபி, இடைகள், சகனம், நிதம்பம், துடைகள், கணைக்கால்கள், பாதங்கள், இவைகளைத்தானே; வர்ணித்து விபசாரிகளுடையவிலாசகமனங்கள், விலாச சேஷ்டைகள், விலாச

மந்தகாசங்கள், விலாசகடாக்ஷங்கள், விலாசவசனங்கள், விலாசகிரீடைகள், அவர்களுடைய வங்க சவுந்தரியங்கள், இவைகளைத்தானே வர்ணித்து, இவைகளைத்தானே மெய்யென்று பிரமித்து, இவையே புருஷார்த்தமென்று அவர்களுடனே சஞ்சரிப்பன். பிதாச்சம்பாதித்த தனங்களெல்லாந் தாசிகளுக்குக்கொண்டுபோய்க் கொடுப்பன். சிலபேர் தாசிகளைச் சேர்ந்தவைப்பாக வைத்துக்கொண்டு இஷ்டபதார்த்தமெல்லா மவாளுக்குக்கொடுத்தவர்களுடனே சஞ்சரிப்பன். அந்தவிபசாரிகள் தனங்களையும், பிராணன்களையும், அபகரிப்பார்கள். அட்டைக்கடியாகிலு மிரத்தத்தை மாத்திரமபகரிக்கும். தாசிகள், உயிர்தனங்க ளெல்லாத்தையு மபகரிப்பார்கள். காமாந்தகாளா யிருக்கிற சிலபேர், கொக்கோகம், பரதசாஸ்திரங்கள், இவைகளெல்லா மப்பியாசிப்பார்கள். சிலபேர் யெக்கியங்களைப் பண்ணிச் சுவர்க்கத்திலேபோய், ரம்பை யூருவசி முதலான தேவஸ்திரீகளை யநுபவிக்கலாமென்று சொல்லுவார்கள். அதைக் கண்டதா ரிகலோகத்திலேதானே காம யெக்கியத்திலே தீக்ஷித்துப் பிதா சம்பாதித்திருக்கிற தனங்களை, தாசிகள் கையிலே கொடுத்துப்பிரத்தியக்ஷ சவுக்கியத்தையநுபவிக்கிறதே பிரதானம்; காமமே நித்தியம், போகமே மோக்ஷமென்றுங் காமாந்தகாளாய்த் திரிவார்கள். சில காமாந்தகாளாகவிருக்கிறபேர் விபசாரிகளுடனேகூட மத்தியபானங்களைப் பண்ணுவார்கள். சிலபேர் விபசாரிகளுடனே கூடிச் சத்திபூசையென்றும், மதுமாமிசங்கள் பக்ஷித்தந்த விபசாரிகளுடனேகூடி யிப்படிச் சஞ்சரிப்பார்கள்.

ராஜாக்களறிந்தா லவனையுமிவனையுந் தேசாந்தரத்திலே துரத்திவிடுவார்கள், அந்தத் துக்கங்களையுமநுபவிப்

பார்கள். அதிக சஞ்சார போகத்தினலே தேகத்திலேயும், இலிங்கத்திலேயும், வருகிறரோகம்; நீரிழிவு, நீர்க்கடுப்பு, சயரோகம், கிரந்திரோகம், அரையாப்பு, அண்டவாதம், பவுத்திர மிவைமுதலான ரோகங்களெல்லாம் வரும். சிலபேர் தன்னுடைய ஸ்திரீயிருக்கச்சே யதை விட்டுப்போட்டுப் பரஸ்திரீகமனம் பண்ணுவார்கள், அவனை அடிதண்டமாக வடித்து வீட்டையும் பிடிங்கி யரண்மனையிலே காட்டிக்கொடுத்துப் பங்கு மனைகளாஸ்திபாஸ்திகளெல்லாமற மாறிக்கொண்டு தேசாந்திரத்திலே துரத்திவிடுவார்கள். சிலபேர் தன்னுடைய ஸ்திரீகளோடேயும், பரஸ்திரீகளோடேயு மிருப்பார்கள். சிலபேர் ஸ்திரீகளிருக்கையிலே வேறேயும்ஸ்திரீகளைக் கலியாணம்பண்ணி அந்தத் துக்கங்களையு மநுபவிப்பார்கள். சிலபேர் காமாதுராளாய் ஸ்திரீகள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, மாதாபிதாக்களைத் தரிசித் தவர்களுக்கன்னபானதிகளுங் கொடாமற் பிறத்தியாராலே தூஷிக்கப்பட்டுக்கொண் டிருப்பார்கள். மாதாபிதாக்களுக்குச் சொன்னபடி கேட்டுக்கொண் டநுகூலப்பிரீதியா யிதமாய் நடப்பார்க ளவாள்மித்திரபுத்திராள். சிலபேர் மாதாபிதாக்களைத் தூஷித்துச் சொன்னபடியுங்கேளாமல் விபரீதமாய் நடந்துகொண்டவர்களுக் கைதத்தைத்தானே யாசரிப்பவர்கள் சத்துரு புத்திராள். ஜன்மாந்திரத்திற் கடன் கொடுத்தவர்களா யிருக்கிற சிலபேர் மாதாபிதாக்க ளிருக்கச்சேதானே யவர்களுக்குதவாம லஞ்சுவயது, பத்துவயது, இருபதுவயதிலே தங்களுடைய ருணங்களைத்தண்டிக்கொண்டு பரலோகத்துக்குப் போவார்கள். சிலபேர் தேசாந்தரத்துக்குப்போய்த் திரும்பவாராதேபோய்விடுவார்களிவர்களை ருணபுத்திராளென்று சொல்லப்படும். சிலபேர் பிள்ளையில்லையென்

றும், அழகில்லையென்றும், வேறேஸ்திரீகளை விவாகம்பண்ணி யனேகந் துக்கங்களை யடைவார்கள். இப்படி யெவ்வன மெல்லாம் மஹா துக்கந்தானே.

இனிமேற் கௌமாரஞ்சொல்லுகிறோம். ஸ்திரீயாயிருக்கிறவள்; கிரகத்திலே, உப்பில்லை, புளியில்லை, மிளகில்லை, அரிசி பண்டபதார்த்த மில்லையென்று சமையத்திலே கொண்டுவரச்சொல்லி வுபாதிப்ப ளதினாலே துக்கிதனாயிருப்பன். சிலபேர் ஸரீகள், நல்லவஸ்திரமில்லை, நல்லவாபரணமில்லை, நல்ல போசன மப்பியங்க மிவைமுதலானதில்லையென் றிவனை நிந்திக்கிறபடியா லதினாலேயுந் துக்கிதனாகவிருப்பன். சிலபேர் ஸ்திரீகள்:—பாலானுக்கு வஸ்திரபூஷணங்களில்லை, பெண்களுக்கு வரிசைமுதலானது செய்யவில்லை, மாப்பிள்ளைக்கு வரிசைசெய்யவில்லை,பிள்ளைகளுக்குக்காலாகாலங்களிலே விவாகம்பண்ணவில்லை, காலபக்குவங்கள் தப்பிப்போகிறதென்றும், நச்சுநச்சென்றும், அலட்டுவளதினாலே துக்கிதனாகவிருப்பன். சில பெண்பிள்ளைகள் பத்தா சம்பூரணமாய்ச் சம்பாதித்துக்கொண்டுவருகிறபரியந்த மென்னுடைய பத்தாவுக்குச் சமானமில்லையென்று கொண்டாடுவள். ஐசுவரியமிருக்குமட்டுந் தன் பத்தாவுக்குச் சமானமில்லையென்று கொண்டாடுவள். அப்பாலவன் தரித்திரனாய்ச் சம்பாதிக்கக்கையாலாகாதேபோனானு மவள்நிந்திப்பளதினாலேயுந் துக்கம். சில ஸ்திரீகள் பிறத்தியாருடைய ஐசுவரியங்களைப் பார்த்துயிவனையு மப்படிச் சம்பாதித்துக்கொண்டுவரச்சொல்லி யேவுவா ளதினாலேயுந் துக்கந்தானே. ஐசுவரியசாலியா யிருந்தானானு விராஜாவானவன் சொற்குற்றமுண்டுபண்ணித் தனங்களை யபகரித்துக்கொண்டுபோவன். தாயாதிகளாகிலும், அக்கினி சோரராகிலுங் கொண்

டுபோவார்க ளெப்போதுந் துக்கந்தானே. தரித்திரனுகவிருந்தானுனற் றன்னுடைய ஸ்திரீதானே; இராப்பகலாக் குரங்காட்டி குரங்கைப்படுத்துகிறதுபோலே படுத்துவ ளதுவுந் துக்கந்தானே. சிலஸ்திரீகள் பிடாரிகள்போலே புருஷனைச் சிக்ஷிக்க, அதட்ட, வைய, அவள் சொற்படி நடந்துகொள்ள வவள் சிறுதேட்டுக்காகப் பண்டபதார்த்தமிருக்கச்சேதானே யொன்றுமில்லையென்று கருக்கப்படுத்துவளவளுக்குப் பயந்துகொண்டுதானே யிருப்பனதுவுந் துக்கந்தானே. சிலஸ்திரீகள் அருத்தத்துக் காசைப்பட்டு விபசாரிகளாய்ப் போவார்கள்.

சிலபேர் புருஷசவுந்திரியத்துக் காசைப்பட்டு விபசாரிகளாய்ப் போய்விடுவார்கள். சிலஸ்திரீகள் பரகிரகத்திலேதானே யோடிப்போயிருப்பார்கள். சிலபேர் புருஷனுக் கப்பிரியங்களைத்தானே சொல்லுவார்கள். சிலஸ்திரீகள் புத்திராளிடத்திலே யிருக்கிற பிரீதியினுலே பத்தாவை மதியாமற் சற்றுஞ் சட்டைபண்ணும லிருப்பார்க ளதுவுந்துக்கந்தானே.சிலஸ்திரீகளசோரைகளா யடுத்தகிரகங்களிலே திருடுவார்க ளதுநிமித்தியமிவனுக்குப் பிராணனுக்குவரும். சிலபேர் ஸ்ரீகள் விபசாரிகளாய்த் திரிவார்களதினுலேயுந் துக்கந்தானே. சில ஸ்ரீகள் தருமங்களுக் கநுகூலமாயிராளதுவுந் துக்கந்தானே. சிலஸ்திரீக ளாத்திலேவந்த பண்டபாதார்த்தங்களைச் சாவதானமாக வைத்திராம லசட்டைகளா யிருப்பார்களதனுலே பண்டங்கள்போ மதுவுந் துக்கந்தானே. சிலஸ்திரீகள் அயற்கிரகங்களிலே கலகப்பிரியாளாய் நித்தியஞ் சண்டைபண்ணிக்கொண்டிருப்பார்களதினுலேயுந் துக்கந்தானே. சிலஸ்ரீகள் பத்தாவுடனே சண்டைபிடித்துக்கொண்டு தனிவழியே யசலூருக்கு வோடிப்போ

வார்களவனைத் தேடிக்கொண்டு தெருவழியே யலைவனது
வுந் துக்கந்தானே. சில ஸ்திரீகள் பத்தாவை நிராகரித்துத்
தாங்கள் தருமம்பண்ணவும், புராணங்களைக் கேட்கவும்,
பிரதிட்டை யடையவேண்டுமென்று மிருப்பார்க ளதுவுந்
துக்கந்தானே. சில ஸ்திரீகள் பத்தாவுடனே சண்டைபிடித்
துக்கொண்டுமவுனமாய்வார்த்தைசொல்லாம லிருப்பார்களா
வனுக் கிதஞ்சொல்லி யனுசரிசத்துவாதைப்படுவ னதுவுந் து
க்கந்தானே. இருபதுவயதிலே,முப்பதுவயதிலேநாற்பதுவ
யதிலே ஸ்திரீகள்விழுந்துபோவார்களதுவுந்துக்கந்தானே.
பிள்ளைகள்,பெண்கள், சகோதராள், மாதாபிதா விவர்களெ
ல்லாம் விழுந்துபோனா லதுவுந் துக்கந்தானே. சில ஸ்திரீ
கள் ரோகிகளாய்ப் போய்விடுவார்க ளதுவுந்துக்கந்தானே.
ஸ்திரீகள் நன்றாயிருக்கச்சே புருஷன் பெருவியாதி சர்வா
ங்கங்குட்டம்,சயரோகம்,குத்துவலி, உதரவலி,நேத்திரரோ
கம், தந்தரோகம், மீரிழிவு, மகோதரம், வாதரோகம்,அஸ்
திச்சுர மிவைமுதலான ரோகிகளாய் போய்விடுவ னதுவுந்
துக்கந்தானே.

கன்னிகைகளுக்கு நல்லவனில்லை யென்றும், புத்திரா
ளுக்கு நல்ல கன்னிகைகளில்லை யென்றும்,மாப்பிள்ளை துற்
குண னனுகூலமில்லையென்றும், பெண்கள் புத்திராளுக்குக்
குழந்தைகளில்லையென்றும், பெண்களுக்குப் போனகிரகத்
திலே வறுமையென்றும், மாமனார்மாமியார் நிரம்பத் துன்
பப்படுத்துகிறார்களென்றுந் துக்கப்படுவன். அன்னியகிரக
ங்களிலேபோய்ப் பெண்டாட்டி பிள்ளை சொல்வழி கேட்க
வில்லை யென்று முறையிட்டுத் துக்கப்படுவன். சிலபேர் மல
டனாக விருக்கிறவனும், பிள்ளை பிறந்து சாக கொடுத்தவ
னும், பெண்களை மாத்திரம் பெற்றிருக்கிறவனும், தனக்

குப் பிள்ளையில்லையென்றுந் துக்கப்படுவன். சிலபேர் சமுசாரத்துக்காக விபசாயம் பண்ணுவார்கள். சிலபே ருத்தியோகம் பண்ணுவார்கள். சிலபேர் மணியம், சிலபேர்கணக்கு, சிலபேர் தூது, ஊழியம், ராஜசேவை, கல்லுச்சுமை சுமக்கிறது, சிலபேர் வியாபாரம், சிலபே ரீனவிருத்தி, சிலபே ரீனசேவை, சிலபேர் கொத்து, சிலபேர் கூலிவேலை, சிலபேர் தேசாந்திர சஞ்சாரம், சிலபேர் யாசகம், சிலபேர் துஷ்டரைச் சேர்தல், சிலபேர் திருடு வஞ்சனை, சிலபேர் கொலை களவு கட்காமம் வெட்டிப்பறிக்கிறது, இந்தப்படி நடந்து கொள்ளுவார்கள். இப்படி நடந்து கொள்ளுகையில் நிரம்ப விபரீதம்வரு மதினாலே துக்கந்தானே. அருத்தார்ச்சனையுந் துக்கம். அர்த்தரக்ஷணையுந் துக்கம். அர்த்தநாசமுந் துக்கம். அர்த்தஞ் சிலவுசெய்தலுந் துக்கம். விஷய சம்பாதனமுந் துக்கம். விஷயங்களை ரக்ஷிக்கிறதுந் துக்கம். விஷயநாசமுந் துக்கம். விஷயநீக்கமுந் துக்கந்தானே. சமுசாரஆர்ச்சிதமுந் துக்கம். சமுசார ரக்ஷணையுந் துக்கம். சமுசாரநாசமுந் துக்கம். சமுசாரநீக்கமுந் துக்கந்தானே. வித்தைகளை ஆர்ச்சிக்கிறதுந் துக்கம். அதை ரக்ஷிக்கிறதும் துக்கம். வித்தை மறந்துபோனாலும், வித்தையை யப்பியாசியாமற் போனாலுந் துக்கந்தானே. ஆனபடியினாலே கௌமார மெல்லாந் துக்கந்தானே. இனிமேல் வார்த்திகஞ் சொல்லுகிறோம். வார்த்திகம் வந்தமட்டிலேதானே நிரம்பவிசனத்தை யடைவன். தருமங்களைப் பண்ணாதே போனோம்! அதருமங்களை யாசரித்தோம்! சற்கிருத்தியங்களை விட்டு அகிருத்தியங்களைத்தானே பண்ணினோம்! அருத்தார்ச்சனம் பண்ணாமற் போனோம்! இந்தச்சமையத்துக் கைசுவரிய மில்லாமற்போயிற்று. இந்தச் சமையத்துக்குப் புத்திராளில்லாதே போ

ளுர். இந்தச்சமையத்துக்குப் பாரியில்லாதே போனுள். இந்தச்சமையத்துக்கு ரக்ஷிக்கிறதுக்குப் புத்திராள்; புத்திரிகளுமில்லை. பிள்ளைகளும், நாட்டுப்பெண்களுஞ்சொன்னபடி கேட்டு நம்மை நன்ருக ரக்ஷிக்கவில்லை. பாரியுஞ் சொன்னபடி கேட்கவில்லை. தம்பிதமையமாரவாளவா ளிச்சையாய்ப் பிரிந்துபோனுர்க ளவர்களுஞ் சொன்னபடி கேட்கவில்லை. பந்துக்களா யிருக்கிற பேர் சட்டைபண்ணி நம்மோடே வார்த்தை சொல்லவில்லை. புத்திராளும், பாரியும், நம்மை நிராகரித்து வார்த்தைகளைச் சொல்லுகிருர்களென்று துக்கப்படுவன். கால் நடக்கப்படவில்லை, கால்மடங்கிப் போயிற்று, சஞ்சாரத்துக்குச் சக்தியில்லை, கண்கள் தெரியவில்லை, காது கேட்கவுமில்லை, நாக்குங்குளறிப்போகிறது, யெழுந்திருக்க, நடக்கச்சக்தியில்லை, தடியாகிய கோல் கையிலேபிடித்துக்கொண்டு நடக்கிறேனென்று துக்கப்படுவன்.

சரைவந்து மூடிப்போகு மெதிரேவருகிறபேரைத் தெரியாது, பக்கங்களிலே கூப்பிட்டாலுங் கேளாது, அன்னியாள் வழிகாட்ட அன்னியாளைத் தொட்டுக்கொண்டு நடக்க, இப்படித் துக்கப்படுவன். கண்களிரண்டுந் தெரியாமற்காசாதிதோஷங்கள்வந்துமூடிப்போம், இரண்டுகண்ணுந்தெரியாமல்வழிதடவியன்னியாளைவழிகேட்டுத்தடியாகிறகோலூன்றிக்கொண் டன்னியாளைத் தொட்டுநடந்துகொண்டுதுக்கப்படுவன். அப்போதுரோகங்கள்வந்து பீடிக்கும். அஃதல்லாமல்இருமல்,விக்கல்,சுவாசம்,இளைப்பு, தலைநடுக்கல்,உடம்புசர்வாங்கமு நடுக்கல் முதலியவைகளும் வரும். அன்றியில் உடல்கூனிப்போம்,சர்வாங்கமும் பழுத்துப்போகும்,தந்தங்களெல்லாம் விழுந்துபோம், கண்களெல்லாம் பஞ்சடைந்து

போம்; அசீரணரோகம் வாதிக்கும், பசிதாகங்கள் மெத்த வாதிக்கும், போசனம் பண்ணிளுற் சீரணத்துக்கு வாராது, வெயில், காற்று, சீதம், குளிர்மை, பனி முதலானவை சகியாது, இவைகளினுலேயு மெத்தவுந் துக்கப்படுவன். நாவுக்கு ருசியாகவிருக்கிறதைத் தேடுவன். நல்லகறி, பருப்பு, பொறித்த குழம்பு, அப்பம், அதிரசம், வடை, இட்டலி, தோசை, மனோகரம், போளி, பால், தயிர், நெய், நல்லமோர், நல்ல ஊறுகாய், வத்தல், துவையலிவைகளெல்லாம் வேண்டுமென்றுசைப்படுவன். அவனுக்குக்கிடையாது; இவைகளெல்லாமில்லையென்று துக்கப்படுவன். அப்பதார்த்தங்கள் கிடைத்துப் பக்ஷித்தாலுஞ் சீரணஸ்தி ஆகாது, சாகப்போகிறேமே யென்று மெத்தவுந் துக்கப்படுவன். நாம் போகிறேமே! பெண்டுகள் பிள்ளைகள் யெப்படி ஜீவிக்கப் போகிறார்களென்றும், இவர்களுக்குக் கதியேதென்று மெத்த விசனப்படுவன். மஹாபாவங்களையெல்லாம் பண்ணினேமே! அனந்த கோடிகாலம் நரகங்களிலே யநுபவிக்கவேண்டுமே! இதற்கென்னசெய்வோம்! எமதூதாள் அழைக்கவருவார்களே யென்று விசாரப்படுவன். அன்னதானம், ஜலதானம், வஸ்திரதானம், இரணியதானம், கோதானம், பூதானம், கன்னிகாதான மிவைமுதலான தானங்களைப் பண்ணுதேபோனேமே! சுவர்க்கத்துக் கேதுவாயிருக்கிற தானங்களைப் பண்ணுதேபோனேமே! கிரகதானம், க்ஷேத்திரதானம், பிராமண சம்ரக்ஷணை, பசுக்களை ரக்ஷித்தல், மாதாபிதா வாசாரியா ளிவர்கள் சவரக்ஷணை, அதிதிக் கன்னங்கொடுத்தல், சரணமென்று வந்தபேரை ரக்ஷிக்கப் பிராமணுளுக்கு வருஷச்சாப்பாடுஞ் சர்வமானியமுங் கொடுத்தல், தடாகங்கள் வாவி கூபங்கள் வெட்டிக் கட்டிவைத்தல், தோப்புநந்தவ

ணம்போடுதல்,மடங் கோயில் சத்திரங் கட்டிவைத்தல், அந்தர வெளியிலே தண்ணீர்ப்பந்த லேர்ப்படுத்த லிவை முதலானதருமங்களைப் பண்ணுதேபோனேமே! எக்கியங்களைப் பண்ணிவைக்க, நாந்தா னெக்கியம் பண்ண, அக்கினிஹோத்திர மிஷ்டபசுபந்தன மிவைகளொன்று நடப்பியாமற் போனேமே! வேதாத்தியானம் பண்ண, வேதாத்தியானங்களை யன்னியாளுக்குச் சொல்ல, சத்தியவார்த்தைகளைச் சொல்ல, பிரத்தியாருக்கிதமாய் சந்தோஷமான வார்ததைகளைச் சொல்ல, அபவாத வார்த்தைகளைச் சொல்லாதிருக்க, சத்தியசந்தனுகவிருக்க, பிரமசாரியமாக விருக்க, பரஸ்திரீகளுக்கும் பரதனங்களுக்கு மாசைப்படாமலிருக்க, தபசுகளைப்பண்ண,கிருச்சிரம், சாந்திராயணம், மாதவாரஉபவாசம்,பக்ஷவுபவாசம், இவைமுதலான தபசுகளைப் பண்ணுதே போனேமே! ஆயுட்காலமெல்லாம் வியர்த்தமாய்ப் போயிற்றென்றுந் துக்காக்கிராந்தனுக விருப்பன். ஆன்படியினுலே வார்த்தீகமெல்லாந் துக்கந்தானே. பாலன் விளையாட்டுடையவன். அப்பால் யெவ்வனத்தில் காமாசக்தன் விஷயாசக்தனுனன்: அப்பால் கவுமாரம் வந்ததின்பேரிலே விசனசிந்தையுடனே கூடியிருப்பன். விருத்தாப்பியத்திலே; சரை ரோகதுக்கம், பரலோகதுக்கம், மரிக்கவேண்டுமே யென்கிற துக்க மிப்படித் துக்காக்கிராந்தனுக விருப்பன்.

இப்படி யிருக்கச்சே மரண காலம்வரும். மரணகாலம் வந்தமட்டிலேதானே; சுரங்கண்டுது சரீரம் விழுந்துபோயிற்றென்று சொல்லுவார்கள். தோஷித்தது, பேதிகண்டுது, உப்பிசங்கண்டுது, இளைப்பிருமல்கண்டுது,. அதினுலே சரீ

ரம் விழுந்துபோயிற்றென்று சொல்லுவார்கள். நேற்றைக் கசலாத்திலே யதிகமாய்ச் சாப்பிட்டு வரவே யதிசாரங்கண்டு சரீரம் விழுந்து போயிற்றென்று சொல்லுவார்கள். இடறிவிழுந்தான், அன்னம் விக்கித்து, ஜலம் விக்கித்து, வாயு வந்து மார்பை அடைத்தது இவைகளினாலேசரீரம் போயிற்றென்று சொல்லுவார்கள். நேற்றுறங்கி யந்தவாகிலே சரீரம் போயிற்றென்றுசொல்லுவார்கள். இரண்டுமாதமொரு மாதம் பதினைந்துநாள் பத்துநாள் சோஸ்தமில்லாமற்கிடந்தான் சரீரம் விழுந்து போயிற்றென்று சொல்லுவார்கள். அசலாத்துப் பாட்டா கிடக்கிறாரென்று யெல்லாரும் வந்து கூடி யோகக்ஷேமம் விசாரித் தவிழ்தாதிகளைக் கொடுப்பார்கள். புத்திராள் சன்னிதானத்திலே யிருந்தா லவாள் சாவதானமாக அவிழ்தாதிகளைக் கொடுத்துக் காப்பாத்துவார்கள். காலம் வந்தவுடனே காலன்வந்தழைப்பன். காலனாலே பாசபந்தனாகவும், பந்துக்கள்பேரிலே சினேகபாசபந்தனாகவும், போகவுமாட்டாம லிருக்கவுமாட்டாமல் மகத்தாகிய கிலேசப்பட் டலைந்துபோவன். பேரைச்சொல்லியழைத் தென்னை யறிவீரோ! என்னை யறிவீரோ! என்று புலம்புவன். அப்போ தமக்கென்ன வேண்டுமென்றும், பால் தயிர் சக்கரை முதலிய வெதிலே யபேக்ஷை யென்றும், புத்திராதிகள் முதலானபேர்கள் வந்து கேட்பார்க ளஃதன்றியிலெனக்குக் கதியென்ன, எனக்குப் புத்தியென்னவென்று மலட்டுவார்கள். இப்படிக்கொத்த சமயத்திலே, மேலிளைப்புக்காணும்; அழைத்தாற் காதுகேட்கவில்லை, வார்த்தை சொல்லவில்லை, கண்ணைத் திறந்து பார்க்கவில்லை, வாயடைத்தது, போதம் போய்த்தென்று சொல்லிக் கொள்ளுவார்கள். ஆஸ்திபாஸ்தி, கடனுடன், வைப்புச்செப்பு, கொடு

க்கல்வாங்கலொன்றுஞ் சொல்லவில்லை, யிருந்தாப்போலே பிரஞ்ஞை தப்பிப்போயிற் றென்றுஞ் சொல்லி யங்கலாய்ப் பார்கள்.

பிராயச்சித்தாதிகள், கோதானம், பூதானாதிகளொன் றும் பண்ணவில்லையென்று மிருந்தாப்போலே பிரஞ்ஞை போயிற்றென்றுங்கிலேசப்படுவார்கள். இவனு மிவைமுதலா கிய வனேக துக்கங்களோடேகூடப் பிராணனைவிடுவன். சிலபேர் புண்ணியவான்களாயிருக்கிறபேர், எக்கியங்களைப் பண்ணுவார்கள், தானங்களைப்பண்ணுவார்கள், தபசுகளைப் பண்ணுவார்கள், அனேக தருமங்களைப்பண்ணுவார்கள். நித் திய நைமித்திய கருமங்களை, நல்லாசாரங்களை, அக்கினி ஹோத்ராதிகருமங்களை உபாசனாதிகருமங்களை, நன்றாகத் தானே யாசரிப்பார்கள். வர்ணாச்சிரம தருமங்களை நன்றாக வாசரிப்பார்கள். சமதமாதிகளோடேகூட தருமங்களைப் பண்ணித் தருமசீலாளாயிருப்பார்கள். ஜனித்தநாள்முதற் பாவங்களன்றியிலேயும், பரஸ்திரீ கமனங்களையும், தனங் களையும், ஆர்ச்சித்துப் பலவுபகாரிகளாய்த் தருமத்தைத்தா னே பண்ணுவார்கள். வாலிபத்திலேவித்தியாப்பியாசம் பண் ணுவார்கள். எவ்வனத்திலே தன்னுடைய ஸ்திரீகளோடே கூடியிருப்பார்கள். எக்கியங்களையெல்லாம்பண்ணுவார்கள். அன்னதானம், சுவர்னதானம், மூபாயனதானம், கன்னிகா தானம், கோதானம், பூதானம், கிரகக்ஷேத்திரதான மிவை முதலாகிய தருமங்களையெல்லாம் பண்ணுவார்கள் தபசுகள் கிருச்சிரம், சாந்திராயணம், உபவாசம், திதி, வாரநட்சே த்திரவிரதாதிகளெல்லாம் பண்ணுவார்கள். சிவன்கோயில், விஷ்ணுகோயில், கட்டிவைத்து, தோப்புநந்தவனம்போட்டு வைத்து, வாவிகூபதடாகாதிகளை வெட்டிவைத்து, சத்தி

ரஞ் சாலை தண்ணீர்ப்பந்த லிவைகளெல்லாம் மியற்றிவைத்து, தருமிஷ்டாளாய்த் தானேயிருப்பார்கள்.

அப்படிப்பட்டபே ரந்தியகாலம் வந்தமட்டிலேதானே; புத்திரதாராதிகளுக்கெல்லாம் புத்திசொல்லி, யோகக்ஷேமங்களெல்லாஞ் சொல்லி, கொடுக்கல், வாங்கல், ஆஸ்தி, பாஸ்தி, ருணதனங்கள், வைப்புச்செப்பு, சகலமுஞ்சொல்லி, அசலூருக்குப் போகிறதுபோலே ஆயாசமன்றியிலே புண்ணியவான்களா யிருக்கிறபேர் பரலோகத்துக்குப்போவார்கள். பிராயச்சித்தாதிகள், கோதானம், பூதானம், கஜதானமெல்லாம் பண்ணிச் சுகமாகத்தானே பரலோகத்துக்குப் போவார்கள். சரீரம் விழுந்தவுடனே வூரிலே யிருக்கிற ஜனங்கள் தண்ணீரெடாமற் சமையாமற் சாப்பிடாமற் சீக்கிரமாக யெடுக்கச்சொல்லுவார்கள். சம்பங்கித்தயிலம், நித்தியப்பியங்கனஞ், சுகந்தாதிமாலை யலங்காரம், வஸ்திரபூஷணாலங்காரம், அம்சதூளியிலே சயனம், நல்லஸ்திரீகளாகிய தன்னுடைய ஸ்திரீகளோடே போகம், நல்லசட்ரசங்களோடே போசனம், நல்ல தாம்பூலபக்ஷணம்; நல்ல ஆபரணங்களைத்தரிக்கிறது, நல்லபரிமளமாகிய சவ்வாது, புழுகு, கஸ்தூரிமுதலாகிய பரிமள சுகந்தங்களைத் தரிக்கிறது, இப்படிப்பட்ட சரீரத்தைப் பிராணவாயு வெளிப்பட்ட மாத்திரத்திலே யந்தச் சரீரத்தைப் பார்க்கலாகாது, தொடலாகாது, கிரகத்திலே யிருக்கலாகாது கிராமத்திலேயிருக்கலாகாதென்றுசொல்லி ஊராரெல்லாம்வந்துகூடி யெடுத்துக் கொண்டுபோய்விடுவார்கள்.

தான் சம்பாதித்த அசுவங்கள், பசுக்கள், தனதானியங்கள், உடமை பூசணங்கள், ஸ்திரீபாலாள், சகலமுங் கிரகத்திலேதானேயிருக்கும் மயான வரைக்கு மித்துருபந்

துக்கள் வருவார்கள். அதற்குமே லொருத்தரும் வருகிறபேரில்லை. அதற்குமேற் றனேகாங்கியாய்ப் போவன். புண்ணிய புருஷாளாயிருக்கிறபேர் தக்ஷிணாயனத்திலேயிறந்து யாகாதிமார்க்கத்தினாலே சுவர்க்கத்துக்குப் போவார்கள். சுவர்க்கத்தை யநுபவித்துத் திரும்ப விங்கே வருவார்கள். திரும்பச் சுவர்க்கத்திற்குப் போவார்கள். திரும்ப வருவார்கள். இப்படிப்போக்குவருத்தா யிருக்கிற மார்க்கத்தையும், அநித்தியமாயிருக்கிற சுவர்க்கத்தையு மடைவார்கள். பாவிகளாயிருக்கிற பேர் எமலோகத்திலேபோய் நரகங்களை யடைந்து வெகுவாய் நரகதுக்கங்களை யநுபவித்துப் பாவசேஷத்தினாலே பசு பக்ஷி மிருகாதிகளாகவும், விருக்ஷங்க ளாகவும், சிறுகொடிகளாகவும், ஜன்மத்தைய டைவார்கள். ஆனபடியினாலே சமுசாரமெல்லாந் துக்கந்தானே. துக்க சமுசாரமாகிற ஜனன மரணப் பிரவாக லக்ஷணசமுத்திரத்திலேயின் றெப்போமுக்தியடையப்போகிறோமென்று முமுக்ஷுவாய் சாதன சதுஷ்டய சம்பன்னனாய்க் கொண்டு குருப்பிரசாதத்தினாலேயும், வேதாந்த சிரவணத்தினாலேயும், பிரமக்ஞானம்வந் தந்தப் பிரமக்ஞானத்தினாலே கைவல்லியத்தை யடைவன். அப்படி யடைந்த புருஷனுக்குத் திரும்ப வருத்தில்லையென்று சகலவேதாந்த சித்தாந்த மெல்லாஞ் சொல்லுகின்றன. பிரம்மோபாசகாள், சித்தாள், யோகசித்தாள், தபசித்தா ளிவர்களெல்லா முபாசனாதிமார்க்க முத்தராயணத்தி லிறந்து பிரமலோகத்தை யடைவார்கள். இவர்களுக்கு மறுபிறப்பில்லை. பூரண ஞானிகளாய்வேதாந்தப் பிரமநிஷ்டாளாயிருக்கிறபேர்பூரணப்பிரமமாகத்தானே பிரமசாயுச்சியத்தை யடைவார்கள்.

பதினேழாவது ஆவிருத்திமார்க்கப்பிரகரணமுற்றிற்று.

பதினெட்டாவது. சந்நியாசிப்பிரகணம்.

———:o:———

வேதாந்தத்திலே சந்நியாசிகளுக்குத்தானே யதிகாரமென்று சொல்லுவார்கள். சந்நியாசத்துக்கு லக்ஷணமேது? சகல கருமத்தியாகஞ் சந்நியாசமென்றுசொல்லுவார்கள். சந்நியாசம்பண்ணி வேதாந்தசிரவணம் பண்ணவேண்டுமென்று சொல்லுவார்கள். சிரவணார்த்தமாய்ச் சந்நியாசம்பண்ணவேண்டும். கிரகஸ்தனாயிருக்கிறவனுக்கு வைதீக கருமம் விக்ஷேப மிந்த விக்ஷேபங்களினாலே வேதாந்தசிரவணம் பண்ணுகிறதற்குப் பொழுதுபோதா தானபடியினாலே சந்நியாசம்பண்ணிச் சகல விக்ஷேபங்களையும் பரிகரித்து வேதாந்தசிரவணம் பண்ணவேண்டுமென்று சொல்லுவார்கள். சந்நியாசம்பண்ணாமற் சிரவணம்பண்ணிஞானம்வந்தாலும்; ஞானந்திடமாகிறதற்குச் சந்நியாசம் பண்ணவேண்டும். அஃதெப்படியென்னில்? விளக்கேற்றுகிறதற்கு காற்றில்லாமலிருக்கவேண்டும். விளக்கேற்றினபிறகு விளக்கசையாமலிருக்கிறதற்குங் காற்றில்லாமலிருக்கவேண்டும். ஞானமன்றியிலேயிருக்கிற சந்நியாசத்தினாலே பிரமலோகத்தையடைவனென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் நிஷித்த கருமங்களையும், காமிய கருமங்களையும், வற்சிக்கிறதே சந்நியாசமென்று சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள் சகல கருமங்களையும் பண்ணிக் கருமபலங்களை ஈசுரப்பிரீதிபண்ணுவது சந்நியாசமென்று சொல்லுவார்கள்.

சகல கருமங்களையும் விட்டுவிடவேண்டும், ஒரு கருமங்களையும் பண்ணலாகாது, எல்லாக்கருமங்களுந் தோஷ

ங்களோடேகூடியிருக்குமானபடியினாலே சகலகருமங்களையும் பரித்தியாகம்பண்ணுவதுவே சந்நியாசமென்று சாங்கியாள் மதம். எக்கியதான தபசுகளை விடலாகாதென்று மீமாம்ஸாள்மதம். சில பெரியவாள்:— ஞானசந்நியாசமே சந்நியாசமென்றும், நானென இது நான் கர்த்தா போக்தாவென்கிறதுரகங்கார மோகப்பிராந்தியை விட்டுவிட்டு,நான் அகர்த்தா, அபோக்தா, நான் பரமாத்மாவென்கிற வறிவே சந்நியாசம், கருமசந்நியாசம் சந்நியாசமல்லவென்று சித்தாந்தம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் சம்மதஞ்சொல்லுகிறோம். எக்கியதான தபசுகளைவிடலாகாது, பண்ணவேண்டுமானால் நான் கர்த்தாவென்கிற துராபிமானத்தைப் பரிகரித்து, பலவிச்சைகளையும் பரிகரித்து, தேகேந்திரியாதிகள்பண்ணுகிறது, நாம் பண்ணவில்லை; நாம் பரமாத்மாவென்கிற புத்தியோடுங்கூட யெக்கியதானதபசுகளைப்பண்ணவேண்டும். அதுவே சந்நியாசமென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் மதம். இதுதானே வியாசவசிஷ்டாதிகளுக்கு மறிவோடேகூட ஞானியாக விருந்துகொண்டு லோகவுபகாரார்த்தமாகக் கருமக்கூட்டங்களைப் பண்ணவேண்டுமென்கிறது அபிமதம்.

இன்னஞ் சந்நியாசலட்சணஞ் சொல்லுகிறோம். ஞானசந்நியாசமே சந்நியாசம், கருமசந்நியாசங் கூடாது, நித்திய நைமித்திய கருமங்களைப் பரிகரிக்கக்கூடாது; அக்ஞானத்தினாலே நித்திய நைமித்தியகருமங்களை பரிகரித்தானேயானால்? மோகத்தினாலே யந்தக் கருமத்தியாகந் தாமத சந்நியாசமென்று சொல்லப்படும். எக்கியதான தபசுகளைப் பண்ணுகிறது மஹாதுக்கம்; காயக்கிலேசமென்கிற புத்தியினாலே நித்தியநைமித்திய கருமங்களைவிட்டுவிடுவது ராசத

சந்நியாசமென்றுபெயர். நிஷித்தகருமங்களை வற்சித்து நித்தியநைமித்தியங்களை நான்பண்ணுகிறேனென்கிற தூரா பிமானத்தையும், பல விச்சையையும்விட் டறிவோடே ஞானியாகவிருந்துகொண்டு லோகோபகாரார்த்தமாகப் பண்ணுகிறதுவே சாத்துவிதசந்நியாசம். இகலோககருமங்களையும்,பரலோககருமங்களையும் பரித்தியாகம்பண்ணி யாத்மாவைத்தேடி யாத்மஞானத்தையே சம்பாதிக்கவேண்டுமென்றும், சந்நியாசிக்கித்தானே ஞானதிகாரமென்றும், ஆபஸ்தம்பர் மனுவிலேயுஞ் சொல்லியிருக்கிறதென்று சங்கித்தால்? அவர்கள் சந்நியாச ஆச்சிரமப்பிரகரணத்திலே சந்நியாசிக்கி வேறேதருமமொன்று மில்லாதபடியினாலே ஞானந்தானே யவனுக்கு தருமமென்றுசொன்னார்கள்.

சந்நியாசிக்கித்தானே ஞானதிகார மிதராளுக்கு ஞானதிகாரமில்லையென்கிறதிலே தாற்பரியம். வியாசர், வசிஷ்டர், அகஸ்தியர், அத்திரி, பிருகு, குச்சரர், கௌதமர், காசிபர், ஆங்கிரசர், போதாயனர், ஆஸ்வலாயனர், ஆபஸ்தம்ப ரிவர்கள் முதலான கோடி ரிஷிகள், தபசிகளாயும், பிரமஞ்ஞானிகளாயு மிருந்தார்களென்று சகல வேதசாஸ்திரப்பிரசித்தி. அந்த ரிஷிகளுடைய கிரந்தங்களிலேயும் ஞானகருமக் கூட்டுறவைத்தானே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கிரந்தங்களிலே சகல வர்ணங்களுக்கும், சகல வாச்சிரமங்களுக்கும், ஞானதிகாரமுண்டென்றும், அதினாலே முக்தியென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். ஆனபடியினாலே ஞானசந்நியாசமே முக்திசாதனம். ஞானசந்நியாசிகளாயிருக்கிறபேர்களுக்கு மூன்றுவிதமாகவிருக்கிற கரும பந்தமுமில்லை.

அஃதெப்படியென்றால்? நரகவேதுவாயிருக்கிறபாவத்தினாலே நரகப்பிராப்தி, சுவர்க்கவேதுவாயிருக்கிற புண்ணியத்தினாலே சுவர்க்கப்பிராப்தி, புண்ணியபாவத்தினாலே மனுஷலோகப்பிராப்தி, இந்த மூன்று கருமபந்தமும், மூன்று கருமபலங்களும், ஞானசந்நியாசிகளுக் கில்லை. அக்ஞானிகளுக்குண்டு. ஞானிகளுக்கில்லை. சகல ஸ்மிருதிகளிலேயும்; நாலுவர்ணங்களும் நாலாச்சிரமங்களுஞ் சொல்லியிருக்கிறது. பிரமசரியத்தினாலே ரிஷிகள்ருணத்திலே நின்றும் விடுபடுவன். எக்கியத்தினாலே தேவர்கள்ருணத்திலே நின்றும் விடுபடுவன். புத்திராள்பிறந்தாற் பிதிர்கள்ருணத்திலே நின்றும் விடுபடுவன். அப்பாற் சந்நியாசமென்று சொல்லி ரிஷிகள்மதம். பிள்ளைகளைப்பெற்று அவாள்பெரியபிள்ளைகளானபிற்பாடவர்களிடத்திலே சம்சாரபாரத்தையும், ஸ்திரீகளையும், வைத்துப்போட்டப்பாற்சந்நியாசம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்று ரிஷிகள் மதம். அபுத்திரராக விருந்தார்களேயானாலும், புத்திரவாலராக விருந்தார்களேயானாலும், வாலஸ்திரீகளைப் பரிகரித்துச் சந்நியாசம் பெறவேண்டாமென்று ரிஷிகள் மதம். ஆபற்சந்நியாசஞ் சகலருக்குஞ் சம்மதந்தானே. சிலபேர் பெரியவாள்:—பிரமசாரியாக விருந்தும், விவாகம்பண்ணாமலிருந்தும், சந்நியாசம் பண்ணலாம். கிரகஸ்தாச்சிரமத்திலே யிருந்துஞ் சந்நியாசம் பண்ணலாமென்றுஞ் சொல்லுவார்கள். வானப்பிரஸ்தாச்சிரமத்திலேயிருந்துஞ் சந்நியாசம் பண்ணலாமென்றுஞ் சொல்லுவார்கள். சிலபேர் பெரியவாள்:— பிரமசாரியாய், அப்பாற் கிரகஸ்தனாய், அப்பால் வானப்பிரஸ்தனாய், அப்பாற் சந்நியாசனுமென் றிப்படிக் கிரமமாகச் சந்நியாசம் பண்ணவேண்டுமென்றுஞ்சொல்லுவார்கள். ஸ்திரீ விழுந்துபோனவனுக்குச்

சந்நியாசம் பண்ணலாமென்று சிலபேர்சொல்லுவார்கள். சிலபேர் ஸ்திரீயிருந்தாலும்; நல்ல வைராக்கியமுண்டானு லவன் சந்நியாசம்பண்ணலாமென்றுஞ்சொல்லுவார்கள். சந்நியாச வாச்சிரமத்துவ லக்ஷணஞ்சொல்லுகிறோம். சிகாயெக்ஞோப வீதங்களைப் பரிகரிக்க, கிரகக்ஷேத்திர கிராமாதிகளைப் பரிகரிக்க, புத்திரதாராதிகளைப் பரிகரிக்க, ஈஷணாத்திரயங்களைப் பரிகரிக்க, சகல பூதங்களுக்குந் தன்னிடத்திலே நின்றும், அபயப்பிரதானம் பண்ண, காஷாயதெண்ட கமண்டலங்களைத் தரிக்க, மடத்திலேதானே போயிருக்க, அல்லவென்றுற்கிராம மேகராத்திரியாகத் திரிய, பக லிருபதுநாழிகைக்குமேல் கிராமத்திலேவந்து பிக்ஷையெடுத்துப் புசிக்க, மடத்திலேதானே வசிக்க, அல்லவென்றுற் றேவாலயஞ் சூனியக்கிரகங்களிலே வசிக்க, ஏகாங்கியாயிருக்க, பிரமவிசாரம்பண்ண, சிரவணமனன நிதித்தியாசனங்களைப் பண்ண, பிரமநிஷ்டனுக விருக்க, லோகவார்த்தைகள் கிராமவார்த்தைக ளிவைகளெல்லாம் பரிகரிக்க,இந்திரிய நிக்கிரகத்தோடே யந்தர் முகமாக விருக்க, சமதமாதிகளுடனே கூடி யிருக்க, சற்குருவினிடத்திலே நின்றும் வேதாந்த சிரவண முபநிடத்துக்க ளிவைகளெல்லாம் அப்பியாசித்துக் குருவுபதேசத்தினுலே பிரமஞானத்தை யடைந்து பிரமநிஷ்டனுய்ப் பிரமசரியத்தோடே சாவதானமாயிருக்க வேண்டும். ஸ்திரீகளோடே பேசுகிறது, ஸ்திரீகளைப் பார்க்கிறது, இஃதெல்லாம் பரிகரிக்க வேண்டும். எந்தஸ்திரீகளைக் கண்டாலும், மாதாவாகப் பாவிக்கவேண்டும். சர்வத்திரப் பிரமபாவனை பண்ணவேண்டும்.

இப்படிச் சந்நியாசியாய், ஞானியாய், பிரம நிஷ்டனுனுற் கைவல்லியத்தை யடைவன். ஞானமன்றியிலேபோனு

லும்; சந்நியாசி பாவங்களைப் பண்ணுமற் றன்னுடைய தரு மத்தோடே கூடியிருந்தானேயானு லவனுக்குப் பிரமலோ கப்பிராப்தி. பாவங்களைப் பண்ணினுனேயானுற் பாவியா யிருக்கிற சந்நியாசியைத் தேவேந்திரன் தெண்டிப்பனெ ன்று சாஸ்திரம். சந்நியாசியாயிருக்கிறவன் பணத்தை அப கரிக்க, ஸ்திரீயை அபகரிக்க, இந்த விரண்டுனுலேயு முட னே பதிதனுகப் போவனென்று சாஸ்திரம். சந்நியாசியா ய்த் திரும்பக் கிரகஸ்த் தாச்சிரமத்திலே வரலாகாது.வந்தா லும்; நாலுபேருங்கூடி யவனைக் கிரகஸ்தனுக வைத்துக் கொள்ளலாகாது. அவனை யெப்போதும்போலே சந்நியா சியாகத்தானே மடத்திலே கொண்டுபோய்வைத்துச் சந்நி யாசியாகத்தானே யிருக்கவேண்டுமென்று சொல்லவேண் டும். சிலபேர் சிகாதியெக்ஞோபவீதங்களிருக்க, காயத்திரி யிருக்க, சந்நியாசம் பண்ணித் திரிதண்டிசந்நியாசியாயிருக்க வேண்டுமென்று சொல்லுவார்கள்.

அவா ளிந்தயுகத்தில் வைஷ்ணுவபக்ஷம். அது, சியாக கூட்டம். சித்தாந்தஞ்சொல்லுகிறேம். பிராமணனுனுலும், வைசியனுனுலும், பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆரானுலுந் தன்னுடைய தருமத்தோடேகூடி வேதாந்த சிரவணமனன, நிதித்தியாசனங்களினுலே யறி வைச் சம்பாதித்துப் பிரமக்ஞானியாய், கைவல்லியத்தைய டைவார்கள். ஸ்ரீகிருஷ்ணபகவானும், ஆபஸ்தம்பரும், சூத் திராளுக்குப் புராணஸ்மிருதிகளினுலே ஞானசம்பாதன முண்டு; ஞானம்வந்தா லவர்களுக்கு மூக்தியென்று சகல வேதாந்தத்தினுடைய சித்தாந்தமென்று சொன்னுர்கள். யாதொருத்தன் சகலவாஸைகளுமொழிந்து; மடவாசியாய்,

சந்நியாசியாய், பிக்ஷைவாங்கிப் புசிக்கிறவனாய், பிரம நிஷ்டனாக ஞானகுணங்களோடே கூடியிருக்கிறானோ; அவனே சந்நியாசி. யாதொருத்தன் ஸ்திரீகளைப் பாராமல். திரவியத்தைத் தொடாமல், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையொழிந்து; சந்நியாசியாய், தெண்டுகமண்டலத்தோடேகூடப்பிக்ஷைவாங்கிப் புசிக்கிறவனாய், மௌனியாய்க், கிராமமேகராத்திரி சஞ்சாரியாய், இருக்கிறானோ; அவனேசந்நியாசி. யாதொருத்தன் கையிலே வாங்கிப் புசிக்கிறவனாய், காசாய கவுபீனதாரியாய், மரத்தடியில் வாசியாய், பிரமநிஷ்டனாக விருக்கிறானோ; அவனே சந்நியாசி. யாதொருத்தன் வாயிற்போட்டசாதத்தைப் புசிக்கிறவனாய், சகல காமங்களுமொழிந்து சந்நியாசியாய், மடவாசியாய், பிரமநிஷ்டனாக விருக்கிறானோ; அவனே சந்நியாசி. யாதொருத்தன் பிரமசாரியாயிருந்துகொண்டு பிக்ஷை புசித்துக் குருகிரகவாசியாய்க் குரு சிசுருஷைகளோடுங்கூட வேதாத்தியானங்களைப் பண்ணிச் சுதருமத்தோடுங்கூடப் பிரமஞானியாய் யாதொரு பிரமசாரியா யிருக்கிறானோ; அவனே ஞான சந்நியாசி.

யாதொருத்தன் கிரகஸ்தனாய், நியாயமாய்த் தனத்தைச் சம்பாதிக்கிறவனாய், அதிதிப்பிரீதியாய்ப் பிதிர்க்களுக்கு சிரார்த்தங்களைப் பண்ணுகிறவனாகப் பிரமஞானியாயிருக்கிறவனே; ஞானசந்நியாசி. யாதொருத்தன் ஸ்திரீபாலாளுடனே கூட ஆசக்தன்போலேயும், கருமிபோலேயும், வெளிக்கி யிருந்துகொண் டுள்ளே யாகாசம்போலே அசங்கனாக விருந்துகொண்டு ஞானியா யிருக்கிறானோ; அவனே ஞானசந்நியாசி.யாதொருத்தன்பாகிய விந்திரியங்களினாலே

சகலதருமங்களையு மாசரித்துக்கொண் டுள்ளே தாமரை யிலையும் ஜலமும்போலே யொட்டாம லசங்கனாய்ப் பூர ணப்பிரமமாக யிருந்துகொண்டு ஞானியாக விருக்கிறானோ; அவனே ஞான சந்நியாசி. யாதொருத்த னுள்ளே யசங்கனாக விருந்துகொண்டு வெளியிலே சகலராச்சியபாரங்கள், ராச்சி ய தந்திரங்கள், ராச்சியவிசாரங்கள், ராச்சிய பரிபாலனம், ஜீவானுடைய பரிபாலனம், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபா லனம், சகலபோக பாக்கியங்களையு மநுபவித்துக்கொண்டு ஞானியாய், புளியம்பழமு மோடும் போலே யிருக்கிறானோ; அவனே ஞானசந்நியாசி. யாதொரு வைசியன் பசுக்களை ரக்ஷிக்க, வெள்ளாண்மைகளைப் பண்ண, வியவகாரங்களைப் பண்ண, சகல தானதருமங்களையு மாசரித்துக்கொண் டுள் ளே யசங்கனாக ஞானகுணங்களோடேகூட ஞானியாயிரு க்கிறவனே; ஞானசந்நியாசி. யாதொருத்தன் வனத்திலே யிருந்துகொண்டு, வனத்திலுண்டாகிய காய்கனிகளைப் புசித் துக்கொண்டு, தபசியாய்ச் சடைகளைத் தரித்துக்கொண்டு, மரவுரிகளை வஸ்திரமாக வணிந்துகொண்டு, எக்ஞோபவீத காரியமாய் வானப்பிரஸ்தாச்சிரம தருமங்களையு மாசரித் துக்கொண்டு, ஞானகுணங்களோடேகூட ஞானியாயிருக் கிறானோ; அவனே ஞானசந்நியாசி. யாதொரு சூத்திரனானவன்:—தன்னுடைய தருமத்தோடேகூட மற்ற மூன்று வர் ணத்துக்குஞ் சிசுருஷையைப்பண்ணிக்கொண் டுஞானகுணங் களாகிற சமதமாதிகளுடனே கூட ஞானகாண்டங்களாக விருக்கிற ஸ்மிருதி புராணங்களினாலே பிரதிபாதிக்கிற பிர மக்ஞானத்தைச் சம்பாதித்துப் பிரமநிஷ்டனாக விருக்கிறா னோ; அஃதன்றியில் நல்ல சற்குரு வுபதேசத்தினாலே பிரம க்ஞானத்தைச் சம்பாதித்துப் பிரம நிஷ்டனாக விருக்கிறா

ளே; அவனே ஞான சந்நியாசி. யாதொரு ஸ்திரீகள் பத்தாவுக் கநுகூலமாக நடந்து பத்த சிசுருஷைகளைப்பண்ணிப் பத்தா வாக்கிய பரிபாலனங்களைப் பண்ணித் தருமசீலிகளாய் ஞானகுணங்களோடேகூடக் குரு வுபதேசத்தினாலே ஞானம்வந்து; அஃதன்றியில் தத்துவசாஸ்திரங்களைக் கேட்டறிந்துகொண்டு பிரமக்ஞானிகளாய்ப் பிரமநிஷ்டையுடனேகூட விருக்கிறார்களோ; அவர்களே ஞான சந்நியாசிகள்.

ஞானத்தினாலே முக்தி. இது சகலவர்ணஸ்திரீகள், சுமங்கிலிகள், கன்னிகைகள், விதவைகள் முதலாகிய ஸ்திரீசூத்திரா ளெல்லாருக்கும் பொதுத்தானே. இதற்குப் பகவான்:—ஞானிகளாயிருக்கிற ஸ்திரீகள், வைசியாள், சூத்திராளிவர்களெல்லா முக்தியடைவார்களென்று சொல்லியிருக்கிறார். இதுவல்லாமல் யாக்கியவற்கருடைய ஸ்திரீ மைத்திரைக்குப் பிரமநிஷ்டை, வியாக்கியவற்கருடைய சிக்ஷி கார்க்கியென்கிற ஸ்திரீக்குப் பிரமநிஷ்டை, சூடாலைக்குப் பிரமநிஷ்டை, இப்படி யனேகஸ்திரீகள் பிரம நிஷ்டைகளா யனேகம் பேருண்டு. இதுவல்லாமற் பாஷியம்பண்ணின ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள்:— ஞானம் வேண்டுமென்கிற சகலவர்ண ஸ்திரீகளுக்கும், சூத்திராளுக்கும், ஸ்மிருதி புராணாதிகளினாலே ஞானசம்பாதன முண்டதினாலே மோக்ஷமென்று சொல்லியிருக்கிறார்கள். வித்தியாரண்ணிய சுவாமிகள், விவரணாசாரியர், வாசஸ்பதி மிசுரர், கற்பகத்தரு பரிமள மிவர்களெல்லாருஞ் சொல்லி யிருக்கிறார்கள். பாஷியக்கிரந்த வியாக்ஞானமாகிய வாசஸ்பத்தியம், கற்பகதரு பரிமள மிந்தப்பாஷிய இறுதய வியாக்கியானங்களிலேயு மிந்தப்படிதானே சொல்லி யிருக்கிறார்கள்.

இந்தப்படி வியாச வசிஷ்டாதிகளும் ஞான சந்நியாசமே சந்நியாசமென்று சகல ஸ்மிருதிகளிலேயுஞ் சொல்லி யிருக்கிறார்கள்.

பதினெட்டாவது சந்நியாசிப்பிரகரணம் முற்றிற்று.

ஆகப்பிரகரணம், கஅ.

பாஷிய இருதயம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

குருபரம்பரை வணக்கம்.

பரமாகவொளிர்சச்சி தானந்தமாம்விண்டு
 பங்கயன்வசிட்டர்சத்தி
பராசமாமுனிமகா வியாசர்சீர்சுகர்கௌட
 பாதர்கோவிந்தயோகி
யருளுருவமாஞ்சங்க ராசாரியாமிறைக
 ளமர்பத்மபாதருயரத்
தாமலகர்தோடகா சிரியர்வார்த்தீகர்வித்
 தியாரண்யராகுருரவோ
ரிருளுருவமற்றவவர் மரபதனில்வந்தசுப்
 பிரமணியதேவனயின
வீசனழகப்பவா ரியன்வீரபத்திரகுரு
 வின்பழுத்தையவடிக
டெருளுருவமாமுகந் தையனன்மைகளிலாத்
 தீயனேன்றனையுமாண்ட
சீர்முத்துராமலிங்க வருணசலசிதம்பர
 தேசியர்க டிகழ்பதமிறைஞ்சுவோமே,

வடமொழி தென்மொழி
பாடபேதங்களாற் சொற்பேதங்கள்.

முக்தி - முத்தி.
சந்நியாசம் - சன்னியாசம்.
கேட்க - கேக்க - கேழ்க்க.
சூதசங்கிதை - சூதசங்கீதை.
பிரயோஜனம்-பிரயோசனம்
பாதகம் - வாதகம்.
சாஸ்திரம் - சாத்திரம்.
ஜாக்கிரம் - சாக்கிரம்.
ஜாக்கிர - சாக்கிர.
சொப்பனம் - சொற்பனம்.
சொப்பன - சொற்பன.
சாக்ஷி - சாட்சி.
விக்ஷேபம் - விட்சேபம்.
ஸபலம், ஜபலம் } சபலம்.
ஜன்மம் - சன்மம்.
மோக்ஷ - மோட்ச.
முமுக்ஷு - முமுட்சு.
ஜலம் - சலம்.
வியவகாரம் - விவகாரம்.
சுழுப்தி - சுழுத்தி
அருச்சுனன் - அர்ச்சுனன்.
பிரத்தியக்ஷம்-பிரத்தியட்சம்
விரக்தி - விரத்தி.
பக்தி - பத்தி.
ஜாக்கிரதை - சாக்கிரதை.
சக்ஷு - சட்சு.
விஷயம் - விடயம்.
ஜக்தி - சத்தி

பரரோக்ஷம் - பரரோட்சம்.
க்ஷூமம் - சூட்சுமம்.
ஜோதி - சோதி.
ஜீரம் - சீரம்.
பரரோக்ஷக்ஞானம்-பரரோட்சஞானம்.
அபரோக்ஷக்ஞானம் - அபரோசஞானம்.
ஜகத்து - சகத்து
ஜீவன் - சீவன்.
யுக்தி - யுத்தி.
அநித்தியம் - அனித்தியம்.
ஆநந்தம் - ஆனந்தம்.
அநேகம் - அனேகம்.
அபேக்ஷை - அபேச்சை.
ஜீவன்முக்தன்-சீவன்முத்தன்
ஜீவன்முக்தி - சீவன்முத்தி.
உபேக்ஷை - உபேச்சை.
கர்மம் - கருமம்.
நிர்க்குணம் - நிற்குணம்.
தர்மம் - தருமம்.
பந்தம் - பெந்தம்.
மோக்கம் - மோட்சம்.
திருப்தி - திருத்தி.
அக்ஷரம் - அட்சரம்.
அக்ஷரஸ்திரீ - அட்சரஸ்திரீ.
விதிரிக்தம் - விதிரித்தம்.
ஸ்தாணு - தாணு.
நிர்தோஷம் - நிர்த்தோடம்.
அஜலம் - அசலம்.

இவ்வண்ணமனேகசொற்பேதங்க ளிந்நூலின் கண்ணேயுள அவைகளிற் சிற்சிலவரையப்பட்டுள்ளன.

உதாரண ஆசிரியர்களின் பெயரகராதி.

பெரியவாள்.
அத்வைதிகள்.
சித்தாள்.
வைஷ்ணுவாள்.
யோகிகள்.
வியாசாசாரியாள்.
பாஷியக்காரர்.
விவரணாசாரியாள்.
வித்தியாரண்ணியாள்
வாசஸ்பதிமிசிராள்.
தபோசித்தாள்.
யோகசித்தாள்.
ஈசுரோபாசகாள்.
தார்க்கிகாள்.
வேதாந்திகள்.
மீமாம்ஸாள்.
சாங்கியாள்.
வியாக்கியவற்கர்.
மனு.
பராசர்.
அருச்சுனன்.
கிருஷ்ணபகவான்.
பிரமதேவர்.
எயாதிமஹாராஜா.
கவீசுரர்கள்.
ஆசாரியாள்.
பக்தலகிரி.
அனேகரிஷிகள்.
ரிஷிகள்ராஜாக்கள்.
சந்நியாசிகள்.
சிலபேர்பெரியவாள்.
தத்துவதிருஷ்டி
யுடைத்தானபேர்கள்.
சாங்கியாள்.
உபாசகாள்.
சைவாள்.
கஞ்சனூராள்வார்.
மாத்துவாள்.
சாங்கியன்.
பரமேசுவரர்.
தேவதைகள்.
ரிஷிகள்.
ஜனகாதிகள்.
வசிஷ்டர்.
மனுஷாள்.
ஸ்தூலவாதிகள்.
பவுத்தாள்.
சூத்திரக்காரர்.
அகஸ்தியர்.
அத்திரி.
பிருகு.
குச்சரர்.
கௌதமர்.
காசிபர்.
ஆங்கிரசர்.
போதாயனர்.
ஆஸ்வலாயனர்.
ஆபஸ்தம்பர்.
பிரம்மோபாசகாள்.

உதாரண நூல்களின் பெயரகராதி.

சுருதி.
சாந்தோக்கியஉபநிடதம்.
யோகசூத்திரம்.
பாஷியம்.
கீதாவசனம்.
மனுவசனம்.
பராசர்வசனம்.
நிராலம்பஉபநிடதம்.
சகலவேதசாஸ்திரங்கள்.
வேதாந்தங்கள்.
சாஸ்திரங்கள்.
ஸ்மிருதிபுராணங்கள்.
ஸ்மிருதி.
கைவல்லியஉபநிடதம்.
தைத்திரியஉபநிடதம்.
தர்க்கசாஸ்திரம்.
மீமாமிஸசாஸ்திரம்.
நீதிசாஸ்திரம்.
தருமசாஸ்திரம்.
காவியநாடகவலங்காரம்.
வைத்தியசாஸ்திரம்.
சூத்திரம்.
சூத்திரக்காரர் மதம்.
சாங்கியாள்மதம்.
யோகிமதம்.
சைவமதம்.
வைஷ்ணுமதம்.
வியாசர்மதம்.
பாஷியக்காரர்மதம்.
தார்க்கியாள்மதம்.
மீமாம்ஸாள்மதம்
பகவான்வாக்கியம்.
ஈசுரர்வாக்கியம்.
பகவான்மதம்.
ஆபஸ்தம்பர்மநுநூல்.
ரிஷிகள்மதம்.
வாசஸ்பத்தியம்.
கற்பகதருபரிமளம்.

இந்நூல்களை இந்நூலாசிரியரெவ்விடத்தெவ்விடத் தெந்தெந்தநியாயத்திற் கெந்தெந்தவிடத்திலுதாரணங்கள்கொடுக்க வேண்டுமோ; ஆண்டாண்டனந்தமடங்குதாரணங்கள் கொடுத்திருக் கின்றமையால். அவைகளை இங்குதெரிவிக்கப்பட்டுள்ளன.

இது வசனமாதலா லிடையிடையே வேண்டிய வேண்டிய இடங்களில் உயிரெழுத்தும் உயிர்மெய்யெழுத்தும் பிரிந்துவரும்படி செய்திருக்கின்றன. ஏனெனில் கற்றோரன்றியில் மற்றோருக்கும் உபயோகப்படுமென்பதனால்.

பரிசோதனபத்திரம்.

—:o:—

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
கக	உ	அந்தக்கார	...	அந்தகார
கக	கஅ	ஸ்நாம்	...	ஸ்நானம்
உசா	உ௩	மையித்	...	மைத்தி
௩0	உஎ	சதுஷ்ய	...	சதுஷ்டய
௩உ	உச	மாத்திரதிர	...	மாத்திர
சக	உசா	பிரமென்று	...	பிரமமென்று
சச	க	லேயுங்	...	லேங்
சரு	உச	பண்ணூல்	...	பண்ணிஞல்
ஷை	உரு	நகிக்கும்	...	நசிக்கும்
ருக	சா	சகுனப்	...	சகுணப்
ருச	கஎ	பொக்கடி	...	போக்கடி
ருரு	உஎ	கர்பூர	...	கர்ப்பூர
ருஎ	உஎ	விருத்தாமன	...	விருத்தமான
சா௩	ரு	சியதா	...	சிறியதா
சாச	கஉ	காரனே	...	கரனே
சாஅ	௩	யந்தபக்ஷம்	...	யந்தப்பக்ஷம்
எஅ	க0	கல்பக	...	கற்பக
அஅ	உஎ	பிரிச்சி	...	பிரிச்ச
கூஅ	ச	சாத்திஞ	...	சாதத்திஞ
கூகூ	உ0	றந்து	...	றறிந்து
ஷை	உரு	காராரத	...	காரார்த்த
க00	கஎ	ஞனுபமி	...	ஞனுபவமி
க0க	க0	கரும்பந்த	...	கருமபந்த
க0உ	உஎ	மணனே	...	மணனே
ஷை	ஷை	அப்பட்டிப்	...	அப்படி
க0௩	க௩	நாமொன்	...	நாமொனம்
க0ச	உ	சிவஞகமறி	...	சிவஞகவுமறி
க0எ	க௩	யாய்சிவ	...	யாய்ச்சிவ
கக0	கக	வையித்திசாஸ்	...	வைத்தியசாஸ்

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ககக	ங	கூஷடனு ...	கூடினு
ககஉ	கரு	பேத்திலெ ...	பேதத்திலெ
ககரு	உ	அர்த்தைத ...	அர்த்தத்தைத
கஙஉ	உஎ	திரயங் ...	திரயங்க
கஙங	உங	வேட்டு ...	வெட்டு
கஙச	கஅ	கருமத்தனு ...	கருமத்தினு
கஙரு	ரு	செ்ால்லு ...	சொல்லு
கசங	உக	க்ள் ...	கள்
கசரு	கஎ	கூடஸ ...	கூடஸ்
ஷை	ஷை	யவியத்தையாவந்தக் கார ...	யவித்தையா வந்தக் கர
கரு௦	ங	மீமாஸா ...	மீமாம்ஸா
கருக	கசு	யிருக்க ...	யிருக்கு
ஷை	உரு	யவிதைத ...	யவித்தைத
கருஉ	உச	சொல்னுவார் ...	சொல்லுவார்
கருங	கூ	சொல்வியி ...	சொல்லியி
ஷை	கஉ	பணணு ...	பண்ணு
ஷை	உக	வித்திரிய ...	விந்திரிய
கருச	எ	வேணடு ...	வேண்டு
ஷை	அ	வார்கன் ...	வார்கள்
கருசு	உஉ	ஸ்திரிகள ...	ஸ்திரீகள்
கருஎ	சு	திவவிய வலங் நாரங் களை ...	திவ்விய வலங் காரங் களை
கருகூ	உ௦	யாதொத்தர் ...	யாதொருத்தர்
கசு௦	அ	ஸதிரீக ...	ஸ்திரீக
கசுரு	ச	வருஷிகிற ...	வருஷிக்கிற
கஎஎ	உக	படும ...	படும்